# பரலோகத்திலி ருந்து வந்த செய்தி



## தொடக்கம் முதல் முடிவு வரை

அஃப்சல் அலி

# பரலோகத்திலிருந்து வந்த செய்தி

தொடக்கம்
முதல்
முடிவு
வரை



**அஃப்சல் அலி**

இந்தப் புத்தகம் உங்கள்
நூலகத்தில் அவசியம் இருக்க வேண்டும்,
அனைவரும் படிக்க வேண்டும்.

ISBN 978-1-64299-307-3 (காகித தொகுப்பு)

ISBN 978-1-64299-300-0 (டிஜிட்டல்)

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இந்த வெளியீட்டின் எந்தப் பகுதியையும் புகைப்படம், பதிவு அல்லது பிற மின்னணு அல்லது இயந்திர முறைகள் உட்பட, ஆசிரியரின் முன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கவோ, விநியோகிக்கவோ அல்லது அனுப்பவோ கூடாது. அனுமதிக்கு. கீழே உள்ள முகவரி மூலம் ஆசிரியரை அணுகவும்

அப்சல் அலி

25A புரோ. குயின் ஸ்ட்ரீட் அரிமா, டிரினிடாட். W.I

தொலைபேசி எண்கள். 1-868-664-3647
1-868-664-3653

**மின்னஞ்சல்**: afzalaliarima@yahoo.com

Afzal Ali
25A Pro Queen Street Arima Trinidad, W.I
Telephone numbers: 1-868-664-3647
1-868- 664-3653

அனைத்து வேத குறிப்புகளும் பரிசுத்த வேதாகமத்தின் தமிழ்.O.V. BSI-யிலிருந்து எடுக்கப்பட்டவை.

# பொருளடக்கம்

முகவுரை.......................................................................................

1. நம்மைப் படைத்த தேவனின் மனதிலிருந்து ....................................
2. தேவன் எப்படிப்பட்டவர் என்பதை அறிய உங்களுக்கு உரிமை இருக்கிறதா? இயேசு யார்? ...............................................................
3. தேவனுடன் சரியான நிலையில் இருப்பது ............................
4. எதிர்காலத்தின் மகத்தான நிகழ்வுக்கு ஆயத்தமாகுங்கள்..................................................
5. வனாந்தரத்தில் வாசஸ்தலத்தின் முக்கியத்துவம் (விளக்கம்)..........................................................................................
6. இயேசுவுக்கும் திருச்சபைக்கும் ஒப்பான யூத திருமண பழக்கவழக்கங்கள்..............................................................
7. ஜீவ அப்பம் ..............................................................................
8. மரித்தோரிலிருந்து முதற்பேறானவர் ....................
9. இயேசுவோடு உயிர்த்தெழுங்கள் ...................................
10. காலத்தின் அடையாளங்களையும் நோக்கத்தையும் புரிந்துகொள்ளுதல்............................
11. முக்கிய செய்திகள்-வெளிப்படுத்தப்பட்ட எதிர்காலம்.............................................................................................
12. பிறப்பு முதல் மரணம் வரை பிறகு ........................................

பின் இணைப்பு ...........................................................

அனைத்து அதிகாரங்களும் ஆசிரியரால் எழுதப்பட்ட ஒரே தலைப்புகளைக் கொண்ட சிறு புத்தகங்களின் விரிவாக்கப்பட்ட பதிப்புகள்.

# அறிமுகம்

மனிதனின் தொடக்கத்திலிருந்து நமது நித்திய இலக்கை நோக்கிய பயணம் லரை தற்போது நாம் பார்க்கப்போகிறோம். படைப்பின் தொடக்கத்திலிருந்து நமது முதல் பெற்றோர்களான ஆதாம் மற்றும் ஏவாள் வரை ஏதேன் தோட்டத்தில் வாழ்ந்த நமது வேர்கள் மற்றும் வரலாறு குறித்து பலர் அலட்சியமாக உள்ளனர், அவர்கள் வேறு எந்த இடத்திற்கும், நாட்டிற்கும் அல்லது மூதாதையர்களுக்கும் உரியவர்கள் அல்ல. மாறாக, நமக்குரியவர்கள். ஆகையால், நாம் யார், எங்கிருந்து வந்தோம், நமது முதல் பெற்றோர் தேவனுடைய வார்த்தையை மீறிச் சென்று தங்கள் வாழ்க்கை மற்றும் சந்ததியினருக்கான தேவனின் நோக்கத்திலிருந்து தவறியபோது அவர்களுக்கு என்ன நடந்தது, ஜென்ம பாவ இயல்புடன் பிறந்த அவர்களின் சந்ததியினருடன் மரண தண்டனையின் கீழ் தேவனிடமிருந்து எவ்வாறு பிரிக்கப்பட்டனர், மனிதர்களின் சாயலில் உருவாக்கப்படும் பாவமற்ற இரட்சகர் மூலம் ஒப்புரவாக்குவதாக தேவனின் வாக்குத்தத்தம், மதம், கொலை மற்றும் பிற பாவச் செயல்கள் எவ்வாறு உலகிற்குள் நுழைந்தன, நமது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இரட்சகரும் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவை சார்ந்து நாம் எடுக்கும் தீர்மானத்தின்படி நாம் நித்தியத்தில் இருக்கப் போகிறோம் என்பதை அறிந்து கொள்வது அவசியம். அவர் ஒரு மனிதனாகத் தோன்றி, நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மரித்தோரிலிருந்து மீண்டும் உயிர்த்தெழுந்து, நமது கேடடைந்த சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்தைப் போல வடிவமைக்க, தேவனுடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்.

இந்தப் புத்தகம் உங்கள் நூலகத்தில் அவசியம் இருக்க வேண்டும், அனைவரும் படிக்க வேண்டும்.

உலகில் என்ன நடக்கப் போகிறது என்பதைப் பற்றி மக்கள் பயப்படுகிறார்கள், தங்கள் எதிர்காலத்தைப் பற்றி நிச்சயமற்றவர்களாகவும் இருக்கிறார்கள். இரண்டு கற்பலகைகளில் எழுதப்பட்ட நியாயப்பிரமாணம், வனாந்தரத்தில் உள்ள கூடாரம், யூதர்களுடைய கர்த்தரின் பண்டிகைகள் மற்றும் யூத திருமண பழக்கவழக்கங்கள் ஆகியவை இயேசு கிறிஸ்துவில் நிறைவேற வேண்டும் என்பதையும் பலர் அறியாதிருக்கிறார்கள். மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின்

புத்தகங்களிலும், சங்கீதங்களிலும் தம்மைப் பற்றி எழுதப்பட்ட அனைத்தும் நிறைவேற வேண்டும் என்று இயேசு கூறினார்.

## அஃப்ஸல் அலி

இந்தப் பயணம் இறுதிவரை முன்னேறும்போது, இந்தப் புத்தகத்தின் உள்ளடக்கங்கள், இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, மரணத்தை வென்று அவரில் ஜீவனைக் கண்டடைந்து, அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து உலகத்தின் பகுதிகளுக்கு அவருக்குச் சாட்சிகளாக இருக்க, அவருடைய வருகைக்கு ஒரு கூட்ட மக்களை ஆயத்தமாக்க, அவருடைய ஆயிரமாண்டு ஆட்சியில் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவகவும், அதன் பிறகு நித்திய மகிமையில் புதிய பூமியிலும் அவருடன் ஆட்சி செய்ய, தங்கள் வாழ்க்கையில் மிக முக்கியமான முடிவை எடுக்க பலருக்கு உதவும்.

இந்தப் புத்தகத்தைப் படிக்க உங்களுக்கு பரிந்துரைக்கிறேன்

# அதிகாரம் 1

## நம்மைப் படைத்த தேவனின் மனதிலிருந்து

**வே**த வனங்கள் எல்லாம் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட தேவனின் கையேடாகும். ஒரு கையேடு என்பது அது உருவான நோக்கம், செயல்பாடு மற்றும் பராமரிப்பு குறித்து சிருஷ்டிரின் மனதை வெளிப்படுத்தும் அறிவுறுத்தல்கள் மற்றும் தகவல்களின் புத்தகமாக இருப்பதால், மனிதனைப் படைத்த தேவன், பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார். (எபிரெயர் 1:1-3)

வேத வசனங்களில் நம்முடைய சிருஷ்டிகரான தேவனின் மனம் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது, அது நம்மை ஆரம்பத்திலிருந்தே அழைத்துச் சென்று, நமது எதிர்காலத்தைப் பற்றிய தகவலறிந்த முடிவை எடுக்க நம்மை வழிநடத்தும், அது நித்தியத்தில் இரண்டு இறுதி இலக்குகளில் ஒன்றில் உச்சத்தை அடையும்.

ஆதியிலே தேவன் மனுஷனை தம்முடைய சாயலிலும் ரூபத்தின்படியேயும், ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். தம்முடைய சரியான பிரதிநிதித்துவமாகிய ஒரு சிருஷடியாக தம்மைப் பகிர்ந்து கொள்ளவே அவர் அவர்களைப் படைத்தார். அந்த படைப்பில் அவர் ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் வெளிப்படுத்தி, ஒருவருக்கொருவர் பரிபூரண இணக்கத்துடன் மகிழ்ச்சியடையவும் உலாவுவார். ஏனென்றால், சகலமும் அவராலும் அவருக்காகவும் படைக்கப்பட்டன. (ஆதியாகமம் 1:26-27; கொலோசெயர்:14-19; வெளிப்படுத்தல் 4:11.)

பூமியிலுள்ள அனைத்து படைப்புகளை பராமரிப்பதற்கும், உக்கிராணக்காரர்களாக பூமியில் மனிதகுலத்தின் சேவையில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் தேவன் மனிதனுக்குப் பொறுப்பளித்தார்.

அவர் ஆதாமையும், ஏவாளையும் பலுகிப் பெருகி பூமியை நிரப்பவும், ஏதேன் தோட்டத்தில் வாழவும், அதைப் பண்படுத்தவும் வைத்தார். நன்மை தீமை அறியத்தக்க கனியைத் தவிர, தோட்டத்தில் உள்ள ஒவ்வொரு மரத்தின் கனியையும் சுதந்திரமாகப் புசிக்கும்படி அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டார், ஏனெனில் அதைப் புசிப்பது அவர்களுக்கும் அவர்களின் சந்ததியினருக்கும் மரணத்தைக் கொண்டுவரும், அதாவது, அவர்கள் அவருடைய பிரசன்னத்திலிருந்தும், ஐக்கியத்திலிருந்தும் தங்களைத் துண்டித்துக் கொள்வார்கள், மேலும் தோட்டத்தில் உக்கிராணக்காரர்களாக தங்கள் பிரதிநிதித்துவ நிலையை இழந்து, அவர்கள் இனி அவரைப் போல இருக்க மாட்டார்கள், மரணத்திற்கும் சிதைவுக்கும் ஆளாகி, அவருடைய சித்தத்தைச் செயல்படுத்தவும் அவருடைய நோக்கத்தை நிறைவேற்றவும் முடியாமல், கீழ்ப்படியாத நிலைக்குச் சென்றுவிடுவார்கள். இந்தக் கட்டளையின் மூலம், மனிதகுலத்திற்கான தேவனின் சித்தமானது நித்திய ஜீவன் என்பதையும், சோதிக்கப்படும்போது அவருக்குக் கீழ்ப்படிந்து சரியானதைச் செய்யும் திறனுடன் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தை அவர்களுக்குக் கொடுத்ததை நாம் காண முடிகிறது. (ஆதியாகமம் 1:28-30; 2:7-25.)

சர்ப்பமானது எல்லா மிருகத்தையும் விட தந்திரமானது... மேலும், தேவன் புசிக்கக் கூடாது என்று கட்டளையிட்ட மரத்தின் கனியைப் புசித்தால், தேவன் சொன்னது போல் அவள் மரிக்காமல், அவர் அவர்களிடமிருந்து மறைத்து வைத்திருந்தவற்றிற்கு அவர்களுடைய கண்கள் திறக்கப்படும் என்றும், அவர்கள் நன்மை தீமைகளை அறிந்து தேவர்களைப் போல இருப்பார்கள் என்றும் அது ஏவாளிடம் சொன்னது. ஏவாள், தன் அறிவைப் பெருக்கிக் கொள்ளவும், தேவனைப் போல ஞானியாக முன்னேறவும் ஒரே வழி அதைச் சாப்பிடுவதுதான் என்ற இந்த எண்ணங்களால் சோதிக்கப்பட்டாள். அந்த கனி புசிப்பதற்கு நல்லது என்றும் விரும்பத்தக்கது என்றும் அவள் கண்டாள், அவள் கனியை எடுத்து புசித்து, தன் கணவன் ஆதாமுக்கும் கொடுத்தாள், அவனும் சாப்பிட்டான், அவர்களைப் படைத்த தேவன், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தைப் பற்றிய தம்முடைய சித்தத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்திய போதிலும், அவர்கள் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே அவர்களின் இருப்பு, நிலை மற்றும் உருவாக்கப்பட்ட நிலை பராமரிக்கப்படும் என்பதை அறிந்திருந்தாள்.

ஆதாமும் ஏவாளும் புசித்தப் பிறகு, தங்கள் நிர்வாணத்தை உணர்ந்தனர், சாத்தான் உண்மையைச் சொல்கிறான் என்றும் தேவன் பொய் சொல்கிறார் என்றும் நம்பி அவனால் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தனர்.

அவர்கள் தங்களுக்குச் சிறந்ததாக இருந்த தேவனுடைய வார்த்தையின் நன்மைக்கு எதிராகச் சென்றுவிட்டதையும், தீமை செய்ததையும், தேவன் அவர்களுக்குக் கொடுத்த வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல் போனதையும், அவர்கள் கீழ்ப்படிந்திருந்தப்போது தேவனுடன் ஐக்கியத்திலும், பரிபூரண

இணக்கத்தில் அவர்களின் அசல் நிலையிலும் இருந்ததையும் உணர்ந்தார்கள்.

தேவனின் சாயலையும், பூமியில் அவருடைய நிர்வாகிகளாக தங்கள் பிரதிநிதித்துவ நிலையையும், தோட்டத்தில் தங்கள் இடத்தையும் இழந்துவிட்டதையும், தேவன் இனி அவர்களுடன் வாசம் செய்ய முடியாது என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள், ஏனெனில் அவருடைய ஐக்கியத்தின் இன்பமும் அவருடைய பிரசன்னத்தின் பாதுகாப்பும் கடந்த கால நிகழ்வாக மாறிப்போனது. தேவனுக்கு எதிராகச் செல்ல அவர்கள் எடுத்த முடிவு மனித வரலாற்றின் போக்கையே மாற்றியது. மனிதன் மரண தண்டனை விதிக்கப்பட்டு, சிதைவுக்கு ஆளானான். அவன் வாழ படைக்கப்பட்ட நோக்கத்திற்கு வெளியே வாழ்ந்தான். அதிருப்தியும், மனநிறைவற்றவனுமாக, அவன் செய்யக் கூடாததைச் செய்து, இருக்கக் கூடாத இடத்திற்குச் சென்றான். என் நண்பரே, நமது முதல் பெற்றோர் தேவனின் வார்த்தையைப் புறக்கணித்து, மனிதன் என்னவாக இருக்க வேண்டும் என்று தேவன் திட்டமிட்டாரோ அதை அடையத் தவறியதால், மனிதகுலத்தைப் படைத்ததற்கான தேவனின் நோக்கத்தை நிறைவேற்ற ஒரு புதிய சிருஷ்டியான மனிதன் இப்போது தேவைப்பட்டான்.

ஆதாமும் ஏவாளும் அத்தி இலைகளைப் பயன்படுத்தி தங்கள் பாவத்தினால் ஏற்பட்ட நிர்வாணத்தை மறைக்க முயன்றனர். தங்கள் பாவத்தை மறைப்பதற்குத் தாங்களே முயற்சி செய்தனர். ஆனால், தேவனால் மட்டுமே அதைச் செய்ய முடிந்தது. ஒப்புரவாகுதல், அவர்களின் அசல் நோக்கம் மற்றும் நித்தியத்தை மீட்டெடுப்பதற்கான வழி, அவர்களை உருவாக்கிய தேவனிடமிருந்து வர வேண்டுமேயல்லாமல் அவர்கள் உருவாக்கிய மதத்திலிருந்து அல்ல. (ஆதியாகமம் 3.) யோவான் 3:16.)

ஆதாமும் ஏவாளும் ஜீவ விருட்சத்தின் கனியையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியையும் புசிப்பதைத் தடுக்க, தேவன் அவர்களுக்கு மரண தண்டனையை கிருபையுடன் நிறைவேற்றினார். இல்லையெனில், அவர்கள் இரண்டு மரங்களின் கனியையும் புசித்துகொண்டே இருந்தால், அவர்கள் அவரிடமிருந்தும் அவர்களுக்காக அவர் செய்த நோக்கத்திலிருந்தும் பிரிந்து, பாவ நிலையில், அதன் தீய விளைவுகளுடன் என்றென்றும் வாழ்ந்துகொண்டிருப்பார்கள். (ஆதியாகமம் 3:22-24.)

அன்பானவர்களே, ஆதாமும் ஏவாளும் தேவன் தங்களிடம் எதிர்பார்த்ததை அடையத் தவறிய போதிலும், மனிதனுக்கான அவருடைய நோக்கம் நிலைத்திருந்தது.

பகலின் குளிர்ச்சியான வேளையில் அவர்களைச் சந்தித்து, ஒரு ஸ்திரீயின் வித்து மூலம் மனிதகுலத்தை அதன் அசல் நோக்கத்திற்கு என்றென்றும் ஒப்புரவாக்கி, மீட்டெடுப்பதாக வாக்குறுதி அளித்து அவர்களுக்கு நம்பிக்கை அளித்தார்.

வாக்குத்தத்தம் நிறைவேறிய காலத்திற்கும், ஒரு ஸ்திரீயின் வித்து மூலம் அது நிறைவேறுவதற்கும் இடையில், தேவன் தற்காலிகமாக குற்றமற்ற விலங்குகளின் சிந்தப்பட்ட இரத்தத்தை ஏற்பாடு செய்தார், மேலும் அதன் தோல்கள் அவர்களின் பாவத்தையும்

நிர்வாணத்தையும் மறைக்கப் பயன்படுத்தப்பட்டன. இது இயேசு கிறிஸ்துவுக்கு முன்னிழலாக இருக்கிறது, மரியாள் கன்னியாக இருந்தபோது பரிசுத்த ஆவியினால் பாவமற்றவராக இயேசு கருத்தரிக்கப்பட்டு, மனிதனின் பாவங்களுக்காகத் தம்முடைய உயிரைக் கொடுத்து, தம்முடைய சொந்த இரத்தத்தைச் சிந்தி, நம்மை மீட்டு, தம்முடைய நீதியால் உடுத்தினார். (ஆதியாகமம் 3:15-21; மத்தேயு 1:18-25.)

பாவமுள்ள மனிதகுலத்தை அவருடைய சாயலுக்கும் அவர்களுடைய அசல் நோக்கத்திற்கும் ஒப்புரவாக்கவும் மீட்டெடுக்கவும் ஆதாமுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான காலம் நிறைவேறினபோது, அவருடைய பரிபூரண சாயலும், ஒரு பெண்ணின் பரிபூரண பிரதிநிதித்துவமும் உள்ள தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அவர் அனுப்பினார். இயேசு தேவனுடைய சாயலில் இருந்ததால், மனிதர்களின் சாயலில் மாம்சமானார், மனிதர்கள் மாம்சத்தையும் இரத்தத்தையும் கொண்டிருப்பது போல, இயேசுவும் அதில் பங்கேற்று, ஒரு மனிதனாக உருவெடுத்து, சிலுவையில் ஒரு பரிகார மரணத்தில் நம் ஸ்தானத்தில் பலியானார், ஒரு காலத்தில் நம் முதல் பெற்றோருடன் இருந்த தேவனுடனான பரிபூரண மற்றும் இணக்கமான உறவுக்கு மனிதனை மீண்டும் கொண்டு வந்தார். (கலாத்தியர் 4:4; பிலிப்பியர் 2:6-7; (எபிரெயர் 2:14-15.)

மனிதகுலத்தின் பாவங்களுக்கு பரிகாரமாக செயல்பட்ட பாவமற்ற விலங்குகளின் இரத்தம் இப்போது தேவையில்லை. இயேசு கிறிஸ்து, ஸ்திரீயின் வித்தாக வாக்குத்தத்தம் செய்யப்பட்டபடி வந்தார், அவர் தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார், ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிப்பார்த்தார், அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம், பிசாசு, மரணம், நரகம் மற்றும் பாதாளம் ஆகியவற்றை அவர் வல்லமையற்றதாக மாற்றினார், கிறிஸ்துவில் உள்ள மனிதன் இனி மரண பயத்தில் இருக்க வேண்டியதில்லை, அது நம் வாழ்நாள் முழுவதும் நம்மை அடிமைத்தனத்தில் வைத்திருந்தது. அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ள வேண்டும்… அப்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதப்பட்ட வார்த்தை நிறைவேறும். "மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே, உன் ஜெயம் எங்கே? …நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். (1கொரிந்தியர் 15:53-57.)

முதல் மனிதன் ஆதாம் மண்ணிலிருந்து வந்தவன், இரண்டாம் மனிதனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வந்த கர்த்தர். நாம் பூமிக்குரிய மனிதனின் சாயலை அணிந்திருப்பது போல, கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள்

பரலோக மனிதனின் சாயலையும் அணிந்திருப்பார்கள். ஆதாம் என்ற ஒரே மனிதனால் மரணம் வந்தது, மரித்தவர்களின் உயிர்த்தெழுதலும் இயேசு கிறிஸ்து என்ற ஒரே மனிதனால் வந்தது. (1 கொரிந்தியர் 15:47-49, 21-22.)

ஆகையால், ஒரு மனிதன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் ஒரு புதிய சிருஷ்டியாக இருக்கிறான், ஆதாமில் இருந்த பழைய மனிதன் மரித்துவிட்டான், எல்லாம் புதியதாகிறது, அவன் மரணத்திலிருந்து உயிரோடெழுப்பப்படுகிறான், அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன, தேவனின் சாயலிலும் ரூபத்திலும் புதுப்பிக்கப்படுகின்றான், மேலும் அவனுடைய அசல் நோக்கத்திற்கும், தேவனுடனான ஐக்கியத்திற்கும் என்றென்றும் மீட்டெடுக்கப்படுகிறான். (2கொரிந்தியர் 5:17-21; கொலோசெயர் 2:10-15; 3:3-4.)

அன்பானவர்களே, மனிதகுலம் ஆதாம் மற்றும் ஏவாளின் சந்ததியினர், இயல்பிலேயே பாவமுள்ளவர்கள், நமது வேர்களும், வரலாறும் ஏதேன் தோட்டத்தில் நமது முதல் பெற்றோரிடமே செல்கின்றன, வேறு எந்த இடத்திற்கும், நாட்டிற்கும் அல்லது மூதாதையர்களிடத்திற்கும் அல்ல. நாம் எப்படிப் பிறந்தோம், எங்கிருந்து வந்தோம், நமக்கு என்ன நடந்தது, நமது நோக்கம் என்ன, இயேசுவோடும், இயேசு இல்லாமலும் நித்தியத்தில் நாம் எங்கு செல்கிறோம் போன்ற கேள்விகளுக்கு தேவனே பதிலளித்துள்ளார். நம்மைப் படைத்தவராக, நமக்கான அவருடைய நோக்கம், நம் வாழ்க்கையை எவ்வாறு வாழ்வது, அவரிடம் எப்படித் திரும்பிச் செல்வது மற்றும் அவர் நமக்காக வைத்திருக்கும் இலக்கை அடைவது போன்றவற்றுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டிய ஒரே நபர் அவர்தான். தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான்; தேவனை விசுவாசியாதவனோ, தேவன் தம்முடைய குமாரனைக் குறித்துக்கொடுத்த சாட்சியை விசுவாசியாததினால் அவரைப் பொய்யராக்குகிறான். தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச்சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன். உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்(1யோவான் 5:10-13).

ஏவாளை அணுகும் போது பிசாசு, அவளை அவன் யார் என்பதைப் பார்க்கும் வகையில் வரவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவன் அவளை ஏமாற்றி, தான்

அவர்கள் பக்கம் இருப்பதாகவும், தேவன் அவர்களிடமிருந்து அறிவை மறைத்து வருவதாகவும் சொல்லி பொய்யை நம்ப வைத்தான். தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக. (ரோமர் 3:1-4; யோவான் 8:44.)

மனிதனின் தொடக்கத்திலிருந்து நித்தியம் வரை இரண்டு இறுதி இலக்குகளில் ஒன்றிற்கு நீங்கள் ஒரு பயணத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிறீர்கள், ஒன்று இயேசு பூமியை விட்டுச் சென்ற பிறகு தேவனின் வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார், கிறிஸ்துவில் உள்ளவர்களுக்காக ஆயத்தம் செய்ய அவர் சென்ற இடம், கடந்த காலம் மறக்கப்பட்டு எல்லாம் பரிபூரணமாக இருக்கும் இடம், இனி மரணம், அழுகை, துக்கம் அல்லது வலி இருக்காது, எல்லாம் புதிதாக்கப்படும் இடம், புதிய வானம் மற்றும் புதிய பூமி, புதிய எருசலேம், புதிய உலக ஒழுங்குகள் உள்ள இடம். இது கிறிஸ்துவில் உள்ளவர்களுக்கு ஒரு நிலையான நிலை மற்றும் தேவன் மீண்டும் அவர்களுடன் மகிமையில் என்றென்றும் வாழ போகிற இடமாகும். (ஏசாயா 65:17; யோவான் 14:1-7; வெளிப்படுத்தல் 21:1-5.)

மற்றொன்று நரகம் மற்றும் அக்கினிக் கடல். இது பிசாசும் இயேசுவை தங்கள் இரட்சகராக நிராகரித்த அனைவருக்குமான ஒரு நிலையான நிலை மற்றும் தங்குமிடம், அங்கு கடந்த காலம் நினைவில் வைக்கப்படுகிறது, எல்லாம் தீயது, முழுமையற்றது, பழைய நிலையில் தொடர்கிறது, அங்கு என்றென்றும் வேதனை இருக்கிறது. (லூக்கா 16:19-31; வெளிப்படுத்தல் 20:10-15.)

அன்பானவர்களே, ஒரு நாள் நாம் நமது இந்த சரீரத்தையும், இந்த பூமியையும் விட்டுவிட்டு மற்றொரு சரீரத்திற்குள் பிரவேசிக்க வேண்டியிருக்கும். அந்த நாள் வரும்போது நாம் அவரோடு செல்ல ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று இயேசு கூறினார். ஆயத்தமாக இருக்க வேண்டிய நேரம் இது, இன்றே இரட்சண்ய நாள், நம்மைப் படைத்த தேவனுடைய சிந்தை நமக்கு இருக்கிறது, ஸ்திரீயின் வித்தாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் மட்டுமே நாம் தேவனின் பிரசன்னத்திற்குள் பிரவேசிக்கிறோம், புதிய பூமியில் என்றென்றும் இருக்கும் அவருடனான ஒரு பரிபூரண மற்றும் இணக்கமான உறவுக்குள் வருகிறோம், கிறிஸ்துவின் வழியாய் மனிதனுடன் வாழ தேவன் மறுபடியும் வருகிறார், அவருடைய மறுசீரமைப்பு நோக்கங்கள் அதன் உச்சக்கட்டத்தை அடைகின்றன, அவர்கள் அவருடைய மக்கள், அவர் அவர்களின் தேவன், மனிதனைப் படைத்ததற்கான அவரது நோக்கம் இயேசு கிறிஸ்துவில் புதிய படைப்பான மனிதனில் நிறைவேறுகிறது. (மத்தேயு 24:44; 2 கொரிந்தியர் 6:2; 5:17-18.)

நாம் அவரைப் போல இருக்க வேண்டும் என்று தேவனே தீர்மானம் செய்துள்ளார். படைப்பில் அவர் நமது

நோக்கத்தை நிர்ணயித்துள்ளார், இன்று அவர் உங்களை கிறிஸ்துவில் புதிய மனிதனாக, அவருடைய சாயலிலும் ரூபத்திலும் புதுப்பித்து, உங்கள் அசல் நோக்கத்திற்கு என்றென்றும் மீட்டெடுக்க அழைக்கிறார். நீங்கள் கிறிஸ்துவில் இருந்தால், உங்கள் இரட்சிப்புக்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள், ஆனால் நீங்கள் கிறிஸ்துவில் இல்லையென்றால், தயவுசெய்து அவரது அழைப்புக்கு சாதகமாக பதிலளிக்குமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள தேவனே, என் சிருஷ்டிகரே, என் பாவத்திற்காக விலைகொடுத்த இயேசுவிற்குள் ஒரு புதிய மனிதராகவும், உம் சாயலிலும் ரூபத்திலும் புதுப்பிக்கப்பட்டு, உம் நோக்கத்திற்கு மீண்டும் கொண்டு வரவும் அவரை அனுப்பி, நீர் என் மீது வைத்திருக்கும் அன்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். கர்த்தராகிய இயேசுவே, நான் தேவனோடு ஒப்புரவாக உம் ஜீவனைக் கொடுத்ததற்கு நன்றி. நான் உம்மை என் இரட்சகராக ஏற்றுக்கொள்கிறேன், உம்முடன் என்றென்றும் வாழ உம் வருகையை எதிர்நோக்குகிறேன். ஆமென்.

## அதிகாரம் 2

## தேவன் எப்படிப்பட்டவர் என்பதை அறிய உங்களுக்கு உரிமை இருக்கிறதா? இயேசு யார்?

**அ**ன்பானவர்களே, இந்தச் செய்தியின் சாராம்சம் நம்மை ஆரம்பம் மற்றும் முடிவு, வானம் மற்றும் பூமியின் படைப்பு, மனிதனின் படைப்பு, பாவமும் மரணமும் மனிதனுக்குள் எவ்வாறு நுழைந்தன, குழப்பம் எவ்வாறு உலகிற்குள் பிரவேசித்தது, மேலும் ஒரு இரட்சகரை அனுப்பி அவர்களின் சந்ததியை மீட்டு ஒரு ஸ்திரீயின் வித்து மூலம் ஒரு புதிய மனிதனைப் படைத்து, சிருஷ்டிப்பின் ஆரம்பத்தில் இருந்ததைப் போலவே ஒழுங்கை மீட்டெடுப்பதாக முதல் மனிதனுக்கும் பெண்ணுக்கும் தேவன் வாக்குறுதி அளித்தார், இந்த வாக்குத்தத்தம் புதிய வானத்திலும் புதிய பூமியிலும் உச்சக்கட்டத்தை அடைகிறது, அங்கு வசிப்பவர்கள் தேவனோடும், இரட்சகரோடும், புதிய சிருஷ்டியாக இருப்பார்கள். (ஆதியாகமம் 1:1, 26-27; 2:15-17; 3:1-7,15, 22-24; வெளிப்படுத்தல் 21:1-6.)

ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.
சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான

குமாரனே அவரை வெளிப்படுத்தினார். (யோவான் 1:1-3, 14, 18.)

பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார் (எபிரெயர் 1:1-3.)

முதல் மனிதர்களாகிய ஆதாமும் ஏவாளும் தேவனின் சாயலிலும், ரூபத்திலும் படைக்கப்பட்டனர். தேவன் அவர்களை ஏதேன் தோட்டத்தில் வைத்து, கனிகளை உண்பதற்கும், அதை பண்படுத்துவதற்கும், ஆண்டுக்கொள்வதற்கும் வைத்தார். தேவன் அவர்களை பலுகிப் பெருகவும், பூமியை சந்ததியினரால் நிரப்பவும் ஆசீர்வதித்தார், மேலும் தோட்டத்தில் உள்ள அனைத்து விருட்சங்களின் எல்லா கனிகளையும் சுதந்திரமாக புசிக்கலாம் ஆனால் நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசிக்கக்கூடாது என்று கட்டளையிட்டார், ஏனென்றால் அவர்கள் அதைப் புசிக்கும் நாளில் நிச்சயமாகச் சாவார்கள். ஆதாமும் ஏவாளும் தங்களை மரணத்திலிருந்து காப்பாற்றியிருக்கும் தேவனின் வார்த்தையின் நன்மைக்கு எதிராகச் சென்று, அவருக்குக் கீழ்ப்படியாமல், அவர் புசிக்கக் கூடாது என்று கட்டளையிட்ட மரத்தின் கனியைப் புசிப்பதன் மூலம் தீமை செய்தனர். அந்தக் கண்ணோட்டத்தில், அவர்கள் தேவனின் சாயலையும் ரூபத்தையும் இழந்து, பின்னர் அவரிடமிருந்தும், தோட்டத்தில் தங்கள் நிலையிலிருந்தும் பிரிந்தனர். தேவனுடைய வார்த்தையின் நன்மைக்கு எதிரான இந்தத் தீய செயல், தேவன் சொன்னது போல் மனிதகுலத்தை மரணத்தின் தண்டனையின் கீழ் கொண்டு வந்தது. இந்த மரணம் சரீரம் மரணம் மற்றும் ஆவிக்குரிய மரணம் என இரண்டு வகைப்படுகிறது. சரீர மரணம் என்பது உடலிலிருந்து நாம் பிரிவது, ஆவிக்குரிய மரணம் என்பது தேவனிடமிருந்து நாம் பிரிவதாகும் (ஆதியாகமம் 1:26-27; 2:15-17; 3:6.)

ஆதாமையும் ஏவாளையும் தோட்டத்தில் இருந்து வெளியேற்றி மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு முன்பு, தேவன் அவர்களுக்கு ஒரு ஸ்திரீயின் வித்து மூலம் ஒரு இரட்சகரை அனுப்புவதாக வாக்குறுதி அளித்தார், அவர்கள் பாவ இயல்பை அதன் தண்டனையுடன் பெறுவார்கள். இந்த சூழ்நிலையில், அவர்களின் பாவத்தையும் நிர்வாணத்தையும் மறைக்க ஒரு மாசற்ற விலங்கின் பரிகார மரணத்தை தேவன் ஏற்படுத்தினார், பின்னர் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இரட்சகர் ஸ்திரீயின் வித்து வழியாக வந்து, பரிகார மரணத்தில் தமது பாவமற்ற இரத்தத்தை சிந்தும் வரை அவர்களைத் தம்முடைய பிரசன்னத்திலிருந்து வெளியேற்றினார். நம் பாவங்களை ஒரேதரமாக நீக்கி, பிரிவிலிருந்து தேவனுடனான பிரசன்னத்திற்கும் ஆதாமினால் இழந்த நமது அசல் நிலைக்கும் நம்மை ஒப்புரவாக்கினார். (ஆதியாகமம் 3:15, 21-25; எபிரெயர் 9:14; 10:10-12.)

நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்.... (கலாத்தியர் 4:4-7.)

இந்த மனித குலத்தில் நம்முடைய இரட்சகரின் பிறப்பு நடந்தது. யோசேப்புக்கு நிச்சயிக்கப்பட்ட மரியாள் என்னும் பெயருள்ள ஒரு கன்னிகையினிடத்தில் காபிரியேல் தூதன் தேவனால் அனுப்பப்பட்டான். தேவதூதன் அவளிடம், அவள் தேவனுக்கு மிகவும் பிரியமானவள் என்றும், அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள் என்றும், அவருக்கு இயேசு என்று பேரிட வேண்டும் என்றும் சொன்னான். தேவதூதனின் வார்த்தையை மரியாள் ஏற்றுக்கொண்டு, யோசேப்புடன் திருமணம் முடிவதற்கு முன்பே பரிசுத்த ஆவியினால் கர்ப்பவதியானாள். யோசேப்பு நீதிமானாயிருந்தபடியால், அவளைப் பொதுவில் அவமானப்படுத்த விரும்பவில்லை, ரகசியமாக அவளை விவாகரத்து செய்ய விரும்பினான். ஆனால் அவன் இப்படிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளை சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். யோசேப்பு கர்த்தருடைய தூதன் சொன்னபடியே செய்து, மரியாளைத் தன் மனைவியாக ஏற்றுக்கொண்டு, அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்றெடுக்கும் வரை அவர்கள் திருமணத்தை முடிக்கவில்லை; அவன் அவருக்கு இயேசு என்று

பேரிட்டான். (மத்தேயு 1:18-25; லூக்கா 1:26-38.)

கர்த்தருடைய தூதன், இரவில் தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்த வயல்வெளியில் மேய்ப்பர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையில் கிடத்தியிருக்கக்காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான் (லூக்கா 2:1-20; மத்தேயு 2:1-6; மீகா 5:2.)

இயேசு பாவமற்ற முறையில் கருத்தரித்து மரியாளின் வித்து மூலம் பிறந்தார், மனிதனைத் தம்முடன் ஒப்புரவாக்குவதாக ஆதாமுக்கு தேவன் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றினார். ஆதாமில் அனைவரும் மரிப்பது போல, கிறிஸ்துவில் அனைவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள், எனவே அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. ஏனென்றால், தேவன் கிறிஸ்துவின் மூலம் உலகத்தைத் தமக்கு ஒப்புரவாக்கினார், நம்முடைய குற்றங்களை நமக்குக் காரணம் காட்டாமல், பாவம் அறியாத இயேசுவை நமக்காகப் பாவமாக்கினார், இதனால் நாம் அவரில் தேவனுடைய நீதியாக ஆக்கப்படுவோம். இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின, அதாவது ஆதாமில் உள்ள பழைய சிருஷ்டியான மனிதன் ஒழிந்துபோனான்; கிறிஸ்துவில் உள்ள மனிதன் தேவனின் சாயல், ரூபம் மற்றும் பிரசன்னம் ஆகியவற்றில் தேவனுடனான தனது அசல் பாவமற்ற வடிவம் மற்றும் நிலைக்கு மீட்டெடுக்கப்பட்டான், இப்படியாக மனிதனை உருவாக்குவதில் தேவனின் நோக்கம் நிறைவேறுகிறது. (கலாத்தியர் 4:4-7; யோவான் 1:12; அப்போஸ்தலர் 4:12; 1கொரிந்தியர் 15:22; 2கொரிந்தியர் 5:17-21; 1தீமோத்தேயு 2:5; கொலோசெயர் 1:14-17; 1யோவான் 3:2.)

பிரியமானவர்களே, தேவன் ஆவியானவராகவும், மாம்சத்தின் கண்ணாலோ மனதாலோ காண முடியாதவராகவும் இருந்ததால், அவர் இயேசு கிறிஸ்துவின் ஆள்தத்துவத்தில் பரிபூரண மனிதரானார். இயேசு அவருடைய மகிமையின் பிரகாசமாகவும், அவருடைய சாயலின் தற்சொரூபமாகவும், இஸ்ரவேலில் முப்பத்து மூன்று ஆண்டுகள் வாழ்ந்து, தேவனின் இருப்பு மற்றும் நோக்கத்தை வெளிப்படுத்த மனிதனுடன் தொடர்பு கொண்டார். (யோவான் 1:18; 14:7; எபிரெயர் 1:1-3.)

பலர் இயேசுவை நேசித்து பின்பற்றினர், அதனால்தான் மத மற்றும் அரசியல் ஆட்சியாளர்கள் அவரைக் கொல்ல முயன்றனர். அவர் கைது செய்யப்பட்டு பிலாத்து உள்ளிட்ட தேசாதிபதிகளுக்கு முன்பாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார், மேலும் பல பொய் சாட்சிகள் அவருக்கு எதிராக சாட்சியமளித்த பிறகு, பிலாத்து அவரை ஆராய்ந்து, அவர் குற்றமற்றவர் என்பதைக் கண்டறிந்தான், ஆனாலும் அவரை நிராகரித்து, ஒரு குற்றவாளியாக சிலுவையில் அறைய மரண தண்டனை விதித்தான். இது தேவனுடைய கட்டளைப்படி நடந்தது, ஏனெனில் பாவமுள்ள மனிதன் தேவனுடன் ஒப்புரவாகவும், தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிந்து வாழும் பாவங்களிலிருந்து நம்மை விடுவிப்பதற்காகவும், மரணத்தில் தம்முடைய சொந்த இரத்தத்தைச் சிந்துவதன் மூலம் மீட்பின் விலைக்கிரயத்தைச் செலுத்த இயேசு வந்தார். (யோவான் 9:1-18; எபிரெயர் 9:24-26.)

இயேசு நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் செய்யப்பட்டார், மூன்று நாட்களுக்குப் பிறகு இரட்சகர் தாம் சொன்னபடியே, பிசாசு, மரணம், நரகம் மற்றும் பாதாளத்தை வென்று உயிர்த்தெழுந்தார். பின்னர் அவர் நூற்றுக்கணக்கான சீஷர்களுக்குத் தம்மைக் காண்பித்து, மனிதனின் இரட்சிப்புக்கான மீட்பின் விலைக்கிரயத்தைச் செலுத்தி, மாட்சிமை பொருந்திய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். (1 கொரிந்தியர் 15:3-8; அப்போஸ்தலர் 1:9; எபிரெயர் 8:1; 12:2.)

நண்பரே, மனிதனின் முயற்சிகள், அறிவின் பெருக்கம் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பம் இருந்தபோதிலும், மக்கள் மேலும் மேலும் துன்மார்க்கராகவும், சுயநலவாதிகளாகவும், பயமுள்ளவர்களாகவும் மாறி வருகின்றனர். நோக்கம், திசை மற்றும் நம்பிக்கை இல்லாமல் வாழ்க்கை அர்த்தமற்றதாகி வருகிறது. போர்களும், போர்களின் அச்சுறுத்தல்களும், குற்றம் மற்றும் அக்கிரமம், வறுமை, பஞ்சம் மற்றும் பசி, கொள்ளைநோய்கள், பல்வேறு இடங்களில் பூகம்பங்கள் மற்றும் பெரும் பேரழிவுகள் அதிகரித்து வருவதால், நாடுகள் குழப்பமடைந்து, துயரமடைந்து, பயத்தில் மூழ்கியுள்ளன, மேலும் இயேசு மீண்டும் வருவதற்கு முன்பு இப்படி நிலைமை மோசமாகிவிடும் என்று அறிவித்தார். இந்த உலகத்தை பாவத்திலிருந்து சுத்திகரிக்க, தம்மை விசுவாசிப்பவர்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்டபடி புதிய, பாவமற்ற மற்றும் நித்திய உலகிற்கு வழிவகுக்கவும், தனது குழந்தையின் பிறப்புக்காக

காத்து, பிரசவ வேதனையில் இருக்கும் ஒரு பெண்ணாக உருவகப்படுத்தப்பட இவை அனைத்தும் நடக்க வேண்டும் என்று இயேசு கூறினார். (மத்தேயு 24.) (லூக்கா 21.) 2 தீமோத்தேயு 3:1-4; ரோமர் 8:22-23.)

இந்த நிகழ்வுகள் இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு பயத்தையும் நம்பிக்கையின்மையையும் கொண்டு வந்தாலும், அவரை ஏற்றுக்கொண்டவர்களுக்கு அவை நம்பிக்கையை அளித்துள்ளன. இந்த தற்காலிக நிகழ்வுகளால் அவர்கள் கலக்கமடைந்து திகிலடையாமல், தங்கள் மீட்பையும், தம்மிடம் ஒன்று சேர்தலையும் எதிர்பார்க்க வேண்டும் என்று இயேசு தம் சீடர்களிடம் கூறினார், ஏனெனில் இந்த சுத்திகரிப்பு நியாயத்தீர்ப்புகள் அவர் திரும்பி வருவதைக் குறிக்கின்றன. (லூக்கா 21:25-28.)

அன்பானவர்களே, இயேசு கிறிஸ்துவின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட ஜீவன் மற்றும் நோக்கம் பற்றிய இந்த சுருக்கமான விவரிப்பைப் படித்து, இயேசு யார் என்பதற்கான சான்றுகளுடன், பிலாத்து மற்றும் அப்போஸ்தலனாகிய பேதுருவைப் போல, இயேசுவை ஆராய்ந்து வாழ்க்கையின் மிக முக்கியமான கேள்விகளுக்கு பதிலளிக்க உங்களுக்கு இப்போது வாய்ப்பு உள்ளது. இயேசு உங்களுக்கு யாராக இருக்கிறார்? நீங்கள் அவருக்கு என்ன செய்வீர்கள்? இந்த வாழ்க்கைக்குப் பிறகு நீங்கள் எங்கு வாழ்வீர்கள் என்பது குறித்து வாழ்க்கையின் மிக முக்கியமான முடிவை எடுக்க வேண்டும். நித்தியத்தில் இரண்டு இறுதி இலக்குகள் மட்டுமே உள்ளன. 1. புதிய பூமி. இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்ட அனைவரும் இயேசுவுடன் அங்கே இருப்பார்கள். (மாற்கு 16:16; (வெளிப்படுத்தல் 21.) 2. அக்கினிக் கடல். இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்காமல் நிராகரித்த அனைவரும் பிசாசு, அந்தி கிறிஸ்து மற்றும் கள்ளத் தீர்க்கதரிசியுடன் அங்கே இருப்பார்கள். (லூக்கா 16:19-31; மாற்கு 16:16b; வெளிப்படுத்தல் 19:20; 20:10, 14-15.)

என் நண்பரே, பிலாத்து இயேசுவை விசாரித்த பிறகு, அவர் மீது எந்தக் குற்றமும் இல்லை என்பதைக் கண்டுபிடித்து, அவரை நிராகரித்து, அவரைத் தன் வாழ்க்கையிலிருந்து நீக்கி, இயேசுவை ஒரு குற்றவாளியாக தீர்த்து மரணத் தண்டனைக் கொடுத்ததை செய்ததை நினைவில் கொள்ளுங்கள்.

பேதுரு இயேசுவை ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று ஏற்றுக்கொண்டபோது, இயேசு அவனுக்கு பரலோக ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அறிவித்தார். (யோவான் 19:4, 6; மத்தேயு 16:15-16.)

நண்பரே உங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

இயேசுவின் நோக்கம், அவரது பிறப்பு, அவரது வாழ்க்கை, அவரது மரணம், அவரது அடக்கம், உயிர்த்தெழுதல் மற்றும் தேவனின் சிங்காசனத்திற்கு ஏறுதல் பற்றிய இந்த சுருக்கமான விவரத்தைப் படித்து, இயேசுவின் வாழ்க்கையை ஆராய்ந்த பிறகு, நீங்கள் அவரிடம் எந்தக் குறையையும் காண முடியாது என்று நான் உறுதி கூறுகிறேன். நீங்கள் இயேசுவுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறீர்கள், உங்களை நித்தியத்தை எங்கு கழிப்பீர்கள் என்பதை குறித்து கவனமாக பரிசீலிக்க வேண்டும். தயவுசெய்து உங்கள் ஆத்தும காரியங்களில் அலட்சியமாக இருக்காதீர்கள். உங்கள் பதிலும் முடிவும் உங்கள் எதிர்காலத்தையும் நித்திய இலக்கையும் தீர்மானிக்கும். நாம் ஏங்கிக்கொண்டிருக்கும் அந்த பரிபூரண உலகம், இனி மரணம், துக்கம், அழுகை அல்லது வலி, மனித வாழ்க்கையின் அனைத்து துயர அம்சங்களும் நீக்கப்பட்டு, அனைத்தும் புதிதாக்கப்படும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்குள் நமக்கு அனைத்தும் கிடைக்கும், மேலும் புதிய பூமியில் பரிபூரணத்தை அடைவோம். (எபிரெயர் 9:24; வெளிப்படுத்தல் 21:1-6.)

பிலாத்துவைப் போல இயேசுவை ஒரு குற்றவாளியாகக் கருதி உங்கள் வாழ்க்கையிலிருந்து தயவுசெய்து நீக்கிவிடாதீர்கள். ஒருவேளை நீங்கள் பிலாத்துவைப் போல இல்லாமல் இருக்கலாம். நீங்கள் இயேசுவை மிகவும் நல்லவராகவும் அன்பானவராகவும் பார்த்திருக்கலாம், ஆனால் உங்கள் மீட்பராகவும் இரட்சகராகவும் பார்த்திருக்க மாட்டீர்கள். நீங்கள் இயேசுவை நிராகரித்து, அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல் மரித்தால், நரகத்திலும் அக்கினிக் கடலிலும் சித்திரவதைகளில் உங்களை நீங்களே நித்திய ஆக்கினைக்கு உட்படுத்திக் கொள்கிறீர்கள், அங்கு தேவன் தமது அன்பினாலும், கிருபையினாலும் இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள உங்களுக்கு வழங்கிய அனைத்து வாய்ப்புகளையும் நீங்கள் நினைவில் கொள்வீர்கள். (லூக்கா 16:19-31; மத்தேயு 11:29; மாற்கு 16:15-16.) அன்பானவர்களே, அங்கு இருப்பவர்களின் நினைவும் மனசாட்சியும் அவர்களை என்றென்றும் வேதனைப்படுத்தும், வெளியேற எந்த வழியும் இருக்காது, ஏனெனில் மாறாத மற்றும் முடிவற்ற நிலை மற்றும் இடத்தில் நுழைந்த பிறகு தேவனுடன் ஒப்புரவுச் செய்து கொள்ள நேரமும் வாய்ப்புகளும் இனி இருக்காது. (மாற்கு 9:44; வெளிப்படுத்தல் 20:10, 15.)

அன்பர்களே! நீங்கள் அங்கே இருக்க வேண்டிய அவசியமில்லை. இந்தச் செய்தி உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியின் நற்செய்தியைக் கொண்டுவருகிறது,

இன்று உங்களுக்கு, உங்கள் வாழ்க்கையில், இந்தச் சூழ்நிலைகளில், நம்பிக்கை இருக்கிறது. பெத்லகேமில் இருந்த குழந்தையாகிய இயேசு இனியும் ஒரு தொட்டிலில் இல்லை. அவர் சிலுவையில் அறையப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டு, மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து, பரலோகத்திற்கு ஏறி, இப்போது நமக்காக தேவனின் சந்நிதியில் இருக்கிறார். (எபிரெயர் 9:24.)

இயேசு நம்மீது அன்பும் அக்கறையும் கொண்டு நம்மை இரட்சித்து மறுபடியும் தேவனிடம் கொண்டு வருவதற்காக நம் ஸ்தானத்தில் மரித்ததால், இனி அவரை நிராகரித்த பாவத்தைச் செய்யக்கூடாது. இயேசுவை நிராகரிப்பது என்பது தேவனின் அன்பையும் இயேசு தம்முடைய இரத்தத்தால் செலுத்தப்பட்ட இரட்சிப்பின் ஈவையும் நிராகரிப்பதாகும். பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். ஏனென்றால், தேவன் உலகத்தை மிகவும் நேசித்தார், அவர் தம்முடைய ஒரே பேறான குமாரனைக் கொடுத்தார், அவரை விசுவாசிக்கிற எவரும் கெட்டுப்போகாமல், என்றென்றும் நிலைத்திருக்கும் ஜீவனைப் பெறுவார்கள். உலகத்தை ஆக்கினைக்குள்ளாக்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்திற்கு அனுப்பவில்லை; மாறாக அவர் மூலமாக உலகம் இரட்சிக்கப்படும்படிக்கு அனுப்பினார். ஆனால் அவரை விசுவாசியாதவன் தன்னைத்தானே நியாயந்தீர்த்துகொள்கிறான், ஏனென்றால் அவன் தேவனுடைய ஒரே பேறான குமாரனின் நாமத்தை விசுவாசியாதவன். (அப்போஸ்தலர் 20:28; யோவான் 14:1-6; 3:16-18; 5:24; ரோமர் 5:15- 19; 6:23; எபேசியர் 2:8-9; மாற்கு 16:15-16.)

என் நண்பரே, நீங்கள் இயேசுவை உங்கள் இரட்சகராக இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், உங்கள் இருதயத்தைத் திறந்து, தேவன் உங்களுக்கு ஈவாக அளித்த இயேசுவை ஏற்றுக்கொள்ளுமாறு நான் உங்களைக் கெஞ்சுகிறேன். இப்போதே ஏற்றுக்கொள்ள வேண்டிய நேரம், இதோ, இன்றே உங்கள் இரட்சிப்பின் நாள், நாளை யாருக்கும் வாக்குறுதி அளிக்கப்படவில்லை. இயேசு உங்கள் வாழ்க்கைக்கு வெளியே இருக்கிறார், உள்ளே வர விரும்புகிறார், ஆனால் நீங்கள் அவரை உள்ளே அனுமதித்தால் மட்டுமே அவர் அவ்வாறு செய்வார். தயவுசெய்து மனந்திரும்பி, இப்போதே இயேசுவை ஏற்றுக்கொண்டு, அவருடைய வருகைக்கும் இந்த யுகத்தின் முடிவுக்கும் அவருடன் ஒரு மகிமையான நித்தியத்தில் வாழ ஆயத்தமாக இருங்கள்.

(வெளிப்படுத்தல் 3:20; 2 கொரிந்தியர் 6:2.)

உங்கள் அறிக்கை: அன்புள்ள ஆண்டவராகிய இயேசுவே, நான் என் இருதயத்தை உமக்குத் திறந்து, பேதுருவைப் போலவே, நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கையிடுகிறேன். நீர் என் பாவங்களுக்காக மரித்தீர் என்றும், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தீர் என்றும், பரலோகத்திற்கு ஏறி, என்னை நீதிமானாக்க தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறீர் என்றும் நான் விசுவாசிக்கிறேன். ஆண்டவராகிய இயேசுவே, உம்மை என் இரட்சகராகவும் என் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்கிறேன். எனக்கு பதிலாக சிலுவையில் மத்தியஸ்தம் செய்து என் ஆத்துமாவை இரட்சிப்பதற்கும், படைக்கும்போது இருந்த என் அசல் பாவமற்ற வடிவத்திற்கும், நிலைக்கும் என்னை மீட்டெடுத்ததற்கும் நன்றி, உம்முடன் என்றென்றும் இருக்க எனக்கு அருள்புரியும். ஆமென்.

# அதிகாரம் 3

# தேவனுடன் சரியான நிலையில் இருப்பது

பலருடைய வாழ்க்கையும், பணியும் உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளன, மேலும் அவர்கள் தங்கள் மனிதாபிமான செயல்களால் பலரின் வாழ்க்கையைத் தொட்டிருப்பார்கள். நமது உலக இருப்பும் உலகில் நமது பணியும் பாராட்டத்தக்கதாக இருக்கலாம், ஆனால் நமது நற்செயல்கள் நமக்கு இரட்சிப்பைப் பெற்றுத் தரும் என்று நாம் நம்பினால், அது நித்தியமாக நம்மை ஏமாற்றும் மற்றும் அழிவுகரமானதாகவும் மாறக்கூடும். இந்த நம்பிக்கை தேவனுடைய இரட்சிப்பின் வழியைப் பற்றிய சரியான அறிவை அடிப்படையாகக் கொண்டதல்ல, அதாவது நாம் செய்த நீதியின் செயல்களால் அல்லாமல், சிலுவையில் இயேசு கிறிஸ்துவின் கிரியையை விசுவாசிப்பதன் மூலம் கிருபையால் நாம் இரட்சிக்கப்படுகிறோம்,. இது இயேசுவால் விலைக்கிரயம் செலுத்தப்பட்டு, தகுதியற்ற நமக்கு விசுவாசத்தால் கொடுக்கப்பட்ட தேவனுடைய ஈவு. எனவே எந்த மனிதனும் தான் செய்ததில் தேவனுக்கு முன்பாக பெருமை பாராட்டவும், அவருக்கு நிகராக நீதியான நிலையைப் பெறவும் முடியாது. நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் அவர் நம்மீது ஏராளமாகப் பொழிந்த தேவனின் அன்பு மற்றும் இரக்கத்தின்படி, அவருடைய கிருபையால் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனின் நம்பிக்கையின்படி நாம் சுதந்திரவாளிகளாக ஆக்கப்பட வேண்டும். (எபேசியர் 2:4-9; தீத்து 3:4-7; 2தீமோத்தேயு 1:9-10.) வேதவாக்கியங்கள், யூதர்களின் அதிகாரியான ஒரு பரிசேயனின் வாழ்க்கையை மேற்கோள் காட்டுகின்றன. நிக்கோதேமு என்ற யூதன், அவனுடைய காலத்தில் மிகவும் மதிக்கப்படும் மதத் தலைவனுக்கு உதாரணமாக இருந்தான். அவன் இரவில் இயேசுவிடம் சென்று, இயேசுவை தேவனிடமிருந்து வந்த ஒரு போதகராக அறிந்திருப்பதாக அவரிடம் கூறினான்.

தேவன் அவருடன் இல்லாவிட்டால், அவர் செய்த அற்புதங்களை யாரும் செய்ய முடியாது என்ற நிக்கோதேமுவின் கருத்துகளுக்கு இயேசு பதிலளிக்கவில்லை, ஆனால் அவனது மிக முக்கியமான தேவைக்கு, அதாவது அவனது ஆத்துமாவின் இரட்சிப்புக்கு கவனம் செலுத்தினார். இயேசு நிக்கோதேமுவிடம், தேவனுடைய ராஜ்யத்தைக் காணவும் அதில் பிரவேசிக்கவும் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று கூறினார், மாம்சத்தினால் பிறப்பது மாம்சத்திற்குரியது; ஆவியினால் பிறப்பது

ஆவிக்குரியது. இயேசு நிக்கோதேமுவிடம், அற்புதங்களில் அதிகமாக கவனம் செலுத்தாமல், அவன் ராஜ்யத்திற்கு செல்ல மறுபடியும் பிறக்க வேண்டும் என்று தாம் கூறின முன்நிபந்தனையைப் பற்றி சிந்திக்கச் சொன்னார். (யோவான் 3:1-8.)

கொர்நேலியு என்ற ஒரு மனிதன், அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான் கொர்நேலியுவின் தருமங்கள் தேவனுக்கு முன்பாக நினைவுகூரப்பட்டன, தேவனுடைய தூதன் ஒருவன் யோப்பாவுக்கு ஆட்களை அனுப்பி, சீமோன் பேதுருவை அழைத்து, அவன் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று அவனிடம் கேட்கும்படி கூறினான். கொர்நேலியு தனது வீட்டு வேலைக்காரர்களில் இருவரை அனுப்பினான், அவர்கள் பேதுருவைக் கண்டதும், அவர்களுடன் கொர்நேலியுவின் வீட்டிற்குச் சென்றான். அப்போது கொர்நேலியு, தான் இரட்சிக்கப்பட வேண்டும் என்று கூறினான். இயேசுவை விசுவாசிக்கிற எவரும் பாவமன்னிப்பைப் பெறுவார்கள் என்று பேதுரு அவர்களிடம் கூறினான், மேலும் வார்த்தையைக் கேட்ட அனைவரும் விசுவாசித்தனர், பரிசுத்த ஆவியானவர் அவர்கள் அனைவர் மீதும் இறங்கினார், அவர்கள் சாட்சி கொடுத்து, தங்கள் இரட்சிப்புக்காக தேவனைப் புகழ்ந்தனர். (அப்போஸ்தலர் 10.) அப்போஸ்தலர் 11:11-18.)

பாவத்திலிருந்து இரட்சிப்பு பெறுவதற்கும், தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிந்து வாழ்வதற்கான தண்டனையைப் பெறுவதற்கும் நிக்கோதேமு மற்றும் கொர்நேலியுவின் குறிப்பிடத்தக்க குணங்கள் அவர்களைத் தீர்மானிக்கவில்லை என்பது மிகவும் தெளிவாகிறது. பாவத்தின் சம்பளம் மரணம், ஆனால் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வருகிற நித்திய ஜீவனோ தேவனுடைய ஈவு. (ரோமர் 6:22-23.)

நித்திய ஜீவனைப் பெற தேவனைப் பிரியப்படுத்த என்னவிதமான நற்கிரியையைச் செய்ய வேண்டும் என்று ஒரு முறை திரளான கூட்டத்தினர் இயேசுவிடம் கேட்டார்கள். அதற்கு இயேசு இவ்வாறு பதிலளித்தார், நித்திய ஜீவனைத் தரும் தேவனின் நற்கிரியையாகிய அவர் அனுப்பியவரை விசுவாசிக்க வேண்டும். ஏனெனில், தேவன் உலகத்தை மிகவும் நேசித்தார், அவர் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிற எவனும் அழிந்து போகாமல் நித்திய ஜீவனைப் பெறும்படிக்கு அவரைத் தந்தருளினார். (யோவான் 6:26-29; 3:16.)

இயேசு, நானே ஜீவ அப்பம் என்றும், தம்மைப் புசிக்கிறவன் எவனும் நித்திய ஜீவனைப் பெறுவான் என்றும், தேவனுடைய உண்மையான கிரியையைப் பெறுவது நித்திய ஜீவன் சம்பாதிப்பதற்கு ஒருவர் என்ன

செய்ய வேண்டும் என்பதில் அல்ல, அவருடைய நிறைவேறின மீட்பின் கிரியையை விசுவாசிப்பதாகும். ஆகையால், இரட்சிப்பைப் பெறுவதற்கான தேவனுடைய கிரியையாகிய இயேசு சிலுவையில் செய்த கிரியையை நாம் விசுவாசிப்பதாகும், அங்கு அவர் நம் பாவங்களுக்காக மரித்தார் என்று விசுவாசித்து அவரை நம் இரட்சகராக ஏற்றுக்கொள்வதாகும். சிலுவையில் இயேசு, எல்லாம் முடிந்தது என்று சொல்லி, தலையை சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார், அவர் செய்ய வந்த கிரியையை செய்து முடித்தார், அதாவது, இயேசு நம் பாவங்களுக்காக மரித்து அடக்கம் செய்யப்பட்டார், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார், இப்போது தேவனின் சந்நிதியில், நமக்காக பரிந்து பேசுகிறார். (யோவான் 6:35, 38, 58; 4:34; 5:36; 17:4; 19:30; எபிரெயர் 8:1; 9:24-28; 10:12.)

குருடர்கள், நிர்வாணிகள், பரிதாபகரமானவர்கள் மற்றும் வாழ்க்கையின் தற்காலிகத் தேவைகளில் சிறிதளவே உள்ளவர்கள் பூமியில் உள்ள உண்மையான வறியவர்கள் அல்ல, மாறாக அவருடைய நீதியைப் பின்பற்றாதவர்களே உண்மையான வறியவர்கள் அதனால்தான் அவர்களைத் தேவனிடம் ஐசுவரியவான்களாக இல்லாதவர்கள் என்று இயேசு கூறினார். அவருடைய நீதியை தங்களுக்குள் ஏற்றுக் கொண்டவர்களைப் போலல்லாமல், அவர்கள் கிறிஸ்து இயேசுவில் அவருடைய மகிமையின் ஐசுவரியத்தைச் சுதந்தரித்த ஐசுவரியவான்களாக இருக்கின்றனர். (வெளிப்படுத்தல் 3:17-20; லூக்கா 12:16-21; (ரோமர் 4.) எபேசியர் 1:3-14.)

இயேசு சொன்னார், “மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?
37 மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?” (மாற்கு 8:36-38.) அதாவது, நம் ஆத்துமாவின் இரட்சிப்பு மிக முக்கியமானது, மேலும் இரட்சிப்புக்கு ஈடாக யாரும் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளை வழங்க முடியாது. நீதிமான்களாக்குபவர் தேவன், மரித்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவர் கிறிஸ்து, நம்மைத் தமக்கு ஒப்புரவாக்க கிறிஸ்துவில் செயல்பட்டவர், தேவன் நம்முடைய பாவங்களை நம் மேல் சுமத்தாமல், பாவம் அறியாத இயேசுவின் மீது நம் பாவங்களைச் சுமத்தினார், இதனால் நாம் அவரில் நீதிமான்களாகவும் பரிசுத்தர்களாகவும் ஆக்கப்படுவோம். விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டு, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனோடு சமாதானம் அடைந்து, அவர் மூலம் கோபாக்கினையிலிருந்து இரட்சிக்கப்படுகிறோம். (ரோமர் 8:31-34; (ரோமர் 5.)2கொரிந்தியர் 5:17-21; 1கொரிந்தியர் 15:1-4.)

தேவன் பொய்யுரையாதவர் என்றும், தனது வயதான பலவீனமான உடலுக்கும், தனது மனைவி சாராளின்

மலட்டுக் கருப்பைக்கும் அற்புதமான இனப்பெருக்க வாழ்க்கையைக் கொடுத்து, தனது சந்ததியினர் வழியாய் பூமியின் அனைத்து ஜாதிகளையும் ஆசீர்வதிப்பார் என்றும் விசுவாசித்த ஆபிரகாமின் வாழ்க்கையை வேதம் ஒரு உதாரணமாகக் குறிப்பிடுகிறது. ஆபிரகாம் தேவனின் வார்த்தையின் மீது விசுவாசம் வைத்து செயல்பட்டான், சாராள் கர்ப்பவதியாகி, ஈசாக்கின் சந்ததி பிறந்தபோது வாக்குறுதி செயல்படத் தொடங்கியது. தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தைச் சோதித்து, மோரியா தேசத்தில் உள்ள ஒரு மலையில் வாக்குத்தத்தத்திலிருந்து பிறந்த தனது ஒரே மகனான ஈசாக்கை தகனபலியாகக் கொடுக்கும்படி கேட்டார். ஆபிரகாம் கீழ்ப்படிந்து, தேவன் ஈசாக்கிற்குப் பதிலாக ஒரு ஆட்டுக்குட்டியை வழங்குவார், இல்லையென்றால், அவர் ஈசாக்கை மரித்தோரிலிருந்து எழுப்புவார் என்று விசுவாசித்தான். இந்த நிகழ்வு அடையாளப்பூர்வமாக நிகழ்ந்தது, கல்வாரி மலையில் சிலுவையில் நம் இடத்தில் மரித்த இயேசுவை சுட்டிக்காட்டும் ஒரு ஆட்டுக்குட்டியை தேவன் வழங்கியபோது, அடக்கம் செய்யப்பட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார், இதனால் ஆபிரகாமின் ஆசீர்வாதம் இயேசு கிறிஸ்துவின் மூலம் நம் மீது வந்தது, மேலும் நாம் கிறிஸ்துவில் இருந்தால், நாம் ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியினர் மற்றும் வாக்குத்தத்தின்படி சுதந்திரவாளிகளாக இருக்கிறோம். (ஆதியாகமம் 12:2-4; 21:1-8; 22:1-18; ரோமர் 4:1-8, 17-25; எபிரெயர் 11:8-19; கலாத்தியர் 3:5-9,16-29.)

மோரியா மலையில் ஈசாக்கின் அனுபவத்திற்குப் பிறகு, கோடிக்கணக்கான மக்களுக்குத் தாயாக ஆசீர்வதிக்கப்பட்ட ரெபெக்காளை மணமகளாக ஏற்றுக்கொள்ள வயல்வெளிக்குச் சென்றபோது ஈசாக்கு அவளைப் பார்த்தான். இது ஒலிவ மலையில் பரலோகத்திற்கு ஏறிய பிறகு இயேசுவின் இரண்டாம் வருகையின்போது, அவர் தமது மணவாட்டியாகிய சபையை எடுத்துக்கொள்ள மேகங்களில் திரும்புகிறதற்கு ஒப்பாக இருக்கிறது. (ஆதியாகமம் 24.) அப்போஸ்தலர்: 6-12; 1 தெசலோனிக்கேயர் 4:16-17.) அப்போஸ்தலர் 1:9-12; எபேசியர் 5:22-32.)

பிரியமானவர்களே, நம்முடைய பூமிக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவியவர்களின் வாழ்க்கையையும் அவர்கள் செய்த செயல்களையும் நிச்சயமாக நாம் பெரிதும் மதிப்போம். மற்றவர்களை விட இயேசுவின் அன்பும் செயலும் பெரியது, அதை எவருடனும் ஒப்பிட முடியாது, அவருடைய அன்பும் வல்லமையும் நோயாளிகளையும் ஒடுக்கப்பட்டவர்களையும் அற்புதமாக குணப்படுத்தியது. பசித்தவர்களுக்கு உணவை திருப்தியாக அளித்தது; மரித்தவர்களை உயிர்ப்பித்தது; புயல்களை அடக்கியது மற்றும் பல அற்புதங்களைச் செய்தது.

அவருடைய அன்பும் செயலும் அவரை நமது உலகத் தேவைகளுக்கு அப்பால் கொண்டு சென்றது, வேறு யாராலும் செய்ய முடியாததைச் செய்தது, அதாவது, இயேசு தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான ஒரே மத்தியஸ்தராாக நம் பாவத்திற்கான மீட்பு விலையை செலுத்தினார், அவர் அனைவருக்கும் மீட்கும் பொருளாகத் தம்முடைய உயிரைக் கொடுத்தார். (மாற்கு 2:1-12; 8:1-9, 22-23; 4:39; (யோவான் 11.) 1தீமோத்தேயு 2:5-6.)

நண்பரே! இதுவே நம் அனைவருக்குமான மிகப்பெரிய அன்பு, இயேசு நம் பாவங்களுக்காக மரித்து சிலுவையில் காட்டின அன்பு, மனிதனுக்காகச் செய்யப்பட்ட அனைத்து மிகப்பெரிய மத்தியஸ்த பணி, அது நம்மை தேவனுடன் ஒப்புரவு செய்யும் பணி, எல்லாவற்றிற்கும் மேலாக மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலைக் கொடுத்த மிகப்பெரிய வல்லமை மற்றும் பிசாசு, மரணம், நரகம் மற்றும் பாதளம் ஆகியவற்றின் மீது நமக்கு வெற்றியைக் கொடுத்தது. மேலும் அவர் பூமியிலிருந்து பரலோகத்திற்குச் சென்று தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்து நமக்காகப் பரிந்து பேசுகிறார். தாம் எங்கே இருக்கிறாரோ அங்கே இருப்பதற்கு தம்மை இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களை கொண்டு செல்ல அவர் மீண்டும் வருகிறார். (மாற்கு 15:25; 16:1-7, 19; 1கொரிந்தியர் 15:1-4, 51-57; யோவான் 14:1-6.)

இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் மற்றும் தேவனின் வலது பாரிசத்தில் வீற்றிருத்தல் ஆகியவற்றை நிராகரித்து, நமது மத்தியஸ்தராகவும் பரிந்துரையாளராகவும் பாவத்திலிருந்தும் தேவனிடமிருந்து நித்தியமானத் தண்டனையிலிருந்தும் உங்களைக் இரட்சிப்பதற்குப் பொருத்தமற்றதாகவும் அர்த்தமற்றதாகவும் கருதுவது, அவரையும், கிருபையின் ஆவியையும் அவமதிப்பதாகும். இயேசுவை உங்கள் பாவத்தை சுமந்தவராக ஏற்றுக்கொள்ளாமல் மரிப்பது உங்கள் ஆத்துமாவை நரகத்திற்கும் அக்கினிக் கடலுக்கும் தள்ளுவதாகும். பிசாசுடனும் மற்ற அவிசுவாசிகளுடனும் என்றென்றும் வேதனைப்படுவதற்கு இது காரணமாக அமையும். (மாற்கு 16:15-16; எபிரெயர் 10:29; (வெளிப்படுத்தல் 20-21.)

பிரியமானவர்களே, நாம் நரகத்திலும் அக்கினிக்கடலிலும் செல்வது தேவனின் சித்தமல்ல, நீங்கள் இருக்க விரும்பும் இடமும் அதுவல்ல என்பது எனக்குத் தெரியும். கிறிஸ்து இயேசுவின் மூலம் தேவன் நம்மைத் தம்முடைய நித்திய மகிமைக்கு அழைக்கிறார். நீங்கள் கிறிஸ்துவில் இல்லையென்றால், தயவுசெய்து தேவனின் அழைப்புக்கு பதிலளித்து, இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, காலம் கடந்துச் செல்வதற்கு முன் தேவனுடன் சரியான

நிலைக்கு வாருங்கள். (ரோமர் 10:9-15; யோவான் 3:16; 1பேதுரு 5:10.)

அன்புள்ள தேவனே, என் பாவத்திற்காக இயேசுவை மரிக்கக் கொடுத்ததற்கு நன்றி. கிரியைகளால் இரட்சிப்பு என்ற நம்பிக்கையிலிருந்து, இயேசு எனக்காக மரித்தார், அடக்கம் செய்யப்பட்டார், என்னை நீதிமானாக்க நீர் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினீர் என்று விசுவாசிப்பதன் மூலம் கிருபையால் உம்முடைய இரட்சிப்பின் வழிக்குத் திரும்புகிறேன். கர்த்தராகிய இயேசுவே, உம்முடைய நீதியின் ஈவை நான் பெறுகிறேன், உம்மை என் இரட்சகராக ஏற்றுக்கொள்கிறேன். என் ஆத்துமாவை இரட்சித்தற்கும், நித்திய ஜீவனுக்கு என்னைத் ஆயத்தபடுத்தியதற்கும் நன்றி, உமது நாமத்திற்குரிய மகிமையை செலுத்துகிறேன். ஆமென்.

# அதிகாரம் 4

# எதிர்காலத்தின் மகத்தான நிகழ்வுக்கு ஆயத்தமாகுங்கள்

இயேசு கிறிஸ்து தம்முடைய சபைக்காக வருவதே மாபெரும் எதிர்கால நிகழ்வு. அவர் வருவதற்கு முன்பு நமக்கு பல அடையாளங்களைக் கொடுத்திருக்கிறார். மேலும் அவர் நமக்குக் கொடுக்கும் அறிவு—நமது ஆயத்தநிலை மற்றும் நித்தியத்தை நாம் எங்கு கழிக்கப் போகிறோம் என்பதைக் குறித்து முடிவை எடுக்க, நமது உடனடி கவனம் தேவை. (மத்தேயு 24:42, 44; 25:10; லூக்கா 12:40; 17:26-30.) இந்தச் செய்தியின் சாராம்சத்தை புரிந்துகொள்ளுங்கள். வானம், பூமி, மனிதனின் படைப்பு, அவனது வீழ்ச்சி எவ்வாறு ஏற்பட்டது என்பதை அறிந்துகொள்ளுங்கள். மரணம், நரகம், மதம் மற்றும் படைப்பில் உள்ள ஒழுங்கின்மை ஆகியவை எவ்வாறு உலகிற்குள் நுழைந்தன என்று தெரிந்துகொள்ளுங்கள். வீழ்ச்சியடைந்த மனிதகுலத்தையும், படைப்பின் ஒழுங்கை மீட்டெடுக்கும் தேவனின் திட்டத்தையும், ஒரு புதிய வானம் மற்றும் புதிய பூமியின் மகிழ்ச்சியை அடைவதற்கும் உங்களை அழைத்துச் செல்ல அனுமதியுங்கள். (ஆதியாகமம் 1-2.)

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும், ஜலத்திலும் பூமியிலும் வானத்திலும் உள்ள உயிரினங்களையும் சிருஷ்டித்தார்; தேவன் அவைகளை பூமியையும், கடலையும் தங்கள் தங்கள் ஜாதியின்படி நிரப்பும்படி ஆசீர்வதித்தார்.

தேவன் தம்முடைய சாயலிலே மனிதனை சிருஷ்டித்து, பூமியின் மண்ணினாலே அவனை உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்; மனிதன் ஒரு ஜீவ ஆத்துமாவானான். மனிதன் தேவனுடைய படைப்பின் மணிமகுடம். அவன் பலுகிப் பெருகி, பூமியைத் தன் இனத்தால் நிரப்பி, மற்ற

படைப்புகளை ஆண்டுக்கொண்டு, அதைக் கீழ்ப்படுத்த வேண்டும். தேவன் அவர்களுக்கு அவர்களின் உணவுக்காக விதை தரும் செடிகளையும், விதைகளைக் கொண்ட கனிகளைத் தரும் மரங்களையும் கொடுத்தார். கர்த்தராகிய தேவன் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உருவாக்கி, அதில் பூமியிலிருந்து எல்லா வகையான மரங்களையும், உணவுக்கு நல்ல மரங்களையும், ஜீவ விருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும், தோட்டத்தின் நடுவில் முளைக்கச் செய்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும், அதைப் பராமரிக்கவும் வைத்தார். நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைத் தவிர, சகல விருட்சத்தின் கனியையும் தாராளமாய்ப் புசிக்கக் கட்டளையிட்டார்; ஜீவ விருட்சத்தின் கனியையும், நன்மை தீமை அறியத்தக்க கனியையும் புசிக்கும் நாளில் அவன் சாகவே சாவான் என கூறினார் (ஆதியாகமம் 1:26-28; 2:7-9, 15-17.)

மனிதன் பலுகிப் பெருகி பூமியை நிரப்ப வேண்டும் என்ற தமது கட்டளையை நிறைவேற்றுவதற்காக, கர்த்தராகிய தேவன் ஆதாமுக்கு ஆழ்ந்த நித்திரையை வரவழைத்து, அவனுடைய விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து சதையால் மூடினார். கர்த்தராகிய தேவன் மனிதனிடமிருந்து எடுத்த விலா எலும்பினால் ஒரு பெண்ணை உருவாக்கி, அவளை ஆணுக்கு சமமாக, கருத்தரிக்கவும், அவர்களின் சந்ததியை பெருக்கவும், குடும்ப அமைப்பை நிறுவவும் கூடிய திறனுடன், ஆணிடம் கொண்டு வந்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள். (ஆதியாகமம் 2:18-25.)

தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்தில் உள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற

விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஸ்திரீயானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத்தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள். பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாய் இருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான். அப்பொழுது அவர்: நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார். அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான்.

அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச்செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள் சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப்பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டுமிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத்தின்பாய்; உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார். அவர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்;

வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான் என்றார். பின்பு அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார். ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான்; ஏனெனில், அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்(ஆதியாகமம் 3:1-20.)

நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தைப் பற்றிய தேவனின் வெளிப்படுத்தப்பட்ட சித்தத்தை ஆதாமும் ஏவாளும் மீறியபோது, தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான இணக்கமான உறவும், அவர் ஒரு குடும்பமாகத் திட்டமிட்டிருந்த பிரிக்க முடியாத ஒற்றுமையும் சீர்குலைந்து, ஒழுங்கின்மையானது படைப்பில் பரேவேசித்தது. அன்றிலிருந்து, மனித முன்னேற்றம், வளர்ச்சி மற்றும் பூமியின் மீதான ஆதிக்கம் ஆகியவை பரிகார பலியின் மூலம் மீட்கப்பட வேண்டியதாக மாற்றப்பட்டன, மனிதனுடனான தேவனின் உறவு மீட்பின் அடிப்படையில் மாறியது, மனிதனை தம்முடன் ஐக்கியம் கொள்ள உருவாக்கியதன் நோக்கத்தை நிறைவேற்றவும், ஒரு குடும்பமாக அவர்களின் பிரிக்க முடியாத ஐக்கியத்தை நிறைவேற்றவும் மீட்பு அவசியமாய் மாறினது.

இந்த இலக்கை அடைய, பரிகார பலியாக ஒரு மிருகத்தைச் செலுத்தி, ஆதாம் மற்றும் ஏவாளின் நிர்வாணத்தை அந்த குற்றமற்ற விலங்கின் தோலினால் ஆடைகளை உண்டாக்கி மூடினார், ஏனெனில் அத்தி இலைகளால் அவர்கள் தங்களை மூடிக்கொண்டதானது நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசிப்பதற்காக தேவன் அளித்த மரணத்தைத் தடுக்க முடியாது. (ஆதியாகமம் 3:21; யோவான் 1:29,36; 1 பேதுரு 1:18-19; ரோமர் 6:23.)

பின்பு தேவனாகிய கர்த்தர்: இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் என்று, அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த

தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார். அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போம் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேரூபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளிப் பட்டயத்தையும் வைத்தார். (ஆதியாகமம் 3:22-24.)

ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான்; அவள் கர்ப்பவதியாகி, காயீனைப் பெற்று, கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள். பின்பு அவனுடைய சகோதரனாகிய ஆபேலைப் பெற்றாள்; ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான், காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான். சிலநாள் சென்றபின்பு, காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான். ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளின் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார், ஏனென்றால் அவன் பாவத்தை மூடுவதற்காக கர்த்தராகிய ஆண்டவர் நிறுவிய பரிகார மரணத்தில் சிந்தப்பட்ட குற்றமற்ற இரத்தத்தை செலுத்தினான், இதன் மூலம் ஒரு பரிகார பலியில் தனது விசுவாசத்தை வெளிப்படுத்தினான், விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையானபலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிபெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக்குறித்து தேவனே சாட்சிகொடுத்தார்: ஆனால் காயீனையும் அவனுடைய காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை, ஏனென்றால் தேவன் எதிர்ப்பார்க்கும் பாவமற்ற பரிகார இரத்தத்தை அவன் கொண்டு வரவில்லை. (ஆதியாகமம் 3:21; 4:1-5; எபிரெயர் 11:4.)

இந்தச் சூழ்நிலையில், காயீன் தேவனுடன் ஒப்புரவாவதற்கு தனது சொந்தத் தீர்மானத்தின்படி காணிக்கைகளைக் கொண்டு வந்தபோது, மதம் உலகிற்குள் நுழைந்தது. அவன் கொண்டு வந்தது பாவத்தை மூடுவதற்கு தேவன் ஏற்படுத்தியது குற்றமற்ற மரண பலி அல்ல; மாறாக, பாவமுள்ள மாம்சத்தின் கிரியை என்பதால், தேவன் காயீனின் காணிக்கையை அங்கீகரிக்காமல், சரியான பலியைக் கொண்டுவரும்படி காயீனிடம் கருணையுடன் இறுதி வேண்டுகோள் விடுத்தார். ஆனால், காயீன் கீழ்ப்படிவதற்குப் பதிலாக, தேவன் மீதும், தான் கொலை செய்த தன் சகோதரன் ஆபேல் மீதும் கோபமடைந்தான். பாவம், உருவ வழிபாடு, மோதல், பொறாமை, வெறுப்பு, கோபம், சண்டை, பொறாமை, கொலை போன்றவற்றின் மூலம் மாம்சத்தின்

கிரியைகளில் வெளிப்படத் தொடங்கியது. (ஆதியாகமம் 4:6-8; கலாத்தியர் 5:19-21.)

ஆபேலின் பலி, உலகத்தின் பாவத்தைப் போக்கவும், மனிதனை தேவனுடன் ஒப்புரவாக்கவும், பிசாசின் செயல்களை அழிக்கவும் சிலுவையில் பரிகார மரணமாக பலியிடப்படவிருந்த, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட குற்றமற்ற பெண்ணின் சந்ததியின் ஒரு மாதிரியாகும். (ஆதியாகமம் 3:15; யோவான் 1:29; 1யோவான் 3:8.)

காலம் நிறைவேறினபோது, தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுவை அனுப்பினார்; அவர் மனுஷர் சாயலாக, கன்னி மரியாளிடத்தில் பிறந்தார்; அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, தம்மைத்தாமே தாழ்த்தி, மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி, சிலுவையில் மரித்ததினாலே தம்முடைய சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சுமந்து, நம்மைத் தமக்கு ஒப்புரவாக்கினார். நம்முடைய ஜீவன் பரலோகத்தில் இருக்கிறது; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாகிய இரட்சகரை நாம் எப்படி தேடுகிறோம்? அவர் நம்முடைய அழிவிற்குரிய சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மாற்றுவார்; அதாவது, நம்முடைய அழிவிற்குரிய சரீரம் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாகும்படி இயேசு தம்மை ஒரு மனிதனாக வடிவமைத்துக் கொண்டார். பாவம் அறியாத இயேசு நமக்காகப் பாவமானார்; நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, அவரிடத்தில் அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படி, அவருடைய இரத்தத்தினாலே நமக்கு மீட்பும், பாவ மன்னிப்பும் உண்டாயிருக்கிறது. (கலாத்தியர் 4:4-5; பிலிப்பியர் 2:7-8; 3:21; 1பேதுரு 2:24; 2கொரிந்தியர் 5:21; எபேசியர் 1:7; ரோமர் 3:23-25.)

அன்பானவர்களே, கிறிஸ்துவினால் நம்முடைய பாவம் நீக்கப்படும்போதுதான் நாம் மீண்டும் ஜீவனுக்கும் தேவனோடு ஐக்கியத்திற்கும் திரும்பி, ஆளுகையை மீட்டெடுக்க முடியும். இயேசுவே வழி, சத்தியம், ஜீவன், அவர் மூலமாக மட்டுமே எந்த மனிதனும் பிதாவை அடைய முடியும். இந்த இரட்சிப்பை நிராகரித்து, வேறு ஏதேனும் பலியிடப்பட்ட விலங்கின் இரத்தத்தால், தனது மனித முயற்சியால் தேவனை திருப்திப்படுத்த முயல்வது காயீனின் வழியாகும். இது தேவனை விட்டு தன்னைப் பிரித்துக் கொண்ட வழியாகும். விசாலமான வழியை மதத்தின் எந்தப் பெயரால் அழைத்தாலும் அதை அறிமுகப்படுத்திய காயீனின் வழியில் நீங்கள் இருக்கிறீர்கள், தேவன் தாம் தீர்மானித்த வழியான இயேசு கிறிஸ்துவின் மூலம் தம்முடன் ஒப்புரவாக உங்களை கிருபையுடன் அழைக்கிறார். நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்து தம்முடைய இரத்தத்தைச் சிந்தினபோது, அவருடைய கிரியையில் விசுவாசம்

வைப்பதன் மூலம் நாம் கிருபையினாலே இரட்சிக்கப்படுகிறோம்; நம்முடைய கிரியைகளினாலேயல்ல, ஒருவனும் பெருமை பாராட்டாதபடிக்கு, அது தேவனுடைய ஈவாக இருக்கிறது (யோவான் 14:1-6; எபேசியர் 2:8-9.)

இயேசு சிலுவையில் அறையப்பட்டு சாத்தானால் வாதிக்கப்பட்டார், ஏனென்றால் அவர் நம்முடைய பாவங்களுக்காக விலைக்கிரயத்தை கொடுத்தார். அவர் மரித்து விதைக்கப்பட்டார், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து தேவனின் சிங்காசனத்திற்கு ஏறியதன் மூலம், மனிதனை தேவனிடமிருந்து பிரிக்கும் சாத்தானின் வல்லமையை இயேசு நசுக்கி, மரணம், நரகம் மற்றும் பாதாளத்தின் மீது அவனை அதிகாரமற்றவனாக்கினார். மேலும், அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்புவோருக்கு அவரது இரத்தத்தின் மூலம் தேவனின் பிரசன்னத்திற்குச் செல்லும் வழியைத் திறந்தார். (1 கொரிந்தியர் 15:3-4; யோவான் 12:24; எபிரெயர் 9:24,26; 10:18-20.)

இயேசு, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், அவருக்குள் இருக்கிறவர்கள் பயப்படவேண்டிய அவசியமில்லை என்றும் கூறுகிறார். அவரே ஆதியும் அந்தமும், தொடக்கமும் முடிவுமாக இருக்கிறார். அவர் ஜீவிக்கிறவர், மரித்தவர்; இதோ, அவர் என்றென்றும் உயிரோடிருக்கிறார், ஆமென்; மேலும் அவர் நரகத்திற்கும் மரணத்திற்கும் திறவுக்கோல்களைக் கொண்டிருக்கிறார், அதாவது, மரணத்தின் போது நம் ஆத்துமா எங்கு செல்கிறது என்பதைத் தீர்மானிக்க இயேசுவுக்கு அனைத்து அதிகாரமும் உள்ளது, மேலும் அவருக்குள் மரிப்பவர்கள் என்றென்றும் அவருடன் இருக்க வேண்டும் என்றும், அவரில்லாமல் மரிப்பவர்கள் நரகத்திற்கும் அக்கினிக் கடலுக்கும் செல்வார்கள் என்றும் அவர் தீர்மானித்துள்ளார். (மத்தேயு 28:18; 11:27; யோவான் 12:24; வெளிப்படுத்தல் 1:8-10, 17-18; லூக்கா 16:19-31; ரோமர் 5:8-11.)

மனிதனின் வீழ்ச்சிக்குப் பிறகு, துன்மார்க்கம் அதிகரித்தது, பூமி சீர்கேட்டால் நிறைந்தது, தேவன் பூமியிலிருந்து அனைத்து மாம்ச ஜீவன்களையும் அழித்தார், நோவா தேவனுக்குக் கீழ்ப்படிந்து தனது வீட்டரை இரட்சித்துகொள்ள பேழையைக் கட்டினான். நோவா தேவனுடைய பார்வையில் கிருபையைப் பெற்றப்படியால் தன் மனைவி, மகன்கள் மற்றும் அவர்களது மனைவிகளுடன் பேழைக்குள் பிரவேசித்தான். அதே நேரத்தில் பேழைக்குள்

பிரவேசிக்க தேவனின் கிருபையை நிராகரித்த மக்கள் அழிந்தனர். நோவா மற்றும் அவனுடைய குடும்பத்தின் மூலம், தேவன் மீண்டும் மனிதர்களை பூமியில் குடியேற்றினார், மனிதன் மீண்டும் தேவனை எதிர்த்து, அவரை தவிர்த்து சுயாதீனமான உலகளாவிய சாம்ராஜ்யத்தை நிறுவ பாபேல் கோபுரத்தைக் கட்டினான். தேவன் தம்முடைய கிருபையினால் அவர்களுடைய பாஷையைத் தாறுமாறாக்கி, அவர்களைச் சிதறடித்து, வெவ்வேறு மொழிகளைப் பேசும் ஜாதிகளாகப் பிரித்து, அவர்கள் தொடர்ந்து சுயாதீனமாய் வாழவிடாமல் தடுத்தார். (ஆதியாகமம் 6-9.) (ஆதியாகமம்11.)

மனித வரலாற்றின் இந்த கட்டத்தில், மற்ற ஜாதிகளுக்குத் தம்முடைய சாட்சியாக இருக்க பரிசுத்த வேதாகமத்தை ஒரு மக்கள் கூட்டத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். அந்த மக்களின் தகப்பனாக ஆபிரகாமை தேவன் அழைத்தார், மேலும் அவருடைய சந்ததி வானத்தின் நட்சத்திரங்களைப் போலப் பெருகும் என்று வாக்குறுதி அளித்தார். இந்த வாக்குறுதிகள் ஆபிரகாமின் மகன் ஈசாக்கிற்கும், பின்னர் ஆபிரகாமின் பேரன் யாக்கோபுக்கும் வழங்கப்பட்டன, பின்னர் யாக்கோபின் பெயர் இஸ்ரேல் என்று மாற்றப்பட்டது, அந்த ஜாதியிலிருந்து பன்னிரண்டு கோத்திரங்கள் வந்தன, யூதா கோத்திரம் மற்றும் தாவீதின் வம்சாவளி வழியாக, வாக்குறுதியளிக்கப்பட்ட மேசியா வந்து, அவர் மூலம் உலகின் அனைத்து ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும். (ஆதியாகமம் 12:1-4; 15:1-7; 17:1-5; 35:10.)

பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார். (எபிரெயர் 1:1-3.) தீர்க்கதரிசிகள் குறிப்பிட்ட இந்த இயேசு கிறிஸ்து பெரியவராக இருப்பார். தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்திலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை. (லூக்கா 1:31-33; ஏசாயா

9:6-7.)

தேவனுடைய பண்டிகைகள் (புனித நாட்கள்) என்பது தேவன் தம்முடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜாதியான இஸ்ரவேலுக்கு நியமித்த நாட்களாகும். அவர்கள் தம்மை அணுக வேண்டிய இடத்தையும், நியமிக்கப்பட்ட காலங்களையும், பருவங்களையும், இடங்களையும், பலிகள் மற்றும் காணிக்கைகளையும் நிர்ணயித்தார். பண்டிகை நாட்கள் எக்காளங்கள் ஊதுவதன் மூலம் அறிவிக்கப்பட்டன, மேலும் இஸ்ரவேலர்கள் சரியான முறையில் செயல்படவும், அவருடைய நியமிக்கப்பட்ட பண்டிகைகளைக் கடைப்பிடிக்கவும் ஒலிக்கப்பட்ட தனித்துவமான செய்திகளைக் கற்றுக்கொண்டு புரிந்துகொள்ள வேண்டியிருந்தது. (லேவியராகமம் 23.) யாத்திராகமம் 23:14.) தீர்க்கதரிசிகள் எக்காளத்தைப் போல தங்கள் குரல்களை உயர்த்தி தெளிவான மற்றும் தனித்துவமான குரலை எழுப்பவும், மக்களுக்கு அவர்களின் மீறுதல்களைக் காட்டவும், உலகில் வரவிருக்கும் நிகழ்வுகளைப் பற்றி எச்சரிக்கவும் அழைக்கப்பட்டனர். (ஏசாயா 58:1; யோவேல் 2:1; ஆமோஸ் 3:6.)

புறஜாதியினர் பண்டிகைகளில் பங்கேற்க வேண்டுமென்றால், அவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடம் சேர வேண்டியிருந்தது, மேலும் அவர்கள் விருத்தசேதனம் பண்ணப்பட கட்டளையிடப்பட்டனர், இது தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையின் அடையாளமும் முத்திரையும் ஆகும். இது அவர்களை ஒன்றாகக் கொண்டு வந்து, பழைய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் மற்றும் பேறுகளைப் பெற அவர்களுக்கு உரிமை அளித்தது, இனி வாக்குத்தத்தின் உடன்படிக்கையிலிருந்து அவர்கள் அந்நியர்களாக இல்லை. (ஆதியாகமம் 17:1-14; யாத்திராகமம் 12:43-50.) கிறிஸ்துவில்தான் நமக்குச் சமாதானம் இருக்கிறது, யூதர் புறஜாதியார் என்ற பிரிவினையின் நடுச்சுவரைத் தகர்த்து, ஒன்றாக்கி, புதிய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களிலும் பேறுகளிலும் பரிசுத்தவான்களுடனும் தேவனின் வீட்டாருடனும் சக குடிமக்களாக நாம் ஒன்றாகப் பங்கேற்கிறோம். யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள். (எபேசியர் 2:11-22; கலாத்தியர் 3:26-29; கொலோசெயர் 3:11.)

எக்காளங்களை ஊதுவது இஸ்ரவேலரை ஆராதனைக்கு ஒன்று சேர்ப்பதோடு தொடர்புடையது, மேலும் இந்த குறிப்பிட்ட சத்தம் கேட்கும்போது, விசுவாசிகளான யூதர்கள் வேலையை நிறுத்திவிட்டு, ஆலய வாசலில் வழிபாட்டிற்காக கூடிவருவார்கள், விசுவாசியாத யூதர்களையும் யூதரல்லாத தொழிலாளர்களையும் வயல்வெளியில் விட்டுவிடுவார்கள். இது எக்காளப் பண்டிகையில் நிறைவேறும், இயேசு தம்முடைய மணவாட்டி சபைக்காக ஆரவாரத்தோடும், பிரதானதூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்

முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம் (மத்தேயு 24:40; லூக்கா 17:34-36; 1கொரிந்தியர் 15:51-57; 1 தெசலோனிக்கேயர் 4:13-18.)

வெளிப்படுத்தல் புத்தகத்தில், எக்காளத்தைப் போன்ற மகிமையான குரலில், ஆவியானவர் சபைகளுக்குச் சொல்வதைக் கேட்க கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மை அழைக்கிறார், மேலும் எக்காளங்களை ஊதுவது நியாயத்தீர்ப்புகளுடன் தொடர்புடையது. (வெளிப்படுத்தல் 1:10--4:1.) (வெளிப்படுத்தல் 8-15.)

நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும், சங்கீதங்களிலும் தம்மைப் பற்றி எழுதப்பட்டு, தேவனால் இஸ்ரவேலுக்கு வெளிப்படுத்தப்பட்ட அனைத்தையும் இயேசு நிறைவேற்றினார். விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை அவரிடத்தில் கொண்டு வருவதற்கு நம்முடைய ஆசிரியராக இயேசு நமக்காக அவற்றை நிறைவேற்றினார். விசுவாசம் வந்தபின்பு, நாம் இனி ஒரு ஆசிரியரின் கீழ் இல்லை. ஏனென்றால், இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் நாம் அனைவரும் தேவனுடைய பிள்ளைகளாகிறோம். நியாயப்பிரமாணம் பரிபூரண கீழ்ப்படிதலைக் கோரியது, அதைக் கடைப்பிடிக்க யாரிடமும் சக்தி இல்லை என்பதால், இயேசு நம்மைப் பாவிகளாகக் கண்டனம் செய்த சட்ட ஆவணத்தை அழித்து, அதை சிலுவையில் அறைந்தார். எனவே, விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்பட்டதால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் நாம் தேவனுடன் சமாதானம் பெற்றிருக்கிறோம். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவர் மூலமாய் உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்; அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நியாயத்தீர்ப்பில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவதில்லை. (லூக்கா 24:44; 18:31-33; அப்போஸ்தலர் 3:18; மத்தேயு 5:17; ரோமர் 10:4; 5:1; எபிரெயர் 1:1-3; கலாத்தியர் 3:22-26; கொலோசெயர் 2:13-20; (யோவான் 3:16-18).

முதற்பலன்களின் கதிர்களை போலவே இயேசுவும், முதற்பலன்களின் கதிர்களின் பண்டிகை நாளில் அடையாளப்படுத்தப்பட்ட அனைத்தையும் நிறைவேற்றினார். இந்தக் கதிர்க்கட்டு, தேவனுக்கு முன்பாக ஆசாரியனால் அசைவாட்டப்படும் ஒரு பிரதிநிதி கதிர்க்கட்டு ஆகும், மேலும் அது வரவிருக்கும் அறுவடையின் அடையாளமாக இருந்தது. (லேவியராகமம் 23:9-11; யாத்திராகமம் 23:19.) கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால்,

மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1 கொரிந்தியர் 15:20-23; 1 யோவான் 3:2; பிலிப்பியர் 3:20-21; கொலோசெயர்:18; எபிரெயர் 10:24-26; வெளிப்படுத்தல் 1:5.)

யூத மற்றும் புறஜாதி விசுவாசிகளைக் கொண்ட புதிய ஏற்பாட்டு திருச்சபைக்கு இஸ்ரேல் நிழலாக இருந்தது. பழைய உடன்படிக்கையின் கீழ் இயற்கையான நிறைவேற்றத்தை அனுபவித்த சரீரப் பிரகாரமான இஸ்ரவேலருக்கு நடந்தவைகள், ஆவிக்குரிய இஸ்ரவேலை சுட்டிக்காட்டியது, அவர்கள் சடங்கின் கீழ் ஆவிக்குரிய நிறைவேற்றத்தை அனுபவிப்பார்கள்.

ஆகவே, கிறிஸ்துவில் புதிய உடன்படிக்கை என்பது, தற்காலிக பழைய உடன்படிக்கையில் வாழாமல், நித்திய புதிய உடன்படிக்கையை வாழ்வதாகும். (1 பேதுரு 2:5-9; 1 கொரிந்தியர் 15:46; 2 கொரிந்தியர் 4:18.)

பண்டிகைகள், அமாவாசைகள் மற்றும் ஓய்வு நாட்கள் வரவிருக்கும் விஷயங்களின் நிழலாகும், ஆனால் சபையோ கிறிஸ்துவின் சரீரம். அவரே முதல் உடன்படிக்கையின் சடங்குக்குரிய அனைத்திற்கும் சரீரம், பொருள், மாதிரி. ஏனெனில் அந்த முதலாம் உடன்படிக்கை பிழைத்திருந்ததானால், இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேடவேண்டுவதில்லையே. அவர்களைக் குற்றப்படுத்தி, அவர்களை நோக்கி: இதோ, கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில்: இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது. நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது என்று கூறப்பட்டிருக்கிறது (எபிரெயர் 8:6-13; கொலோசெயர் 2:16-17.)

பாவநிவாரண நாளில், இஸ்ரவேலர் தங்கள் சொந்த வேலைகளை நிறுத்திவிட்டு, ஓய்வெடுக்க வேண்டியிருந்தது, பிரதான ஆசாரியன் தேவாலய ஊழியத்தில் பலியிடப்பட்ட மிருகத்தின் பாவநிவாரண இரத்தத்துடன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பான். இயேசு தம்மையே பலியாகக் கொடுத்து, தேவனின் பலிபீடமான சிலுவையில் தம் இரத்தத்தைச் சிந்தியபோது, பிரதான ஆசாரியராகவும் பலியாகவும் இருந்தார். நமது மகா பிரதான ஆசாரியராக, இயேசு தம்முடைய சொந்த பாவநிவாரண இரத்தத்துடன் பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, அதை கிருபாசனத்தில் பிதாவுக்கு ஒப்புக்கொடுத்து, நமது பரலோக பிரதான ஆசாரியராக பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்து,

அனைத்து மனிதகுலமும் தம்முடைய இரத்தத்தால் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க ஒரு புதிய மற்றும் ஜீவனுள்ள வழியைத் திறந்து, பூமிக்குரிய பிரதான ஆசாரியரின் வேலையைத் தம்முடைய சொந்த இரத்தத்தால் நிறைவேற்றினார். ஆகையால், வெளிப்புற பஸ்கா பண்டிகையும், பாவநிவாரண பண்டிகை நாளில் விலங்குகளின் இரத்தத்தால் திரைக்குள் பிரவேசிக்கும் பூமிக்குரிய பிரதான ஆசாரியனின் வேலையும் இனி தேவையில்லை. விசுவாசி தனது சொந்த கிரியைகளிலிருந்து ஓய்வெடுத்து, கிறிஸ்துவின் செய்து முடிக்கப்பட்ட வேலையில் ஓய்வெடுக்கிறான், அவரில் நாம் இப்போது பாவநிவிர்த்தியைப் பெற்றுள்ளோம், மேலும் அது நமக்காகப் பலியிடப்பட்ட நமது பஸ்காவாகும்: இதன் மூலம் நாம் ஒரே தரம் அவருடைய சரீரத்தைப் பலியிடுவதன் மூலம் பரிசுத்தப்படுத்தப்படுகிறோம், எனவே பழைய புளிப்புள்ள அப்பத்தினால் அல்ல ... ஆனால் நீதி மற்றும் உண்மையின் புளிப்பில்லாத அப்பத்துடன் பண்டிகையை ஆசரிப்போம். (லேவியராகமம் 16.) எபிரெயர் 6:20; 9:11-15; 10:1-22; ரோமர் 5:11; !கொரிந்தியர் 5:7, 8.)

மேலும், பெந்தெகொஸ்தே (ஐம்பதாவது நாள்) பண்டிகையானது, இயேசு வாக்குறுதியளித்தபடி, மனிதகுலத்தில் வாசம் செய்ய பரிசுத்த ஆவியின் வருகையை சுட்டிக்காட்டும் நிழலாக செயல்பட்டது. இது எருசலேமில் பெந்தெகொஸ்தே நாளில் முதற்பலன்களின் கதிர்க்கட்டை அசைவாட்டி, அப்போஸ்தலர்கள் மீதும், இயேசுவின் தாயான மரியாளும் அவருடைய சகோதரர்களும் உட்பட பெண்கள் மீதும் இயேசு உயிர்த்தெழுந்த ஐம்பது நாட்களுக்குப் பிறகு நிறைவேறியது. அந்த எண்ணிக்கை நூற்று இருபது, அது மாம்ச யுகத்தை முடித்து, ஆவியின் முதற்பலனைத் தொடங்கியது. அவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, ஆவியின் முதற்பலனானவர்களாக, ஆவியானவர் அவர்களுக்கு வசனத்தைக் கொடுத்தபடியால், இயேசு கிறிஸ்துவின் திருச்சபை பிறந்தபடியால், அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசத் தொடங்கினர். (லேவியராகமம் 23:15-16; ஆதியாகமம் 6:3,13; அப்போஸ்தலர் 1:1-8, 14-15; (அப்போஸ்தலர் 2.) பண்டிகைகளில் காணப்பட்ட தேவனின் நோக்கங்கள், கிறிஸ்துவிலும் திருச்சபையிலும் அவருடைய நித்திய நோக்கத்தை நிழலாடின. எனவே நிழலில் வாழ்வது என்பது பொருளைத் தவறவிடுவதாகும். மாதிரியைப் பற்றிக்கொள்வது என்பது அந்த மாதிரியை, அதாவது இயேசு கிறிஸ்துவைத் தவறவிடுவதாகும். (யோவான் 15:26; 16:7-15; கலாத்தியர் 5:16; எபேசியர் 3:6-11.)

எகிப்தின் பாவம் மற்றும் அடிமைத்தன வாழ்க்கையிலிருந்து இஸ்ரவேலர் மீட்பையும் விடுதலையையும் நினைவுகூரும் விதமாக பஸ்கா பண்டிகை கொண்டாடப்பட்டது

(யாத்திராகமம் 12.), அதேசமயம், இயேசு நமக்காகப் பலியிடப்பட்டதைப் பஸ்காவைப் போலவே கர்த்தருடைய நினைவுகூரும் விதமாக இராப்போஜனத்தை நிறுவினார். உண்மையான பஸ்கா ஆட்டுக்குட்டியான இயேசு, பழைய ஏற்பாட்டு மாதிரியின் விவரங்களை நிறைவேற்றி, உலகத்தின் பாவத்தைப் போக்க உண்மையான தேவனின் ஆட்டுக்குட்டியாகக் கொல்லப்படவிருந்த பஸ்காவின் நேரத்தில் இராப்போஜனத்தை நிறுவினார்.

அவர்கள் புசித்து கொண்டிருந்தபோது, இயேசு அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, சீஷர்களுக்குக் கொடுத்து, அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் எல்லாரும் அதிலே பானம்பண்ணினார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது நான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம்பண்ணும் நாள்வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனி நான் பானம்பண்ணுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (மத்தேயு 26:1-2, 26-28; மாற்கு 14:1, 22-25; வெளிப்படுத்தல் 19:7-9.)

நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம், கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். பஸ்கா உணவு இஸ்ரவேலர்களுக்கு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையை நினைவூட்டியது போலவும், கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதை எதிர்நோக்கியது போலவும் (யாத்திராகமம் 6:3-8.) கர்த்தருடைய இராப்போஜனம், அவர் நம் பாவங்களுக்காக மரித்த சிலுவையைத் திரும்பிப் பார்க்கிறது, மேலும் நமக்கு முழு இரட்சிப்பைக் கொண்டுவரவும், இந்த பாவ யுகத்திலிருந்து நம்மை அழைத்துச் சென்று, பாவமற்ற உலகத்தில் என்றென்றும் அவருடன் இருக்கவும் அவர் வருவதை எதிர்நோக்குகிறது. இதன் மூலம், ஆட்டுக்குட்டியின் சரீரமும் இரத்தமும் கொண்ட பழைய உடன்படிக்கையின் பஸ்கா பண்டிகையை முடித்து, அவருடைய பிட்கப்பட்ட சரீரத்தையும் அவர் சிந்திய இரத்தத்தையும் குறிக்கும் அவரது மேசையின் அப்பம் மற்றும் திராட்சரசத்துடன் அவரது இரத்தத்தில் புதிய உடன்படிக்கையை நிறுவுகிறது, இனிமேல், பஸ்கா பண்டிகையானது நமக்காக பலியிடப்பட்ட கிறிஸ்துவில் நிறைவடைகிறது. இவ்வாறே கிறிஸ்துவும் அநேகரின் பாவங்களைச் சுமக்க ஒரே தரம் பலியிடப்பட்டார்; அவரைத் தேடுகிறவர்களின் இரட்சிப்புக்கென்று இரண்டாம் தரம் பாவமில்லாமல் தரிசனமாவார். (1 கொரிந்தியர் 11:23-26; வெளிப்படுத்தல் 21:1-4; எபிரெயர் 9:28.)

இயேசுவை ஒரு நல்ல ஆசிரியராகவும், மேற்கோள் காட்டுவதற்கு ஏற்றவராகவும் பலரால் காண முடிந்தது, ஆனால் அவரது போதனைகளைப் பின்பற்றி அவர்களின் இருதயங்களையும் ஆத்துமாக்களின் முடிவையும் மாற்ற அனுமதிப்பவராக காணவில்லை. பலர் அவரை தற்காலிக இரட்சகராக மட்டுமே பார்த்தார்கள், ஆனால் தங்கள் ஆத்துமாக்களின் இரட்சகராகவும், தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான ஒரே மத்தியஸ்தராகவும் பார்க்கவில்லை. அதனால்தான் அவர்கள் அவரை நிராகரித்தனர், மனிதனின் மிகப்பெரியத் தேவையானது உணவு, தங்குமிடம், பொருட்களைத் தேடுவது அல்லது அதிகாரத்தையும் உலக சமாதானத்தையும் அடைய நம் வாழ்க்கையை அர்ப்பணிப்பது மட்டுமல்ல; மாறாக, அவனது ஆத்துமாவின் இரட்சிப்பு என்பதை உணரவில்லை. உலகில் நமக்கு உபத்திரவம் உண்டு என்று இயேசு சொன்னார், ஆனால் நாம் மன தைரியத்துடன் இருக்க வேண்டும், ஏனென்றால் பரலோகத்திலும் பூமியிலும் அவருக்கு எல்லா அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளது. (யோவான் 16:33; மத்தேயு 28:18.) ஆகையால், சமாதானப் பிரபுவாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் மனிதன் தேவனோடு ஒப்புரவாக வேண்டும், இதுவே நம் வாழ்வின் மைய நோக்கமாகும். தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையே ஒரே தேவன், ஒரே மத்தியஸ்தர், அவர் எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுத்த மனுஷகுமாரனாகிய கிறிஸ்து இயேசுவாகும். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? (ஏசாயா 9:6; அப்போஸ்தலர் 5:31; 1தீமோத்தேயு 2:5; மத்தேயு 6:25; 16:26.)

இந்த வாழ்க்கை ஒரு முடிவல்ல; மாறாக, கிறிஸ்துவில் உள்ளவர்களுக்கு வரவிருக்கும் ஜீவனுள்ள தேவனுடைய நகரம், பரலோக எருசலேம், தேவன் வாக்குறுதியளித்த சுதந்தரம், யோவான் த தரிசனத்தில் கண்ட விசுவாசிகளின் நித்திய நிலை, ஆபிரகாம் இஸ்ரவேல் தேசத்திற்கு அப்பால் தூரத்தில் கண்ட பரலோக நகரம் ஆகியவற்றிற்கான ஒரு யாத்திரையாகும். தேவன் தாம் முன்குறித்த தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரா? அவர்கள் விழ வேண்டும் என்பதற்காகத்தானே இடறி விழுந்தார்கள்? தேவன் தடைசெய்தார், புறஜாதியாரின் நிறைவு வரும் வரை, இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படும் வரை, ஓரளவுக்கு இஸ்ரவேலுக்கு குருட்டுத்தன்மை ஏற்பட்டுள்ளது... ஏனெனில் இது அவர்களுடனான தேவனுடனான உடன்படிக்கையாகும். (எபிரெயர் 12:22-28; 11:8-10; வெளிப்படுத்தல் 21:2-4, 9-21; (ரோமர் 11.)

பிரியமானவர்களே, நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா, பரலோக எருசலேமுக்குப் போய்க்கொண்டிருக்கிறீர்களா? இயேசு கிறிஸ்துவில் நம்முடைய பாவங்களுக்கு நித்திய மன்னிப்பை அளித்திருக்கிறார்.

அப்போஸ்தலனாகிய யோவான் கண்ட பரிசுத்த நகரம், புதிய எருசலேம், அஸ்திவாரங்களைக் கொண்ட நகரம், தேவன் கட்டியெழுப்பி உருவாக்கிய நகரம், ஆபிரகாம் தேடி அறிக்கையிட்ட நகரம், அவர்கள் பரலோக நாட்டைத் தேடி பூமியில் பரதேசிகளாகவும், யாத்ரீகர்களாகவும் இருந்தார்கள். (வெளிப்படுத்தல் 21-22.) எபிரெயர் 11:8-16; 13:14.)

இயேசுவின் இரத்தத்தால் தேவனின் பிரசன்னத்திற்குள் நுழையும் புதியதும் ஜீவனுமான வழி இப்போது அனைவருக்கும் திறக்கப்பட்டுள்ளது. (எபிரெயர் 9: 11-17, 24-28; 10:19-22.) நாம் இரட்சிப்புக்கான வழியை மாற்ற முடியாது, நாம் பாவமுள்ளவர்கள், தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டவர்கள், நல்ல செயல்களால் அல்லது சிலுவையில் இயேசுவின் வேலையைத் தவிர வேறு எந்த வழியிலும் நம்மை இரட்சித்து கொள்ள முடியாது என்பதை ஒப்புக்கொள்வதாகும். நம்முடைய பாவத்திற்கான கிரயமாக இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தார் என்று நாம் விசுவாசித்து, விசுவாசத்தின் முடிவால், இயேசுவை நம் இரட்சகராக ஏற்றுக்கொள்கிறோம். அந்த முடிவை எடுப்பவர் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டு, அவருடைய நாமத்தை விசுவாசிப்பதன் மூலம் மரணத்திலிருந்து ஜீவனுக்குக் கடந்து செல்கிறார், மேலும் அவர் கண்டனத்திற்கு ஆளாக மாட்டார். (2 கொரிந்தியர் 5:18-20; யோவான் 5:24.)

கிறிஸ்துவில் இருப்பவர்களின் நம்பிக்கை இதுதான், ஏனெனில் எக்காளங்களை ஊதுவது அவருடைய வருகையில் நிறைவேறும். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருந்து மீதியாயிருக்கும் நாமும் அவர்களோடேகூட மேகங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆகாயத்தில் கர்த்தரைச் சந்திக்கவும், அவருடனே என்றென்றைக்கும் இருக்கவும், ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம். (1 கொரிந்தியர் 15:51-57; 1 தெசலோனிக்கேயர் 4:13-18.)

அப்போஸ்தலனாகிய யோவான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டான்: ஏனென்றால் முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின; மேலும் சமுத்திரமும் கிடையாது. யோவான் பரிசுத்த நகரமாகிய புதிய எருசலேம், தன் மணவாளனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணமகளைப் போல ஆயத்தமாக்கப்பட்டு, பரலோகத்திலிருந்து இறங்கி வருவதைக் கண்டான். ஆபிரகாம் தன் சந்ததியினருடன் சுதந்தரிக்க எதிர்பார்த்த நகரம் அது. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், நீங்கள் ஆபிரகாமின் சந்ததியினரும், வாக்குத்தத்தத்தின்படி தேவனுடைய சுதந்தரர்களும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரர்களுமாவீர்கள். சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும் அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார்.

அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். (வெளிப்படுத்தல் 21:1-6; எபிரெயர் 11:8-16; கலாத்தியர் 3:26-29; ரோமர் 8:17.)

இயேசு கிறிஸ்துவில் தேவன் விதித்த இரட்சிப்பின் வழியைக் கடைப்பிடிப்பவர்கள் பாக்கியவான்கள். தேவனுடைய பரதீசுவின் நடுவில் இருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு. (வெளிப்படுத்தல் 22:14; யோவான் 3:16; 14:1-6.) அவர்கள் இயேசு கிறிஸ்துவிற்குள் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டு, அவருடைய நீதியை அணிந்துகொள்கிறார்கள், ஏனென்றால் ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணம் வந்துவிட்டது, அவருடைய மனைவி வாசல்கள் வழியாக நகரத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமாகிவிட்டாள். முதல் ஆதாமையும், அவன் மனைவியையும், அவர்களுடைய சந்ததியையும் ஜீவ விருட்சத்தில் பிரவேசிக்கவிடாமல் தடுக்க வைக்கப்பட்டிருந்த கேரூபின்களும், சுடரொளி பட்டயமும் அகற்றப்பட்டு, கடைசி ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவையும், அவருடைய மணவாட்டியாகிய திருச்சபையும், பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும், இயேசுவைப் பற்றிய சாட்சியத்திற்காகக் கொல்லப்பட்டவர்களும், மகா உபத்திரவத்தில் தேவனால் முத்திரையிடப்பட்டவர்களும் உள்ளே பிரவேசிக்கிறார்கள். அது எல்லாம் புதிதாக்கப்படும், ஏதேன் என்றென்றும் மீட்டெடுக்கப்படும். மனித வாழ்க்கையின் துயரங்கள் இனி இல்லாததால், தேவன் தாமே மனிதகுலத்துடன் வாசம் செய்ய வரும் புதிய பூமியிலும் புதிய வானத்திலும் மனிதன் வாழ்வதால், அது நித்திய மகிழ்ச்சியின் இடமாகும். (வெளிப்படுத்தல் 19:7-9.) (வெளிப்படுத்தல் 21.)

பாவமும் கலகமும் நுழைவதற்கு முன்பு ஆதியில் எப்படி இருந்ததோ, அப்படியே முடிவும் நடக்கும். அவரே அல்பாவும் ஒமேகாவும், முதலும் கடைசியும், ஆரம்பமும் முடிவும் ஆவார். ஆதியிலே தேவன் படைத்தார், அவர் சொன்னார்.. சொல்லப்பட்ட வார்த்தை எல்லாவற்றையும் படைத்தது, சொல்லப்பட்ட வார்த்தை எல்லாவற்றின் முடிவையும் தீர்மானித்துள்ளது. இன்று உங்களிடம் வந்த தேவனின் வார்த்தை இதுதான், அவருடைய வார்த்தைக்கு நீங்கள் எவ்வாறு பிரதிபலிக்கிறீர்கள் என்பது உங்கள் எதிர்காலத்தையும் நித்திய விதியையும் தீர்மானிக்கும். (ஆதியாகமம்.) யோவான் 1:1-3, 14; (வெளிப்படுத்தல் 22.)

புதிய எருசலேமில் வாசம் செய்வதற்கான இந்த உரிமையானது உங்களுக்கு வழங்கப்படுகிறது. இஸ்ரவேலின் வரலாறும், தேவன் நியமித்த பண்டிகைகளும், மாதிரிகளாகவும் நிழல்களாகவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உங்களுக்கு சுட்டிக்காட்டட்டும். இஸ்ரவேலின் வரலாறு உங்கள் இரட்சிப்பின் வரலாறாக மாறட்டும். ஆபிரகாமைப் போல இருங்கள், நீங்கள் பூமியில் ஒரு அந்நியராகவும், யாத்ரீகராகவும் இருப்பதை

ஒப்புக்கொண்டு, கிறிஸ்துவில் புனித யாத்திரையில் சேர்ந்து புதிய பூமிக்கு, பரிசுத்த நகரமாக, புதிய எருசலேமுக்குச் செல்லுங்கள், அங்கு இனி மரணம் இருக்காது, துக்கம் இருக்காது, அழுகை இருக்காது, இனி எந்த வேதனையும் இருக்காது, ஏனென்றால் முந்தையவை ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

நீங்கள் உங்கள் வாயினால் கர்த்தராகிய இயேசுவை அறிக்கையிட்டு, இயேசு உங்கள் பாவங்களுக்காக மரித்தார் என்றும், தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்றும் உங்கள் இருதயத்தினால் விசுவாசித்தால், நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள், ஏனென்றால் உங்கள் இருதயத்தினால் நீதிக்கென்று விசுவாசிக்கிறீர்கள்; உங்கள் வாயினால் இரட்சிப்புக்கென்று அறிக்கையிடப்படுகிறது. நீங்கள் இதுவரை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், இப்போதே அதைச் செய்யும்படி நான் உங்களைக் கெஞ்சுகிறேன். (ரோமர் 10:9-10.)

அன்புள்ள தேவனே, என் பாவத்திற்குப் பரிகாரம் செய்ய இயேசுவை பஸ்கா ஆட்டுக்குட்டியாக அனுப்பிய உம் அன்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். உம் அன்பிற்கு நான் கீழ்ப்படிகிறேன், விசுவாசத்தினால் நான் இயேசுவை என் இரட்சகராக ஏற்றுக்கொள்கிறேன், அவர் என்னை என்றென்றும் உம்முடன் இருக்க அழைத்துச் செல்ல வருவதை அறிவிக்கும் எக்காள சத்தத்திற்காக காத்திருக்கிறேன், ஆமென்.

பின்வரும் சில வேத வசனங்கள் இயேசு கிறிஸ்துவினால் வரும் இரட்சிப்பை உங்களுக்கு உறுதியளிக்கின்றன. (யோவான் 3:14-18; 1யோவான் 5:10-13, 20; எபேசியர் 2:4-9; 2கொரிந்தியர் 5:17-21.)

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

# அதிகாரம் 5

## வனாந்தரத்தில் வாசஸ்தலத்தின் முக்கியத்துவம் (விளக்கம்)

இஸ்ரவேல் மக்களிடம் பேசவும், அவர்கள் மத்தியில் ஒரு வாசஸ்தலத்தை அமைக்கவும் தேவையான அனைத்தையும், தாம் குறிப்பிட்ட மாதிரியின்படியும், மோசேக்கு காட்டிய அனைத்து பொருட்களையும், அதன் அலங்காரத்திற்காகக் காணிக்கையாகக் கொண்டுவரும்படி தேவன் மோசேயிடம் கட்டளையிட்டார் (யாத்திராகமம் 25-30.) கூடாரம் என்பது மரச்சட்டங்களைச் சுற்றி திரைச்சீலைகள் மூடப்பட்டு போகும் இடத்திற்குப் பிரித்து எடுத்துச் செல்லக்கூடிய ஒன்றாகும், இது தேவனுக்கும் இஸ்ரவேலர்களுக்கும் இடையில் ஒரு சந்திப்பு இடமாக செயல்பட்டது. கூடாரமும் அதன் பிரகாரமும் நியமிக்கப்பட்ட ஆசாரியர்களால் பயன்படுத்தப்பட்டது. பலியிடப்பட்ட விலங்குகளின் பலியின் பிராயச்சித்த இரத்தத்தின் மூலம் ஒரு வருடத்திற்கு ஒருமுறை மக்கள் தங்கள் பாவங்களுக்கு பரிகாரம் செய்வதற்கும், பின்னர் ஆண்டுதோறும் பிராயச்சித்த நாளில் பலி செலுத்வததற்கும் தேவன் நியமித்த இடமாக இது இருந்தது. கூடாரம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது: பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலம். (யாத்திராகமம் 25:1-15.) மோசேக்குக் குறிப்பிட்டபடி, பிரகாரம் மற்றும் பரிசுத்த ஸ்தலத்தின் அலங்காரங்களின் அமைப்பானது பரலோகத்தைத் தொடர்புப்படுத்தும் ஒரு சிலுவையின் வடிவமாக அடையாளப்படுத்தி, இனிமேல் J E S U S என்ற ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்படுகிறது. பிரகாரத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் உள்ள அலங்காரங்கள் சிலுவையில் இருந்த மனித இயேசுவை சுட்டிக்காட்டின, அவர் மாம்சத்தில் வந்து மனிதர்களிடையே தேவ ஆட்டுக்குட்டியாக, நமக்காகப் பலியிடப்பட்ட நமது பஸ்காவாக வாழ்ந்தார். இயேசு நம் பாவங்களை ஒரே தரம் நீக்கி, தமது இரத்தத்தினால் ஒரு புதிய உடன்படிக்கை ஏற்படுத்தி விலங்கு பலிகளின் பழைய உடன்படிக்கையை முடித்து, மனிதனுக்கும் தேவனுக்கும் இடையில் ஒரே மத்தியஸ்தராக தேவனின் வலது பாரிசத்தில் அமர்ந்து, தேவனின் பிரசன்னத்திற்குள் ஒரு புதிதும் ஜீவனுமான வழியை உருவாக்கி, அவரை விசுவாசித்து தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் திறந்தார். G என்பது மகா பரிசுத்த

ஸ்தலத்தில் அலங்காரங்களை அடையாளப்படுத்துகிறது, அங்கு தேவன் வனாந்தரத்தில் இஸ்ரவேலர்களிடையே வாசம் செய்தார். {E} நுழைவு வாயிலைக் குறிக்கிறது. (யோவான் 1:14,17; 1 கொரிந்தியர் 5:7; எபிரெயர் 8:6-13; 9:24-26; 10:8-12,18-20; 1 தீமோத்தேயு 2:5-6.)

இங்கே கீழே நுழைவு வாயில், பிரகாரம் மற்றும் கூடாரம், அவற்றின் தளவாடங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் ஆகியவற்றின் வரைபடம் உள்ளது.




திரைச்சீலை

பரிசுத்த ஸ்தலம்.

மகா பரிசுத்த ஸ்தலம்.

பிரகாரத்திலும் கூடாரத்திலும் உள்ள அலங்காரப் பொருட்களும், பலி செலுத்தும் விலங்குகளின் பிராயச்சித்த இரத்தத்தால் பாவநிவாரண நாளில் பிரதான ஆசாரியரின் ஊழியமும், பலி செலுத்தும் நோக்கமும், இயேசுவின் நிழலாகச் செயல்பட்டன.

இது, சிலுவையில் நம் பாவங்களுக்காக ஒரே தரம் பலியாவதும், தம்முடைய சொந்த இரத்தத்துடன் பரலோகத்திற்குள் பிரவேசிப்பதும், நமது பெரிய பிரதான ஆசாரியராகவும் பலியாகவும் நமக்காக தேவனின் முன்னிலையில் தோன்றுவதும் ஆகும். (யாத்திராகமம் 25-30.) (எபிரெயர் 7-10.)

{E} ... நுழைவு வாயில். (யாத்திராகமம் 27:16.) இது முப்பது அடி அகலம் கொண்டது, இதுவே மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவனின் பிரசன்னத்திற்கு ஒரே நுழைவாயிலாகவும் ஒரே வழியாகவும் இருந்தது. பிரவேசிக்க வேறு வழி இல்லை, எனவே மக்கள் தங்கள் சொந்த வழியில் சென்று தேவனின் பிரசன்னத்திற்குள் பிரவேசிக்க எந்த திசையிலிருந்தும் வர முடியாது, அல்லது தங்கள் பாவங்களுக்கு பரிகாரம் செய்ய எந்த வகையான காணிக்கையையும் கொண்டு வர வேண்டியதில்லை.

முக்கியத்துவம்: முப்பது வயது முதல் ஆசாரிய ஊழியத்தில் அவர்கள் நுழைவதைக் குறிக்கும் முப்பது அடி அகலமுள்ள நுழைவு வாயில் வழியாக ஆசாரியர்கள் பிரவேசித்தனர். (எண்ணாகமம் 4:3, 23.)

வார்த்தையாகிய இயேசு, பரிசுத்த ஆவியினால் பாவமின்றிக் கருத்தரிக்கப்பட்டு, மாம்சமாகி மனிதர்களிடையே வாசம் செய்தார். ஆரோன் மற்றும் ஆசாரியர்களைப் போல சுத்திகரிக்கப்பட வேண்டிய பாவங்கள் எதுவும் இல்லாதவராக, முப்பது வயதில் மாறாத ஆசாரியத்துவத்தில் பிரவேசித்தார், மேலும் தண்ணீர் தொட்டியில் ஆசாரியர்களால் கழுவும் சடங்கு முறையை நிறைவேற்ற யோவானின் ஞானஸ்நானத்திற்குக் கீழ்ப்படிந்தார். அவர் ஞானஸ்நானம் பெற்றபோது... தேவனுடைய ஆவியானவர் புறாவைப் போல அவர்மேல் இறங்கினார், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என் நேசகுமாரன், இவரில் நான் பிரியமாயிருக்கிறேன் என்று சொன்னது. (யோவான் 1:1-4, 10-14, 17-18; லூக்கா 3:21-23; மத்தேயு 3:13-17;எபிரெயர் 7:23.)

வனாந்தரத்தில் உள்ள கூடாரத்தில் உள்ள மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவனின் பிரசன்னத்திற்குள் பிரவேசிக்க ஒரே ஒரு நுழைவாயிலும் ஒரே ஒரு வழியும் இருந்ததால், இயேசு, அவரே வழி, சத்தியம் மற்றும் ஜீவன் என்றும், அவர் மூலமாகவே அல்லாமல் வேறு எந்த மனிதனும் பிதாவிடம் வரமாட்டான்

என்றும் கூறினார். அவரே வாசல், அவராலே ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான்; ஆகையால், தம்மூலமாக தேவனிடத்தில் சேருகிறவர்களை இயேசு முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார். (யோவான் 14:6; 10:9; எபிரெயர் 7:25.)

**பிரகாரம்**: அலங்காரப் பொருட்கள் பித்தளையால் ஆனவை.
பலிபீடமும் தண்ணீர் தொட்டியும்:



வெண்கல பலிபீடம்: (யாத்திராகமம்

பலிபீடம் ஒவ்வொரு மூலையின் உச்சியிலும் நான்கு கொம்புகளைக் கொண்ட ஒரு உயர்ந்த மேடையாக இருந்தது.

பாவநிவாரண நாளில், ஆசாரியர்கள் தேவனுக்கு முன்பாக ஊழியம் செய்வதற்கு முன்பு தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ள தொட்டிக்குச் சென்று தங்கள் கைகளையும் கால்களையும் கழுவுவார்கள். பிரகாரத்தின் நுழைவாயிலில், பிரதான ஆசாரியன் தனது பாவங்களுக்காகவும், தனது வீட்டாருக்காகவும், மக்களுக்காகவும் பலியிடப்படுவதற்காக, பழுதற்ற விலங்குகளின் தலையில் தனது கைகளை வைப்பான், அடையாளமாக அவர்களின் பாவங்களுக்குப் பதிலாக மரணத்திற்கு உட்படுத்தப்படும் விலங்குகளால் பரிகாரம் செய்வான். பின்னர் விலங்குகள் பலிபீடத்தின் மீது வைத்து கட்டப்பட்டு, பலி செலுத்தப்பட்டன. கொல்லப்பட்டபோது, பிரதான ஆசாரியன் பாவநிவாரணமாகச் செலுத்தப்பட்ட இரத்தத்தைப் பிடித்து, பலிபீடத்தின் நான்கு கொம்புகள் மீதும் தரையிலும் தெளித்து, பலிபீடத்திலிருந்து எடுக்கப்பட்ட அக்கினியால் தங்கத் தூபக் கலசத்தை நிரப்பி, அதன் மீது தூபம் தூவி, பின்னர் மீதமுள்ள இரத்தத்தை திரைக்கு அப்பால் கொண்டு செல்வான், தூப மேகம் அவனுக்கு முன்னால் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லும். (லேவியராகமம் 16:12-13.)

மகா பரிசுத்த ஸ்தலத்தில், பிரதான ஆசாரியன் இரத்தத்தை எடுத்துக்கொண்டு, இரண்டு கேரூபின்களுக்கு இடையில் கண்ணுக்குப் புலப்படாமல் தேவன் வீற்றிருந்த கிருபாசனத்தின் மீது அதைத் தெளிப்பான். கிருபாசனத்தின் மீது பலியிடப்பட்ட விலங்குகளின் இரத்தத்தால், அவர்களின் பாவங்கள் நிரந்தரமாக நீக்கப்படாமல், ஒரு வருடத்திற்கு மூடப்பட்டன. ஏனெனில், அவர்களின் பாவங்களை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் மீண்டும் மீண்டும் அது செய்யப்பட வேண்டியிருந்தது, ஏனெனில் காளைகள் மற்றும் ஆடுகளின் இரத்தத்தால் பாவங்களைப் போக்க முடியாது. ஆசாரிப்பு கூடாரம், பலி, அலங்காரப் பொருட்கள் மற்றும் பிரதான ஆசாரியனின் ஊழியம் ஆகியவை

இயேசுவையும், உண்மையான கூடாரத்தையும் மனிதகுலத்தை ஒரேதரம் மீட்பதற்கான பலியையும் முன்னறிவித்தன. (எபிரெயர் 10:1-14; 7:11-28.)

**முக்கியத்துவம்:** பலியிடப்பட வேண்டிய குற்றமற்ற விலங்குகள், பிரகாரத்தின் நுழைவாயிலில் ஆசாரியரிடம் ஒப்படைக்கப்பட்டன, இதனால் அவன் பிரகாரத்தில் உள்ள வெண்கல பலிபீடத்தில் பலியிடப்பட வேண்டிய பழுதற்ற விலங்குகளின் மீது கைகளை வைக்கிறான், ஆசாரியர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் மக்களின் பாவங்களுக்குப் பரிகாரப்பலியாக ஒரு வருடத்திற்கு ஒரு முறை செலுத்துகிறான். தேவனின் பழுதற்ற ஆட்டுக்குட்டியான இயேசு, பூமியில், பரலோகத்திற்கு வெளியே, நம்முடைய மாறாத பிரதான ஆசாரியராகவும், பலியாகவும், நம்முடைய இரட்சிப்பின் கொம்பாகவும், பஸ்காவுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, அந்த வருட பிரதான ஆசாரியனாகிய காய்பா, பிரதான ஆசாரியர்களுடனும், மக்களின் மூப்பர்களுடனும் சேர்ந்து, இயேசுவை தந்திரமாகப் பிடித்து எப்படிக் கொல்லலாம் என்று ஆலோசனை நடத்தினான்.

இயேசு தம்முடைய மரணத்தைக் குறித்துத் தம்முடைய சீஷர்களிடம் பேசிக்கொண்டிருக்கும்போதே, அவர்கள் வந்து அவர்மேல் கைகளைப் போட்டுக் கொல்லும்படி சொன்னார்கள். உலகமெல்லாம் அழிந்துபோகாதபடிக்கு, மக்களின் பாவங்களுக்காக ஒரு மனிதன் மரிக்க வேண்டும் என்று பிரதான ஆசாரியனாகிய காய்பா சொன்னான். இதை அவன் தன்னைப் பற்றிச் சொல்லவில்லை, அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனாயிருந்தபடியால், இயேசு அந்தத் தேசத்திற்காக மரிக்க வேண்டும், அந்தத் தேசத்திற்காக மாத்திரமல்ல, உலகமெங்கும் சிதறிக்கிடக்கிற ஜனங்களுக்காகவும் மரிக்க வேண்டும் என்று தீர்க்கதரிசனம் சொன்னான். அன்று முதல் அவர்கள் இயேசுவைக் கொலை செய்யும்படிக்கு ஆலோசனைபண்ணினார்கள். (எபிரெயர் 13:12; யோவான் 1:29, 36; லூக்கா 1:69; மத்தேயு 26:1-4, 47-59; யோவான் 11:46-53.)

இயேசு, யாரும் தம்மிடமிருந்து ஜீவனைப் பறிக்கமுடியாது என்றார். அவர் நமக்காக மரிக்க மனமுவந்து ஒப்புக் கொடுத்தார், மேலும் அவர் கல்வாரி மலையின் மேலுள்ள உள்ள சிலுவையின் பலிபீடத்தில் நமது பாவங்களை நிரந்தரமாக நீக்குவதற்கு சிலை பரிகாரப்பலியாக தமது உயிரைக் கொடுத்தார். இயேசு தம் ஜீவனை விடும் அதிகாரம் தமக்கு இருப்பதாகக் கூறினார், இது அவரது மரணத்தையும் அடக்கம் பண்ணப்படுதலையும் குறிக்கிறது, மேலும் அதை மீண்டும் எடுத்துக்கொள்ளும் அதிகாரம் தமக்கு இருப்பதாகக் கூறினார், இது அவரது உயிர்த்தெழுதலையும் தேவனின் சிங்காசனத்திற்கு ஏறுவதையும் குறிக்கிறது. வெண்கல பலிபீடத்தில் விலங்குகள் பலியிடப்பட்டு, மேடையில் வைக்கப்பட்டதைப்போன்று, இயேசுவின் உடல் சிலுவையில் ஆணிகளால் அடித்துப்படு, உயர்த்தப்பட்டு, மனிதனை

தேவனுடன் ஒப்புரவாக்க தமது இரத்தத்தை சிந்தினார். (யோவான் 10:17-18; 19:16-18, 30; லூக்கா 22:22; ஏசாயா 53:5-7; 2 கொரிந்தியர் 5:17-21.)

பலிபீடத்தின் நான்கு கொம்புகளிலும் தரையிலும் மிருகத்தின் இரத்தம் தெளிக்கப்பட்டது போல, சிந்தப்பட்ட அப்பாவி இரத்தம் ஒரு வருடத்திற்கு அனைத்து மக்களின் பாவங்களையும் மூடும் சக்தியைக் கொண்டிருந்தது மற்றும் ஆண்டுதோறும் மீண்டும் மீண்டும் செய்யப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது. இயேசுவின் இரத்தம் சிலுவையின் நான்கு மூலைகளிலும் தரையிலும் சிந்தப்பட்டது, ஏனெனில் அவர் முழு உலகத்தின் பாவங்களுக்காகவும் ஒரே முறை மரித்தார். கொம்புகள் சக்தி மற்றும் வலிமையின் அடையாளமாகும், மேலும் அவை விசுவாசிக்கிற அனைவருக்கும் நம் பாவங்களை ஒரே முறையாக நீக்க இயேசுவின் இரத்தத்தின் சக்தியைக் குறிக்கின்றன. (லூக்கா 1:69; ரோமர் 5:6-19.)

பலிபீடத்தின் நான்கு கொம்புகளிலும் தரையிலும் மிருகத்தின் இரத்தம் தெளிக்கப்பட்டது, சிந்தப்பட்ட குற்றமற்ற இரத்தம் ஒரு வருடத்திற்கு அனைத்து மக்களின் பாவங்களையும் மூடும் வல்லமையைக் கொண்டிருந்தது மற்றும் ஆண்டுதோறும் மீண்டும் மீண்டும் செய்யப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது. அதே போல இயேசுவின் இரத்தம் சிலுவையின் நான்கு மூலைகளிலும் தரையிலும் சிந்தப்பட்டது, ஏனெனில் அவர் முழு உலகத்தின் பாவங்களுக்காகவும் ஒரே தரம் மரித்தார். கொம்புகள் வல்லமையின் அடையாளமாகும், மேலும் அவை விசுவாசிக்கிற அனைவருக்கும் நம் பாவங்களை ஒரே தரமாக நீக்க இயேசுவின் இரத்தத்தின் வல்லமையைக் குறிக்கின்றன. (லூக்கா 1:69; ரோமர் 5:6-19.)

வருடத்திற்கு ஒரு முறை மற்றவர்களின் இரத்தத்தோடு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்த பிரதான ஆசாரியனைப் போல இயேசு, அடிக்கடி பலியிட வேண்டிய அவசியமில்லை; அப்படி இருக்மானால் அவர் அடிக்கடி பாடுபட வேண்டியதாக இருக்கும், ஆனால் இந்த கடைசி யுகத்தின் முடிவில், தம்முடைய சரீரத்தை ஒரே தரம் பலியிட்டு நாம் பரிசுத்தமாக்கப்பட்ட தம்முடைய பலியினால் பாவத்தை நீக்கும்படி அவர் தோன்றினார். ஒவ்வொரு பிரதான ஆசாரியனும் தினமும் ஊழியஞ்செய்து, பாவங்களை ஒருபோதும் நீக்கமுடியாத ஒரே பலியையும் பலமுறை செலுத்தி நிற்கிறான்: ஆனால் இயேசு தம்மைக் கறையற்றவராக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, பாவங்களுக்காக என்றென்றைக்கும் ஒரே பலியைச் செலுத்தி, தம்முடைய சொந்த இரத்தத்தினால் மகா பரிசுத்த ஸ்தலத்தில் ஒரே தரம் பிரவேசித்து, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து, நமக்காக நித்திய மீட்பை அளித்தார். இனி பாவத்திற்காக

எந்தப் பலியும் அவசியமில்லை. (எபிரெயர் 9: 24-28, 11-15; 10:10-12, 18.)

இயேசுவின் சரீரம் மரணத்தில் பிட்க்கப்பட்டபோது, பாவமுள்ள மனிதனை தேவனிடமிருந்து பிரித்த ஆலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழ் வரை நடுவில் அற்புதமாகக் கிழிக்கப்பட்டது, இது நமது மகா பிரதான ஆசாரியரான இயேசு தம்முடைய தியாக மரணத்தால், தம்முடைய இரத்தத்தினாலே, புதியதும் ஜீவனுமான வழியினாலே, அதாவது அவருடைய மாம்சத்தின் திரையின் வழியாக நமக்காகப் பிரதிஷ்டை செய்ததின் மூலம், நாம் தைரியமாக தேவனின் பிரசன்னத்திற்குள் நுழைய வழியைத் திறந்தார் என்பதைக் குறிக்கிறது. (மாற்கு 15:38; லூக்கா 23:45; எபிரெயர் 10:19-20.)

E



வெண்கலத் தொட்டி: (யாத்திராகமம் 30:17-21; 38:8.) இது கண்ணாடி போன்ற வெண்கலத்தாலான கழுவும் தொட்டி மற்றும் அடித்தளமாகும், அதில் தண்ணீர் தேங்கி நின்றது, மேலும் ஆசாரியர்கள் பிரகாரத்திலும் கூடாரத்திலும் ஊழியம் செய்வதற்கு முன்பு தங்கள் கைகளையும் கால்களையும் அங்கே கழுவினர். பிரதிபலிப்பு மேற்பரப்பு கடவுளுக்கு முன்பாக ஊழியம் செய்வதற்கு முன்பு அவர்கள் நன்கு கழுவ உதவியது.

முக்கியத்துவம்: சீடர்களின் கால்களைக் கழுவி, பழைய சடங்குகளான தண்ணீர் தொட்டியில் கழுவுவதை நிறுத்தி, புதிய உடன்படிக்கை ஆசாரியத்துவத்தின் சுத்திகரிப்பு செயல்முறையை தமது வார்த்தையின் மூலம் கொண்டு வந்தார். அனைத்து விசுவாசிகளும் தேவனுடைய ஆசாரியர்கள், எனவே, நாம் அவருடைய வார்த்தையை நம் வாழ்க்கையை பிரதிபலிக்கப் பயன்படுத்த வேண்டும், பின்னர் அதை தண்ணீராகப் பயன்படுத்தி எல்லா அநீதியிலிருந்தும் நம்மைச் சுத்திகரிக்க வேண்டும், இதனால் நம் சரீரத்தில், அதாவது அவருடைய ஆலயத்தில், தேவனுக்கு முன்பாக அவருக்குப் பிரியமான முறையில் ஊழியம் செய்ய முடியும். (யோவான் 13: 3-10; 15:3; எபேசியர் 5:25-27; 2 கொரிந்தியர் 3:18; யாக்கோபு 1:22-25; எபிரெயர் 4:12; 1 கொரிந்தியர் 6:19-20; 1 யோவான் 1:8-9.)

முதல் திரைச்சீலை: திரைச்சீலை பிரகாரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் மேலிருந்து கீழாகப் பிரித்தது. ஏழு கிளைகளுடைய குத்துவிளக்கு, சமுகத்தப்ப மேஜை மற்றும் தூப பலிபீடம் ஆகியவை பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த அலங்காரப் பொருட்களாகும்.

**ஏழு கிளைகளுடைய மெழுகுவர்த்தி:**

அது ஏழு தூய தங்கத்தால் செய்யப்பட்டு, ஏழு கிளைகளாக ஒரே மாதிரி அலங்கரிக்கப்பட்ட அலங்காரத்துடன், தண்டின் ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் மூன்று கிளைகள் கிண்ணங்கள், மொட்டுகள் மற்றும் பாதாம் பூக்கள் காணப்பட்டன.

S



**முக்கியத்துவம்:** இயேசு உலகத்தின் ஒளி, அவரைப் பின்பற்றுபவர்கள் இருளில் நடக்காமல், ஜீவ ஒளியைப் பெறுவார்கள். பிரதான தண்டு உலகின் உண்மையான ஒளியான இயேசுவைக் குறிக்கிறது, மேலும் அவர் தமது திருச்சபையை ஏழு குத்துவிளக்குகளாக தங்க மெழுகுவர்த்திகளாக உயர்த்தியுள்ளார், அதன் நடுவில் அவர் இருக்கிறார். சபையானது பரிசுத்த ஆவியானவரால் அதிகாரம் பெற்றது., அவரில் ஒளியின் பிள்ளைகளாக நடக்கவும், இயேசு கிறிஸ்துவின் முகத்தில் கடவுளின் மகிமையின் அறிவின் ஒளியைக் கொடுக்க மனிதர்களுக்கு முன்பாக பிரகாசிக்கவும், அவர்களை இயேசு கிறிஸ்துவின் முகத்தில் கடவுளின் மகிமையின் அறிவின் ஒளியாக அவரிடம் சுட்டிக்காட்டவும், இயேசுவின் வாழ்க்கையை அடையாளப்படுத்தும் தூப பலிபீடத்தின் மீது ஒளி வீசவும், கடவுளுக்கு ஒரு பலியாகவும் இனிய வாசனையாகவும் இருக்கும். (மத்தேயு 4:16; 5:14-16; யோவான்:1-14; 8:12; வெளிப்படுத்தல் 1:12-20; 2:1; 2 கொரிந்தியர் 4:6; எபேசியர் 5:2, 8.)




**அப்பம்:** அது ஏழு கிளைகளைக் கொண்ட குத்துவிளக்குக்கு எதிரே, பரிசுத்த ஸ்தலத்தின் *வலது* பக்கத்தில், மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியே, கர்த்தருக்கு முன்பாக நின்றது.

தேவனின் சமுகத்தப்பம். ஒவ்வொரு ஓய்வுநாளிலும், புதிதாக சுடப்பட்ட பன்னிரண்டு அப்பங்களாக மேசையின் மீது வைக்கப்பட்டன, அவை இரண்டு வரிசைகளில் தூய தங்கத்தால் மூடப்பட்டிருந்த மேசையின் மீது ஒரு வரிசையில் ஆறு அப்பங்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களைக் குறிக்கிறது. கடந்த வாரத்தின் அப்பத்தை ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்தில் தேவனுடன் ஐக்கியப்பட்டு சாப்பிட்டனர். பன்னிரண்டு அப்பங்கள் தேவனின் சமுகத்திற்கு முன்பாக பன்னிரண்டு கோத்திரங்களைக்

குறிக்கின்றன என்பதை இது நினைவூட்டுகிறது. (யாத்திராகமம் 25:23-30; லேவியராகமம் 24:5-9; (யாத்திராகமம் 40.) (எண்ணாகமம் 4:7.)

**முக்கியத்துவம்:** முக்கியத்துவம்: மாம்சமாக மாறிய வார்த்தையான இயேசுவை, அப்பத்தின் வீடாகிய பெத்லகேமில் பிறந்து, தேவனுடைய அப்பமாகவும், பரலோக அப்பமாகவும், உலகத்திற்கு ஜீவனைக் கொடுக்க ஜீவ அப்பமாகவும் மனிதர்களிடையே வாழ்வதற்காக, தேவனுடைய சமுகதப்பம் எதிர்நோக்கியது. எந்த மனிதனும் இந்த ஜீவஅப்பம் இல்லாமல் ஜீவன் பெற முடியாது. இயேசு பஸ்காவின் பிட்க்கப்பட்ட அப்பத்தை, அதாவது தம்முடைய பிட்கப்பட்ட சரீரத்தின் அடையாள நினைவுக்கூருதலை, மனிதன் என்றென்றும் உணவாகக் கொண்டு வாழ்வதற்கான ஜீவ அப்பமாகவும், திராட்சரசத்தை, மனிதனை தேவனுடன் ஒப்புரவாக்க அவர் சிந்திய இரத்தத்தின் அடையாள நினைவுக்கூருதலாகவும் தேர்ந்தெடுத்தார். இயேசு சொன்னார், நாம் அவருடைய மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நமக்குள் ஜீவன் இல்லை, அதாவது இயேசு தம்முடைய சீஷர்களுடன் சாப்பிட்டு அருந்திய பஸ்காவின் அப்பம் மற்றும் திராட்சரசத்தின் அடையாளச் சின்னங்கள், மிருக பலி முன்னறிவித்த பாவத்திற்குரிய தண்டனையைச் செலுத்துவதில் நமக்கு மாற்றாக சிலுவையில் அவர் மரித்ததைச் சுட்டிக்காட்டின. இயேசு, நாம் அவரையே உணவாகக் கொள்ள வேண்டும், அதாவது, அவருடைய வார்த்தையை உணவாகக் கொண்டு, வனாந்தரத்தில் மன்னாவை சாப்பிட்டு மரித்தவர்களைப் போல அல்லாமல், தேவனோடு என்றென்றும் ஒற்றுமையாகவோ அல்லது ஐக்கியமாகவோ வாழ வேண்டும் என்றார். இயேசு ஓய்வுநாளை அல்ல, அவரை நினைவுகூருங்கள் என்றார். ஏனென்றால், நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்துப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம், அவர் வரும் வரை நீங்கள் கர்த்தருடைய மரணத்தைச் தெரிவிக்கிறீர்கள். அதாவது, தேவனின் நீதியை நிறைவேற்றுவதற்காக நம்முடைய பாவங்களுக்கு விலைகொடுத்த இயேசுவை நாம் திரும்பிப் பார்க்க வேண்டும். மேலும், எல்லா விசுவாசிகளையும் என்றென்றும் அவருடன் கூட்டிச் சேர்க்க அவர் வருவதை எதிர்நோக்க வேண்டும். (யோவான் 1:14; மீகா 5:2; மத்தேயு 2:1; லூக்கா 2:4; யோவான் 6:32-58; மத்தேயு 26:1-2, 18-19, 26-29;1கொரிந்தியர்11:23-26; 1 தெசலோனிக்கேயர் 4:13-18.)

## தூப பலிபீடம்:



பலிபீடத்தின் ஒவ்வொரு மூலையின் உச்சியிலும் நான்கு கொம்புகள் இருந்தன, மேலும் அது பரிசுத்த ஸ்தலத்தையும் மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பிரிக்கும் திரைச்சீலைக்கு முன்னால் வைக்கப்பட்டது.

மக்களின் சார்பாகப் பரிந்துபேசிய ஆசாரியர்களால் ஒவ்வொரு காலையிலும் மாலையிலும் தூபம் காட்டப்பட்டது. பாவநிவாரண நாளில், பிரதான ஆசாரியன் பலியின் இரத்தத்தில் சிறிது பலிபீடத்தின் நான்கு கொம்புகளிலும் பூசி, தூபத்தை எடுத்து, வெண்கல பலிபீடத்திலிருக்கும் நெருப்பு மற்றும் இரத்தத்துடன் கலந்து, தங்கத் தூபக் கலசத்தில் வைத்து, பின்னர் தூபத்தின் பூகையோடு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்து கிருபாசனத்தை மூடுவான். பின்னர் அவன் பலியின் இரத்தத்தை எடுத்து, கிருபாசனத்தின் மீது தனது விரலால் தெளித்து, அதை நறுமண வாசனையாகத் தேவனுக்கு ஏறெடுப்பான். பலிபீடம் பசும் பொன்னால் மூடப்பட்டிருந்தது. (லேவியராகமம் 16:12-14; யாத்திராகமம் 30:1-10; எபிரெயர் 9:2.)

**முக்கியத்துவம்:** தூபம் நறுமணப் பொருளைப் போன்ற இனிமையான வாசனையைத் தருகிறது. இயேசு நமக்காகத் தம்மை தேவனுக்கு நற்கந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்தார்; நமக்காகப் பரிந்துபேச அவர் என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறார் (எபேசியர் 5:2; எபிரெயர் 7:25).

அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று அகுஸ்துராயனால் கட்டளை பிறந்தது. சீரியா நாட்டிலே சிரேனியு என்பவன் தேசாதிபதியாயிருந்தபோது இந்த முதலாம் குடிமதிப்பு உண்டாயிற்று. அந்தப்படி குடிமதிப்பெழுதப்படும்படிக்கு எல்லாரும் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போனார்கள். அப்பொழுது யோசேப்பும், தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்தபடியினாலே, தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப்பெழுதப்படும்படி, கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப்போனான். எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது என்று மீகா தீர்க்கதரிசி முன்னறிவித்தபடி, இரட்சகர் பிறப்பதற்கான நியமிக்கப்பட்ட இடத்திலும் நேரத்திலும் பெத்லகேமுக்குக் கொண்டு வந்தது.

அவருடைய மனிதப் பிறப்பிலிருந்து அல்ல, இயேசு ஆபிரகாம் வருவதற்கு முன்பே நான் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டார். (லூக்கா 2:1-5,11,15; மீகா 5:2; மத்தேயு 2:5-6; யோவான் 7:42; 8:57-58; யாத்திராகமம் 3:13-14.)

நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார். (பிலிப்பியர் 2:7; கலாத்தியர் 4:4-5; எபேசியர் 1:5.)

ஏரோது ராஜாவின் நாட்களில் பெத்லகேமில், மரியாள் தன் முதற்பேறான மகனைப் பெற்றெடுத்தபோது, மீகா தீர்க்கதரிசி சொன்னது நிறைவேறியது, அவ்விடத்திலே அவர்கள் இருக்கையில், அவளுக்குப் பிரசவகாலம் நேரிட்டது. அவள் தன் முதற்பேறான குமாரனைப்பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள். (லூக்கா 2:6-7.) பெத்லகேம் என்றால் அப்பத்தின் வீடு என்று பொருள், ஏனெனில் அது தானிய உற்பத்தி செய்யும் நகரமாக இருந்தது. தானியம் மாவாக அரைக்கப்பட்டு அப்பமாக மாற்றப்பட்டது. ஒரு முன்னணை என்பது தீவனத்திற்கான தொட்டில், விலங்குகளுக்கு உணவளிக்கும் தொட்டி, தானியங்கள் மற்றும் புல் துண்டுகள் மற்றும் தண்ணீர் ஆகியவை விலங்குகளுக்கு உணவாக வைக்கப்படும் ஒரு வாய்க்காலாகும்.

அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்திலே வந்து நின்றான், கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையில் கிடத்தியிருக்கக்காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான்.

அந்தணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி: உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள். தேவதூதர்கள் அவர்களை விட்டுப் பரலோகத்துக்குப் போனபின்பு, மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் நோக்கி: நாம் பெத்லகேம் ஊருக்குப் போய், நடந்ததாகக் கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்ட இந்தக் காரியத்தைப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லி, தீவிரமாய் வந்து, மரியாளையும்,

யோசேப்பையும், முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள். கண்டு, அந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம்பண்ணினார்கள். (லூக்கா 2:8-17).

இயேசு பிறக்கும்போதே ஒரு முன்னணையில் கிடத்தப்பட்டு, துணிகளால் சுற்றப்பட்டதன் முக்கியத்துவமானது தெய்வீக பராமரிப்பினால் ஏற்பட்டது.

தேவன், பூமியானது … கனி தரும் மரம் பிறப்பிக்கட்டும் என்றார்: அது அப்படியே ஆயிற்று. (ஆதியாகமம் 1:11-12, 29.) இயேசு, கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும். அதாவது, நடப்பட்டு செத்தாலொழிய பலனளிக்காது என்றார். (யோவான் 12:24; 1கொரிந்தியர் 15:36.)

இயேசு தம்மை விதைக்கப்பட்டு மரிக்கும் கோதுமை மணியுடன் ஒப்பிடுகிறார். அது உயிர் பெற்று, பல புதிய கதிர்களை உருவாக்குகிறது, அதன் வகையைப் பொறுத்து, அது தன்னைத்தானே அதிகமாக வெளிப்படுத்துகிறது. இயேசு அப்பத்தின் வீட்டில் பிறந்து, ஒரு முன்னணையில் வைக்கப்பட்டு, மரித்து அடக்கம் செய்யப்பட்டு, விதைக்கப்பட்டு, ஜீவ அப்பமாக மீண்டும் உயிர்த்தெழுந்து, தம்மை விசுவாசித்து இரட்சகராக ஏற்றுக்கொள்பவர்களுக்கு ஜீவனை, ஆவிக்குரிய வாழ்க்கையை, நித்திய ஜீவனைக் கொண்டுவர வேண்டியிருந்தது. இயேசு, நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்றும் ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது என்றும், ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றும் கூறினார். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். (1கொரிந்தியர் 15:3-4, 36-38; யோவான் 3:3-8; 11:25-26; 6:63.)

இயேசுவை முன்னணையில் கிடத்தும்போது சுற்றப்பட்ட துணிகள், அவர் உடலில் பெற்ற தழும்புகளைக் குறிக்கின்றன, அது சவுக்கால் அடிக்கப்பட்ட பிறகு அவரது உடலில் இருந்த உயர்ந்த அடையாளங்கள். ஆனால், நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். பாவமுள்ள மனிதகுலம் சுமக்க வேண்டிய அனைத்தையும் இயேசு தம்மீது ஏற்றுக்கொண்டார், இதனால் விசுவாசிகளான நம்மிடமிருந்து அவற்றை நீக்கினார். (மத்தேயு 27:26; மாற்கு 15:15; யோவான் 19:1; ஏசாயா 53:4-5; 1 பேதுரு 2:24.

உணவு சரீர வாழ்க்கைக்கு மையமாக இருக்கிறது போல

தேவனின் வார்த்தை ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மையமாக உள்ளது, மேலும் நம் படைப்பாளராகிய தேவன், அவருடைய வார்த்தையாகிய இயேசுவை நமது இரட்சிப்புக்காக பரலோக அப்பமாக (ஆவி/ஆத்தும உணவு) மாம்சமாக ஆக்கினார் ஏனென்றால் தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று. (யோவான் 3:16-21.)

இயேசு தம்மையே தேவனின் ஜீவ அப்பமாகவும், மனிதகுலத்திற்கு உணவளிக்கவும், உலகிற்கு உயிர் கொடுக்கவும், இந்த அப்பம் இல்லாமல் ஜீவன் பெற முடியாது என்ற நிலையிலும் பரலோகத்திலிருந்து இறங்கி வந்த உண்மையான மற்றும் ஜீவனுள்ள அப்பமாகவும் குறிப்பிட்டார். இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு காட்டிக் கொடுக்கப்பட்ட இரவில், இயேசு பஸ்காவின் பிட்கப்பட்ட அப்பத்தை நமது குணப்படுத்துதலுக்காகத் தம்முடைய தழும்புகள் நிறைந்த மற்றும் பிட்கப்பட்ட சரீரத்தின் அடையாள நினைவுச்சின்னமாகவும், நமது பாவங்களுக்கு மன்னிப்பு வழங்குவதற்காக திராட்சரசத்தை அவர் சிந்திய இரத்தமாகவும் தேர்ந்தெடுத்தார்.

அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்.
பின்பு, பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: “நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது இதை அவரை நினைவுகூரும்படி செய்யுங்கள்” என்றார். பாவம் கோரும் மரண தண்டனையைச் செலுத்துவதற்கு நமக்கு பதிலாக, விசுவாசிக்கிற அனைவருக்கும் மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுப்பதற்காக, உரிய காலத்தில் சாட்சியமளிக்க, இயேசுவின் மாம்சம் மற்றும் இரத்தத்தின் அடையாளமாக சீடர்கள் அப்பத்தையும் திராட்சரசத்தையும் உட்கொண்டனர். ஏனென்றால், நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்துப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம், அவர் வரும்வரை கர்த்தருடைய மரணத்தை அறிவிக்கிறீர்கள், அதாவது, நம்முடைய பாவங்களுக்காக விலைக்கிரயம் கொடுத்து வாங்கிய இயேசு விசுவாசிகளையும் என்றென்றும் தம்முடன் கூட்டிச் சேர்க்க அவர் வருவதை எதிர்நோக்குகிறீர்கள் என்று அவர் கூறினார். (மத்தேயு 26: 26-29; மாற்கு 14: 22-25; லூக்கா 22: 15-20; 1 கொரிந்தியர் 10: 16- 17; 11: 23-

26.)

அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள் என்று இயேசு ஜனங்களிடம், கூறினார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்யவேண்டும்? என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார். அதற்கு அவர்கள்: அப்படியானால் உம்மை விசுவாசிக்கும்படிக்கு நாங்கள் காணத்தக்கதாக நீர் என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர்? என்னத்தை நடப்பிக்கிறீர்? வானத்திலிருந்து அவர்களுக்கு அப்பத்தைப் புசிக்கக்கொடுத்தார் என்று எழுதியிருக்கிறபடி, நம்முடைய பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்தார்களே என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: வானத்திலிருந்து வந்த அப்பத்தை மோசே உங்களுக்குக் கொடுக்கவில்லை; என் பிதாவோ வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான். வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்தமன்னாவைப் போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார். (யோவான் 6:27-58; 3:16.)

மன்னா சரீரத்திற்கு உண்மையான உணவாகவும், சரீர வாழ்க்கையை மட்டுமே நிலைநிறுத்தியதாகவும் இருந்ததால், இந்த வாழ்க்கையைத் தாண்டி அதற்கு எந்த மதிப்பும் இல்லை, ஏனெனில் அதை உண்பவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும் திராணி அதற்கு இல்லை. பரலோகத்திலிருந்து வந்த உண்மையான அப்பமாகிய இயேசு ஆத்துமாவுக்கு அப்பமாக இருக்கிறார், மன்னாவை விட அவர் மேலானவர். அவர் மாம்சமாகிய ஜீவ வார்த்தை, தம்மைப் புசிக்கிறவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்க பரலோகத்திலிருந்து இறங்கி வந்த தேவனுடைய அப்பம். ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார். (யோவான் 1:1-18.)

இயேசு, நாம் நம் சரீரத்தைப் போஷிக்க உழைக்க வேண்டிய அவசியமில்லை என்று அர்த்தப்படுத்தவில்லை, ஆனால் அது நம் வாழ்வில் மிக உயர்ந்த குறிக்கோளாக இருக்கக்கூடாது, ஏனெனில் அது தற்காலிகமானது என்பதால்

அது வாழ்க்கையில் மிக முக்கியமான விஷயம் அல்ல என்று கூறுகிறார். மனிதன் அழிந்துபோகும் உடலை மட்டுமல்ல, மரணத்திற்குப் பிறகு வாழும் ஆவி மற்றும் ஆத்துமாவையும் உள்ளடக்கியவன், மேலும் அதற்கு இயேசு கிறிஸ்துவில் நித்திய ஜீவனுக்கு தேவனின் வார்த்தையால் உணவளிக்கப்பட வேண்டும். மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். (உபாகமம் 8:3; மத்தேயு 4:4.)

நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே. ங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்.
என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன் என்று இயேசு கூறினார். நாம் நேரடி உணவை உண்ணும்போது அது நம்மில் ஒரு பகுதியாக மாறுவது போல, நாம் அதன் ஒரு பகுதியாக மாறுவது போல, இயேசு நம்மில் ஒரு பகுதியாக மாறுகிறார், நாம் அவருடைய ஒரு பகுதியாக மாறுகிறோம்.

விலங்குகள் தங்கள் உடல் மற்றும் உலக வாழ்க்கையைத் தக்க வைக்க தானியம், புல் மற்றும் தண்ணீர் ஆகியவை உணவாக தொட்டியில் போடப்பட்டதைப் போலவே, இயேசு கோதுமை மணியாக கல்லறையில் வைக்கப்பட்டு, மரித்து, விதைக்கப்பட்டு, மீண்டும் உயிர்த்தெழுந்து, தம்முடைய சகோதரரில் பலரை, அவரை உணவாகக் கொண்டு என்றென்றும் வாழ வைத்தார். ஜீவனுள்ள பிதா அவரை அனுப்பியது போல, அவர் பிதாவால் ஜீவிக்கிறார்: அவரை புசிப்பவர் அவரால் ஜீவிக்கிறார், என்றென்றும் ஜீவிப்பார். (யோவான் 6: 50-58; 14:20; லூக்கா 22:15-20.)

இயேசுவின் மூலம் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், பரிபூரண ஜீவன், மற்றும் பிதாவின் வலது பாரிசத்திற்கு ஏறுதல், அவர் மனிதர்கள் என்றென்றும் உணவாக வாழ்வதற்காக ஜீவ விருட்சத்திற்கு ஒப்பிடப்பட்ட அப்பம். இயற்கையான உணவு சரீர வாழ்க்கைக்கு எப்படி இருக்கிறதோ, இயேசு ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஒப்பானவர், தேவன் இயற்கையான மற்றும் சரீர ரீதியானவற்றைப் பயன்படுத்தி ஆன்மீகத்தைப் போதித்தார். (1 கொரிந்தியர் 15: 45-50.)

தேவன் செய்ய வேண்டாம் என்று சொன்னதை ஆதாம் செய்தபோது, பாவமும் மரணமும் பிரவேசித்து தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே பிரிவைக் கொண்டு வந்ததை

நினைவில் கொள்ளுங்கள். ஆனால், மகிமையாலும் கனத்தாலும் முடிசூட்டப்பட்ட இயேசுவை நாம் காண்கிறோம்; தேவனின் கிருபையால் அவர் பல குமாரரர்களை மகிமைக்குக் கொண்டுவருவதில் ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிக்க வேண்டியதாக இருந்தது. ஏனென்றால், நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார், ஆகவே, தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் ஒரே மத்தியஸ்தராக இயேசுவை ஏற்றுக்கொள்ளத் தவறினால், தேவனுடன் நம்மை ஒப்புரவாக்க நம் பாவங்களுக்கான விலைக்கிரயமாக சிலுவையில் அவர் செய்த மத்தியஸ்த வேலையைப் பயன்படுத்தாவிட்டால், உயிர்த்தெழுந்து பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்திருப்பதைப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால், நம்மை தேவனிடமிருந்து பிரித்த பாவங்களில் மரித்து, அவரிடமிருந்து நித்தியமாகப் பிரிக்கப்படுவோம், அக்கினிக் கடலில் வாழ்வோம், ஏனென்றால் அவிசுவாசத்தின் காரணமாக நம் பாவத்திற்கான தேவனின் ஒரே ஏற்பாட்டை நாம் நிராகரித்துவிட்டோம், மரணத்திற்குப் பிறகு இனி வாய்ப்பு இல்லை, ஏனெனில் மரணத்திற்குப் பிறகு நியாயத் தீர்ப்பு மட்டுமே நடக்கும். ஆகவே, கிறிஸ்து நம்முடைய பாவங்களை நீக்குவதற்காக ஒரே தரம் பலியிடப்பட்டார், மேலும் அவரை ஏற்றுக்கொள்பவர்களுக்கும், அப்படிப்பட்டவர்களுக்கும் முழுமையான இரட்சிப்பைக் கொண்டுவருவதற்காக அவர் இரண்டாவது முறையாகத் தோன்றுவார். அவருடன் என்றென்றும் இருக்க அவர் மறுபடியும் வருவதற்காகக் காத்திருக்கிறார். (1 தீமோத்தேயு 2:4-6; யோவான் 8:23-24; எபிரெயர் 2:9; 9:27-28; ரோமர் 5 :8-11.)

தேவதூதர்கள் சொன்ன வார்த்தை உறுதியானது என்றால், ஒவ்வொரு மீறுதலுக்கும் கீழ்ப்படியாமைக்கும் நியாயமான பலனைப் பெற்றோம் என்றால், இவ்வளவு பெரிய இரட்சிப்பை நாம் புறக்கணித்தால் எப்படித் தப்பிப்போம். ஆகையால், ஆதியிலே மாம்சமாகி, நமக்குள்ளே வாசம் செய்கிற, பிதாவின் ஒரே பேறான, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்த வார்த்தைக்கு நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால், வானத்தின் கீழ் மனிதர்களுக்குள் இயேசுவின் நாமமேயன்றி, வேறு எந்த நாமமும் கொடுக்கப்படவில்லை. (ரோமர் 3:23; அப்போஸ்தலர் 4:12; யோவான் 1:1- 4, 12-14; 14:1-6; எபிரெயர் 2:1-6.)

இயேசு இந்த உலகத்திற்கு ஒரு அரசியல் இரட்சகராக அல்ல, மாறாக மனிதகுலத்தின் இரட்சகராக, பாவம் மற்றும் மரணத்தின் வல்லமையிலிருந்து நம்மை விடுவித்து, அவரில் ஜீவ ஆவியின் வல்லமைக்கு நம்மை ஒப்புரவாக்க வந்தார். எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.

எல்லாரும் பாவம் செய்து, தேவனுடைய

மகிமையற்றவர்களானபடியால், பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமிலே எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவிலே எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். ஒரே மனுஷனுடைய குற்றத்தினாலே மரணம் ஒருவனால் ஆண்டுகொண்டால், கிருபையின் மிகுதியையும் நீதியின் ஈவின் மிகுதியையும் பெறுகிறவர்கள் இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனில் ஆண்டுகொள்ளுவார்கள். ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள். (ரோமர் 3:23; 20-23.)

பழைய மனிதகுலத்தின் தலையான முதலாம் ஆதாம், மனிதனுக்கான தேவனின் சாயலையும் நோக்கத்தையும் இழந்து, தேவனிடமிருந்து மரணத்தையும் பிரிவையும் கொண்டுவந்தான், அதே நேரத்தில் கடைசி ஆதாமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்ட புதிய மனிதகுலத்திற்குத் தலைமை தாங்குகிறார், அவர்கள் அவரிடமிருந்து தங்கள் ஜீவனைப் பெறுகிறார்கள். இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. கிறிஸ்துவில் உள்ள மனிதன் தேவனின் சாயலிலும் ரூபத்திலிலும் அசல் படைப்பு, உருவாக்கம், நிலை மற்றும் நோக்கத்திற்கு என்றென்றும் மீட்டெடுக்கப்படுகிறான். (2 கொரிந்தியர் 5:17.)

ஏனென்றால், கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது நம்மால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. ஆகையால், நித்திய ஜீவன் சம்பாதிக்க வேண்டிய ஒன்றல்ல, மாறாக சிலுவையில் இயேசு கிறிஸ்துவால் விலைக்கிரயமாக செலுத்தப்பட்ட தேவனின் ஈவாக விசுவாசத்தால் பெறப்பட வேண்டும். இயேசு நம் பாவங்களுக்காக மரித்து அடக்கம் செய்யப்பட்டார், மேலும் அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து நமக்காக பரலோகத்திற்குள் நுழைந்தார், இதன் மூலம் அவர் தேவனின் வலது பாரிசத்தில் இருப்பதால், அவருடைய இரத்தத்தால் நாம் பிரவேசிப்பதற்கான வழியைத் தெளிவுபடுத்தினார். (எபேசியர் 2:8-9; 1:20-21; 1கொரிந்தியர் 15:3-4; எபேசியர் 1:20-21; எபிரெயர் 9:24; 10:19-20.)

பாவம் அறியாத இயேசு நமக்காக பாவமானார், அதனால் நாம் அவரில் தேவனுடைய நீதியாக மாறுகிறோம், ஆனால் சிலுவையில் அவர் செய்த கிரியையின் பலன்களும், உயிர்த்தெழுந்து, பிதாவின் வலது பாரிசத்தில் அவர் வீற்றிருப்பதின் பலன்களும், அவரை விசுவாசித்து இரட்சகராக ஏற்றுக்கொள்பவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். மனிதகுலத்தின் இரட்சகரும், ஸ்திரீயின் வித்துமான இயேசு,

சர்ப்பத்தின் தலையை நசுக்கினார், ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதி சாத்தான், மரணம், நரகம் மற்றும் பாதாளம் ஆகியவற்றின் மீதான அவரது வெற்றியில் நிறைவேற்றப்பட்டது, அது அவரை விசுவாசிக்கிற அனைவரும் பெறும் வெற்றி. 2கொரிந்தியர் 5:19, 21.)

இன்று உங்களுக்கு; உங்கள் வாழ்க்கையில், இயேசு கிறிஸ்துவில் இரட்சிப்பு, தேவனின் நீதியின் ஈவாக இருக்கிறது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய அவருக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். (எபிரெயர் 1:1-3; கொலோசெயர் 1:15-18; பிலிப்பியர் 2:5-11.)

பிள்ளை ஒரு காலத்தில் முன்னணையில் இருந்த கோதுமை மணியுடன் ஒப்பிடப்பட்டது, மரணத்திற்குப் பிறகு உயிர்பெற்று மனிதகுலத்தின் ஜீவ அப்பமாகவும் இரட்சகராகவும் ஆனார். தயவுசெய்து அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவர் மூலமாய் தேவனுடன் ஒப்புரவாகி, நித்திய ஜீவனைப் பெறுங்கள். நாம் அனைவரும் தேவனின் படைப்பு, என்றாலும் அவருடைய பிள்ளைகளாக இன்னும் மாறவில்லை என்பதால், இயேசுவை ஏற்றுக்கொள்வதன் மூலம் தேவன் நமக்கு அவருடைய பிள்ளைகளாகும் உரிமையைக் கொடுத்துள்ளார். ஏனென்றால், இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலமும், அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்வதன் மூலமும் நாம் அனைவரும் தேவனின் பிள்ளைகளாகிறோம்; உங்கள் பெயர் பரலோகத்தில் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் எழுதப்படும், மேலும் நீங்கள் அவருடன் நித்திய மகிமையில் ஒரு புதிய பூமியில், ஒரு புதிய வானத்தின் கீழ், பரிசுத்த நகரமான புதிய எருசலேமில் வாழ்வீர்கள், அங்கு எல்லாம் புதிதாக்கப்படுகிறது. என் நண்பரே! இது உங்களுக்குச் சொந்தமான இடம். (யோவான் 1:12-14; கலாத்தியர் 3:26-29; லூக்கா 10:20; வெளிப்படுத்தல் 21:1-5, 27.)

ஒப்புரவாக்குதலின் ஊழியராகவும், ஒப்புரவாக்குதலின் செய்தியுடன் கிறிஸ்துவின் தூதராகவும், இயேசுவை ஏற்றுக்கொண்டு, அவரை உங்கள் இரட்சகராக ஒப்புக்கொண்டு, தேவனோடு ஒப்புரவாகுமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று

தேவன் விரும்புகிறார், அதைச் செய்ய வேறு வாய்ப்பு இல்லாததால், இப்போதே ஏற்றக்காலம், இன்று நீங்கள் தேவனின் பிள்ளையாகி, ஆட்டுக்குட்டியின் ஜீவ புத்தகத்தில் உங்கள் பெயர் எழுதப்பட வேண்டிய நாள், ஏனென்றால் ஜீவ புத்தகத்தில் எழுதப்படாத எவரும் அக்கினி கடலில் தள்ளப்பட்டனர், என் நண்பரே, நீங்கள் ஆதாமில் பழைய மனுஷனாக இருக்க வேண்டியதில்லை, இயேசுவை உங்கள் இரட்சகராக நிராகரித்து, பிசாசுடன் அக்கினிக் கடலில் என்றென்றும் அவதிப்பட வேண்டியதில்லை. (2 கொரிந்தியர் 5:18-20; வெளிப்படுத்தல் 20:15.)

கிறிஸ்துவில் புதிய மனிதனாக அவருடைய பரிபூரண சாயலிலும் ரூபத்திலும் மீட்டெடுக்கப்படுவதற்கான தேவனின் திட்டத்தின் நிறைவேற்றமானது அவரது வருகைக்காகக் காத்திருக்கிறது, அப்போது நமது அசுத்தமான சரீரங்கள் மாற்றப்பட்டு அவருடைய மகிமையான சரீரத்தைப் போல மறுரூபமாக்கப்படும். இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். என் நண்பரே! இதுவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவால் கிரயத்திற்குக் கொள்ளப்பட்ட நமது அசையாத, நித்திய எதிர்காலம். (பிலிப்பியர் 3:20-21; கொலோசெயர் 3:4; எபிரெயர் 9:28; 1 யோவான் 3:2.)

பழைய சிருஷ்டியான ஆதாமின் சந்ததியினராக, பாவமுள்ள மாம்ச சரீரத்தில், மாம்சத்தின் செயல்களால் ஆதாமின் முடிவினால் வந்த தீமையை அனுபவிக்க, தேவனிடமிருந்து பிரிக்கப்பட்ட இந்த உலகத்தில் நாம் பிறந்தோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆனால் இப்போது தேவன் புதிய ஆவிக்குரிய சிருஷ்டிக்கு தலைவரான இயேசுவைப் ஏற்று, ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்து என்றென்றும் வாழ்வதற்கு மறுபடியும் பிறக்கும் உரிமையை நமக்குக் கொடுத்துள்ளார். நீங்கள் எடுக்கும் முடிவு இந்த வாழ்க்கையைத் தாண்டி நித்தியத்தில் நீங்கள் எங்கு வாழ்வீர்கள் என்பதைத் தீர்மானிக்கிறது. நீங்கள் கிறிஸ்துவில் இல்லையென்றால் உங்கள் நித்திய எதிர்காலம் ஆபத்தில் உள்ளது. இந்த வார்த்தைக்கு அதிக கவனம் செலுத்துங்கள், இயேசுவைத் தேர்ந்தெடுத்து, இவ்வளவு பெரிய இரட்சிப்பைப் புறக்கணிப்பதில் உங்கள் ஆத்துமாவைப் பற்றி அலட்சியமாக இருக்காதீர்கள். (யோவான் 3:3; வெளிப்படுத்தல் 22:1-4, 14.)

கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். (ரோமர்

10:9-10.)

உங்கள் சொந்த இரட்சிப்புக்கான உங்கள் ஒப்புதல் வாக்குமூலம்: அன்புள்ள தேவனே, என் பாவத்திலிருந்து என்னை இரட்சிக்க விலை கொடுத்து, உம்முடன் ஒப்புரவாக, மனமுவந்து தமது உயிரைக் கொடுத்த இயேசுவை அனுப்பியதில் என் மீதுள்ள உம் அன்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். பரலோகத்திற்குச் செல்ல முயற்சிக்கும் மதம் மற்றும் சுய நீதியின் மூலம் நான் இரட்சிப்பைத் தேடிக்கொண்டிருந்தேன் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன், ஆனால் இப்போது நான் நீதிமானாகும்படி இயேசு எனக்காக பாவமானார் என்பதை நான் அறிவேன்.

கர்த்தராகிய இயேசுவே, நீர் என் பாவங்களுக்காக மரித்தீர் என்றும், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தீர் என்றும், பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் எனக்காகப் பரிந்து பேசுகிறீர் என்றும் நான் என் இருதயத்தில் விசுவாசிக்கிறேன். இப்போது நான் நீர் என் இரட்சகரும் என் ஆண்டவருமாயிருக்கிறீர் என்று என் வாயால் அறிக்கையிடுகிறேன். என்னை இரட்சித்து, என்னை ஒரு புதிய படைப்பாக மாற்றியதற்கும், உம்முடைய ரூபத்திலும் சாயலிலும் புதுப்பிக்கப்பட்டதற்கும், உம்முடைய ஜீவப் புத்தகத்தில் பரலோகத்தில் என் பெயரை எழுதியதற்கும் நன்றி. ஆமென்

# அதிகாரம் 8

## மரித்தோரிலிருந்து முதற்பேறானவர்

முதல் மனிதனாகிய ஆதாமின் மூலம் வந்த பாவத்தினால் மக்கள் மரிக்கிறார்கள். அவனுக்குள் மரண தண்டனையானது எல்லா மனிதகுலத்திற்கும் வழங்கப்பட்டது, ஆனால் மரித்தவர்களின் உயிர்த்தெழுதல் கிறிஸ்துவால் வந்தது -, அவரில் உள்ளவர்கள் அனைவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1 கொரிந்தியர் 15: 20-23; ரோமர் 6:23.) ஆபிரகாமின் சந்ததியினரான இஸ்ரவேல் புத்திரர் மற்றும் அனைத்து மனிதகுலத்தினரான நமக்கு இந்த இரட்சிப்பின் செய்தி அனுப்பப்பட்டுள்ளது. தேவன் பிதாக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றினார், அவர் அவர்களை எகிப்திலிருந்து அழைத்து வந்து, இயேசுவை இரட்சகராக எழுப்பினார், ஆபிரகாமின் குமாரனும், தாவீதின் குமாரனுமாகிய மூலமாக பாவ மன்னிப்பு பிரசங்கிக்கப்பட்டது என்பதை நாங்கள் உங்களுக்கு நற்செய்தியாக அறிவிக்கிறோம். (அப்போஸ்தலர் 13:16-39; மத்தேயு 1:1.) அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது. (லூக்கா 1:32-33; 2:11; வெளிப்படுத்தல் 22:16.)

கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்து, நம்மை தேவனோடு ஒப்புரவாக்க, நம்முடைய பாவங்களையும் நியாயத்தீர்ப்புகளையும் தம்மேல் ஏற்றுக்கொண்டபோது, அந்தப் பஸ்கா பண்டிகைக்கு இதுவே காரணம்.

பழைய உடன்படிக்கையின் புளிப்பில்லாத அப்பப் பண்டிகை மூன்று பகுதிகளாகக் கொண்டாடப்பட்டது.

1. பஸ்கா பண்டிகை.

2. புளிப்பில்லாத அப்பப் பண்டிகை.

3. முதற்பலன் கதிர்களின் பண்டிகை.

1. பஸ்கா பண்டிகை. இந்த மாதம் மாதங்களின் தொடக்கமாகவும், வருடத்தின் முதல் மாதமாகவும் இருக்கும் என்றும், ஒவ்வொரு வீட்டாரும் ஒரு வருட ஆண்குட்டியை, பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியை எடுத்து, பரிசுத்த வருடத்தின் முதல் மாதத்தின் பத்தாம் நாளில், பதினான்காம் நாள் மாலையில் பலியிடுவதற்குத் தயாராக, அதை ஒதுக்கி வைக்க வேண்டும் என்றும், இரத்தம் அவர்களின் வீடுகளின் இரண்டு பக்க வாசல் நிலைகளிலும், தடவப்பட வேண்டும் என்றும், பலியிடப்பட்ட ஆட்டுக்குட்டியின் மத்தியஸ்தம் மூலம் அந்த வீடுகளில் ஏற்கனவே மாற்று மரணம் நிகழ்ந்துவிட்டது என்பதற்கான சான்றாக, சிந்தப்பட்ட இரத்தம் இருந்தது, மேலும் இரத்தம் பூசப்பட்ட வீடுகளுக்குள் இருந்தவர்கள் மரணத்திலிருந்து காப்பாற்றப்பட்டனர், அதே நேரத்தில் இரத்தம் இல்லாத வீடுகளில் இருந்த முதற்பேறானவர்கள் மரணத்தை அனுபவித்தனர். எகிப்து தேசத்தில் நானூற்று முப்பது ஆண்டுகள் வாழ்ந்த இஸ்ரவேல் புத்திரரின் வீடுகளைக் கடந்து, எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று கர்த்தருக்குச் செலுத்தப்பட்ட பஸ்கா பலியின் நினைவு நாளாக இந்தப் பண்டிகை அனுசரிக்கப்பட்டது. (யாத்திராகமம் 12.) லேவியராகமம் 23:5; எண்ணாகமம் 28:16; யாத்திராகமம் 6:2-8.)

2. புளிப்பில்லாத அப்பப் பண்டிகை: பதினான்காம் நாள் மாலை 6 மணிக்கு முடிந்து பதினைந்தாம் நாள் தொடங்கிய பஸ்காவுக்குப் பிறகு இது கொண்டாடப்பட்டது. எபிரெய நாள் மாலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இருந்தது (லேவியராகமம் 23:6; எண்ணாகமம் 28:17.) இந்தப் பண்டிகை ஒரு உயர் நாளாக இருந்தது, இது வாராந்திர ஓய்வுநாளைத் தவிர ஒரு கூடுதல் ஓய்வுநாள். (யோவான் 19:31.) இந்த ஓய்வு நாளில், ஒவ்வொரு வீட்டாரும் கசப்பான கீரைகளாலும் புளிப்பில்லாத அப்பங்களாலும் நெருப்பில் சுட்ட ஆட்டுக்குட்டியின் மாம்சத்தைப் புசிக்க வேண்டும், இது இஸ்ரவேலர் தங்கள் சொந்த வேலைகளை விட்டுவிட்டு, பழுதற்ற ஆட்டுக்குட்டியின் நிறைவேறின வேலையில் ஓய்வெடுத்ததைக் குறிக்கிறது. அவர்கள் நானூற்று முப்பது ஆண்டுகள் எகிப்தில் தங்கியிருந்த பிறகு, அவசரமாகவும், ஆயத்தமாகவும் அதைச் சாப்பிட வேண்டும். (யாத்திராகமம் 12: 8-11.) அந்தக் காலத்திலிருந்து, அவர்கள் நானூறு

ஆண்டுகள் எகிப்தியர்களால் அடிமைப்படுத்தப்பட்டனர். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர் கட்டளையிட்ட அனைத்தையும் செய்தார்கள், அது நானூற்று முப்பது ஆண்டுகளின் முடிவில் நடந்தது, அதே நாளில், அதாவது அது நடந்த அதே நாளில், கர்த்தருடைய சேனைகள் அனைத்தும் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டன. (யாத்திராகமம் 12: 15-17, 40-42, 50-51; 34:18; அப்போஸ்தலர் 7:6-7.)

3. வாரத்தின் முதல் நாளில், வாராந்திர சனிக்கிழமை ஓய்வுநாளுக்கு அடுத்த நாளில், முதற்பலன்களின் கதிர்க்கட்டு விழா கொண்டாடப்பட்டது. அந்த நாளில், அறுவடையின் முதல் பலன்களின் ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடம் கொண்டு வந்தார்கள், அவன் அதை கர்த்தருக்கு முன்பாக ஒரு பிரதிநிதி கதிர்க்கட்டாக அசைவாட்டினான், இது முதல் அறுவடையைப் போலவே இன்னும் வரவிருக்கும் முழு அறுவடையின் சேகரிப்பின் முன்னுரிமையைக் குறிக்கிறது. (லேவியராகமம் 23:9-11.)

இந்த பண்டிகைகள் கிறிஸ்துவை முழுமையாக வழிநடத்த நிழலாக செயல்பட்டன, ஏனெனில் அவர் நிழலின் சரீரமும் சாராம்சமும் ஆவார். மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளிலும், சங்கீதங்களிலும் எழுதப்பட்ட அனைத்தையும் அவர் நிறைவேற்ற வேண்டும் என்று இயேசு கூறினார், எனவே தேவனின் நித்திய நோக்கத்தை நிறைவேற்ற கிறிஸ்து இந்த பண்டிகைகளின் எதிர் மாதிரி. (கொலோசெயர் 2:16-17; கலாத்தியர் 3:24-29; எபிரெயர் 8:5; 1:1-3; லூக்கா 24:27,44; யோவான் 5:46; 18:31-33.)

ஆதாமிலிருந்து கிறிஸ்து வரை நான்காயிரம் ஆண்டுகள் அல்லது நான்கு நாட்கள் கர்த்தருடன் உள்ளன, ஏனெனில் ஒரு நாள் கர்த்தருக்கு ஆயிரம் வருடங்களைப் போலவும், ஆயிரம் ஆண்டுகள் ஒரு நாளைப் போலவும் இருக்கிறது. (சங்கீதம் 90:4; 2 பேதுரு 3:8.)

பழைய ஏற்பாட்டு பஸ்கா நினைவுச் சடங்குகளை நிறைவேற்றுவதற்காக, இயேசு தேவனுடைய ஆட்டுக்குட்டியாக, பாவமுள்ள மனிதர்களுக்காக மரிக்க கர்த்தருடன் நான்காயிரம் ஆண்டுகள் அல்லது நான்கு நாட்கள் ஆயத்தமாக்கி வைக்கப்பட்டார். பஸ்கா பண்டிகையின் போது, இயேசு பரிசுத்த வருடத்தின் முதல் மாதத்தின் பத்தாம் நாளில் எருசலேமுக்குள் நுழைந்தார், பதினான்காம் நாளில், புதன்கிழமை, உலகத்தின் பாவத்தைப் போக்க வந்த தேவனுடைய ஆட்டுக்குட்டியாக சிலுவையில் அறையப்படுவதற்கு ஆயத்தமாக வைக்கப்பட்டார். திரளான மக்கள் அவரை குருத்தோலைகளை அசைத்து வரவேற்றனர், ஆனால் பிரதான ஆசாரியர்களும், மூப்பர்களும் இயேசுவைக் கொல்ல அவருக்கு எதிராகப் பொய் சாட்சியம் அளிக்க முயன்றும் எதுவும் கிடைக்கவில்லை, ஆனால் மற்ற பொய் சாட்சிகள் அவர் தேவனின் ஆலயத்தை அழித்து மூன்று நாட்களில் கைகளால் கட்டப்படாத இன்னொரு தெவாலயத்தைக் கட்டுவேன் என்று தேவதூஷணம் செய்ததாகக் குற்றம் சாட்டினர். இன்னும் பலர் இயேசுவின் மீது பல

குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர், அவரைப் பிடித்து, பிரதான ஆசாரியனாகிய காய்பாவிடமும் மூப்பர்களிடமும், பின்னர் ஏரோது ராஜாவிடமும் தேசாதிபதியாகிய பொந்தியு பிலாத்துவிடமும் கொண்டு சென்று குற்றச்சாட்டுகளைப் பற்றி விசாரிக்கச் சொன்னார்கள், அவர் குற்றமற்றவராகக் காணப்பட்டார். (மத்தேயு 1:21; பிலிப்பியர் 2:5-8; யோவான் 1:29, 36; 18:24-38; 19:4, 6; மாற்கு 11:11; 14:1-2; மத்தேயு 27:11- 26; லூக்கா 19:37; 23:4, 14, 22.)

பஸ்கா பண்டிகையின் போது, யூதர்களை சமாதானப்படுத்த கூட்டத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கைதியை விடுவிப்பது தேசாதிபதியின் வழக்கமாக இருந்தது. பரபாஸ் என்ற ஒரு கொலைகாரன் விடுவிக்கப்பட்டான், மேலும் தேவனின் நியாயத்தீர்ப்பின் மூலம், பாவிகள் இடத்தைப் பிடிக்கவும், தம்மையே பலியிடுவதன் மூலம் ஒரு பழுதற்ற ஆட்டுக்குட்டியின் பஸ்கா பலியின் தேவையை நிறைவேற்றவும், அதற்குப் பதிலாக சிலுவையில் அறையப்படவும், பழுதற்ற ஆட்டுக்குட்டியான இயேசு தேர்ந்தெடுக்கப்பட்டார். (மாற்கு 15: 6-15; லூக்கா 23: 16-25; (ஏசாயா 53.) கொலோசெயர்: 20-22; எபிரெயர் 9:26.)

பதினான்காம் நாள் புதன்கிழமை, மறுநாள் வியாழக்கிழமை, புளிப்பில்லாத அப்பப் பண்டிகை, அது ஒரு ஓய்வு நாளாக இருந்தது. அந்த ஓய்வு நாள் ஒரு முக்கிய நாளாக இருந்தது, வாராந்திர சனிக்கிழமை ஓய்வுநாளைத் தவிர ஒரு கூடுதல் ஓய்வுநாளாகும். (மாற்கு 15:25; யோவான் 19:31.) இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது, ஆறாவது மணி முதல் ஒன்பதாம் மணி வரை இருள் இருந்தது, ஒன்பதாம் மணி அல்லது பிற்பகல் 3 மணி வரை அந்திப் பலியின் நேரம். அப்போது பிரதான ஆசாரியன் கடைசி பஸ்கா ஆட்டுக்குட்டியைக் கொன்று, "முடிந்தது" என்று கூறுவான். அதே நேரத்தில், பெரிய பிரதான ஆசாரியராகவும், பலி ஆட்டுக்குட்டியாகவும், பழுதற்ற தேவனின் ஆட்டுக்குட்டியாக தமது மீட்பின் வேலையை முடித்த பிறகு, ஒன்பதாம் மணி அல்லது பிற்பகல் 3 மணிக்கு, "எல்லாம் முடிந்தது" என்று இயேசு கூறினார். அவர் தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார் (யோவான் 19:30.) அந்த நேரத்தில், மனிதனை மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பிரித்த பாவமுள்ள மாம்சத்தைக் குறிக்கும் ஆலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழ் வரை இரண்டாகக் கிழிக்கப்பட்டது, இது இயேசுவின் இரத்தத்தால் தேவனுடைய பிரசன்னத்திற்கு ஒரு புதியதும் ஜீவனுமான வழி திறக்கப்பட்டது என்பதைக் குறிக்கிறது. (மாற்கு 15:38-47; யோவான் 17:4; 19:14-18; லூக்கா 23:44-46; எபிரெயர் 9:3, 8, 11-12.)

மறுநாள் வியாழக்கிழமை, புளிப்பில்லாத அப்பப் பண்டிகையைக் கொண்டாடுவதற்காக, பன்னிரண்டாம் மணி நேரம் அல்லது மாலை 6 மணிக்கு முன்பு இயேசு சிலுவையிலிருந்து அவசரமாக இறக்கி, கல்லறையில் வைக்கப்பட்டார். பன்னிரண்டாம் மணி நேரம் அல்லது மாலை 6 மணி புதன்கிழமையை முடிந்து, மாலை 6 மணிக்கு வியாழக்கிழமைத் தொடங்கியது. ஏனெனில் எபிரேய நாள் மாலை முதல் மாலை வரை, அதாவது மாலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இருந்தது. (யோவான் 19:31-42; 20:19.)

தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். (எபிரெயர் 10:18-22.) பாவம் அறியாத இயேசுவை நமக்காக பாவமாக்கினார்; நாம் அவரில் தேவனுடைய நீதியாகும்படிக்கு, தேவன் ஒருவரே தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே.(2 கொரிந்தியர் 5:20-21; மாற்கு 10:45; 1 தீமோத்தேயு 2:5-6.)

இயேசுவின் பரிபூரண வாழ்க்கை, அவரது பரிகார மரணம் பாவமுள்ள மனிதனுக்கு இரட்சிப்பைக் கொண்டு வந்தது என்பதற்கு சாட்சியமளிக்கிறது. எகிப்தில் வீடுகளில் பூசப்பட்ட பழுதற்ற ஆட்டுக்குட்டியின் சிந்தப்பட்ட இரத்தம் உள்ளே இருந்தவர்களை மரணத்திலிருந்து காப்பாற்றியது போல, பழுதற்ற தேவனின் ஆட்டுக்குட்டியான இயேசு, நித்திய மரணத்திலிருந்து, அதாவது, தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிக்கப்பட்ட வாழ்விலிருந்து நம்மை இரட்சிக்கக் கல்வாரி சிலுவையில் தமது விலைமதிப்பற்ற இரத்தத்தைச் சிந்தினார், ஆனால் அவருடைய இரத்தம் நம் பாவங்களுக்காகச் சிந்தப்பட்டது என்று நாம் விசுவாசிக்க வேண்டும், மேலும் அவருடைய இரத்தம் நடைமுறைக்கு வந்து நம்மை தேவனுடன் ஒப்புரவாக்குவதற்காக அவரை நம் இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும். (1 பேதுரு 1:18-25.)

நாம் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போட வேண்டும். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறார். இயேசு தனது சொந்த இரத்தத்தைச் சிந்துவதன் மூலம் பாவமுள்ள மனிதனை இரட்சிக்க தேவனின் சித்தத்தை செயல்படுத்தினார், ஏனென்றால், எங்கே மரணசாதனமுண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாகவேண்டும். இப்போது அவருடைய இரத்தம் தேவனின் அன்பையும் இரக்கத்தையும், அவருடனான ஒப்பரவு மற்றும் ஐக்கியத்திற்கான அவரது ஈவையும் பற்றிப் பேசுகிறது, ஏனெனில் மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது, மேலும் நம் ஆத்துமாக்களுக்குப் பாவநிவாரணமாக தேவன் அதைக் கொடுத்திருக்கிறார். (1 கொரிந்தியர் 5:7; எபிரெயர் 9:15-22; லேவியராகமம் 17:11.)

இயேசு இவ்வாறு கூறினார், நாம் அவருடைய மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாலொழிய நமக்குள் ஜீவன் இல்லை, ஆனால் அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுகிறவனோ நித்திய ஜீவன் உடையவன், அவன் மரணத்திலிருந்து ஜீவனுக்கு செல்கிறான். இயேசு தம்முடைய பாவமற்ற சரீரத்தைக் கொடுத்து, நம் ஆத்துமாக்களை இரட்சிக்க சிலுவையில் தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார், மேலும்

உண்மையான பஸ்கா ஆட்டுக்குட்டியாக, ஆட்டுக்குட்டியின் சரீரமும் இரத்தமும் கொண்ட பழைய உடன்படிக்கை பஸ்கா பண்டிகையின் விழாவை அவர் முடித்து, தம்மை நினைவுகூரும் வகையில் தம்முடைய சரீரத்திலும் இரத்தத்திலும் புதிய உடன்படிக்கை பண்டிகையை நிறுவினார், இது அப்பத்தாலும், தம்முடைய இராப்போஜனத்தின் திராட்சை ரசத்தினாலும் நினைவுக்கூரப்படுகிறது. பஸ்கா பண்டிகை, எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேலை தேவன் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு மீட்டதன் நினைவுகூரலாக இருந்தது போலவே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவால் நிறுவப்பட்ட திருவிருந்து, விசுவாசிகளுக்கு அவரில் அவர்களின் மீட்பையும், அவர்களை மகிமையில் என்றென்றும் தம்முடன் அழைத்துச் செல்ல அவர் மீண்டும் வருவதையும் நினைவூட்டுகிறது.

நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம், கர்த்தர் வரும்வரை அவருடைய மரணத்தை அறிவிக்கிறீர்கள்: இஸ்ரவேலர் தங்கள் சொந்தக் கிரியைகளை விட்டுவிட்டு, பழைய உடன்படிக்கையின் பழுதற்ற பலியிடப்பட்ட ஆட்டுக்குட்டியின் முடிக்கப்பட்ட வேலையில் ஓய்வெடுத்தது போல, விசுவாசிகள் தங்கள் சொந்தக் கிரியைகளை விட்டுவிட்டு, தேவனின் புளிப்பில்லாத அப்பம், தேவனின் பழுதற்ற ஆட்டுக்குட்டி, நமக்காகப் பலியிடப்பட்ட எங்கள் பஸ்காவாகிய இயேசு கிறிஸ்து நிறைவேற்றின வேலையில் ஆவிக்குரிய இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறார்கள். (மத்தேயு 26:2, 26-28; மாற்கு 14:1,12, 22-24; யோவான் 6:51-56; 12:24; 1 கொரிந்தியர் 10:16; 11:23-26; எபிரெயர் 8:6-13; 4:10-11; உபாகமம் 32:14.)

இயேசு குணமடைந்து ஓய்வுநாளில் சட்டவிரோதமான பல செயல்களைச் செய்த பிறகு, அவர் யார் என்பதை நிரூபிக்க ஒரு அடையாளத்தைக் கேட்ட சில வேதபாரகர்களும் பரிசேயர்களும், இயேசுவை ஒரு முறை கேட்டார்கள். இயேசு அதற்குப் பதிலளித்து, தான் ஓய்வுநாளின் ஆண்டவர் என்று கூறினார், மேலும் தீர்க்கதரிசி யோனாவின் அடையாளத்தைக் குறிப்பிட்டார். அவர் ஒரு திமிங்கலத்தின் வயிற்றில் மூன்று பகலும் மூன்று இரவும் இருந்த பிறகு, திமிங்கலத்தால் வறண்ட நிலத்தில் வாந்தி எடுக்கப்பட்டார். இயேசு கொடுத்த அடையாளம், பூமியின் மையத்தில் மூன்று பகலும் மூன்று இரவும் அவர் அடக்கம் செய்யப்பட்டதையும், அவர் மீண்டும் உயிர்த்தெழுவார் என்று சொன்னபோது அவர் உயிர்த்தெழுந்ததையும் சுட்டிக்காட்டியது.

மூன்று இரவுகள்: புதன், வியாழன் மற்றும் வெள்ளி, மற்றும் மூன்று நாட்கள்: வியாழன், வெள்ளி மற்றும் சனி. (மத்தேயு 12:1-14, 38-41; 16:1-4; மாற்கு 8:31; லூக்கா:29-32; யோவான் 2:19; யோனா 1:17.)

வாரத்தின் கடைசி நாளாகிய சனிக்கிழமை ஓய்வுநாள் மாலை 6 மணிக்கு முடிவடைந்தபோது, வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை தொடங்கி,

உயிர்த்தெழுதலின் முதற்பலனாகவும், மரித்தோரிலிருந்து முதற்பேறானவராகவும் அவர் சொன்னது போலவே, மூன்று பகல் மற்றும் மூன்று இரவுகளுக்குப் பிறகு இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். பொழுது இன்னும் இருட்டாக இருக்கும்போது, மரியாளும் மற்ற பெண்களும் அதிகாலையில் அவரது சரீரத்தை அபிஷேகம் செய்ய கல்லறைக்கு வந்தார்கள், ஆனால் அவர்கள் கல்லறை காலியாக இருப்பதைக் கண்டார்கள், தேவதூதர்கள் அவர்களுக்குத் தோன்றி, அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார் என்று சொன்னார்கள். அந்த நேரத்தில், இயேசு மரியாளுக்கு காட்சியளித்தார், அவள் அவரைத் தொட முயன்றபோது, இயேசு அவளைத் தடுத்து நிறுத்தினார், தாம் இன்னும் பிதாவுக்கு முன்பாக ஏறிச் செல்லவில்லை என்று கூறி, தம்முடைய சொந்த இரத்தத்துடனும், உயிர்த்தெழுதலின் முதற்பலனுடனும், மகா பிரதான ஆசாரியராகவும் தம்மைக் காட்டினார், இது ஆசாரியனுக்கு வழங்கப்பட்ட அறுவடையின் முதற்பலனின் கதிரால் அசைவாட்டும் பலியாக குறிக்கப்பட்டது. (லேவியராகமம் 23: 9-14; யோவான் 20: 1-17; லூக்கா 24: 1-9; மாற்கு 16: 1-7; மத்தேயு 28: 1-10.

முதல் பலனின் கதிர்களை பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலத்தில் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டுவதற்காக யூதர்கள் ஆசாரியனுக்குக் கொடுத்தபோது, இயேசு தம்முடைய சொந்த இரத்தத்துடனும், உயிர்த்தெழுதலின் முதல் பலன்களுடனும், மரித்தோரிலிருந்து முதற்பேறானவராகவும், அவர் வருகையில் வரவிருக்கும் ஆத்துமாக்களின் முழு அறுவடையின் பிரதிநிதியாகவும் நமக்காக தேவனின் சந்நிதியில் தோன்ற பரலோக பரிசுத்த ஸ்தலத்திற்கு ஏறினார். ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதானதூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். (1 தெசலோனிக்கேயர் 4:13-18.)

உயிர்த்தெழுதலின் முதற்பலனான இயேசு அறுவடை செய்யப்பட்டார், மேலும் அவரைப் போலவே இன்னும் பலர் வரவிருக்கிறார்கள் என்பதற்கு காலியான கல்லறையும் இயேசு பரலோகத்திற்கு ஏறுதலும் சாட்சியமளிக்கின்றன. ஆனால் கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்.

பின்னர் அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு

அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். பாவம் மரணத்தைக் கொண்டு வந்தது, ஆனால் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (எபிரெயர் 9:11-12, 24-28; 1 கொரிந்தியர் 15:20-23, 51-57.)

நண்பரே, இயேசு கிறிஸ்து கல்லறையில் தங்கள் பெயரைக் கொண்ட மற்றவர்களைப் போன்றவரல்ல. தேவதூதன் இயேசுவைப் பற்றி, அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்; அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். என்றான். (மத்தேயு 28:6-7.)

சிலுவையின் செய்தி என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் (1 கொரிந்தியர் 15:3-4.) மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன், அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இயேசு கூறுகிறார் அவர் பரலோகத்திற்குச் சென்று, பிதாவாகிய தேவனுடைய மகிமையின் வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார், அவர் அவரை மிகவும் உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குக் கொடுத்தார். நரகம், மரணம், வானம், பூமி, தேவதூதர்கள், அதிகாரங்கள், வல்லமைகள் மற்றும் எல்லா நாமமும் அவருடைய நாமத்திற்குக் கீழ்ப்படுத்தப்பட்டுள்ளன. (வெளிப்படுத்தல் 1:18; மத்தேயு 28:18; எபேசியர்:19-22; பிலிப்பியர் 2:8-11; 1 பேதுரு 3:22; எபிரெயர் 1:3; 10:12; 12:2.)

என் நண்பரே, பிரபஞ்சத்தில் மிகவும் வல்லமையுடையராகவும் உயர்ந்த அதிகாரம் கொண்டவராகவும் இருக்கும் இயேசுவே, உங்களுக்கு இரட்சிப்பை வழங்குகிறார் என்பது ஒரு நற்செய்தி, ஏனென்றால் உங்களை இரட்சிக்க தேவனால் நியமிக்கப்பட்ட வேறு எந்த நபரோ, நாமமோ இல்லை. (அப்போஸ்தலர் 4:12.) ஆயிர வருட யுகத்தின் சுத்திகரிக்கப்பட்ட பூமியில், ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவுமாக தாவீதின் சிம்மாசனத்தில் இயேசு அமர்ந்திருப்பார், புதிய வானத்தின் கீழ் புதிய பூமி, பரிசுத்த நகரம், புதிய எருசலேம், அங்கு தேவன் மனிதனுடன் வாசஞ்செய்வார் என்பது எனக்கு உறுதியாகத் தெரியும், இந்த வாழ்க்கைக்குப் பிறகு நீங்கள் இந்த இடத்தில் இருக்க விரும்பியும், உங்கள் பாவங்களுக்கு மன்னிப்பு பெற இயேசு

கிறிஸ்து வழியாகச் செல்லத் தவறினால், தேவனால் நியாந்தீர்க்கப்பட்டு அவரிடமிருந்து பிரிக்கப்படுவீர்கள். நீங்கள் தேவனுடன் இருக்கப் போவதில்லை, ஏனென்றால் தேவனுக்கு முன்பாக உங்களைப் பரிசுத்தமாகவும் குற்றமற்றவர்களாகவும், குறைபாடற்றவர்களாகவும் நிறுத்தியிருக்கும் இயேசுவின் இரத்தத்தின் மீட்பின் வேலையின் நன்மையை நீங்கள் நிராகரித்துவிட்டீர்கள் (வெளிப்படுத்தல் 21:1-4; யோவான் 8:24; எபேசியர் 1:4.)

அன்பானவர்களே, தயவுசெய்து பின்வரும் கேள்விகளைக் கேட்க என்னை அனுமதியுங்கள். நீங்கள் இப்போது மரித்தால் எங்கே செல்வீர்கள்? இயேசுவின் இரத்தத்தனால் கழுவப்பட்டு உங்கள் பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்று நீங்கள் தண்டனையிலிருந்து இரட்சிக்கப்பட்டு இருக்கிறீர்களா? இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனுடன் சமாதானம் செய்துள்ளீர்களா? உங்கள் நித்திய எதிர்காலம் பாதுகாப்பானதா? நீங்கள் எங்கு செல்வீர்கள், உங்களுக்கு என்ன நடக்கும், யாருடன் வாழ்வீர்கள் என்று உங்களுக்குத் தெரியாததால் நீங்கள் மரிப்பதற்கு பயப்படுகிறீர்களா? இயேசு, பரிபூரண யுகத்தில் மகிமையில் வரும்போது தம்முடன் இருக்கும்படிக்கு உங்களைச் சேர்த்து கொள்ள வேண்டுமா? நீங்கள் விசுவாசிகளின் கூட்டத்தில் ஒருவராக இருப்பீர்களா அல்லது இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கான கடைசி வாய்ப்பைப் பெற்று இந்த யுகத்தின் கடைசி நாட்களின் உபத்திரவத்தை எதிர்கொள்ளப் போகிறீர்களா? அந்த நாட்களில் நீங்கள் இயேசுவைத் தொடர்ந்து நிராகரித்து, அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல் மரித்தால், பிசாசுடன் நரகத்தின் சித்திரவதைகளில் என்றென்றும் வாழ தேவனின் நியாயத்தீர்ப்பின் கீழ் இருப்பீர்கள். (வெளிப்படுத்தல் 20:14-15; 1 யோவான் 5:11-13; மாற்கு 16:16.)

நீங்கள் இயேசு இல்லாமல் மரித்தால், தேவனிடமிருந்து பிரிந்து உங்கள் பாவங்களில் மரித்துவிடுவீர்கள் என்றும், தேவனுடன் ஒப்புரவாவதற்கான வாய்ப்புகள் இனி இருக்காது என்றும் நீங்கள் யோசித்திருக்கிறீர்களா? (யோவான் 8:24; லூக்கா 16:19-31; எபிரெயர் 9:27.) பாவம் மனிதனை தேவனிடமிருந்து பிரிக்கக் காரணமாக இருந்ததால், பிரிவினைக்குக் காரணமான அதே பாவ இயல்புடன் தேவனிடம் திரும்புவது சாத்தியமில்லை. என் நண்பரே, இவை உங்கள் சமூக, அறிவுசார் அல்லது நிதி வாழ்க்கையைப் பற்றிய கேள்விகள் அல்ல, நீங்கள் ஒரு மதவாதியா அல்லது நல்ல மகனா, நல்ல வாழ்க்கை வாழ்கிறீர்களா அல்லது பாராட்டத்தக்க காரியங்களைச் செய்கிறீர்களா என்று விசாரிக்கவில்லை என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? அவைகள் உங்களை அவசர சுய பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளன, இப்போதே தக்கச் சமயம், இன்றே இந்த வாழ்க்கைக்குப் பிறகு நீங்கள் எங்கு,

யாருடன் வாழ்வீர்கள் என்பதை உங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கவும் வேண்டிய நாள், புதிய பூமியில் இயேசுவுடன் ஒரு புதிய வானத்தின் கீழ் மகிமையுடன், முந்தைய விஷயங்களை முற்றிலும் மறந்து எல்லாம் புதிதாக்கப்பட்ட இடத்தில் வாழ வேண்டுமா, அல்லது பிசாசு, மற்றும் அக்கினிக் கடலில் இருப்பதா, அங்குள்ளவர்களின் நினைவு அவர்களை என்றென்றும் வேதனைப்படுத்தும், கர்த்தராகிய இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள அவர்களுக்கு வழங்கிய அனைத்து வாய்ப்புகளையும் நினைவில் கொள்கிறார்கள். (வெளிப்படுத்தல் 21:1-4; 20:14-15.)

இயேசுவின் காலியான கல்லறை, கல்லறை மனிதனின் முடிவு அல்ல என்று நமக்குச் சொல்வதால், என் நண்பரே, இந்தக் கேள்விகள் உங்களுக்கு மிகுந்த கவலையாக இருக்க வேண்டும், அவற்றைப் புறக்கணிக்கவோ அல்லது அவமதிக்கவோ கூடாது. இயேசு கிறிஸ்துவின் மூலம் டன் சமாதானம் செய்ய வேண்டிய நேரம் இது, அதனால் அவர் இருக்கும் இடத்தில் நீங்களும் இருப்பீர்கள். (யோவான் 14:3.) நீங்கள் கிறிஸ்துவில் இல்லாவிட்டால், நீங்கள் இன்னும் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்ட உங்கள் பாவங்களில் இருக்கிறீர்கள் தேவனுடன் சரியான உறவில் இல்லை, மேலும் மக்கள் இயேசுவை தங்கள் இரட்சகராக ஒருபோதும் பெறாததால் மட்டுமே நரகத்திற்குச் செல்கிறார்கள். நீங்கள் அவர்களில் ஒருவராக இருக்க வேண்டியதில்லை, நீங்கள் பாவம் செய்ததாகவும், உங்களை மீட்டுக்கொள்ள முடியாது என்றும் ஒப்புக்கொள்ள வேண்டும், மேலும் உங்களை மீட்க மரித்தவரும், மரித்தோரிலிருந்து தேவன் எழுப்பியவருமான இயேசு கிறிஸ்துவின் மூலம் உங்களுக்கு மன்னிப்பு தேவை, அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் இருப்பவர், மரித்தோரிலிருந்து முதற்பேறானவர், உயிர்த்தெழுதலின் முதற்பலனாக, புதிய படைப்பின் தொடக்கமாக இருப்பவர், ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின, கிறிஸ்துவிலுள்ள அனைவரும் அவருடன் என்றென்றும் வாழும் புதிய படைப்பின் மனிதனானவர்கள். (1 கொரிந்தியர் 15:3-4, 20, 23, 53-57; கொலோசெயர்:18; 2 கொரிந்தியர் 5:17.)

அன்பானவர்களே, இயேசுவின் சிந்தப்பட்ட இரத்தத்தின் செய்தியும் நோக்கமும் இதுதான் என்பதால், நீங்கள் இயேசுவை நிராகரித்து, உலகிலும் தேவனின் பிரசன்னத்திற்கு வெளியேயும் நித்தியத்தில் நம்பிக்கையின்றி வாழ எந்த முகாந்திரமும் இல்லை. உங்கள் எதிர்காலமும் நித்தியமும் உங்களை மட்டுமே சார்ந்துள்ளது, வேறு யாரையும் சார்ந்தல்ல. இயேசு தம்மைப் பலியாகக் கொடுத்து பாவத்தை நீக்குவதற்காக ஒரு தரம்

வெளிப்பட்டார் என்றும், அவரைத் தேடுபவர்களுக்கு அவர் இரண்டாவது முறையாக பாவமின்றி முழு இரட்சிப்பைக் கொண்டுவருவார் என்றும் உங்களுக்குச் சொல்லப்படுகிறது. நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். (எபிரெயர் 9:26-28; பிலிப்பியர் 3:20-21.)

பழைய உடன்படிக்கையின் பண்டிகைகள், அவற்றின் நிர்ணயிக்கப்பட்ட நாட்கள் மற்றும் நேரங்கள், மனிதன் தம்மை அணுகுவதற்காக தேவனால் நியமிக்கப்பட்டன. புதிய உடன்படிக்கையில், தேவனிடம் செல்லும் வழி இயேசு கிறிஸ்து. அவரே வழி, சத்தியம் மற்றும் ஜீவன், அவராலேயன்றி எந்த மனிதனும் பிதாவை சேர முடியாது. (யோவான் 14:6.) நாம் செய்தவற்றால் அல்ல, மாறாக இயேசு சிலுவையில் நமக்காகப் பலியிடப்பட்ட பஸ்காவின் பலியாகச் செய்ததன் மூலம் நாம் இப்போது தேவனிடம் சேருகிறோம்.

உங்கள் மனதைத் தட்டியெழுப்ப என்னை அனுமதியுங்கள். இயேசு தமது மீட்பின் பணியை முடித்துவிட்டு ஆவியைவிட்டபோது, பரிசுத்த ஸ்தலத்தில் பாவமுள்ள மனிதனை தேவனின் பிரசன்னத்திலிருந்து தடுத்த ஆலயத்தின் திரைச் சீலை மேலிருந்து கீழ் வரை இரண்டாகக் கிழிந்தது. இந்த திரைச்சீலை பாவமுள்ள சரீரத்தைக் குறிக்கிறது, இது தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான பிரிவை ஏற்படுத்தியது மற்றும் இயேசுவின் பரிபூரண வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் மற்றும் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருத்தல் மூலம் அகற்றப்பட்டது. பரிசுத்த தேவனுக்கும் பாவமுள்ள மனிதனுக்கும் இடையிலான இடைவெளியை இயேசு இணைத்து, அவரது இரத்தத்தால் நமக்காக தேவனின் பிரசன்னத்திற்குள் ஒரு புதிதும் ஜீவனுமான வழியைத் திறந்தார், அது நம் பாவங்களை நீக்கியது, இதனால் நாம் இயேசுவை நம் இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது, தேவனுடன் ஒப்புரவாக முடியும். எனவே, நீங்கள் இயேசுவை உங்கள் இரட்சகராக விசுவாசிக்கத் தவறினால், உங்கள் இரட்சிப்பிற்கு தடையாகவும், நித்தியத்தில் உங்கள் ஆத்துமாவை சாபத்திற்குள்ளாக்குபவர் நீங்கள்தான். (அப்போஸ்தலர் 13:38-39; ரோமர் 3:22-25; யோவான் 3:16; எபிரெயர் 10:19-20; மாற்கு 15:16.)

புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின் மூன்று பகுதிகளும் கிறிஸ்துவில்தான் நிறைவேறுகின்றன.

1. பஸ்கா: பரிசுத்த ஆவியின் வல்லமையால் பாவமின்றி கருத்தரிக்கப்பட்ட இயேசு,

உலகத்தின் பாவத்தை நீக்குவதற்காக மரித்த பழுதற்ற தேவனுடைய ஆட்டுக்குட்டியாக இருக்கிறார். அவர் நமக்காகப் பலியிடப்பட்ட நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டி. (மத்தேயு 1:21-23; யோவான் 1:29; 1 கொரிந்தியர் 5:7.)

2. புளிப்பில்லாத அப்பம்: இயேசு, தேவனுடைய பரிபூரண ஆட்டுக்குட்டி உலகத்திற்கு ஜீவனைக் கொடுக்க பரலோகத்திலிருந்து இறங்கி வந்த ஜீவ அப்பம். (யோவான் 6:32-57.)

3. முதற்பலன்களின் கதிர்க்கட்டு: இயேசு உயிர்த்தெழுதலின் முதற்பலனாகவும், மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பிறப்பாகவும் இருக்கிறார். (1 கொரிந்தியர் 15:20-23; கொலோசெயர்:18.)

அறுவடையின் முதல் பலன்களின் கதிர்க்கட்டை ஆசாரியனிடம் கொண்டு வந்து, வாராந்திர ஓய்வுநாளுக்கு அடுத்த நாள் கர்த்தருக்கு முன்பாக அதை அசைவாட்டுவதானது, முதல் ஓய்வு நாளைப் போலவே இன்னும் அதிகமாக வரப்போகிறது, என்பதைக் குறிக்கிறது; இயேசு தேவனின் சந்நிதியில் இருக்க பரலோகத்திற்கு ஏறினார், அவர் அவரைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்ட அனைவருடைய முழுமையான அறுவடையின் முதன்மையானவர். இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். (வெளிப்படுத்தல்:5; எபேசியர் 1:20; எபிரேயர் 9:24; 10:9-12; யோவான் 14:1-6; 1 தெசலோனிக்கேயர் 4:13-18; 1 யோவான் 3:2.)

கிறிஸ்துவில் யூதனென்றும் புறஜாதியென்றும் இல்லை, ஏனென்றால் நாம் அனைவரும் கிறிஸ்து இயேசுவை விசுவாசிப்பதன் மூலம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம். நாம் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறோம். (கலாத்தியர் 3:26-29.) நீங்கள் இயேசுவை இன்னமும் உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், தயவுசெய்து அவரை உங்கள் பஸ்கா பலியாக ஏற்றுக்கொள்ளுங்கள், அவர் உங்கள் பாவங்களுக்காக மரித்து, மரணத்திலிருந்து ஜீவனுக்குச் சென்றார். (யோவான் 5:24.)

அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, நான் உமக்கு முன்பாக என் பாவத்தை அறிக்கையிடுகிறேன், நான் என்னை இரட்சித்து கொள்ள முடியாது என்பதை ஒப்புக்கொள்கிறேன். சிலுவையில் மரித்து என் பாவத்தையும் நியாயத்தீர்ப்பையும் சுமந்ததற்கு நன்றி. உம் இரத்தத்தில் நான் அர்ப்பணிப்பை ஏற்றுக்கொண்டு, உம்மை என் இரட்சகராக ஏற்றுக்கொள்கிறேன், என்னை என்றென்றும் உம்முடன் அழைத்துச் செல்ல உம் வருகைக்காக காத்திருக்கிறேன். ஆமென். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

# அதிகாரம் 9

# இயேசுவோடு உயிர்த்தெழுங்கள்

**இ**யேசுவே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார் என்றும், அவரை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் சரீரம் மரித்திருந்தாலும், மறுபடியும் உயிர்பெறுவான், அழியாத நிலையில் எழுப்பப்படுவான், அவருடைய வருகையில் ஒரு ஆவிக்குரிய சரீரமாக இருப்பான், அதே நேரத்தில் மரணம் ஜீவனால் விழுங்கப்படும், ஏனெனில் மரணம் இயேசுவில் இருப்பவர்களை ஒருபோதும் மேற்கொள்ள முடியாது. உயிர்த்தெழுதலுக்கும் ஜீவனுக்கும் மூலமானவரிடமிருந்து ஒருபோதும் பிரிக்கப்படாமல், அவருடைய வல்லமையால் அவர்கள் உயிர்த்தெழுதலை அனுபவிப்பார்கள். இயேசுவில் மரணம், நரகம் மற்றும் பாதாளம் ஆகியவற்றின் மீதான ஜெயம் உள்ளது, அவற்றிற்கான திறவுகோல்கள் அவரிடம் உள்ளன, எனவே உயிர்த்தெழுதலும் ஜீவனும் இயேசுவின் இயல்பு, மேலும் அவர் அதை நான்கு நாட்கள் அடக்கம் செய்யப்பட்ட பிறகு லாசருவை மரித்தோரிலிருந்து எழுப்பினதின் மூலமும், மூன்று நாட்கள் மற்றும் மூன்று இரவுகள் அடக்கம் செய்யப்பட்ட பிறகு தமது சொந்த உயிர்த்தெழுதலாலும் நிரூபித்தார். (யோவான் 11:25-26, 41-45; 1கொரிந்தியர் 15:42-44, 53-54, 3-4; 2கொரிந்தியர் 5:1-4; வெளிப்படுத்தல் 1:18; மத்தேயு 12:40; லூக்கா 24:4-8; யோனா 1:17.)

இயேசு நம் பாவங்களுக்காக மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, மறுபடியும் உயிர்த்தெழுந்தார், நமக்காக தேவனின் சமுகத்தில் இருக்க பரலோகத்திற்கு ஏறினார். அவருடைய மீட்பின் செயல் பிதாவால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதற்கும், அவரை விசுவாசிப்பவர்கள் அவரில் முழுமையாக விடுதலை பெற்றுள்ளனர் என்பதற்கும் சான்றாக அவர் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். (1 கொரிந்தியர் 15:3-4; எபிரெயர் 9:24; எபேசியர் 1:19-20; ரோமர் 4:7-8; 8:31-34; 2 கொரிந்தியர் 5:19.)

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று. அந்த மனிதன் தன்னைத்தானே தேவனை விட்டுப்பிரிந்து நித்திய ஜீவனை இழந்துபோகிறான். (யோவான் 3:13-18, 36; 1:12; மாற்கு 15:16.)

இயேசுவின் உயிர்த்தெழுதல் வரவிருக்கும் உயிர்த்தெழுதலின் ஒரு முன்மாதிரியாகும். என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறதுபோல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார். அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான்; தேவனை விசுவாசியாதவனோ, தேவன் தம்முடைய குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சியை விசுவாசியாததினால், அவரைப் பொய்யராக்குகிறான். (யோவான் 5:24-29; 1 யோவான் 5:10-13.)

தேவனை விசுவாசித்து இயேசுவை தங்கள்

இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களின் உயிர்த்தெழுதல், அவருடைய வருகையில் அவருடையவர்கள் உள்ளே சேர்க்கப்படும்போது நிறைவேறும். இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். (1 கொரிந்தியர் 15: 51-57.)

ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். இந்த வார்த்தைகளே விசுவாசிகளுக்கு ஆறுதலும் தேறுதலுமாக இருக்கிறது. இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.. (1 தெசலோனிக்கேயர் 4:13-18; பிலிப்பியர் 3:20-21; 1 யோவான் 3:1-3.)

அவிசுவாசிகளின் உயிர்த்தெழுதல் ஆயிர வருட யுகத்தின் முடிவில் நிறைவேறும், அப்போது அவர்கள் பிசாசுடன் என்றென்றும் சபிக்கப்பட்ட அக்கினிக் கடலில் தள்ளப்படுவார்கள். (வெளிப்படுத்தல் 20:14-15; யோவான் 5:29; மாற்கு 16:15-16.)

அன்பானவர்களே, நீங்கள் கிறிஸ்துவுக்குள் இல்லையென்றால், தேவனோடு ஒப்புரவாகுங்கள் என்று

நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து உங்களைத் தண்டனைக்கு ஆளாக்காதீர்கள். இயேசுவை இப்போது ஏற்றுக்கொள்ளுங்கள், அவரால் மட்டுமே மனிதன் தேவனோடு ஒப்புரவாக முடியும். ஆகையால், இயேசு நம் பாவங்களுக்கு விலைக்கிரயம் செலுத்தினார் என்றும், அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்வதன் மூலம், இரட்சிப்புக்காக தேவனின் வல்லமை வெளிப்படுகிறது. இயேசுவை விசுவாசிக்கிறவன், தேவனின் ஆவியால் மறுபடியும் பிறந்து, கிறிஸ்துவில் ஒரு புதிய சிருஷ்டியாகவும், தேவனுடைய வீட்டின் குடிமகனாகவும், தேவனுடன் ஒரு சுதந்திரவாளியாகவும், இயேசுவுடன் உடன் பங்காளியாகவும் ஆக்கப்படுப்பட்டு நித்திய ஜீவனைப் பெறுகிறான். (யோவான் 3:3 8; (எபேசியர் 2.) ரோமர் 8:17.)

முதல் மனிதனாகிய ஆதாமில், பூமிக்குரியவரின் சாயலையும், பரலோகத்திலிருந்து வந்த ஆண்டவராகிய இரண்டாம் மனிதனாகிய கிறிஸ்துவில், பரலோகத்தின் சாயலையும் நாம் தரிப்போம். ஆகையால், ஆதாமின் பாவத்திற்கும் மரணத்திற்கும், கிறிஸ்துவின் நீதிக்கும் ஜீவனுக்கும் நேரடி தொடர்பு உள்ளது. மனிதனால் மரணம் வந்ததால், மனிதனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் வந்தது. ஆதாமில் அனைவரும் மரிப்பதைப் போலவே, கிறிஸ்துவுக்குள் அனைவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள், கிறிஸ்துவே முதற்பலனாக இருப்பார், பின்னர் கிறிஸ்துவின் வருகையில் அவருடையவர்கள் தங்கள் தங்கள் வரிசையின்படி உயிர்த்தெழுவார்கள். (1 கொரிந்தியர் 15:20-23, 47-49; ரோமர் 5:12-19.)

ஆதாமில் சுதந்தரிக்கப்பட்ட பாவமான சீர்கேட்டின் இயல்பைக் கொண்ட ஒரு இயற்கையான உடலில் நாம் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருப்பதால், விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் போன்ற சிலவற்றில் மாம்சத்தின் செயல்களை நாம் வெளிப்படுத்த வேண்டும். (கலாத்தியர் 5:19-21.)

இந்த மாம்சத்தின் கிரியைகள் நம் அனைவரையும் தேவனுக்கு முன்பாகக் குற்றவாளிகளாக்கி, இரட்சிக்கப்பட வேண்டியவர்களாக்குகின்றன. அனைவருக்கும் இரக்கம் காட்டும்படி, இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் வரும் அவருடைய நீதி விசுவாசிகளுக்குக் கொடுக்கப்படும்படி, அனைவரையும் பாவத்தின் கீழ் தேவன் அடைத்துள்ளார். நீதி ஒருவரை உயர்த்துகிறது, பாவம் எவருக்கும் ஒரு நிந்தையாக இருக்கிறது. நமது பாவம்தான் நம்மை தேவனின் அன்புக்கும், அவருடைய கிருபையின் நீதிக்கும், நம்முடைய பரிபூரண

இரட்சகராகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் அவருடைய கருணை மற்றும் இரக்கமுள்ள செயலுக்கும் உரியவர்களாக்குகிறது. அதாவது, கிறிஸ்துவின் மூலம் தேவன் இந்த உலகத்தைத் தமக்கு ஒப்புரவாக்கினார், நம்முடைய பாவங்களை நமக்குக் குறை கூறாமல், பாவம் அறியாத இயேசுவை நமக்காகப் பாவமாக்கினார்; நாம் அவரில் தேவனுடைய நீதியுள்ளவர்களாகும்படிக்கு. நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில், தம்முடைய நீதியினாலே நம்மை தேவனுக்கு ஒப்புரவாக்கவும், அவருடன் சரியான உறவிற்குள் கொண்டுவரவும் கிறிஸ்து நமக்காக மரித்தார். ஆனால் இது நடக்க, நாம் இயேசு கிறிஸ்துவை நம் இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும். (ரோமர் 3:19-24; 8:1-8, 32-39; 5:6-21; கலாத்தியர் 3:22; 2 கொரிந்தியர் 5:17-21; நீதிமொழிகள் 14:34; யாக்கோபு 2:13; தீத்து 3:3-7; எபேசியர் 2:4-9.)

இயேசு பரிசுத்த ஆவியால் மரியாளின் கர்ப்பத்தில் கருத்தரிக்கப்பட்டார், மேலும் அவரது அற்புத பாவமற்ற பிறப்பு, மரணத்தில் நமது பாவத்திற்கான விலைக்கிரயத்தைச் செலுத்தி, நமக்கு இரட்சிப்பைக் கிடைக்கச் செய்தபோது, மனிதகுலத்தின் ஒரே இரட்சகராக அவரை வெளிப்படுத்தியது. பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன் (மத்தேயு 1:20-21; லூக்கா 1:30-31; 2:10-11; ரோமர் 6:23.)

பூமிக்குரிய அல்லது இயற்கையான மனிதன் பாவத்தில் பிறந்து அக்கிரமத்தில் உருவமைக்கப்பட்டதால், அவன் தேவனின் பிரசன்னத்திற்கு ஏற்றவனுமல்ல, தகுதியானவனுமல்ல, எனவே தேவனின் ராஜ்யத்தை சுதந்தரிக்க முடியாது. இந்தக் காரணத்திற்காக, நமது செயல்கள், மத நடைமுறைகள், ஜெபங்கள் அல்லது பிற நல்ல நோக்கமுள்ள செயல்பாடுகள் போன்றவற்றால் அல்ல, தேவனின் ஆவியால் புதிய பிறப்பின் மூலம் வர வேண்டிய மாற்றம் தேவை. இந்த செயல்களால் மாம்சீகத்திலிருந்து ஆன்மீகத்திற்கு மாற முடியாது, ஏனென்றால் இயற்கையான மனிதன் ஆத்தும ரீதியாகவும், உடல் வாழ்க்கைக்கு ஏற்றவனாகவும் இருக்கிறான், அதே நேரத்தில் மறுபடியும் பிறந்த மனிதன் தேவனின் ஆவியால் கட்டுப்படுத்தப்பட்டு தேவனுடன் வாழ ஏற்றவனாக இருக்கிறான். தேவன் ஆவியாக இருக்கிறார், அவரைத் தொழுதுகொள்பவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும், ஏனென்றால் மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும்

தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். (யோவான் 4:24; 1 கொரிந்தியர் 2:11-16.)

அத்தி மரம் ஒலிவப் பழங்களைத் தருவதற்கு தன் இயல்பைத் தானே மாற்றிக்கொள்ள முடியாது, திராட்சைக் கொடி அத்திப்பழங்களைத் தருவதற்கு தன் இயல்பைத் தானே மாற்றிக்கொள்ள முடியாது, இயற்கை மனிதன் தன் சொந்த முயற்சியால் தேவனுக்கேற்ற நீதிமானாகி ஆவியின் கனியைத் தரும் தனது பாவ இயல்பை மாற்ற முடியாது. ஒரு விவசாயி விரும்பும் எந்தவொரு மாற்றமும், விதை மாற்றத்தின் மூலம் ஏற்பட வேண்டும், அது விவசாயியால் அவன் விரும்பும் பழ வகைக்கு ஏற்ப தீர்மானிக்கப்பட வேண்டும், அதேபோல், நாம் அனைவரும் தேவனின் படைப்பு என்பதால், தேவனுடன் பகைமை கொண்ட நமது இயற்கையான இருப்பிலிருந்து, தேவனைப் போல இருக்க ஆவிக்குரியவர்களாக மாறுவது, தேவனால் தீர்மானிக்கப்பட வேண்டும், மேலும் நம்மை பாவத்திலிருந்து இரட்சித்து, தம்மிடம் ஒப்புவிக்க அவர் இயேசுவை அனுப்பினார். ஆகையால், ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், அவன் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. கிறிஸ்துவில், மனிதன் பாவம் இல்லாமல் ஆரம்பத்தில் இருந்ததைப் போலவே தேவனுடன் தன் அசல் படைப்பு மற்றும் நோக்கத்திற்குத் திரும்புகிறான். (யாக்கோபு 3:11-12; மத்தேயு:21; 2கொரிந்தியர் 5:17; வெளிப்படுத்தல் 21:1-5; 22:1-6.)

நாம் சரீரமும் இரத்தமுமடையவர்களாக இருப்பதால், மரணத்தின் மூலம், மரணத்தின் மீது அதிகாரம் பெற்றவரை, அதாவது பிசாசை அழிக்கவும், மரண பயத்தால் வாழ்நாள் முழுவதும் அடிமைத்தனத்திற்கு உட்பட்டவர்களை விடுவிக்கவும் இயேசுவும் அதில் பங்கு கொண்டார். பாவம் இல்லாமல் கருத்தரிக்கப்பட்ட இயேசு, ஒரு மனிதனாக உருவெடுத்து, நம் பாவங்களைத் தம்மேல் ஏற்றுக்கொண்டு, சிலுவையில் மரித்து, அடக்கம் செய்யப்பட்டார், அதாவது, மரணத்தில் நடப்பட்டார், மேலும் புதிய படைப்பான மனிதனைத் தம்மில் கொண்டு வர மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார். மரித்து, அதன் உயிரையும் கனியையும் கொண்டு வர தரையில் விதைக்கப்பட்ட ஒரு விதையாக இது வேதத்தில் விளக்கப்பட்டுள்ளது. ஒரு கோதுமை மணி தரையில் விழுந்து மரிக்காவிட்டால் அது தனியாக இருக்கும், ஆனால் அது மரித்தால், அது அதன் வகையின்படி அதிக கனிகளைத் தருகிறது, இது அவரது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் மற்றும் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருத்தல் ஆகியவற்றைக் குறிக்கிறது, இது புதிய படைப்பின் தலை மனிதனாக தேவனின்

பிரசன்னத்திற்கும் ராஜ்யத்திற்கும் தகுதியானவராகவும், தேவனுடைய ஆவியால் தேவனுடன் புதிய மற்றும் நித்திய ஜீவனுக்கு மீண்டும் பிறந்தவராகவும் ஆக்கினது. (பிலிப்பியர் 2:8-11; எபிரேயர் 2:14-17; யோவான் 12:24; 1கொரிந்தியர் 15:50.)

மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், அதாவது, ஆதாமில் நமது முதல் பிறப்பு, தேவனிடமிருந்து பிரிக்கப்பட்ட பாவம் மற்றும் மரணத்தின் பிரமாணத்தின் கீழ் பிறந்த நம்மை பாவத்திற்குரிய மனிதர்களாக ஆக்கியது, மேலும் ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும், அதாவது, கிறிஸ்துவில் நமது இரண்டாவது பிறப்பு, தேவனுடைய ஆவியால் மறுபடியும் பிறந்து, கிறிஸ்து இயேசுவில் ஜீவ ஆவியின் பிரமாணத்தின் கீழ் நம்மைக் கொண்டு வந்து, தேவனுடன் ஒப்புரவாக்கி, பாவம் மற்றும் ஆவிக்குரிய மரணத்தின் பிரமாணத்திலிருந்து விடுவித்தது. நாம் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க அவரில் புதிய சிருஷ்டிப்பாக மாற தேவனுடைய ஆவியால் மறுபடியும் பிறக்க வேண்டும், அதுவே பிரவேசிப்பதற்கான ஒரே முன்நிபந்தனை என்று இயேசு நமக்கு கூறுவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. சரீர மரணம் என்பது உடலிலிருந்து பிரிவதாகும் ஆவிக்குரிய மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிவதாகும். (யோவான் 3:5-7; ரோமர் 8:1-3; 2கொரிந்தியர் 5:17.)

உலகில் இரண்டு வகையான மக்கள் மட்டுமே உள்ளனர் என்று இயேசு கூறுகிறார், ஆதாமில் உள்ள பழைய சிருஷ்டியான மனிதன் மற்றும் தம்மில் உள்ள புதிய சிருஷ்டியான மனிதன், அவர்கள் அவருடைய ஆவியால் மறுபடியும் பிறந்தவர்கள். நித்தியத்திற்கான இந்த வாழ்க்கைப் பயணத்தில் நாம் இரண்டு வழிகளில் மட்டுமே செல்கிறோம், மேலும் நித்தியத்தில் இரண்டு இலக்குகளில் ஒன்றில் நாம் முடிவடைவோம். அவரில் உள்ளவர்கள் ஜீவனுக்கும் நித்திய மகிமைக்கும் வழிவகுக்கும் குறுகிய பாதையில் இருக்கிறார்கள், அவரில் இல்லாதவர்கள் அக்கினிக்கடலில் அழிவுக்கு வழிவகுக்கும் விசாலமான பாதையில் இருக்கிறார்கள், மேலும் நாம் இந்தக் குழுக்களில் ஒன்றைச் சேர்ந்தவர்கள், நித்தியத்தில் இந்த இரண்டு இலக்குகளில் ஒன்றிற்குச் செல்கிறோம். இந்த நேரத்தில் நீங்கள் எந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள்? நீங்கள் எந்த வழியில் இருக்கிறீர்கள்? நித்தியத்தில் எந்த இலக்கை நோக்கிச் செல்கிறீர்கள்? மூன்றாவது என்று ஒரு குழு மக்கள் கிடையாது, இடையில் மூன்றாவது வழியும் இல்லை. பாவத்திலிருந்தும் நியாயத்தீர்ப்பிலிருந்தும் இரட்சிக்கப்பட்டு நித்திய மகிமைக்குச் செல்லும் வழியில் கிறிஸ்துவிற்குள் தேவனுக்கு முன்பாக நாம் குற்றமற்றவர்களாக நிற்கிறோம், அல்லது கிறிஸ்துவுக்கு வெளியே பழைய சிருஷ்டி மனிதனாக ஆதாமில்

நம்முடைய மீறுதல்களிலும் பாவங்களிலும் மரித்து, மரண தண்டனையின் கீழ், நித்திய ஆக்கினைக்குச் செல்லும் வழியில் தேவனுக்கு முன்பாகக் குற்றமுள்ளவர்களாக நிற்கிறோம். (மத்தேயு 7:13-14; ரோமர் 8:31-34.)

நம்முடைய உருவம் இன்னதென்று தேவன் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார். நாம் இந்த உலகத்திற்கு வந்திருப்பது நமது பாவ இயல்புடன்தான் என்பதை அவர் அறிவார், மேலும் நமது பாவ இயல்புக்கான பலனை நாம் சுமக்க வேண்டும். நமது தவறுகள், நமது பலங்கள், நமது பலவீனங்கள் மற்றும் குறைபாடுகளை அவர் அறிவார். நற்செயல்கள் நமக்கு இரட்சிப்பைப் பெற்றுத் தர முடியாது என்பதையும், நமது பாவச் செயல்கள் நம்மை இரட்சிப்புக்குத் தகுதியற்றவர்களாக மாற்ற முடியாது என்பதையும் அவர் அறிவார். ஏனெனில், நமது பாவ இயல்பு அதன் தீய செயல்களால் இயேசுவில் இரட்சிப்புக்கு நம்மைத் தகுதிப்படுத்துகிறது. (சங்கீதம் 103:13-17.)

பிரியமானவர்களே, தேவன் நம் பாவங்களுக்காக நம்மைத் தண்டிக்கக் காத்திருக்கவில்லை, மாறாக பாவிகளை இரட்சிக்க உலகிற்கு வந்த கிறிஸ்துவினால் நம்மை இரட்சிக்க திட்டமிடுகிறார். எனவே, நம்மை நரகத்திற்கும் அக்கினிக் கடலுக்கும் அனுப்புவது நம் பாவம் மட்டுமேயாகும், தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிந்து வாழ, இயேசுவை நம் இரட்சகராக நிராகரிப்பது மட்டும் தான் காரணம், வேறு எதுவும் இல்லை. இந்த நிராகரிப்பு நம்மை தேவனிடமிருந்து பிரிந்து நம்மை பாவங்களில் மரிக்கச் செய்யும், மேலும் நாம் அவரிடமிருந்து நித்தியமாகப் பிரிந்து வாழ நம்மைத் தண்டிக்கச் செய்யும், அவருடைய கிருபையையும் இரக்கத்தையும் இயேசு கிறிஸ்துவினால் கிடைக்கப்பெற்ற நமது ஒரே இரட்சிப்பு வழியையும் நிராகரிக்கும்படி செய்யும். (1தீமோத்தேயு 1:15; யோவான் 8:24; மாற்கு 16:15-16.)

பாவம் மனிதனை தேவனிடமிருந்து பிரிக்கக் காரணமாக இருப்பதனால், ஆதாமின் சந்ததியினராகிய நாம், நமது பூமிக்குரிய சரீரங்களில், பிரிவினைக்கு காரணமான அதே பாவ சரீரத்துடன் தேவனோடு மீண்டும் இணைவது சாத்தியமற்றது என்ற முடிவு நியாயமானது. நம்மைப் படைத்த தேவன், ஆதாமில் மரபுவழியாகப் பெற்ற பாவ இயல்புடன் பிறந்தோம் என்பதையும், ஆப்பிள் விதைகள் ஆப்பிள்களைக் காய்க்க ஆப்பிள் மரங்களை உருவாக்க வேண்டும் என்பதையும் அறிந்திருக்கிறார். இந்தக் காரணத்திற்காக, தேவன் இயேசுவை நம் பாவத்திற்காக நம்மை தண்டிக்க அனுப்பவில்லை, மாறாக நம்மை இரட்சிப்பதற்காக அனுப்பினார், ஏனென்றால் நாம் ஏற்கனவே பாவத்தில் கண்டனம் செய்யப்பட்டுள்ளோம், தேவனுடைய மகிமையிலிருந்து விலகியிருக்கிறோம்,

மேலும், நாம் பாவம் செய்துள்ளோம், நம்மை நாமே இரட்சித்து கொள்ள முடியாது என்பதை ஒப்புக்கொள்வதும், இயேசுவை நம் இரட்சகராக ஏற்றுக்கொள்வதும் மட்டுமே தேவன் நம்மிடம் எதிர்ப்பார்க்கிறார், நாம் செய்ய வேண்டியது அவ்வளவுதான், அதற்கு மேல் எதுவும் இல்லை. இரட்சிப்பைப் பெற மனிதன் செய்யக்கூடிய ஒரே வேலை, தேவன் அனுப்பியவரை விசுவாசிப்பதும் ஏற்றுக்கொள்வதும் என்று இயேசு கூறினார். ஏனென்றால், உலகத்தை ஆக்கினைத்தீர்க்க தேவன் தம்முடைய குமாரனை உலகிற்கு அனுப்பவில்லை, ஆனால் அவர் மூலம் உலகம் இரட்சிக்கப்படும்படிக்கு அனுப்பினார். (ரோமர் 3:23-25; யோவான் 6:28-29; 3:16-18.)

ஏனென்றால், கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படுகிறோம்; இது நம்மால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; ஒரு ஈவு என்பது கொடுப்பவரின் செலவில் ஒருவருக்கு வழங்கப்படுவதாகும், அது சம்பாதிக்கப்படுதல்ல, அதேபோல், இரட்சிப்பும் சம்பாதிக்கப்படுவதல்ல, அது இயேசு கிறிஸ்துவால் அவரது சிலுவையின் இரத்தத்தின் மூலம் கொள்ளப்பட்ட தேவனின் ஈவு. (எபேசியர் 2:4-9; ரோமர் 5:15-21; 6:23; 1 கொரிந்தியர் 6:20; 7:23.)

எனவே, நம் செயல்கள் நல்லதாக இருந்தாலும் சரி, கெட்டதாக இருந்தாலும் சரி, அது நம்மை நியாயந்தீர்க்காது. இயேசு கிறிஸ்து நம் பாவங்களுக்காக விலைக்கிரயம் செலுத்தியதாக நாம் விசுவாசிப்பது நம்மை இரட்சிக்கும், மேலும் நமது அவிசுவாசமே நம்மைக் கண்டனம் செய்யும். நன்மைகளை செய்வதற்கு பரிசுகளைப் பெறுவது போல, நாம் இரட்சிப்பைப் பெற இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் இருந்தால், அவருடைய இரத்தத்தால் நீதிமான்களாக்கப்படுகிறோம், பாவத்திலிருந்தும் அதன் தண்டனையிலிருந்தும் இரட்சிக்கப்பட்டு நித்திய மகிமைக்குச் செல்கிறோம், அல்லது நாம் கிறிஸ்துவுக்குள் இல்லையென்றால், இரட்சிக்கப்படமாட்டோம், தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிந்து வாழும் மரண தண்டனையை எதிர்கொள்வோம். (ரோமர் 5:9-11.)

இதனுடன் ஒப்பிடுகையில் நோவா கர்த்தருடைய பார்வையில் கிருபையைப் பெற்றான், மேலும் அப்போதைய உலகத்தை மூழ்கடித்து தீமையிலிருந்து சுத்திகரிக்கப் போகும் வெள்ளத்திலிருந்து தனது வீட்டைக் காப்பாற்ற ஒரு பேழையை கட்டும்படிக்கு தேவனால் எச்சரிக்கப்பட்டான். நோவா தேவனுக்குக் கீழ்ப்படிந்து, பேழையைக் கட்டினான், பேழைக்குள் பிரவேசிப்பதன் மூலம் வெள்ளத்திலிருந்து இரட்சிப்பைப் பிரசங்கித்தான்,

நோவா தனது பிரசங்கத்தின் மூலம் மக்கள் பேழைக்குள் நுழைய வாய்ப்பளித்தான், ஆனால் நோவாவும் அவனது குடும்பத்தினரும் மட்டுமே விசுவாசித்தனர், பேழைக்குள் நுழைந்து நீரில் மூழ்குவதிலிருந்து காப்பாற்றப்பட்டனர், ஏனெனில் *வெள்ளம்* பூமியை மூழ்கடித்து, பேழையை அதன் மேல் உயரச் செய்தது, அதில் வசிப்பவர்கள் உள்ளே பாதுகாப்பாக இருந்தனர், மேலும் அவிசுவாசத்தில் வெளியே இருந்தவர்கள் மற்றும் பேழைக்குள் நுழையத் தவறியவர்கள் வெள்ள நீரின் கீழ் மூழ்கினர் (ஆதியாகமம் 6-7.)

அதேபோல், சோதோம் மற்றும் கொமோரா பட்டணங்களை கந்தகம் மற்றும் அக்கினியால் பாவத்திலிருந்து தேவன் அழித்து சுத்திகரிப்பதற்கு முன்பு, லோத்து கர்த்தருடைய பார்வையில் கிருபையைப் பெற்றான், மேலும் தேவன் என்ன செய்யப் போகிறார் என்பதைக் குறித்து முன்கூட்டியே அவனுக்கு அறிவிக்கப்பட்டது. பட்டணங்களில் வசிப்பவர்கள் அவைகளை விட்டு வெளியேறும்படி லோத்து பிரசங்கித்தான், ஆனால் கீழ்ப்படிந்து பட்டணங்களை விட்டு வெளியேறியவர்கள் மட்டுமே காப்பாற்றப்பட்டனர், மேலும் லோத்தின் செய்தியைக் கவனிக்கத் தவறியவர்கள், கந்தகமும் அக்கினியும் விழுந்தபோது அவிசுவாசத்தினால் அழிந்து போயினர். (ஆதியாகமம் 19:1-25.)

நோவாவின் காலத்தில் வெள்ளத்திலும், லோத்தின் காலத்தில் கந்தகம் மற்றும் அக்கினியாலும் அழிந்த அனைத்து மக்களும், சிறிய மற்றும் பெரிய பாவிகள் இருந்ததைப் போல, பாவத்தில் சமமாக சீரழிந்திருக்கவில்லை, ஒவ்வொரு மனிதனும் குற்றவாளி, கொலைகாரன் அல்லது திருடன் அல்ல. மத வழிபாடுகளிலும் பிரார்த்தனைகளிலும் கலந்து கொண்ட அறிவாளிகள், பணக்காரர்கள், ஏழைகள், மத மற்றும் தெய்வ பயமுள்ள மக்கள், தங்கள் கடவுள்களை பல்வேறு வழிகளிலும் மதங்களிலும் சேவித்து, நல்ல வாழ்க்கையை வாழ்ந்து, தங்கள் பார்வையில் பல நல்ல செயல்களைச் செய்து கொண்டிருந்தனர். சிலர் பிரபலமாக இருந்திருக்கலாம், பின்பற்றுவதற்கு முன்மாதிரிகளாகக் கூட பார்க்கப்பட்டிருக்கலாம், ஆனால், அவர்கள் அனைவரும் ஏன் அழிந்தார்கள்? என்று கேள்வி கேட்கப்பட வேண்டும். இதற்கான எளிய பதில் நல்லவர்களா அல்லது கெட்டவர்களா அல்லது மேற்கூறியவைகள் அனைத்தும் எவர் காப்பாற்றப்பட வேண்டும், யார் அழிய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் காரணியாக இருக்கவில்லை. வெள்ளம் வருவதற்கு முன்பு பேழையில் ஏறுவதற்கும், நகரங்களில் கந்தகம் பெய்யும் முன் சோதோம் மற்றும் கொமோராவை விட்டு வெளியேறுவதற்கும் கீழ்ப்படிதல் மட்டுமே தீர்மானிக்கும் காரணியாக இருந்தது, அவர்களை

அழிவிலிருந்து காப்பாற்ற அது மட்டுமே தேவைப்பட்டது, அதற்கு மேல் எதுவும் தேவைப்படவில்லை, நோவா மற்றும் லோத்தின் செய்தியின் மூலம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டவர்கள், கீழ்ப்படியாமல் அழிந்து போனவர்கள் என இரண்டு கூட்டத்தினர் மட்டுமே இருந்தனர்.

தேவனுடைய வார்த்தைக்கு எதிராகச் செல்ல ஆதாம் தேர்ந்தெடுத்தபோது, மரண தண்டனையின் கீழ் பாவ இயல்புடன் உலகிற்கு வந்து, தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிந்து வாழும் வழியில், மனிதகுலம் முழுவதும் வருவதற்கு அவன் தீமையைத் தேர்ந்தெடுத்தான். ஆனால் இயேசு கிறிஸ்துவை நம் இரட்சகராக ஏற்று, அவருடன் ஒப்புரவாகி, நித்திய மகிமைக்குச் செல்லும் பாதையில் செல்ல, நம்முடைய சொந்தத் தேர்வைச் செய்யும் உரிமையை இப்போது தேவன் நமக்குக் கொடுக்கிறார். எந்த சாக்குப்போக்கும் இருக்காது. ஆதாமையோ அல்லது வேறு யாரையோ நாம் பழி சுமத்த முடியாது. நமது நித்திய இலக்கைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை தேவன் நமக்குக் கொடுத்துள்ளார். நித்தியத்தில் நாம் எங்கு செல்கிறோம், யாருடன் இருக்கிறோம் என்பதை நமது தனிப்பட்ட முடிவுதான் தீர்மானிக்கும். பரலோகத்திலும் புதிய பூமியிலும் இயேசுவோடு, அல்லது நரகத்தில் மற்றும் அக்கினிக்கடலில் பிசாசுடன். இருக்க வேண்டும் (1 கொரிந்தியர் 15:22; யோவான் 1:12; மாற்கு 16:15-16; வெளிப்படுத்தல் 21:1-5; 20:14-15.)

பிரியமானவர்களே, நீங்கள் அவரிடமிருந்து நித்தியமாகப் பிரிந்து வாழ்வது தேவனின் சித்தமல்ல; மாறாக, நீங்கள் மனந்திரும்பி இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்வதுதான் அவருடைய சித்தம். தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் இரட்சிப்பைப் பெறுவதற்கென்று நியமித்தார்; இப்பொழுதே அநுக்கிரககாலம் (1தெசலோனிக்கேயர் 5:9-11; 2கொரிந்தியர் 6:2).

நோவா மற்றும் லோத்தின் காலத்தைப் போலவே, அழிந்தவர்களுக்கு தேவன் என்ன செய்யப் போகிறார் என்பது பற்றிய மேம்பட்ட அறிவு இருந்தது. அது அவர்களுக்குப் பேழைக்குள் நுழைந்து அல்லது சோதோம் மற்றும் கொமோராவை விட்டு வெளியேறுவதன் மூலம் இரட்சிக்கப்படுவதற்கான வாய்ப்பை வழங்கியது. வெள்ளம், கந்தகம் மற்றும் அக்கினியிலிருந்து காப்பாற்றப்பட அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் விசுவாசிப்பது மட்டும் தான், அதற்கு மேல் எதுவும் இல்லை, இன்று, பாவத்திலிருந்தும் தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிந்து வாழ்வதன் தண்டனையிலிருந்தும் காப்பாற்றப்பட

நீங்கள் செய்ய வேண்டியது, இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்று தேவனுடன் ஒப்புரவாகுவது மட்டும் தான், அதற்கு மேல் எதுவும் இல்லை. எனவே, ஒரு மனிதனை நரகத்திற்கும் அக்கினிக் கடலுக்கும் தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிந்து வாழத் தண்டிப்பதற்கும் பாவம் மட்டுமே காரணமாகிறது, அவர் இயேசு கிறிஸ்துவை நிராகரிப்பதுதான் நரகம் செல்வதற்கு காரணமாகிறது

இயேசு சிலுவையில் மரித்து, ஒப்புரவாக்கி நம்முடையத் தண்டனைக்கான விலைக்கிரயத்தைச் செலுத்தியப் பிறகும், பிசாசுடன் நரகத்திலும் அக்கினிக் கடலிலும் வாழ ஏன் தேர்வு செய்ய வேண்டும்? பாவத்தின் மூலம் ஆதாம் தேவனுடனான தனது இடத்தையும் நிலையையும் இழந்தான் என்பதை நினைவில் கொள்க., தேவனின் பிரசன்னத்திலிருந்து அவன் வெளியேற்றப்பட்டபோது, பெண்ணின் வித்து மூலம் மீட்பிற்கான வாக்குறுதி அவனுக்கு அளிக்கப்பட்டது. அப்போது கன்னியாக இருந்த மரியாளாகிய ஒரு பெண்ணால் உருவாக்கப்பட்ட இயேசு, நம்மை மீட்டு, அவரோடு சரியான உறவுக்குள் கொண்டுவருவதற்காக காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார். (ஆதியாகமம் 3:15, 24; கலாத்தியர் 4:4-5; ரோமர் 5:17-21.)

அப்போஸ்தலனாகிய பவுல், தன் காலத்து மக்கள் தேவனுக்காக வைராக்கியமாக இருந்தார்கள், ஆனால் சரியான அறிவின்படி அல்ல என்பதைக் கண்டதால், அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்று ஜெபித்தார். அவர்கள் தேவன் எதிர்பார்க்கும் நீதியை அறியாதவர்களாக இருந்தனர், மேலும் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து தேவனுடைய நீதியின் வழிக்குக் கீழ்ப்படியாமல், தங்கள் சொந்த நீதியின் வழியை நிலைநாட்டத் தொடங்கினர், அவர் விசுவாசிக்கிற அனைவருக்கும் நீதிக்கான பிரமாணத்தை நிறவேற்றினார். (ரோமர் 10:1-4.)

நோவா மற்றும் லோத்தின் காலத்திற்கு ஒத்த ஒரு காலத்தில் இயேசு தமது வருகையைப் பற்றி குறிப்பிட்டார். அவர்கள் வாழ்ந்த காலங்களைப் புரிந்துகொள்வதன் நன்மை நமக்கு உண்டு, கீழ்ப்படிந்தவர்கள் மற்றும் கீழ்ப்படியாதவர்களின் விளைவைக் கண்டோம். என் நண்பரே, நீங்கள் எந்த நிலையில் இருக்கிறீர்கள்? தேவன் நம் இரட்சிப்பைப் பற்றிய அறிவையும் நமக்குக் கொடுத்துள்ளார், மேலும் நித்தியத்தில் நாம் எங்கு வாழ்வோம் என்பதை நமது தனிப்பட்ட முடிவு தீர்மானிக்கும். காலம் நிலையற்றது, நித்தியம் என்றென்றும் இருக்கும். நோவாவின் காலத்திலும், லோத்தின் காலத்திலும், அல்லது

பெரும்பான்மையானவர்கள் மதம் மற்றும் சுயநீதியின் விசாலமான பாதையில் நடப்பது போல, தயவுசெய்து பெரும்பான்மையினரின் தவறைச் செய்யாதீர்கள், அது அவர்களுக்குச் சரி என்று தோன்றுகிறது, ஆனால் அழிவுக்கு வழிவகுக்கிறது. (லூக்கா 7:26-30; மத்தேயு 7:13b; நீதிமொழிகள் 14:12; 16:2,25.)

வேதவசனங்களின் பலன் நமக்கு உண்டு, நாம் தேவனின் நீதியின் வழியை அறியாதவர்கள் அல்ல. நீங்கள் இந்த நேரத்தில் கிறிஸ்துவில் இல்லை என்றால், தவறான வழியில் செல்கிறீர்கள், இயேசு கிறிஸ்துவின் பாதுகாப்பிற்கு வெளியே தவறான மக்கள் குழுவுடன், நரகத்திற்கும் அக்கினிக் கடலுக்கும் செல்லும் வழியில் இருக்கிறீர்கள். ஒவ்வொரு சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி கட்டளையிட்டவர் இயேசுவே, அவருக்கு செவிக்கொடுத்து விசுவாசிக்கிறவன் இரட்சிக்கப்படுவான், ஆனால் அவரை விசுவாசியாதவன் தன் சொந்த ஆத்துமாவைச் சபிக்கிறான். (ரோமர் 10:13-15; மாற்கு 16:15-16.)

பிரியமானவர்களே, நீங்கள் கிறிஸ்துவில் இல்லை என்றால், பாவி என்ற பெயரை எடுத்துக்கொண்டு, மனந்திரும்பி, பெரும்பான்மையினரைப் பின்பற்றி, உங்கள் மத நடைமுறைகளாலும், பிற நல்லெண்ணச் செயல்களாலும் உங்களை இரட்சித்து கொள்ள முயற்சிப்பதன் மூலம் நித்திய அழிவுக்குச் செல்லும் தவறான பாதையில் இருக்கிறீர்கள் என்பதை ஒப்புக் கொள்ளுங்கள். நாம் செய்த நீதியின் செயல்களால் அல்ல, மாறாக தேவனுடைய இரக்கத்தின்படி அவர் கிறிஸ்துவில் நம்மை இரட்சித்தார். நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன், பாவத்தை அறிக்கையிட்டு, சுயநீதியிலிருந்து விலகி, இயேசு கிறிஸ்துவில் நமக்கு அளிக்கப்பட்ட தேவனின் மன்னிப்பையும் நீதியையும் பெறுங்கள். (மத்தேயு 7:13-14; தீத்து 3:4-7.)

இயேசு தம்முடைய ஜீவனைக் கொடுத்து இரட்சிப்பை நமக்கு இலவசமாக்கினார், ஆனால் அதை நடைமுறைப்படுத்த நாம் அவரை நம் இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும். இயேசு தம்மிடம் வருபவர்களை ஒருபோதும் புறந்தள்ளமாட்டேன் என்று கூறுகிறார். இந்த ஈவு இந்த நேரத்தில் உங்களுக்கு வழங்கப்படுகிறது, காலம் செல்வதற்கு முன் அதை ஏற்றுக்கொள்ளுமாறு நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன், இனி அதைத் தள்ளிப் போடாதீர்கள், நாளை யாருக்கும் சொந்தமானதல்ல, நாம் அனைவரும் தேவனின் படைப்புகளாக இருந்தாலும், நாம் அனைவரும் அவருடைய பிள்ளைகளல்ல. இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் நாம் அவருடைய பிள்ளைகளாக மாற வேண்டும், இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் அனைவருக்கும், தேவன்

அவருடைய பிள்ளைகளாகும் உரிமையை வழங்குகிறார், மேலும் நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாகவும்; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாகவும் இருக்கிறோம். தேவன் அளிக்கும் உரிமையை, இயேசுவை ஏற்றுக்கொண்டு, உங்கள் பெயரை பரலோகத்தில் அவருடைய ஜீவப் புத்தகத்தில் தேவனின் பிள்ளையாகவும், அவருடைய வீட்டின் குடிமக்களாகவும் பதிவு செய்யுமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (2 பேதுரு 3:9; மத்தேயு 16:25; யோவான் 1:12-14; கலாத்தியர் 3:26-29; ரோமர் 8:17; லூக்கா 10:20; எபேசியர் 2:19.)

இயேசு தம்முடைய வருகைக்கு ஆயத்தமாக இருக்கச் சொன்னார். நீங்கள் அவரை ஆகாயத்தில் சந்தித்து, அவர் வரும்போது அவரோடு என்றென்றும் இருக்க அவருடன் செல்ல ஆயத்தமா? அவர் வருவதற்கு முன்பு இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல் நீங்கள் மரிக்க நேர்ந்தால் என்ன நடக்கும்? நீங்கள் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு உங்கள் பாவங்களில் மரித்துவிடுவீர்கள், மேலும் ஆயிர வருட யுகத்தின் முடிவில் அவிசுவாசிகள் உயிர்த்தெழுந்து அக்கினிக் கடலில் தள்ளப்படுவதற்காக காத்திருக்கும் நரகத்தில் இருப்பீர்கள். நீங்கள் அங்கு செல்ல விரும்ப மாட்டீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அக்கினிக்கடல் என்பது நித்திய வேதனைக்குரிய இடம், அங்குள்ளவர்களின் நினைவும் மனசாட்சியும் அவர்களை வேதனைப்படுத்தும், இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள தேவன் அவர்களுக்குக் கொடுத்த அனைத்து வாய்ப்புகளையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளாததை நினைவுக் கூருவார்கள். இயேசுவின் பாவநிவாரண இரத்தத்தில் விசுவாசம் வைக்காமல், இரட்சிப்பின் ஒரே வழியை மதிக்காமல், அவருடைய உடன்படிக்கை இரத்தத்தை நிராகரித்து, அவர்கள் கிருபையின் ஆவியை வெறுத்தனர். (1 தெசலோனிக்கேயர் 4:16-18; மத்தேயு 11:28-29; லூக்கா 16:19-31; எபிரெயர் 10:26-31.)

மறுபுறம், உபத்திரவ காலத்திற்கு முன்பு இயேசு தம்முடையவர்களைக் கூட்டிச் சேர்க்க வரும்போது நீங்கள் அவரை ஏற்றுக்கொள்ளாமல் உயிருடன் இருந்தால், இதற்கு முன்பு அனுபவித்திராத மிகப்பெரிய உபத்திரவத்தையும், தன்னுடைய பொருளாதார முறையைப் பயன்படுத்தி விசுவாசத்தை சோதிக்கும் அந்தி-கிறிஸ்துவின் ஆட்சியையும் எதிர்கொள்ள நீங்கள் பூமியில் கைவிடப்படுவீர்கள். இயேசுவிடம் தங்கள் விசுவாசத்தை நிரூபிக்கவும், அவரை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும், கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட்சிக்காகக் காத்திருக்கும் பரிசுத்தவான்களுடன் சேரவும்

உயிருடன் இருப்பவர்களுக்கான ஒரு இறுதி வாய்ப்பாக இது இருக்கும், ஆனால் உபத்திரவத்தின் போது இயேசுவை ஏற்றுக்கொண்டு அந்தி-கிறிஸ்துவின் அடையாளத்தைத் தரித்து உங்கள் இறுதி வாய்ப்பை நீங்கள் நிராகரித்தால், அந்தி-கிறிஸ்து, பிசாசு, கள்ளத் தீர்க்கதரிசி மற்றும் ஜீவப் புத்தகத்தில் பெயர்கள் எழுதப்படாத அனைவருடனும் நீங்கள் நித்தியமாக அக்கினிக் கடலில் அழிவீர்கள். (வெளிப்படுத்தல் 13:11-18; 14:9-11; 19:20; 20:4, 10, 15.)

நான் உங்களைக் கெஞ்சுகிறேன், நேரம் நெருங்கிவிட்டது. இயேசுவை இப்போதே ஏற்றுக்கொண்டு அவருடன் புறப்பட அவருடன் ஆயத்தமாக இருங்கள். உபத்திரவத்தை எதிர்கொள்ள பின்தங்காதீர்கள். நாம் அவரோடு இருப்பதற்காகவும், நரகத்திலும் அக்கினிக் கடலிலும் நம்முடைய வாழ்க்கை முடிவடையாமல் இருப்பதற்காகவும் இயேசு அனுபவித்தப் பாடுகளைக் கவனியுங்கள். அவரைப் பற்றி எழுதப்பட்டபடி, அவர் ஜீவ அப்பமாகப் பிறக்க அப்பத்தின் வீடான பெத்லகேமில் ஒரு முன்னணையில் வைக்கப்பட்டார். (மீகா 5:2; யோவான் 6:31-58.)

இயேசு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டார், கேலி செய்யப்பட்டார், விமர்சிக்கப்பட்டார், காட்டிக் கொடுக்கப்பட்டார், மறுதலிக்கப்பட்டார், துப்பப்பட்டார், தமது சொந்த சிலுவையைச் சுமக்க வைக்கப்பட்டார், முள் கிரீடம் சூட்டப்பட்டார், பல இழிவான பெயர்களால் அழைக்கப்பட்டார், நிராகரிக்கப்பட்டார், பின்னர் ஒரு மோசமான குற்றவாளியாக சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டார், இயேசு குற்றமற்றவராகக் காணப்பட்டாலும், நமக்காகத் தம் உயிரைக் கொடுத்ததை விட பெரிய அன்பு வேறு எதுவும் கிடையாது. இவை அனைத்தும் தேவனின் கட்டளைப்படி நடந்தவையாகும். இயேசுவின் ஜீவனை யாரும் அவரிடமிருந்து பறிக்கவில்லை, ஆனால் நாம் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டு, அவரோடு வாழ்வதற்கும், படைப்பின் ஆரம்ப நோக்கத்திற்கு நம்மை மீண்டும் கொண்டு வருவதற்காகவும், இயேசு சிலுவையைச் சுமந்து, அவமானத்தைச் சகித்து, தேவனின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார், மனிதனாக பிறந்து ஆதாமுக்குக் கொடுத்த வாக்குறுதியை தேவன் நிறைவேற்றினார், (மத்தேயு 24:44; (மத்தேயு 26-27.) (மாற்கு 15.) (லூக்கா 22:63-23:56.) யோவான் 15:13; (யோவான் 18:24- 19:42.) எபிரெயர் 12:2; பிலிப்பியர் 3:5-11.)

கடைசியாக, என் நண்பர்களே, பூமியில் வரவிருக்கும் பெரிய உபத்திரவங்களை நீங்கள் அனுபவிக்க வேண்டியதில்லை, நீங்கள் விசுவாசித்தால் உங்கள் சரீரம் கர்த்தராகிய இயேசுவை வானத்தில் சந்திக்க எடுத்து கொள்ளப்படும், நீங்கள் அக்கினிக்கடலில்

நித்திய வேதனைகளை அனுபவிக்க வேண்டியதில்லை.

உங்கள் கடந்த காலம் தேவனுக்கு முக்கியமல்ல, நேற்று கடந்து போய்விட்டது, அது ஒருபோதும் மீண்டும் வராது, அதே நேரத்தில் நாளை யாருக்கும் வாக்குறுதி அளிக்கப்படவில்லை, இன்று, இப்போது மட்டுமே உண்மையானது. நீங்கள் கிறிஸ்துவில் இருக்கிறீர்களா இல்லையா என்பதுதான் முக்கியமானது, உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள், நித்தியத்தில் எங்கு வாழ்வீர்கள் என்பதை அது தீர்மானிக்கும். நீங்கள், நோவா மற்றும் லோத்தின் காலத்தில் அழிந்தவர்களைப் போல உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதீர்கள். நம்முடைய துன்பங்கள் வெளிப்புறமானவை அல்ல என்பதை தேவன் அறிவார், ஆனால் அவை ஆதாமில் இருந்து பெறப்பட்ட நமது பாவ இயல்பு காரணமாக இருதயத்தின் உள்ளார்ந்த பிரச்சினைகளாக இருக்கிறது. தேவன் நம்மை அறியாமையில் விட்டுவிடவில்லை, இயேசு கிறிஸ்துவே வழியும், சத்தியமும் மற்றும் ஜீவனுமாக இருக்கிறார், அவர் மூலமாக மட்டுமே பிதாவை அடைய முடியும். நாம் இரட்சிக்கப்படுவதற்கான பல வழிகளில் இயேசுவும் ஒரு வழியல்ல, அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. இரட்சிப்புக்காகக் கிடைக்கக்கூடிய பல நாமங்களில் இயேசுவின் நாமமும் ஒன்றல்ல. அவருடைய நாமம் மற்ற எல்லா நாமங்களுக்கும் மேலானது, அவர் மக்களை அவர்களின் பாவங்களிலிருந்து இரட்சிப்பார் என்பதற்காக தேவதூதன் அவருக்கு இயேசு என்று பெயரிட்ட சொன்னான், மேலும் அவர் உலகத்தின் பாவத்தை நீக்க வந்த தேவ ஆட்டுக்குட்டி என்று சுட்டிக்காட்டப்பட்டார். (யோவான் 14:6; 1:29; அப்போஸ்தலர் 4:12; மத்தேயு 1:21.)

இயேசு பாவமில்லாமல் பிறந்து, நாம் அவரில் தேவனுடைய நீதியாகும்படிக்கு, நமக்காகப் பாவமானார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே, பாவிகளை இரட்சிக்க இயேசு ஒருவரே தகுதியானவர். (பிலிப்பியர் 3:10; 2கொரிந்தியர் 5:21.)

சிலுவையில் இயேசுவின் மரணம் நமது பரிசுத்த தேவனுக்கும் பாவமுள்ள மனிதனுக்கும் இடையிலான இடைவெளியைப் பாலமாக்கியது. மனிதனை தேவனிடமிருந்து பிரித்திருந்த மாம்சத்தின் திரை இயேசுவின் மரணத்தால் கலைக்கப்பட்டது, மேலும் அவர் உயிர்த்தெழுந்து பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திற்கு ஏறிச் சென்றதன் மூலம், அவருடைய இரத்தத்தால் தேவனின் பிரசன்னத்திற்குள் ஒரு புதிய மற்றும் ஜீவனுள்ள வழி திறக்கப்பட்டது, இதனால் மனிதன்

அவருடைய பிள்ளைகளாக பிரவேசிப்பதற்கான அணுகலையும் தைரியத்தையும் பெறுகிறான். (1 தீமோத்தேயு 3:5; மத்தேயு 27:51-52; எபிரெயர் 10:19-20; எபேசியர் 2:15-19; 2 கொரிந்தியர் 5:1-4.)

இயேசு குறிப்பிட்டபடி, நோவா மற்றும் லோத்தின் காலங்கள் நடந்தவைகள் அவருடைய வருகைக்கு முன்பானவைகளாகும். நோவாவின் காலத்தில், ஜலப்பிரளயத்தில் இருந்து மீண்டு நீரில் மூழ்காமல் இருக்க மக்கள் பேழைக்குள் பிரவேசிக்க வேண்டியதாக இருந்தது. லோத்தின் காலத்தில், கந்தகம் மற்றும் அக்கனியிலிருந்து காப்பாற்றப்பட மக்கள் சோதோம் மற்றும் கொமோரா நகரங்களை காலி செய்ய வேண்டியதாக இருந்தது. இன்று நாம் செய்ய வேண்டியதெல்லாம், தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, நரகத்திலும், அக்கினிக் கடலிலும் நித்தியமாக வாழ்வதிலிருந்து காப்பாற்றப்படுவதற்கு, இயேசுவை நம் இரட்சகராக ஏற்றுக்கொள்வது மட்டுமேயாகும். இயேசுவின் வருகைக்காகக் காத்திருந்து, மகிமையான சரீரங்களில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கும், பின்னர் உபத்திரவக் காலத்தின் சுத்திகரிப்பு செயல்முறை முடிந்ததும், பாவமற்ற ஆயிரமாண்டு யுகத்தில் வாழ்வதற்கும், ஒரு புதிய பூமியிலும், புதிய வானத்தின் கீழும் நித்திய மகிமையைப் பெறுவதற்கும் பரலோகத்தில் நம் பெயர் எழுதப்பட்டு நாம் தேவனின் பிள்ளைகளாக மாற வேண்டும். (லூக்கா 17:26-37; (வெளிப்படுத்தல் 20:4-21:27.)

கர்த்தராகிய இயேசு உங்கள் பாவங்களுக்காக மரித்தார் என்று உங்கள் வாயினால் அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உங்கள் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவீர்கள் என்பது உங்களுக்கு அறிவிக்கப்படும் விசுவாச வார்த்தையாக இருக்கிறது. நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். (ரோமர் 10:8-18.)

இப்போதே அதைச் செய்யுங்கள். உங்கள் ஆத்துமாவுடன் விளையாடாதீர்கள். உங்களை ஏமாற்றிக்கொள்ளாதீர்கள், நீங்கள் மரித்த பிறகு உங்கள் இலக்கை மாற்றிக்கொள்ள வாய்ப்பு இல்லை. எவ்வளவு காலம் சத்தியத்திலிருந்து நீங்கள் விலகியிருப்பீர்கள்? நீங்கள் அறியவில்லை என்று கூறு முடியாது, இயேசுவே வழி, சத்தியம் மற்றும் ஜீவன் என்று உங்களுக்குச் சொல்லப்பட்டுள்ளது. அவர் நித்திய மகிமையில் பிதாவுக்கும் புதிய பூமிக்கும் வழியாக இருக்கிறார். பிசாசு ஏமாற்றுபவன், பொய்களின் பிதா, நரகத்திற்கும் அக்கினிக்கடலுக்கும் செல்லும் வழியாக இருக்கிறான்.

நீங்கள் இயேசுவை உங்கள் இரட்சகராக இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிடுவதற்கான மிக முக்கியமான முடிவை எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது, புதிய பூமியில் உங்கள் நித்திய இலக்கை இரட்சகரும், நம் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையான பிரசன்னத்தில் ஒரே ஒருமுறை அமைத்து கொள்ளுங்கள். (எபிரெயர் 9:27-28; எண்ணாகமம் 14:11; லூக்கா 16:19-31; யோவான் 14:6; வெளிப்படுத்தல் 21:1-5; 20:10.)

குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன். உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகள் எழுதியிருக்கிறது, உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்றும், இந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்றும் நீங்கள் அறியும்படிக்கு. இயேசுவை உங்கள் இரட்சகராக நீங்கள் இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், இப்போதே அதைச் செய்யுங்கள். (1 யோவான் 5: 9-13; யோவான் 3:16; 10:27-29.)

அன்புள்ள தேவனே, உம்மோடு ஒப்புரவாவதற்கு என் பாவத்திற்கான விலைக்கிரயத்தைச் செலுத்த இயேசுவை அனுப்பியதன் மூலம் நீர் என்மேல் வைத்த அன்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். மதச் செயல்பாடுகள் மற்றும் நீதியைப் பெறுவதற்கான சுய முயற்சியின் விசாலமான வழியில் பெரும்பான்மையினரைப் பின்பற்றி நான் இரட்சிப்பைத் தேடிக்கொண்டிருந்தேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். பாவம் அறியாத இயேசு, நான் நீதிமான் ஆக்கப்படுவதற்காக எனக்காகப் பாவமானார் என்பதை இப்போது நான் அறிவேன். கர்த்தராகிய இயேசுவே, நீர் என் பாவங்களுக்காக மரித்தீர் என்றும், மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தீர் என்றும் என் இருதயத்தில் விசுவாசிக்கிறேன், இப்போது உம்மை என் இரட்சகராகவும், என் வாழ்க்கையின் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்கிறேன். என்னை இரட்சித்து, புதிய மனிதனாக்கியதற்கு நன்றி, நான் என்றென்றும் உம்மோடு இருக்க உம் வருகைக்காகக் காத்திருக்கிறேன். ஆமென்.

அன்பானவர்களே, நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டால், உங்களுக்கு இரட்சிப்பு உறுதி, நீங்கள் தேவனின் பிள்ளை, அவருடைய வீட்டின் சக குடிமகன், இயேசு கிறிஸ்துவில் அவரது வருகைக்கும் தேவனின் பிரசன்னத்திற்கும்

ஆயத்தமாக இருக்கும் ஒரு புதிய சிருஷ்டியான மனிதன். (கலாத்தியர் 3:26; எபேசியர் 2:19; ரோமர் 8:17; 1 யோவான் 3:1-2.)

உங்கள் பெயர் பரலோகத்திலுள்ள ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதால் மகிழ்ச்சி அடையுங்கள். (லூக்கா 10:20; வெளிப்படுத்தல் 20:15; 21:27.)

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக;
அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். (1 பேதுரு 1:3-5.)

# அதிகாரம் 10

# காலத்தின் அடையாளங்களையும் நோக்கத்தையும் புரிந்துகொள்ளுதல்

மிகப்பெரிய பேரழிவு வரப்போகிறது –
தப்பித்துகொள்வதற்கு ஆயத்தமாக இருங்கள்.

இன்று நாம் வாழும் உலகில், சில நிகழ்வுகள் வேதனையையும், கவலையையும் ஏற்படுத்துகின்றன. அவற்றை சரிசெய்வதற்கான மனிதனின் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைகின்றன. நாம் என்ன செய்வது என்று கேட்கும் இடத்திற்கு வந்துவிட்டோம். இவற்றிலிருந்து தப்பித்துகொள்ள ஒரு வழி இருக்கிறதா? ஏதேனும் தீர்வுகள், ஏதேனும் பதில்கள் உள்ளதா? நாம் நம் கைகளை உயர்த்தி சரணடைய வேண்டுமா?

தேவன் நம்மை நாமே பாதுகாத்து கொள்ளவும், அவரிடமிருந்து விலகி இருக்கவும் விட்டுவிடவில்லை. மக்கள் அறிவின்மையால் அழிவதால் அவர் நமக்குத் தம்முடைய வார்த்தையை விட்டுச் சென்றார். நாம் எங்கிருந்து வந்தோம், நமக்கு என்ன நடந்தது, நாம் தற்போது எங்கே இருக்கிறோம், எதிர்காலத்தில் நாம் எங்கு செல்கிறோம், இந்த உலகம் எங்கு செல்கிறது என்பதை அறிய நமது கடந்த காலத்தைப் பற்றிய நுண்ணறிவை வழங்க வெளிப்படுத்தப்பட்ட உண்மை இல்லாத இடத்தில், மக்கள் ஆபத்தில் சிக்கி, புறக்கணிக்கப்படுகிறார்கள். எனவே, அழிவிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள, கடவுளைப் பற்றிய அறிவைப் பெறுவது நமக்கு மிகவும் அவசியம். ஆனால், அது அறியப்பட்டு செயல்படுத்தப்படாதபோது, நமது செயலற்ற தன்மையால் அழிவுகரமான விளைவுகளை

எதிர்கொள்ள வேண்டும். நாம் உதவியற்று, நம்பிக்கையற்றவர்களாக இருப்போம். (நீதிமொழிகள் 29:18; 19:2; ஓசியா 4:6.)

இந்தக் காரணத்திற்காக, இயேசு தம்முடைய வருகைக்கு அடையாங்களாகவும், தம்முடைய வருகைக்காக நம்மைத் ஆயத்தப்படுத்தவும் பூமியில் முதலில் வர வேண்டிய நிகழ்வுகள் மற்றும் நிலைமைகளின் கால அட்டவணையை வெளிப்படுத்தினார். அவற்றை அவர் படிப்படியாக தீவிரமாகும் துக்கங்களின் தொடக்கமாக விவரித்தார், பாவத்தால் வகைப்படுத்தப்படும் இந்த யுகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, ஒரு புதிய தொடக்கத்தை ஏற்படுத்துவதற்கான முகவர்களாக இவைகள் செயல்படுகின்றன. (மத்தேயு 24:8; மாற்கு 13:8.)

உலகத்தை பாவத்திலிருந்து சுத்திகரிக்கவும், தம்முடைய வருகையை நெருங்கி வருவதை நமக்கு உணர்த்தவும் இயேசு சொன்ன சில நிகழ்வுகள் மற்றும் நிலைமைகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. முதலாவது வஞ்சித்தல், ஏனெனில் சடங்காச்சார மதத்தில் பலர் தெய்வீக வடிவத்தைக் கொண்டிருப்பார்கள், இவர்கள் புனிதமாக இருப்பது போன்ற வெளிப்புற தோற்றங்களுடன் சடங்கு பழக்கவழக்கங்களை உடையவர்கள். இவர்கள் தங்கள் பாரம்பரியத்தைப் பற்றிக்கொள்ள தேவனின் வார்த்தையை ஒதுக்கி வைத்துவிட்டு, மனிதர்களின் கோட்பாடுகளைக் கற்பித்து, அதன் மூலம் தேவனின் வார்த்தையை பயனற்றதாக்குகிறார்கள் என்று இயேசு கூறினார். (மத்தேயு 24:3-4; 15:8-9; 23:28; 7:20-23; மாற்கு 7:6-9,13.)

யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள். ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைகள் பூமியில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி காலநிலை மாற்றத்தை உண்டாக்குகிற அண்டத்தின் சீர்குலைவாகும். இது நிலையற்ற தன்மையின் காலமாக இருக்கும், குழப்பமான அதிகாரங்களால் ஜாதிகள் குழப்பமான நிலையில் இருக்கும், பூமியில் வரவிருக்கும் காரியங்களைப் பார்த்து பயந்து அவற்றைத் தடுக்க இயலாமையால் மனித இருதயம் அவர்களை சோர்வடையச் செய்யும், பலருக்கு நம்பிக்கையின்மை தலைதூக்கத் தொடங்கும். (மத்தேயு 24.) மாற்கு 13:5-8,10; லூக்கா 21:8-11, 25-26; வெளிப்படுத்தல் 6:1-8.)

கடைசிக்காலத்தில், மனுஷர்கள் தற்பிரியராயும்,

பணப் பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தை உள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தம் இல்லாதவர்களாயும், சுபாவ அன்பு இல்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கம் இல்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை விட்டு நாம் விலகிச் செல்ல எச்சரிக்கப்படுகிறோம். (2 தீமோத்தேயு 3:1-5.)

இந்த நிகழ்வுகளையும் நிலைமைகளையும் இயேசு உபத்திரவங்களின் தொடக்கமாக விவரித்ததை நினைவில் கொள்ளுங்கள். துக்கம் என்பது எப்போதும் புதிய வாழ்க்கையை உருவாக்குவதற்கான தேவனுடைய வழியாகும், மேலும் பிரசவ வலி, குழந்தை பிறப்பின் போது ஏற்படும் வேதனை, கர்ப்பத்தின் இறுதி கட்டத்தில் சந்ததியைப் பெற வழிவகுக்கும் செயல்முறை ஆகியவற்றுடன் ஒப்பிடப்படுகிறது. பிரசவம் என்பது சந்ததிகளைப் பிறப்பதற்கு உதவுவதற்கும், ஒரு சூழலில் இருந்து பிறப்பித்து இன்னொரு சூழலை வழங்குவதற்கும், ஒரு இலக்கை நோக்கி எடுத்துச் செல்வதற்கும் எடுக்கப்படும் செயலாகும்.

மனிதன் தனக்கும் தேவனுக்கும் இடையே பிரிவை ஏற்படுத்திய பாவ நிலையில் விழுந்த பிறகு, ஆதாமுக்கும் ஏவாளுக்கும் மனிதகுலத்தை மீட்க ஒரு இரட்சகரை அனுப்பி, ஒரு பெண்ணின் வித்து மூலம் அவர்களைப் பிரிவிலிருந்து தம்மிடம் கொண்டு வருவதாக தேவன் வாக்குறுதி அளித்தார். வேதனையில் அவள் குழந்தைகளைப் பெற்றெடுப்பாள் என்றும், அவளுடைய ஆசை அவளுடைய கணவனைப் பற்றியிருக்கும் என்றும், அவன் அவளை ஆண்டுக்கொள்வான் என்றும் அவர் ஏவாளிடம் கூறினார். (ஆதியாகமம் 3:15-16, 23-24.) அவளுடைய வேதனையில் தேவனுக்குக் கீழ்ப்படியவும், அவளுடைய புருஷன் ஆதாமின் உதவி, பாதுகாப்பு மற்றும் தலைமைத்துவத்திற்காகவும் ஒரு வலுவான ஆசை வந்தது. தேவனையும் அவளுடைய கணவன் ஆதாமையும் சார்ந்து தன் செயல் காரணமாக, அதிக பிரசவ வேதனையின் மூலம் குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டியிருக்கும் என்பதை அறிந்த பின்னரே அந்த ஏக்கம் வந்தது.

ஆதாமுக்கு தேவன் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய காலம் நிறைவேறினபோது - அவனுடைய சந்ததிக்காக இரட்சகரை அனுப்புவதாக அவர் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற, அவர் தமது வார்த்தையின் மூலம் ஒரு பெண்ணால் உருவாக்கப்பட்ட தமது குமாரனை பெற்றெடுக்க அப்போது கன்னியாக இருந்த மரியாளிடம் ஒரு தேவத்தூதனை அனுப்பினார். தேவதூதன் மூலம் தேவன் தனக்குக் கொடுத்த வார்த்தையை மரியாள் விசுவாசித்தாள், பரிசுத்த ஆவியின் மூலம் இயேசுவைக் கருத்தரித்தாள், பிரசவ வேதனையில் மனிதகுலத்தின் இரட்சகராக அவரை உலகிற்குக் கொண்டு வந்தாள். (மத்தேயு 1:21; லூக்கா 1:31-35, 38; 2:10-11; கலாத்தியர் 4:4-5.)

இயேசுவால் பிரசவ வலிக்கு ஒப்பிடப்பட்ட நிகழ்வுகளும் நிலைமைகளும், உலகத்தை தீமையிலிருந்து சுத்திகரிப்பதற்கும், புதிய ஆயிரமாண்டு யுகத்தில் வரவிருக்கும் புதிய பூமிக்கும் இறுதிக் கட்டத்தில் நாம் இருக்கிறோம் என்பதை நமக்கு உணர்த்துவதற்கும் ஆகும். இந்த நிகழ்வுகளும் சூழ்நிலைகளும், எல்லா ஜாதிகளுக்கும் நற்செய்தியைப் பிரசங்கிப்பதன் மூலம், இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு தேவனின் பிள்ளைகளாக மாறியவர்களுடன் ஆயிரமாண்டு ஆட்சிக்கான வருகையை, அடையாளப்படுத்துவதால், தேவனின் ராஜ்யத்தில் பிள்ளைகள் பிறப்பதற்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. (யோவான் 1:12; கலாத்தியர் 3:26.)

பிரசவம் என்ற உருவகத்தின் மூலம், துக்கம் எவ்வாறு மகிழ்ச்சியாக மாற்றப்படுகிறது என்பதற்கு மனித வாழ்க்கையிலிருந்து இயேசு ஒரு ஒப்புமையைக் கொடுத்தார். பிரசவத்திற்கு வழிவகுக்கும் கர்ப்பத்தின் இறுதி கட்டத்தில் இருக்கும் ஒரு பெண்ணுக்கு, குழந்தையைப் பெற்றெடுக்கும் நேரம் வந்துவிட்டது, ஆனால் குழந்தை பிறந்தவுடன், வலி இனி இருக்காது, ஏனென்றால் ஒரு மனிதன் உலகில் மகிழ்ச்சியுடன் பிறக்கிறான். (யோவான் 16:20-21.)

குழந்தை பிறப்பு மற்றும் ஏவாளுக்கு வந்த துக்கம் அல்லது பிரசவ வலிக்கான காரணத்தை உருவகமாகப் பயன்படுத்தி ஒப்பிடுகையில், பூமியில் நடக்கும் தற்காலிக நிகழ்வுகளும் நிலைமைகளும், இயேசு கிறிஸ்துவில் இரட்சிப்புக்கான ஆழ்ந்த ஏக்கத்தையும், பாவமற்ற யுகத்தில் வாழ்வதற்கான தேவனின் ராஜ்யத்தில் பிறப்பையும், முன்பு நம்மில் இல்லாத ஒரு ஏக்கத்தையும் உருவாக்க பிரசவ வேதனைகளாகவும் செயல்படுகின்றன.

இரட்சிப்பு என்பது பாவத்திலிருந்தும் அதன்

விளைவுகளிலிருந்தும் காப்பாற்றப்பட்டு, தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிந்து வாழ்வதிலிருந்து விடுவிக்கப்பட்டு, வரவிருக்கும் பேரழிவுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டு ஒரு பாதுகாப்பான இடத்திற்கு செல்வதும், தீங்குகளிலிருந்து பாதுகாக்கப்படுவதுமாகும். மனிதனின் மிகப்பெரிய தேவை பொருள் சார்ந்த, கல்வி மற்றும் அறிவுசார் விஷயங்கள் அல்ல; மாறாக, தேவனைப் பற்றிய அறிவுக்கான அதிக தேவையிருக்கிறது. தேவனுடைய வார்த்தைகள் மாறாதவை, அவை காலங்கள் மற்றும் நிலைமைகளின் அறிகுறிகளையும் நோக்கத்தையும் வெளிப்படுத்துகின்றன, அவை இந்த யுகம் முடிவதற்குள் இயேசு கிறிஸ்து இரட்சிப்பையும் அவரில் நமது பாதுகாப்பான இடத்தையும் பெற நம்மைச் சுட்டிக்காட்டுகின்றன. (1 தெசலோனிக்கேயர் 5:1-11.)

முதல் ஆணும் பெண்ணுமான ஆதாமும் ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் பாவம் செய்தனர், இதனால் அவர்கள் ஏதேன் தோட்டத்திலிருந்தும் தேவனுடைய பிரசன்னத்திலிருந்தும் துரத்தப்பட்டபோது தேவனிடமிருந்து பிரிந்தனர். (ஆதியாகமம் 3:23-24.) மனிதகுல வரலாற்றில் இந்த கட்டத்தில், ஆதாமும் ஏவாளும் குழந்தை இல்லாதவர்களாக இருந்தனர், எனவே அவர்களின் சந்ததியினர் அனைவரும் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்ட பாவ இயல்புடனும், ஒப்புரவாக்கப்பட வேண்டிய அவசியத்துடனும் பிறக்கின்றனர். பாவம் பிரபஞ்சத்தில் சிதைவைக் கொண்டு வந்தது, மனிதகுலமும் உயிருள்ள மற்றும் உயிரற்ற படைப்புமாகிய இரண்டும், தேவனுடைய கட்டளையால் சீர்குலைந்துபோய், விரக்தி மற்றும் பயனற்ற தன்மைக்கு ஆளாகின்றன, பூமி சபிக்கப்பட்டது, மனிதகுலம், பூமி மற்றும் பிரபஞ்சம் அழுத்தத்தின் கீழ் பிரசவ வேதனையிலும், உபத்திரவத்திலும் உட்பட்டு, மாற்றத்திற்காக ஏங்கின, ஆனால் இந்த புலம்பல்கள் நம்பிக்கையின்மையின் வேதனைகளாக இல்லாமல், பிரசவ வலிகள் போன்றவையாக இருக்கிறது. அவை மனிதனை இயேசு கிறிஸ்துவிடம் புதியதும், நித்தியமுமான ஜீவன், ஆவிக்குரிய வாழ்க்கை, அவரது வருகைக்கான நம்பிக்கையுடன் எதிர்ப்பார்க்க வைக்கிறது. மேலும், பூமியில் உள்ளவற்றைப் பார்த்து பயந்து போகாமல், நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களையும் புதிய பூமியையும் தேடுவதற்கான அறிகுறிகளாகவும் இருக்கிறது. (ரோமர் 8:21-25; லூக்கா 21:26-28; 2 பேதுரு 3:13; வெளிப்படுத்தல் 21:1-5.)

நோவாவின் காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளயம்

மற்றும் லோத்தின் காலத்தில் சோதோம் கொமோராவின் மீது விழுந்த கந்தகம் அக்கினி போன்று, தம்முடைய வருகைக்கும் தேவனுடைய ராஜ்யத்திற்கும் முன்பு மீண்டும் அதிக தீவிரத்துடன் நடக்கும் என்று இயேசு கூறினார். (லூக்கா 17:26-30; (வெளிப்படுத்தல் 6-19.)

பூமியில் மனிதனின் அக்கிரமம் பெருகினதையும், பூமியானது பொல்லாப்பால் நிறைந்திருப்பதையும் தேவன் கண்டார், மேலும் பூமியிலிருந்து தீமையை அகற்ற மனிதனை அழிக்க முடிவு செய்தார். நோவாவும் லோத்தும் கர்த்தருடைய பார்வையில் கிருபையைப் பெற்றனர், மேலும் தேவன் என்ன செய்யப் போகிறார், வரவிருக்கும் பேரழிவுகளிலிருந்து தங்களையும் மற்றவர்களையும் காப்பாற்ற அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்களிடம் கூறினார். தேவன் நோவாவிடம் பேழையைக் கட்டச் சொன்னார், மேலும் அவனது வீட்டாரை காப்பாற்றவும், பூமியிலிருந்து தீமையை அகற்றி புதிதாகத் தொடங்க அவர் அனுப்பும் ஜலப்பிரளயத்திலிருந்து அவர்களை உயிருடன் வைத்திருக்கவும், ஆண், பெண் என ஒவ்வொரு உயிரினத்தையும் பேழைக்குள் கொண்டு வரவும் பேழையைப் பற்றிய குறிப்பிட்ட விவரங்களைக் கொடுத்தார். சோதோமும் கொமோராவும் கந்தகம் மற்றும் அக்கினியால் தீமையிலிருந்து சுத்தம் செய்யப்படும் என்றும், பட்டணங்களில் மழை பெய்யும் முன் அவர்கள் வெளியேற வேண்டும் என்றும் தேவன் லோத்திடம் கூறினார். உலகில் உள்ள வேறு எந்த விஷயத்தைப் பாக்கிலும் எதிர்காலத்தைப் பற்றி தேவன் கொடுத்த மேம்பட்ட அறிவை நோவாவும், லோத்தும் பொக்கிஷமாகக் கருதினர், மேலும் தேவன் சொன்னபடியே அவர்கள் செய்தார்கள். நோவா செயல்பட்டு, கர்த்தர் கட்டளையிட்ட அனைத்தையும் செய்தான், மேலும் தனது வீட்டாரையும் விசுவாசித்த மற்றவர்களையும் காப்பாற்ற பேழையை ஆயத்தம் செய்தான், லோத்து தனது குடும்பத்தினருடனும் தேவனது செய்திக்கு செவிசாய்த்த அனைவருடனும் வெளியேறினான். (எபிரெயர் 11:6-7; 2 பேதுரு 2:4-9.)

நோவாவின் பிரசங்கத்தின் மூலம் தேவன் மக்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்தார், அது ஜலப்பிரளயம் வருவதற்கு முன்பு பாதுகாப்பான இடமாக இருந்தது, ஆனால் நோவாவும் அவரது குடும்பத்தினரும் மட்டுமே உள்ளே சென்று தேவனால் அழிவிலிருந்து முத்திரையிடப்பட்டனர். வெள்ளம் வந்தபோது, பேழை தண்ணீரில் மிதந்தது, தேவனின் இரட்சிப்புக்கான வாய்ப்பை ஏளனம் செய்து நிராகரித்த அனைவரும், பேழை அதன் குடியிருப்பாளர்களுடன் பாதுகாப்பாக

மேலெழும்பக் காரணமான அதே வெள்ளத்தில் அழிந்தனர், அதேபோல் லோத்தும். தனது குடும்பத்துடன் சோதோம் மற்றும் கொமோராவிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்ட நாளில், தேவனின் இரட்சிப்புக்கான வாய்ப்பை ஏளனம் செய்து நிராகரித்தவர்களுடன் சேர்ந்து நகரங்களும் அழிக்கப்பட்டன. (ஆதியாகமம் 7:1-16; 19:16,24.)

இவைகளை ஒப்பிட்டுப்பார்க்கையில், வரப்போகும் துயரங்களின் தொடக்கமாக விவரிக்கப்படும் வேதனையான நிகழ்வுகள், மனிதனை இரட்சிப்புக்காக கிறிஸ்துவிடம் அழைத்துச் செல்லவும், பாவம், பிசாசு மற்றும் அனைத்து தீமைகளிலிருந்தும் உலகத்தை சுத்திகரித்து வரவிருக்கும் பேரழிவுகளிலிருந்து தப்பிக்கவும், பாவமற்ற யுகம் கிறிஸ்துவில் புதிய மனிதனைக் கொண்டுவரவும் வழிவகுக்க வேண்டும், அங்கு நீதி ஆட்சி செய்யும். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் புது சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின (2 கொரிந்தியர் 5:17-21).

அன்பானவர்களே, உபத்திரவ காலத்திற்கு முன்பு நீங்கள் இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், உபத்திரவ நிகழ்வுகளையும் அந்தி கிறிஸ்துவின் ஆட்சியையும் எதிர்கொள்ள நீங்கள் பூமியில் இருப்பீர்கள். அந்தி கிறிஸ்து தன்னை தேவன் என்று அறிவிப்பான், மேலும் தான் தேவன் என்பதைக் காட்ட பொய்யான மற்றும் ஏமாற்றும் அற்புதங்களால் உலகை ஆளுவான் என்பதால், உபத்திரவ நிகழ்வுகள் இணையற்ற முறையில் தீவிரப்படுத்தப்படும். அவன் தன் விசுவாச கோட்பாடுகளை செயல்படுத்துவான். அவனுக்குரிய விசுவாசத்தைக் குறிக்கும் முதல் சோதனையாக வணங்கப்பட ஒரு உருவத்தை உருவாக்கி அதற்கு உயிரூட்டுவதாகும், மேலும் இதற்கு இணங்க மறுப்பவர்கள் கொல்லப்படுவார்கள். (2 தெசலோனிக்கேயர் 2:3-4, 9; வெளிப்படுத்தல் 13:13-15.)

விசுவாசத்தின் இரண்டாவது சோதனை, அவனது பெயரை அடையாளம் காண ஒரு முத்திரை அல்லது அறுநூற்று அறுபத்தாறு என்ற எண்ணைப் பயன்படுத்தி ஒரு பொருளாதார அமைப்பை ஏற்படுத்துவதாகும், வாங்கவோ விற்கவோ அதை மக்கள் தங்கள் வலது கையில் அல்லது நெற்றியில் பதிய வேண்டும், அதைக் கடைப்பிடிக்கத் தவறினால் மரிக்க வேண்டியிருக்கும். இந்த ஏற்பாடுகள், பொருளாதார வழிமுறைகள் மூலம் மனிதர்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை கைவிடும்படி கட்டாயப்படுத்தும். (வெளிப்படுத்தல் 13:16-18.) அந்த

அடையாளத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று நான் உங்களைக் கெஞ்சுகிறேன், இயேசுவைத் துறப்பதற்குப் பதிலாக மரணத்தைத் தேர்ந்தெடுங்கள், அப்போது நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தில் இயேசுவுடன் உங்கள் ஸ்தானத்தைப் பெறுவீர்கள், மேலும் ஆயிரம் ஆண்டுகள் அவருடன் ஆளுகை செய்வீர்கள், அதன் பிறகு புதிய பூமி புதிய வானம் வரைக்கும் செல்வீர்கள். (வெளிப்படுத்தல் 21.) இந்த நிகழ்வுகளுக்காக அவர் கட்டளையிட்ட தேவனின் வார்த்தையைக் கடைப்பிடித்து இயேசுவுக்கு உண்மையாக இருப்பவர்கள் கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் ... (வெளிப்படுத்தல் 14:12-13; 20:4.)

இந்த ஏற்பாடுகள் மனிதர்கள் ஜீவனுள்ள மற்றும் உண்மையான தேவனிடமிருந்து விலகி நித்தியத்தில் தங்கள் ஆத்துமாக்களை அழிக்கச் செய்யும் வகையில் செயல்படுத்தப்படும். அவை விசுவாசத்தின் இறுதி சோதனையாக, தேவனுக்கோ அல்லது அந்தி-கிறிஸ்துவுக்கோ விசுவாசமாக இருக்கும் ஆத்துமாவிற்கான போராக அமையும். ஒருவன் அந்திகிறிஸ்துவையும் அவனுடைய சாயலையும் வணங்கி, தன் நெற்றியிலோ கையிலோ அவனுடைய முத்திரையைப் பெறுவானானால், அவன் தேவனுடைய கோபாக்கினையைப் பானம்பண்ணி, தீயினாலும் கந்தகத்தினாலும் இளைப்பாறுதல் இல்லாமல் வாதிக்கப்படுவான். அந்திகிறிஸ்துவையும் அவனுடைய சாயலையும் வணங்குகிறவர்களுக்கும், அவனுடைய நாமத்தின் முத்திரையைப் பெறுகிறவர்களுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதல் இல்லை. (2 தெசலோனிக்கேயர் 2:3-4, 9; வெளிப்படுத்தல் 14:9-11.)

புதிய உலக ஒழுங்கில் உடலில் பொருத்தப்படும்போது உலக மக்களை அடையாளம் கண்டு கட்டுப்படுத்த முன்னேறும் மைக்ரோசிப்பின் மின்னணு யுகத்தில் நாம் இருக்கிறோம். கணினிமயமாக்கப்பட்ட இமேஜிங், வயர்லெஸ் பரிமாற்றங்கள், நேரடி வைப்புத்தொகை மற்றும் உணவு, சுகாதாரம் மற்றும் பிற நன்மைகளை அணுக ஸ்மார்ட் கார்டுகள், மற்ற அனைத்து வகையான அடையாளங்களையும் நீக்கும் ஒரே ஸ்மார்ட் கார்டுக்கு வழிவகுக்கும், மேலும் குற்றம் மற்றும் பிற தீமைகளைத் தடுக்கும் பணமில்லா சமூகத்திற்கு முன்னேறும். இவை அனைத்தும் மக்களின் மனதை அதன் வசதிக்காகவும் பாதுகாப்பிற்காகவும் அந்தி-கிறிஸ்துவின் முத்திரை மற்றும் எண்ணை ஏற்றுக்கொள்ளும்படி செய்து அவனது முத்திரை அல்லது பெயரின் எண்ணை சிப்பில் செருகி

உடலில் பொருத்துவதன் மூலம் உடல் அடையாளத்திற்கான ஒரே முட்டாள்தனமான ஆதார முறையாக முடிவடையும். அடையாளம் என்றால் ஒரு கீறல், வெட்டு அல்லது பொறித்தல், ஒரு செதுக்கப்பட்ட உருவம், அடிமைத்தனத்தின் அடையாளமாக ஒரு முத்திரையாகும். இயேசுவை இப்போது ஏற்றுக்கொள்ளவும், இந்த தற்போதைய பூமியை அவருக்குள் விட்டுச் செல்லத் தயாராக இருக்கவும், எதிர்காலத்தில் நிச்சயமாக நடக்கவிருக்கும் இந்த நிகழ்வுகளை எதிர்கொள்ளாமல் இருக்கவும் இது அனைவருக்கும் ஒரு எச்சரிக்கையாகும்.

நோவா மற்றும் லோத்தின் நாட்களில் நடந்தது போலவே, அவர் வருவதற்கு முன்பும் இவைகள் நடக்கும் என்று இயேசு சொன்னதை நினைவில் கொள்ளுங்கள். நோவா மற்றும் லோத்தின் விஷயத்தில், வரவிருக்கும் பேரழிவுகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கும்படி தேவன் அவர்களிடம் கூறவில்லை, ஆனால் வரவிருக்கும் பேரழிவுகளின் செய்தியைப் பிரசங்கித்து, அவர்கள் மரிக்கும் போது தாம் ஆயத்தமாக்கின பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுமாறு அவர்களையும் மற்றவர்களையும் தேவன் வலியுறுத்தினார். இன்று நமது அரணான இடம் இயேசு கிறிஸ்துவில் உள்ளது. அவர் நமக்கு அடைக்கலமாகவும், பாதுகாப்பாகவும் இருக்கிறார், அதனால்தான் இந்த யுகத்தின் முடிவுக்கு முன்பு மனிதனை இரட்சிக்கவும், இந்தப் பேரழிவுகளிலிருந்து அவர்களை விடுவித்து, தேவனுடைய ராஜ்யத்தில் இயேசு கிறிஸ்துவிற்குள் அவர்களைப் பாதுகாப்பாகக் கொண்டுவரவும், எல்லா ஜாதிகளுக்கும் சாட்சியாக ராஜ்யத்தின் இந்த நற்செய்தி உலகம் முழுவதும் பிரசங்கிக்கப்படுகிறது. (லூக்கா 17:26-30; மத்தேயு 24:14.)

இந்த யுகத்தில் உள்ள அனைத்தும் தற்காலிகமானவைகள் என்பதையும், புதியவைகள் பிறக்கும் செயல்முறையானது தொடங்கியுள்ளது என்பதையும், நமது ஒரே விசுவாசம் அவரில் இருப்பதையும் உணர இயேசு நம் கண்களைத் திறந்திருப்பதால், அவரை நம் இரட்சகராக ஏற்றுக் கொண்டு, இந்த செய்தியை உலகிற்கு எடுத்துச் செல்ல எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். ஏனென்றால், வானத்தின் கீழ் மனிதன் இரட்சிக்கப்படுவதற்கு இயேசுவின் நாமத்தை தவிர வேறு எந்த நாம மும் கொடுக்கப்படவில்லை. (மாற்கு 16:15-16; அப்போஸ்தலர் 4:12.)

யூதர்களின் அதிகாரியும், அவரது காலத்தின் மிகவும் மதிக்கப்படும் மதத் தலைவருமான நிக்கோதேமு என்ற பரிசேயன் ஒருவன் இருந்தான், அவன்

நியாயப்பிரமாணத்திலும் அவனது மதச் செயல்களிலும் நம்பிக்கை வைப்பது, தன்னை இரட்சித்து தேவனிடம் அழைத்துச செல்லும் என்று எண்ணிக்கொண்டிருந்தான். அவன் மறுபடியும் பிறக்க வேண்டும் என்றும், அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் பிறக்க வேண்டும் என்றும் இயேசு அவனிடம் கூறினார். கட்டாயம் என்பது ஒரு குறிப்பிட்ட முடிவைப் பெறுவதற்கு முற்றிலும் அவசியமான ஒன்று. கொர்நேலியு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான். அவன் தேவபக்தியுள்ளவனும் தன்வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான். பகலில் ஏறக்குறைய ஒன்பதாம் மணிநேரத்திலே தேவனுடைய தூதன் தன்னிடத்தில் வரவும், கொர்நேலியுவே, என்று அழைக்கவும் பிரத்தியட்சமாய்த் தரிசனங்கண்டு, அவனை உற்றுப்பார்த்து, பயந்து: ஆண்டவரே, என்ன, என்றான். அப்பொழுது அவன்: உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது. இப்பொழுது பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைப்பி. நீ செய்யவேண்டியதை அவன் உனக்குச் சொல்லுவான் நீ இரட்சிக்கப்படுவதற்காக உனக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் என்றான். (யோவான் 3:1-7; அப்போஸ்தலர் 10:1-6; 11:14; 1 பேதுரு 1:23-25.)

நிக்கோதேமு, கொர்நேலியு மற்றும் அவர்களது குடும்பத்தினரின் குறிப்பிடத்தக்க குணங்கள் அவர்களுக்குச் சரியாகத் தோன்றினாலும், அவை அவர்களுக்கு இரட்சிப்பைத் தரவில்லை என்பது மிகவும் தெளிவாகிறது, ஏனெனில் அந்தக் குணங்கள் இரட்சிப்புக்கு அடிப்படையாக இல்லை. கிருபையினாலேயே நாம் சிலுவையில் இயேசுவின் கிரியையில் விசுவாசிப்பதன் மூலம் இரட்சிக்கப்படுகிறோமேயொழிய நம்முடைய கிரியைகளால் அல்ல, அது தேவனுடைய ஈவு. ஆகையால், இரட்சிப்பு நம்முடைய கிரியைகளால் சம்பாதிக்கப்படுவதல்ல, மேலும் நிக்கோதேமு, கொர்நேலியு இருவரையும் போலவே, தேவனுடைய ஆவியால் மறுபடியும் பிறப்பதற்கும், வரவிருக்கும் பேரழிவுகளிலிருந்து தேவனுடைய ராஜ்யத்தில் சேர்க்கப்படுவதற்கும், தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிக்கப்பட்ட வாழ்க்கையிலிருந்து

காப்பாற்றப்படுவதற்கும் இயேசு கிறிஸ்துவை நம் இரட்சகராகப் ஏற்றுக்கொள்வது முற்றிலும் அவசியம். (நீதிமொழிகள் 14:12; 16:25; எபேசியர் 2:4-10.)

ஆதாமில் நமக்கு முதல் பிறப்பு, நமது இயற்கையான பிறப்பாக இருந்தது, பாவம் மற்றும் மரணம் என்ற பிரமாணத்தின் கீழ் ஜென்ம பாவ சுபாவத்துடன் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்ட சரீரமுடையவர்களாகப் பிறந்தோம். சரீர மரணம் என்பது நம் உடலிலிருந்து பிரிதல், ஆவிக்குரிய மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிதல். நாம் இயேசுவை விசுவாசித்து, அவரை நமது இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது, நாம் நமது இரண்டாம் பிறப்பை, நமது ஆவிக்குரியப் பிறப்பைப் பெறுகிறோம். கிறிஸ்து இயேசுவில் ஜீவ ஆவியின் பிரமாணத்தின் கீழ் மறுபடியும் பிறந்து, பாவம் மற்றும் ஆவிக்குரிய மரணத்தின் பிரமாணத்திலிருந்து விடுபட்டு, தேவனுடனான உறவுக்குள் திரும்புகிறோம். அப்போது ஒரு மனிதன் தேவனுடைய ராஜ்யத்தில் பிறக்கிறான், அவன் தேவனுடைய வீட்டின் சக குடிமகனாக மாறுகிறான், அவனுடைய பெயர் பரலோகத்தில் ஜீவ புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (லூக்கா 10:20; எபேசியர் 2:19; ரோமர் 8:2; வெளிப்படுத்தல் 20:15; 21:27.)

**வணிகம் மற்றும் பொருளாதாரத்தின் சரிவு:** ஒரே மணி நேரத்தில் எவ்வளவு பெரிய செல்வமானாலும் வீணாகிவிடும். (வெளிப்படுத்தல் 18.) நிலையற்ற செல்வங்களில் நம் நம்பிக்கையை வைக்காமல், தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி சிந்தித்து, இயேசுவை நம் இரட்சகராக ஏற்று, நம் செல்வத்தை நற்செய்தியைப் பிரசங்கிக்கப் பயன்படுத்தி, அதை ஆத்துமாக்களின் இரட்சிப்பில் உண்மையான செல்வமாக மாற்றுவதன் மூலம், பூமியில் அல்ல, பரலோகத்தில் நமக்காகப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதன் மூலம் அதற்குத் ஆயத்தமாகும்படி நமக்கு அறிவுறுத்தப்படுகிறது. மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? என்று இயேசு கூறினார். (1 தீமோத்தேயு 6:17; மாற்கு 8:31-37.)

இயேசு வணிகத்திலும் பொருளாதரத்திலும் நாம் ஈடுபடுவதை மறுக்கவில்லை, சரீர வாழ்க்கையைத் தக்கவைக்கத் தேவையான நமது செல்வங்களை அவர் நம்மிடமிருந்து பறிக்கவில்லை, அதை மிகவும் லாபகரமானதாகப் பயன்படுத்த நம்மை வழிநடத்துகிறார், ஏனெனில் நாம் தற்காலிகத்திற்கு அப்பால் நித்தியத்திற்குச் செல்ல வேண்டும். பூமியிலுள்ள

பொக்கிஷங்கள் தற்காலிகமானவை, நிலையற்றவை, இயற்கையின் கூறுகளால் சிதைந்து, திருடர்களால் திருடப்பட்டு இழக்கப்படுகின்றன. ஆனால் பரலோகத்தில் சேமிக்கப்பட்ட பொக்கிஷங்கள் அழிவு மற்றும் திருடர்களால் அடைய முடியாதவை, அவை நித்தியமானவை. ஆகையால், கர்த்தருக்குள் உங்கள் பிரயாசம் வீண்போகாது என்பதை நீங்கள் அறிந்திருப்பதால், கர்த்தருடைய கிரியையில் எப்போதும் பெருகியிருங்கள். (மத்தேயு 6:19-21; 1தீமோத்தேயு 6:17; 1கொரிந்தியர் 15:58.)

நண்பரே, தயவுசெய்து செல்வம் உங்களை உரிமை கொண்டாடவும், தேவனிடமிருந்து உங்களைப் பிரிக்கவும் அனுமதிக்காதீர்கள், மேலும் அது உங்கள் வாழ்க்கையில் உங்கள் ஆத்துமாவை உரிமை கோரும் ஒரு தீர்மானகரமாக இருக்க அனுமதிக்காதீர்கள், ஆத்துமா காலத்திற்கு அப்பால் வாழ்கிறது மற்றும் மிகவும் முக்கியமானது. நாம் மரித்து இந்த பூமியை, நமது பணத்தையும் உடைமைகளையும் விட்டு வெளியேற வேண்டும். அந்த நேரம் வரும்போது அவை நமக்கு பயனற்றவை என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? யாருக்கும் ஏற்படக்கூடிய மோசமான விஷயம் என்னவென்றால், இயேசு இல்லாமல் மரிப்பது, அது அவர்களின் மிகப்பெரிய சோகமாக இருக்கும். இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல் நீங்கள் மரித்தால், தேவனிடமிருந்து பிரிந்து உங்கள் பாவங்களில் நீங்கள் மரித்து, இனி ஒப்புரவாகும் வாய்ப்பில்லாமல் இருப்பீர்கள்.

அப்பொழுது ஜனக்கூட்டத்தில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, ஆஸ்தியைப் பாகம்பிரித்து என் வீதத்தை எனக்குத் தரும்படி என் சகோதரனுக்குக் கட்டளையிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அதற்கு அவர்: மனுஷனே, என்னை உங்களுக்கு நியாயாதிபதியாகவும் பங்கிடுகிறவனாகவும் வைத்தவன் யார் என்றார்.பின்பு அவர் அவர்களை நோக்கி: பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார். ஒரு மனிதனின் வாழ்க்கை அவன் வைத்திருக்கும் ஏராளமான பொருட்களில் இல்லை. நம் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கு உலகியல் சுதந்தரத்தை விட்டுச் செல்வதிலிருந்து இயேசு நம்மைத் தடுக்கிறார் என்பதல்ல. அவர்களுக்கு ஒரு சுதந்தரத்தை விட்டுச் செல்லுமாறு நாம் அறிவுறுத்தப்படுகிறோம், (நீதிமொழிகள் 22.) ஆனால் அது நம் நித்திய ஆத்துமாவின் இரட்சிப்பைப் பாதிக்கக் கூடாது.

(மாற்கு 8:31-37.)

இயேசு ஒரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்து வைத்து, பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்.

பூமிக்குரிய பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்த இந்த மனிதன், நித்திய ஜீவனைத் தவிர மற்ற அனைத்தையும் கொண்டிருந்ததால், தேவனுக்கு முன்பாக ஐசுவரியவான் அல்ல என்று இயேசு கூறினார். தேவன் குறித்த நேரத்தில் ஒரு நாள் தனது சரீரத்திற்கு மரணத்தைத் தருவார், அப்போது எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டியிருக்கும் என்ற உண்மையை இந்த மனிதன் ஒருபோதும் சிந்திக்கவில்லை. அந்த நேரம் எப்போது வரும், எங்கு செல்வேன், தனக்கு என்ன நடக்கும், யாருடன் வாழ்வேன், நிலைமைகள் தனக்குப் பழக்கமாக இல்லாவிட்டால் அதை மாற்றிக்கொள்ள முடியுமா என்பதைப் பற்றி அவன் ஒருபோதும் சிந்திக்கவில்லை. செல்வத்தாலும், உடைமைகளாலும் வஞ்சிக்கப்பட்டு, தன் சரீரத்தை மட்டும் திருப்திப்படுத்துவதற்காக, தன் ஆத்துமாவை இரட்சிக்காமல் மரித்தார். இயேசு இல்லாமல், தன் ஆத்துமாவைப் பற்றியும், மரிக்கும்போது தான் எங்கு செல்வேன் என்பதைப் பற்றியும் கவலைப்படாத இந்த மதிகேடனைப் போலவே, தன் வாழ்க்கையைக் கொண்ட ஒவ்வொருவரும் இருக்கிறார்கள். இயேசு நம்மிடம் காட்டிய கிருபையினாலேயே, அவருடைய இரத்தத்தினாலே நமக்கு மீட்பும், பாவ மன்னிப்பும் உண்டு. (லூக்கா 12:15-21; மாற்கு 10:22-25; எபேசியர் 1:7,18; 2:7.)

ஜாதிகள் மற்றும் அரசாங்கங்களின் சரிவு: பிரபஞ்சத்தின் உரிமையுள்ள ஆட்சியாளரான இயேசு கிறிஸ்து, ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும்

பூமியில் ஆட்சி செய்ய வருவார், இறுதியாக பிசாசு, அந்திகிறிஸ்து மற்றும் கள்ளத்தீர்க்கதரிசி ஆகியோரை இயேசுவை நிராகரித்த அனைவருடனும் அக்கினிக் கடலில் தள்ளுவார். (வெளிப்படுத்தல் 19.) வெளிப்படுத்தல் 20:10, 14-15.)

தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார். நாம் விழித்திருப்பவர்களானாலும் நித்திரையடைந்தவர்களானாலும், தம்முடனேகூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே. அவர் வரும்போது அவரோடு சேர்ந்து வாழ வேண்டும். அவரைத் தேடுகிறவர்களுக்கு அவர் இரண்டாம் முறையாகத் தோன்றுவார். இதோ, கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். இந்தத்தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்.மரணம் வெற்றியில் விழுங்கப்பட்டது. நாம் நம்பிக்கையுடன் இருக்கிறோம், சரீரத்தில் இல்லாதிருப்பது கர்த்தரிடத்தில் இருப்பதாகும். (1தெசலோனிக்கேயர் 5:10-11; 4:15-18; 1கொரிந்தியர் 15:52-55; 2கொரிந்தியர் 5:8.)

கிறிஸ்துவில் இருப்பவர்களின் இரட்சிப்பின் நிறைவு, தேவனுடைய பிரசன்னத்தில் மகிமைப்படுத்தப்பட்ட சரீரங்களை தரித்துகொண்டு, பாவம் மற்றும் நியாயத்தீர்ப்புகளிலிருந்து மீட்கப்பட்டு இருப்பார்கள், அந்நாட்களிலே, அந்த உபத்திரவத்திற்குப்பின்பு, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக்கொடாதிருக்கும்;
வானத்தின் நட்சத்திரங்கள் விழும், வானங்களிலுள்ள சத்துவங்களும் அசைக்கப்படும். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளுமெரிந்து அழிந்துபோம்.

நியாயத்தீர்ப்பு நாளிலும், தேவபக்தியற்ற மனிதர்களின் அழிவிலும் வானங்களும் பூமியும் அக்கினிக்கு இரையாக வைக்கபட்டிருக்கும், அக்கினி பூமியை சாபத்திலிருந்து சுத்திகரிக்கும், வானங்கள் சாத்தானிடமிருந்தும், அனைத்து பிசாசின் வல்லமைகளிலிருந்தும் சுத்திகரிக்கப்படும், எல்லா துன்மார்க்கரிடமிருந்தும் பூமி விடுபட்டு நீதி பிரபஞ்சத்தை நிரப்பும். இதுபோன்ற விஷயங்கள் உறுதியாக நடக்கும் என்பதைக் கண்டு, நீங்கள் கிறிஸ்துவிற்குள் இருக்க வேண்டும், நீதி வாழும் புதிய வானங்களையும் புதிய பூமியையும் எதிர்பார்த்து காத்திருக்க வேண்டும். (மத்தேயு 24:29; மாற்கு 13:23-25; 2 பேதுரு 3:3-18.)

அன்பானவர்களே, நீங்கள் இவற்றை முன்பே அறிந்திருப்பதால், இந்த பிரபஞ்சத்தின் நிலையற்ற தன்மை உங்கள் மதிப்பீடுகள் மற்றும் முன்னுரிமைகளின் அமைப்பில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த வேண்டும், இது உங்களை விடாமுயற்சியுடன் இருக்கவும் கிறிஸ்துவில் காணப்படவும் வழிவகுக்க வேண்டும். யாரும் மூழ்கும் கப்பலில் தங்கவோ, தீப்பிடித்து எரியும் கட்டிடத்தில் அல்லது இடிந்து விழும் கட்டிடத்தில் தங்கவோ தேர்வு செய்ய மாட்டார்கள் என்பதால், இது முடிவெடுக்க தாமதப்படுத்தும் நேரமல்ல. இவை அனைத்தும் கிறிஸ்து பூமிக்கு வருவதற்கான ஆயத்தங்கள். நீங்கள் ஒரு பெரிய அவசரநிலையில் இருக்கிறீர்கள். முதல் மனிதன் ஆதாம் தனது சந்ததியினரை பாவத்திலும் மரணத்திலும் வழிநடத்தினான் என்றும், கடைசி ஆதாமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மை மரணத்திலிருந்து ஜீவனுக்கு அழைத்துச் செல்கிறார் என்றும் உங்களுக்குச் சொல்லப்பட்டுள்ளது. (யோவான் 5: 24-25; ரோமர் 8:2; 1 கொரிந்தியர் 15:20-24.)

இயேசுவின் பாவமற்ற பிறப்பு, அவரது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் மற்றும் தேவனுடைய பிரசன்னத்தில் ஏறுதல் ஆகியவற்றின் மூலம் தம்மண்டை வருபவர்களுக்கு தேவன் இப்போது நித்திய ஜீவனைக் கொடுக்கிறார். நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாக இருக்கிறேன் என்றும், என்னாலேயன்றி எந்த மனிதனும் பிதாவிடம் வரமாட்டான் என்றும் இயேசு கூறினார். இயேசுவே தேவனிடம் செல்வதற்கான ஒரே வழி, அவரைத் தவிர வேறு எந்த வழியோ அல்லது பெயரோ இல்லை, அவர் இல்லாமல் நீங்கள் மீறுதல்களிலும் பாவங்களிலும் மரித்திருக்கிறீர்கள், உங்களுக்கு நம்பிக்கையில்லாமல் உலகில் தேவனற்று இருக்கிறீர்கள், பாவத்தையும் அதன் விளைவுகளையும் விட்டு நீங்கள் தப்பிக்க முடியாது, மேலும் நீங்கள் என்றென்றும் அதன் வேதனை

நிலைமைகளுடன் வாழ வேண்டியிருக்கும், புதிய பிறப்பு இல்லாமல், எந்தப் புதுமையும் இருக்காது. (யோவான் 14:1-7; எபேசியர் 2:12.)

பாவம் என்பது தேவனின் மகிமை, அவருக்குரிய கடமைகள் மற்றும் தரநிலைகளில் குறைவுபடுதல், குறி அல்லது இலக்கைத் தவறவிடுதல் மற்றும் ஈவுகளில் அல்லது நன்மைகளில் பங்கு கொள்ளாமல் இருத்தலாகும். சரீர மரணம் என்பது உடலிலிருந்து உயிர் பிரிதல், அதே சமயம் ஆவிக்குரிய மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிதல் என்பதை நினைவில் கொள்ளுங்கள். என் நண்பரே, இயேசு கிறிஸ்துவில் தேவனின் ஈவாக இரட்சிப்பு உங்களுக்குக் கிடைத்துள்ளது, ஆனால் அதன் நன்மைகளைப் பெற நீங்கள் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். பிதா தமக்குக் கொடுத்த வார்த்தைகளை இயேசு தம்முடைய சீடர்களிடம் விட்டுச் சென்றார், அவர்கள் அவற்றை ஏற்றுக்கொண்டனர், இப்போது பரிசுத்த வேதத்தின் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் அங்கீகரிக்கப்பட்ட எழுத்துக்களில் நமக்கு அனுப்பப்பட்ட வார்த்தைகளைப் பெற்றுள்ளோம், அவை உண்மையும் சத்தியமுமானவைகள். அவை மனிதனுக்கு தேவன் தமது விருப்பத்தை வெளிப்படுத்திய எழுதப்பட்ட வெளிப்பாடு, மேலும் அவற்றுடன் இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்று தேவனுடன் ஒப்புரவாகி, வரவிருக்கும் கோபத்திலிருந்து தப்பிக்க உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது. மனந்திரும்பாமல் இருப்பது இயேசு இல்லாமல் மரணத்திற்கான வாய்ப்புகளை நீங்கள் திறந்து வைப்பதாகும், தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிந்து பிசாசுடன் வாழ்வது, அல்லது இயேசுவை ஏற்று அந்திகிறிஸ்துவின் அடையாளத்தை தரிக்காமல் இருக்க தேவன் உங்களுக்குக் கிருபையாய் கொடுக்கும் வாய்ப்புகளை மறுத்து, மகா உபத்திரவ நியாயத்தீர்ப்புகளின் கடுமைக்கான வாய்ப்புகளுக்கு உங்களுக்கு திறந்து வைப்பதாகும். இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம் (யோவான் 17:8; வெளிப்படுத்தல் 21:5;எபிரெயர் 2:1-3.)

நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிறக்கும் தருணத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறீர்கள். ஒரு குழந்தை உலகத்தில் பிறப்பதற்குக் கருப்பையின் நுழைவாயில் வழியாக இருப்பது போல, தேவனுடைய ராஜ்யத்தில் பிறப்பதற்கான வழி இயேசுவே. அவரை ஏற்றுக்கொண்டவர்கள் அத்தனை பேருக்கும், தேவனுடைய பிள்ளைகளாக ராஜ்யத்தில் பிரவேசிக்கும் சட்டப்பூர்வ உரிமையை அவர் அளிக்கிறார். இயேசு வாசல், அவர்

மூலமாக ஒருவன் உள்ளே பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான். (யோவான் 1:12-13; 3:1-8; 10:7-18.) உங்கள் புதிய பிறப்புக்காக இயேசுவை ஏற்றுக்கொள்ளவும், புதிய பூமியில் பிரவேசிக்கவும் பரலோக ராஜ்யத்தில் நுழைவதற்கான உரிமையை அடையவும் உங்களுடைய நேரம் வந்துவிட்டது. இது ஒரு தனிப்பட்ட செயல், விசுவாசத்தினால் இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்போதே அதைச் செய்து, இயேசுவிற்குள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவும், அவரோடு ஆயிர வருட ஆட்சிக்காகவும், பின்னர் ஒரு புதிய வானத்தின் கீழ் புதிய பூமிக்காகவும் என்றென்றும் காத்திருக்கவும் ஆயத்தமாக இருங்கள். (வெளிப்படுத்தல் 21:1-6.)

நமது கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தைப் பார்த்த பிறகு, சிலுவையில் இயேசு கிறிஸ்துவின் ஒப்புரவு பணியின் மூலம் அழிவிலிருந்து விடுபட்டு தேவனிடம் திரும்புவதற்கான வழி உங்கள் முன் திறக்கப்பட்டுள்ளது. தேவனுடைய வார்த்தையின் நன்மை உங்களுக்கு இருக்கிறது, நோவா, லோத்து, நிக்கோதேமு மற்றும் கொர்நேலியுவைப் போலவே, இதுபோன்ற விஷயங்கள் நடக்கவிருக்கும் நிச்சயத்தைப் பற்றியும், இயேசுவோடும், அவர் இல்லாமலும் நீங்கள் நித்தியத்தில் எங்கு வாழ்வீர்கள் என்பதையும் தேவன் உங்களுக்குக் கொடுத்த அறிவைக் கொண்டு உங்கள் வாழ்க்கையில் மிக முக்கியமான முடிவை நீங்கள் எடுக்க வேண்டும்.

பூமியில் இரண்டு வகையான மக்கள் மட்டுமே இருப்பதாக இயேசு சொன்னதை நினைவில் கொள்ளுங்கள், அவரில் கடவுளுடன் ஒப்புரவான புதிய சிருஷ்டியான மனிதன் மற்றும் ஆதாமில் பழைய சிருஷ்டியான மனிதன் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டவர்கள், அவர்கள் இரண்டு வெவ்வேறு வழிகளில் மட்டுமே செல்கிறார்கள், ஜீவனுக்கு வழிவகுக்கும் இயேசுவில் உள்ள குறுகிய வழி மற்றும் அழிவுக்கு வழிவகுக்கும் மதம் மற்றும் சுய நீதியின் விசாலமான வழி. அவர்கள் நித்தியத்தில் இரண்டு இடங்களுக்கு மட்டுமே செல்கிறார்கள். ஒன்று இயேசுவுடன் புதிய பூமியில் நித்திய மகிமைக்குச் செல்லும், மற்றொன்று இயேசு இல்லாமல் பிசாசு, அந்தி கிறிஸ்து மற்றும் கள்ளத் தீர்க்கதரிசியுடன் அக்கினிக்கடலில் நித்திய வேதனைக்குச் செல்லும், நீங்கள் பின்பற்றும் வழியையும் தேர்ந்தெடுக்கும் வழியையும் ஒருமனதாகப் பின்பற்றுவீர்கள்.

இயேசுவை ஏற்றுக்கொள்வது என்பது புதிய

வானத்தின் கீழ் புதிய பூமியில் நித்திய மகிமையில் அவரைப் பின்பற்றுவதைத் தேர்ந்தெடுப்பதாகும்.

**புதிய பூமி:** மனிதன் இயேசுவுடன் அங்கு செல்கிறான். இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்பவர்களின் இறுதி இடம் இது. இந்த நாள் நிச்சயமாக வரும், கடந்த காலம் நினைவில் இருக்காது. இனிக் கண்ணீர் இருக்காது, மரணம் இருக்காது, துக்கம் இருக்காது, வேதனை இருக்காது; ஏனெனில் முந்தினவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. (வெளிப்படுத்தல் 21:1-6, 27; ஏசாயா 65:16-17.)

இயேசுவை நிராகரிப்பது என்பது கந்தகம் எரியும் நெருப்புக் கடலில் பிசாசை என்றென்றும் பின்பற்றுவதைத் தேர்ந்தெடுப்பதாகும்.

**அக்கினிக் கடல்:** இயேசுவை ஏற்றுக்கொள்ளாத மனிதன் அங்கு செல்கிறான். அது பிசாசு, அந்தி-கிறிஸ்து, கள்ளத் தீர்க்கதரிசி மற்றும் இயேசுவை தங்கள் இரட்சகராக நிராகரிக்கும் அனைவரின் இறுதி இடம். இந்த நாள் நிச்சயமாக வரும், அங்குள்ளவர்கள் தங்கள் மதத்தை சபிப்பார்கள், தாங்கள் என்னவாக இருந்திருக்க முடியும், எங்கே இருந்திருக்க முடியும் என்று ஆச்சரியப்படுவார்கள், ஆனால் நிலைமைகள் என்றென்றும் அப்படியே இருப்பதால் மாறவும், நகரவும் முடியாது. அதன் குடியிருப்பாளர்களுக்கு அழுகை, புலம்பல் மற்றும் பற்களைக் கடித்தல் இருக்கும், ஏனெனில் அவர்களின் நினைவும் மனசாட்சியும் அவர்களை என்றென்றும் வேதனைப்படுத்தும். (வெளிப்படுத்தல் 19:20; 20:10-15.)

நீங்கள் இதுவரை இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், இன்று உங்களுக்கும் உங்கள் வீட்டிற்கும் இயேசு கிறிஸ்துவில் இரட்சிப்பு வந்துவிட்டது. கர்த்தராகிய இயேசுவை உங்கள் வாயால் அறிக்கையிடவும், அவர் உங்கள் பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் செய்யப்பட்டார், தேவன் அவரை மரித்தோரிலிருந்து உங்கள் இரட்சகராக எழுப்பினார் என்பதை உங்கள் இருதயத்தில் விசுவாசிக்கவும் உங்களுக்கு வாய்ப்பு உள்ளது. நான் உங்களைக் கெஞ்சுகிறேன், தயவுசெய்து இப்போதே இயேசுவை ஏற்றுக்கொள்ளுங்கள், அவரை உங்கள் இரட்சகராக ஒப்புக்கொள்ளுங்கள், காலம் கடந்து போகும் முன் உங்கள் பெயரை ஜீவ புத்தகத்தில் பரலோகத்தில் எழுதுங்கள், ஏனென்றால் ஜீவ புத்தகத்தில் எழுதப்படாத எவனும் அக்கினிக் கடலில் தள்ளப்பட்டான், நீங்கள் அந்த இடத்தை சேர்ந்தவர்கள் அல்ல. (ரோமர் 10:9-10; லூக்கா 10:20; வெளிப்படுத்தல் 21:27; 20:15.)

இயேசு கிறிஸ்துவில் உங்கள் இரட்சிப்பை

உறுதிப்படுத்தும் மற்றும் அறிக்கையிடும் ஜெபம். (யோவான் 3:16; 1யோவான் 5:10-13.)

அன்புள்ள தேவனே, நான் தவறான மதப் பாதையில் சென்று, நித்திய அழிவை நோக்கிச் செல்கிறேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். நடக்க வேண்டிய விஷயங்கள் மற்றும் அவை கடந்து செல்வதற்கான காரணங்கள் பற்றிய மேம்பட்ட அறிவை எனக்கு வழங்கியதற்கு நன்றி. என் பாவத்திற்கான விலையைச் செலுத்த இயேசுவை அனுப்பி, நான் நுழைவதற்கு ராஜ்யத்தைத் திறந்ததன் மூலம் என் மீதுள்ள உம் அன்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். கர்த்தராகிய இயேசுவே, எனக்காக மரித்ததற்கு நன்றி, உம் அன்பிற்கு நான் பதிலளித்து, உம்மை என் இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்கிறேன். இன்று என்னைக் இரட்சித்ததற்கும், என்னை என்றென்றும் உம்முடன் அழைத்துச் செல்ல உம்முடைய வருகைக்கு என்னைத் ஆயத்தமாக்கியதற்கும் நன்றி. ஆமென்.

வேதத்தில் கடைசி நாட்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ள காலம் இப்போது இங்கே நடந்து கொண்டு இருக்கிறது. பூமியின் விவகாரங்கள் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆட்சியின் கீழ் இருக்கும், அவருடையவர்கள் அவரோடு என்றென்றும் ஆட்சி செய்வார்கள். (வெளிப்படுத்தல் 20: 4-6; (வெளிப்படுத்தல் 21.)

# அதிகாரம் 11

# முக்கிய செய்திகள் வெளிப்படுத்தப்பட்ட எதிர்காலம்

**இ**ந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது. (வெளிப்படுத்தல் 1:3.) தற்போதைய வானமும் பூமியும் ஒழிந்துபோகும், நீதி வாசமாயிருக்கும் புதிய வானத்திற்கும் புதிய பூமிக்கும் வழி வகுக்கும் என்று இயேசு கூறினார், அவருடைய வார்த்தைகள் ஒருபோதும் ஒழியாது. (மத்தேயு 24:35; 1 பேதுரு 1:23-25; 2 பேதுரு 3:13-14.)

ஆகையால், மனிதர்கள் தங்கள் உடல் மற்றும் உடல் ரீதியான விவகாரங்களில் ஞானிகளாக இருக்கிறார்கள், வானத்தின் இரகசியங்களை எவ்வாறு பகுத்தறிவது என்பதை அறிந்து கொள்ள, வானிலை மற்றும் காலநிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் முன்னறிவிக்கின்றன. நாம் அதற்கேற்ப ஆயத்தமாக இல்லாமல் இருந்தால் அதற்குரிய விளைவுகளை அனுபவிப்போம் (மத்தேயு 16:1-4; லூக்கா 12:54-56.) காலத்தின் அறிகுறிகள் மனிதன் இப்போது ஆயத்தமாக வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது. இவைகள் ஆயிரமாண்டு மற்றும் புதிய பூமியில் இயேசுவுடன் வாழவும் ஆட்சி செய்யவும் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதற்கான அறிகுறியாக இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இயேசுவை ஏற்றுக்கொள்ளத் தவறினால், அந்த மனிதன் புதிய உலகில் வாழ ஆயத்தமாக இல்லாதவனாகவும், அநீதியானவனாகவும் இருப்பான், அங்கு நீதி மட்டுமே வசிக்கும், மேலும் அந்த மனிதன்அவரிடமிருந்து நித்தியமாகப் பிரிக்கப்பட்டு வாழ வேண்டியிருக்கும்.

நம்முடைய ஆத்துமாக்களின் விவகாரங்களை ஆராய்ந்து, இயேசுவை நம் இரட்சகராக ஏற்றுக்கொள்ள இப்போது நமக்கு வாய்ப்பு உள்ளது, ஏனெனில் அவர் நிகழ்காலத்திலிருந்து வருங்காலத்திற்கு பிரவேசிக்க புதியதாக மாறுவதற்கான செயல்முறையை வெளிப்படுத்தி, நடக்க வேண்டிய விஷயங்களால் போதுமான எச்சரிக்கையை வழங்குகிறார். (மத்தேயு24.) (லூக்கா 21.) (வெளிப்படுத்தல் 4-22.)

**ஏழு முத்திரைகள் திறத்தல்**: (வெளிப்படுத்தல் 6:1--8:5.) லூக்கா 23:30.) பூமியிலிருந்து சமாதானம் பறிக்கப்படும்,

மக்கள் ஒருவரையொருவர் கொல்வார்கள், உலகம் போர்களால் நிரப்பப்படும், உணவு பற்றாக்குறையாக இருக்கும், பூமியின் நான்கில் ஒரு பகுதியில் மக்கள் கொள்ளைநோய்கள், பசி, காட்டு விலங்குகள் மற்றும் சீற்றம் கொண்ட மனிதர்களால் மரிப்பார்கள். ஒரு பெரிய பூகம்பம் ஏற்படும், சூரியன் கருப்பாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும், நட்சத்திரங்கள் பூமியில் விழும், வானங்கள் ஒரு சுருளைப் போல சுருட்டப்படும், மலைகளும் தீவுகளும் அவற்றின் இடங்களிலிருந்து நகர்ந்துவிடும், மக்கள் குகைகளிலும் மலைகளுக்குப் பின்னாலும் ஒளிந்து கொள்வார்கள், மலைகளும் பாறைகளும் தங்கள் மீது விழும்படியும், சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவரிடமிருந்தும், பூமியிலுள்ளவற்றிலிருந்தும் அவற்றை மறைக்கும்படியும் துயரத்துடன் ஜெபிப்பார்கள்.

**ஏழு எக்காளங்களின் ஊதுதல்**: (வெளிப்படுத்தல் 8:6 -14:20.) அவர்கள் இரத்தத்துடன் கலந்த கல்மழையையும் அக்கினியையும் கொண்டு வருவார்கள், பூமியின் தாவரங்களில் மூன்றில் ஒரு பங்கு எரிந்து போகும், கடல் இரத்தமாக மாறும், அதன் உயிரினங்களில் மூன்றில் ஒரு பங்கு மரித்துவிடும், கப்பல்களில் மூன்றில் ஒரு பங்கு அழிக்கப்படும், தண்ணீரில் மூன்றில் ஒரு பங்கு விஷமாகி மரணத்தை ஏற்படுத்தும். அண்ட பேரழிவுகள் ஏற்படும், சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களில் மூன்றில் ஒரு பங்கு இருளடையும், ஒரு தேவத்தூதன் வானத்தின் குறுக்கே பறந்து பூமியில் உள்ளவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ என்று கூக்குரலிட்டான். பூமியில் பெரிய அடையாளங்களாலும் பயங்கரமான காட்சிகளாலும் வானங்கள் அசைக்கப்படும், பாதாளக் குழி திறக்கப்பட்டு அக்கினிசூளை ஏற்படும், மேலும் ஐந்து மாதங்கள் நீடிக்கும் இந்த நியாயத்தீர்ப்புகளிலிருந்து தேவனால் நெற்றியில் முத்திரையிடப்படாதவர்களைத் துன்புறுத்த பேய்கள் விடுவிக்கப்படும். மனிதன் வாழ்வதை விட மரிப்பதையே விரும்புவான், ஆனால் ஆறாவது எக்காளம் ஊதும் வரை அவனால் மரிக்க முடியாது, அப்போது மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் மரித்துவிடுவார்கள், மேலும் இந்த பிரச்சனைகளில் வாழ்கிறவர்கள் தங்கள் கைகளின் கிரியையை வணங்குவதை விட்டு மனந்திரும்ப மறுப்பார்கள், அவர்கள் பிசாசுகளையும், தங்கம், வெள்ளி, பித்தளை, கல் மற்றும் மரத்தால் செய்யப்பட்ட விக்கிரகங்களையும் வணங்கக்கூடாது, அவைகளால் பார்க்கவோ, கேட்கவோ, நடக்கவோ, பேசவோ முடியாது, அவற்றில் எந்த சுவாசமும் இல்லை. (வெளிப்படுத்தல் 9:1-6, 18-21; சங்கீதம் 115:2- 11; 135:15-20; ஏசாயா 46:5-12; 40:18-22, 25-28.)

பிரியமானவர்களே, நாம் தேவனுடைய சந்ததியாராக இருப்பதால், தெய்வம் தங்கம், வெள்ளி, கல்

போன்றது என்று நாம் நினைக்கக்கூடாது. இன்று, நீங்கள் அறியாமையால் மனிதனால் உருவாக்கப்பட்ட சிலைகளை வணங்கி சேவிப்பவர்களில் ஒருவராக இருந்து, உங்களைப் படைத்து, உங்களுக்கு உயிரையும் சுவாசத்தையும் கொடுத்து, உங்களை இரட்சிக்க இயேசுவை அனுப்பிய ஜீவனுள்ள உண்மையான தேவனை வணங்கி சேவிக்காவிட்டால், இப்போதே மனந்திரும்பும்படி தேவன் உங்களுக்குக் கட்டளையிடுகிறார். ஒருவரும் அழிந்துபோவது தேவனுடைய சித்தமல்ல, எல்லாரும் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அவருடைய சித்தமாக இருக்கிறது. ஏனென்றால், அவர் தாம் நியமித்த மனிதனாகிய இயேசுவைக் கொண்டு உலகத்தை நீதியாய் நியாயந்தீர்க்கும் ஒரு நாளை நியமித்திருக்கிறார்; அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, தம்முடைய வலது பாரிசத்தில் இருக்கும்படி எல்லா மனிதர்களுக்கும் நிச்சயத்தை அளித்திருக்கிறார். (அப்போஸ்தலர் 17:24-31; ரோமர் 1:23-25; 2 பேதுரு 3:9: எபிரெயர் 10:12; 1 தெசலோனிக்கேயர் 1:9-10.)

இயேசு கிறிஸ்து தேவனுடைய அவதாரம், மனிதனை இரட்சிக்க பூமிக்கு வந்தார், அதே நேரத்தில் அந்தி கிறிஸ்து சாத்தானின் அவதாரமாக இருப்பான், அவன் மனிதனை அழிக்க முயற்சிப்பான். அந்தி கிறிஸ்து முதலில் உலகிற்கு ஒரு சமாதானம் செய்யும் மனிதனாக, பொருளாதார மற்றும் அரசியல் புத்திசாலித்தனத்துடன், உலகப் பிரச்சனைகளையும், சரிந்து வரும் பொருளாதார நிலைமைகளையும் தீர்க்கும் திறனுடையவனாகத் தன்னைக் காண்பிப்பான். உலகத் தலைவர்கள் சமாதானத்தைப் பற்றிப் பேசி, ஒரு உலக அரசாங்கம், ஒரு உலக ஐக்கிய மத அமைப்பு மற்றும் ஒரு உலகப் பொருளாதார ஒழுங்கு மூலம் ஒரு புதிய உலக ஒழுங்கை நிறுவத் திட்டமிட்டு வருவதால், அவனது தோற்றம் உலக அவசரநிலைகளைச் சந்திக்கும் நேரத்தில் இருக்கும், ஏனெனில் அவர்கள் இதை உலகில் சமாதானத்துக்கான ஒரே நம்பிக்கையாகக் கருதுகிறார்கள்.

அரசியல், பொருளாதார மற்றும் மத ரீதியான குழப்பங்களிலிருந்து அவர்களை வெளியே கொண்டு வருவதற்கு அந்தி கிறிஸ்துவிடம் பதில்கள் இருக்கும். அவன் ஒரு பொய்யான தீர்க்கதரிசியை முன்னிலைக்குக் கொண்டு வருவான், அனைத்து மதங்களையும் ஒன்றிணைத்து, ஒருங்கிணைந்த உலக மத அமைப்பின் மூலம் சமாதானமான முறையில் அவர்களின் பல்வேறு வழிபாட்டு முறைகளுக்கு சுதந்திரத்தை அனுமதிப்பான். தேவலாயத்தை மீண்டும் கட்டியெழுப்புவதும், ஆராதனையை மீண்டும் தொடங்கவும் இஸ்ரேலுடன் உடன்படிக்கை செய்வதுமே அவனது முதல் செயல்களில் ஒன்றாக இருக்கும். அவன் பொய்யான சமாதானத்தையும்

பாதுகாப்பையும் கொண்டு வருவான், மேலும் அது செழிப்பு அதன் உச்சத்தில் இருக்கும் ஒரு காலமாக இருக்கும், ஆனால் அவர்கள் சமாதானமாகவும், பாதுகாப்பாகவும், செழிப்பாகவும் இருப்பதாக நினைப்பார்கள், ஆனால் அவைகள் அனைத்தும் குறுகிய காலமாக இருக்கும். அவர்கள் சமாதானமும் பாதுகாப்புமாக இருக்கிறோம் என்று சொல்லும்போது, திடீரென்று அழிவு வரும். சாத்தான் தனது வல்லமையுடன் செயல்பட்ட பிறகு வரும் அந்தி கிறிஸ்து, ஆராதனையுடன் தொடர்புடைய அனைத்தையும் எதிர்த்து, தன்னை உயர்த்தித் தேவன் என்று கூறிக்கொள்வான், வஞ்சிக்கும் அடையாளங்களையும், பொய்யான அற்புதங்களையும், சத்தியத்தை நேசிக்கவும் இரட்சிக்கப்படவும் மறுத்தவர்களை ஏமாற்ற அனைத்து வகையான தீமைகளையும் காண்பிப்பான். இந்தக் காரணத்தினால், சத்தியத்தை விசுவாசிக்காமல் அநீதியில் இன்பம் கண்ட அனைவரும் சபிக்கப்படுவதற்காக, பொய்யை நம்பும்படி தேவன் அவர்களுக்கு ஒரு வலுவான மாயையை அனுப்புவார். 1 தெசலோனிக்கேயர் 5:3; 2 தெசலோனிக்கேயர் 2:3-4, 9-10; வெளிப்படுத்தல் 13:2.)

கள்ளத்தீர்க்கதரிசி பூமியிலுள்ளவர்களுக்கு முன்பாக அற்புதங்களைச் செய்வான். அற்புதங்கள் மூலம் பூமியிலுள்ளவர்களை வஞ்சிப்பதற்காக வானத்திலிருந்து அக்கினியை பூமிக்குக் கொண்டு வருவான், மேலும் ஜாதிகளை ஏமாற்றுவதற்காக அந்திகிறிஸ்துவின் ஒரு உருவத்தை உருவாக்கி வணங்கச் செய்வான். அந்திகிறிஸ்து கடவுள் என்று அழைக்கப்படுபவை அல்லது கடவுளாக வணங்கப்படுபவை அனைத்தையும் எதிர்ப்பான், மேலும் தன்னை உயர்த்தி, தான் ஆராதிக்கப்பட வேண்டிய தேவன் என்று காண்பிப்பான், இதன் மூலம் ஜீவனுள்ள மற்றும் மெய்யான தேவனுடைய ஆராதனையை மறுப்பான், மேலும் தன்னைத் தேவன் என்று அழைத்து கொள்வான். அவனை வணங்க மறுப்பவர்கள் கொல்லப்படுவார்கள். (2 தெசலோனிக்கேயர் 2:4; வெளிப்படுத்தல் 13:13-15.)

பின்னர் அந்திகிறிஸ்து ஒரு பொருளாதார ஆட்சியை நிறுவுவான், மனிதன் வாங்கவோ விற்கவோ தங்கள் வலது கையில் அல்லது நெற்றியில் ஒரு முத்திரையைப் பெற வேண்டும் என்றும், அந்திகிறிஸ்துவின் முத்திரையையோ அல்லது அந்திகிறிஸ்துவின் பெயரையோ அல்லது அவனுடைய பெயரின் இலக்கத்தையோ பெறாவிட்டால் யாரும் வாங்கவோ விற்கவோ முடியாது என்றும் அறிவிப்பான். அவனது இலக்கம் அறுநூற்று அறுபத்தாறு, இது வணிகம் மற்றும் வணிகத்தின் எதிர்காலம் அந்திகிறிஸ்துவின் உடல் அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதைக் குறிக்கிறது, அதைத் தரித்துகொண்டால் ஆத்துமாக்களை அழிக்கும். (வெளிப்படுத்தல் 13:16-18.)

நீங்கள் அந்த நேரத்தில் பூமியில் இருப்பவர்களில் ஒருவராக இருந்தால், இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள மறுத்ததாலும், அவருடைய பேரானந்தம் அல்லது ஐக்கியத்தைத் தவறவிட்டதாலும், அந்த முத்திரையைத் தரித்துகொள்ளவோ அல்லது சிலையை வணங்கவோ கூடாது. அந்த முத்திரையைத் தரித்துகொள்ளாமல், சிலையை வணங்க மறுப்பதன் மூலம் நீங்கள் தேவனுக்கும், இயேசு கிறிஸ்துவுக்கும் உண்மையாக இருக்க வேண்டும். அப்படி மறுப்பவர்கள் கொல்லப்படுவார்கள், மிருகத்தின் மீதும், அதன் உருவத்தின் மீதும், அதன் முத்திரையின் மீதும், அதன் பெயரின் எண்ணிக்கையின் மீதும் வெற்றி பெறுவார்கள். அவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வெளியே வந்து தேவனுக்கு முன்பாகவும், இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும் அவருடைய சிங்காசனத்தில் நின்று, அவரோடு ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து ஆட்சி செய்வார்கள், பின்னர் புதிய பூமிக்குச் செல்வார்கள் (வெளிப்படுத்தல் 7:9-17; 6:9-11; 15:2; 20:4; 21:1.)

ஆனால், ஒரு மனிதன் அந்தி கிறிஸ்துவையும் அவனுடைய உருவத்தையும் வணங்கி, வாங்கவோ விற்கவோ தனது நெற்றியிலோ அல்லது வலது கையிலோ அவனது முத்திரையை தரித்துகொண்டால், அந்தி கிறிஸ்துவுக்கு விசுவாசத்தைக் காண்பிப்பான், தேவனின் கோபத்தைப் பருகுவான், மேலும் என்றென்றும் வேதனைப்படுவான். (வெளிப்படுத்தல் 14:9-11; 19:20.) மேலும், நீங்கள் இந்த உண்மையையும் கவனமாகக் கருத்தில் கொள்ள வேண்டும்,

அந்த அமைப்புகள் செயல்படுத்தப்படுவதற்கு முன்பு நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளாமல் மரித்தால், அந்தி-கிறிஸ்துவின் மத மற்றும் பொருளாதார அமைப்புகளிலிருந்தும், மகா உபத்திரவ நியாயத்தீர்ப்புகளிலிருந்தும் தப்பிப்பீர்கள், ஆனால் நரகத்திலிருந்தும், அக்கினிக்கடலிலிருந்தும் தப்பிக்க மாட்டீர்கள். ஆகையால், நீங்கள் எப்போது மரிப்பீர்கள் என்று உங்களுக்குத் தெரியாததால், இயேசுவை உங்கள் இரட்சகராக இப்போதே ஏற்றுக்கொள்ளுங்கள். இயேசு நம் பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் செய்யப்பட்டார், மரித்தோரிலிருந்து முதற்பேறானவராக உயிர்த்தெழுந்தார், பரலோகத்திற்கு ஏறினார், மேலும் அவர் தேவனின் வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார், மேலும் எல்லா நாமங்களுக்கும் மேலான ஒரு நாமம் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது, அது வானத்திலும் பூமியிலும், பூமியின் கீழும் சகல வல்லமையும் அதிகாரமும் கொண்டது (மத்தேயு 28:18; பிலிப்பியர் 2:10.) மேலும், தம்மை இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களை அவர் தம்மிடம் கூட்டிச் சேர்க்க

மீண்டும் வருவார். (1 கொரிந்தியர் 15:3-4; அப்போஸ்தலர் 1:9-11; எபேசியர் 1:20-21; 2 தீமோத்தேயு 4:8; 1 தெசலோனிக்கேயர் 4:13-18.)

இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டு, அவரில் மரிக்கிறவர்களில் முதற்பலனாக இருக்கிறார் என்பது விசுவாசிகளின் நம்பிக்கையின் அடிப்படையாகும். அவர்கள் அவருடைய உயிர்த்தெழுதலின் மூலம் என்றென்றும் அவருடன் இருக்கவும், அழியாத, மாசற்ற மற்றும் மங்காத ஒரு சுதந்தரத்திற்காக ஜீவனுள்ள நம்பிக்கைக்காக மீண்டும் பிறக்கவும், பரலோகத்தில் வைக்கப்பட்டு, விசுவாசத்தின் மூலம் தேவனின் வல்லமையால் காக்கப்படவும் அவரைப் பின்பற்றுவார்கள். (1 கொரிந்தியர் 15:20-26; கொலோசெயர் 3:1-4; 1 பேதுரு 1:3-5.)

கிறிஸ்துவில் இந்த சுதந்தரம் தேவனின் இரட்சிப்பின் ஈவாகும், இது சம்பாதிக்கப்பட்டதல்ல, மாறாக இயேசுவின் இரக்கம் மற்றும் கிருபையின் விளைவாக இருக்கிறது. மரணம், நரகம் மற்றும் பாதாளம் ஆகியவற்றின் மீது அவருக்கு அதிகாரமிருக்கிறது. மேலும் அவர் உயிர்த்தெழுந்து தேவனின் வலது பாரித்தில் வீற்றிருக்கிறார். இது கிறிஸ்துவில் உள்ளவர்களுக்கு மரணம், நரகம் மற்றும் பாதாளத்தின் மீது வெற்றியின் வழிமுறையாகும். (1 கொரிந்தியர் 15:51-57.) இயேசு நரகம் மற்றும் மரணத்தின் திறவுகோல்களைக் கொண்டுள்ளார், மேலும் மரணம் மற்றும் மரித்தவர்களின் சாம்ராஜ்யத்தின் மீது முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளார். அனைவரும் அவரை விசுவாசிப்பதற்கும் அவரை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்வதற்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன் மூலம் இயேசு பரலோக ராஜ்யத்திற்கு வழியைத் திறந்துள்ளார், (வெளிப்படுத்தல் 1:17-18; 20:4-6; மத்தேயு 16:18-19.) அவரை நிராகரிப்பவர்களுக்கு எந்த நம்பிக்கையும் இருக்காது, அவர்கள் உலகில் தேவனற்று இருப்பார்கள், மேலும் அவர்கள் எதிர்நோக்க வேண்டிய ஒரே விஷயம், அக்கினிக் கடலின் நியாயத்தீர்ப்புக்காக உயிர்த்தெழுதல் மட்டுமேயாகும். (எபேசியர் 2:12-13; ரோமர் 6:23; வெளிப்படுத்தல் 20:14-15.)

ஆதாம் பாவம் செய்து மனிதனுக்கு மரணத்தைக் கொண்டு வந்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். மனிதன் அவனுடனான உறவின் மூலம் பாவியானான், தேவனின் சாயலையும், ரூபத்தையும், பரலோகத்தையும் இழந்து, தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டான்.

மறுபுறம், இயேசு மனிதகுலத்திற்கு உயிர்த்தெழுதலின் ஜீவனைக் கொண்டு வந்தார், மேலும் மனிதன் அவருடனான உறவின் மூலம் தேவனுடன் ஒப்புரவாக்கப்படுகிறான், மேலும் படைப்பின் தொடக்கத்தில் இருந்ததைப் போலவே அவரது சாயல், ரூபம் மற்றும் பரலோகம் மீட்டெடுக்கப்படுகிறது. (1 கொரிந்தியர்

15:21-26; எபிரெயர் 10:10-20; லூக்கா 23:43.) எனவே, இயேசு இல்லாமல் மரிப்பது என்பது தேவனிடமிருந்து நம்மைப் பிரித்த பாவங்களில் மரிப்பதாகும், மேலும் அந்த நபர் தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிந்து வாழ வேண்டியிருக்கும், ஏனெனில் நித்தியத்தை மாற்ற இயேசுவை ஏற்றுக்கொண்டு தேவனுடன் ஒப்புரவாக நேரமும் வாய்ப்பும் இனி இருக்காது, ஏனெனில் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. (யோவான் 8:24; எபிரெயர் 9:27.)

மரித்த சரீரம் மற்றும் ஆத்துமாவின் மீது இயேசு அதிகாரம் செலுத்துவதால் (மத்தேயு 10:28; வெளிப்படுத்தல் 18.) இனிமேல் ஜீவனுக்கான திரையை கிழித்து, மரித்த ஆத்துமாக்கள் மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில் செல்லும் இடத்தை வெளிப்படுத்தியுள்ளார். இயேசுவிற்குள் மரிப்பவர்கள் அவருடன் இருக்கப் போகிறார்கள். இந்த சரீரத்தில் இல்லாதிருப்பதானது அவருடன் நித்தியமாக இருப்பதாகும், மேலும் அவர்கள் முதல் உயிர்த்தெழுதலில் பங்கு பெற்று, இரண்டாம் மரணத்தை வல்லமையற்றதாக மாற்றுகிறார்கள். அவரை ஏற்றுக் கொள்ளாமல் மரித்தவர்களின் பெயர்கள் அவருடைய ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருக்காது, மேலும் அவர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினிக் கடலின் நரகத்திற்குச் செல்வார்கள். இவை மரித்தப் பின்னர் கிடைக்கும் மாறாத நிலையான இடங்களும் நிலைகளுமாகும், மரணத்திற்குப் பிறகு தேவனுடன் ஒப்புரவாவதற்கான எந்த வாய்ப்பும் இருக்காது. ஒரு மனிதன் மரிக்கும்போது எப்படிப்பட்டவனாக இருக்கிறானோ அவன் என்றென்றும் அப்படியே இருப்பான், எனவே மரித்த ஆத்துமாக்களுக்காக தேவனிடம் ஜெபிப்பதினால் எந்தப் பயனும் இல்லை. (லூக்கா 16:19-31; 2 கொரிந்தியர் 5:1-9; வெளிப்படுத்தல் 20:14-15.)

கிறிஸ்துவிலுள்ள ஒருவர் பகுதியளவு கிருபை நிலையில் மட்டுமே இருப்பதாகவும், இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்திற்குள் நுழைவதற்கு முன்பு தேவனின் கிருபையால் மறைக்கப்படாத பாவங்களை நீக்குவதற்காக மரணத்திற்குப் பிறகு ஒரு குறிப்பிட்ட அளவு துன்பத்தை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்றும் நம்புவது உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்வதாகும், இது கிறிஸ்துவின் இரத்தம் போதாது என்று எண்ணி, அதன் மூலம் கிருபையின் ஆவியை அவமதிப்பதாகும். (எபிரெயர் 10:29.) வேதம் இவ்வாறு அறிவிக்கிறது: கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. (எபேசியர் 2:8-9.) கிருபையினாலே என்றால், அது இனி கிரியைகளினாலல்ல. (ரோமர் 11:6.) இயேசு

கிறிஸ்துவிற்குள் பிள்ளைகளாக தமக்கென்று சுவீகரிக்கும்படி தேவன் நம்மை முன்குறித்துள்ளார்... அவரில் அவருடைய இரத்தத்தினாலே மீட்பு, அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படி பாவ மன்னிப்பு நமக்கு உண்டு. (எபேசியர் 1:5-7; ரோமர் 3:24.) இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் நாம் அனைவரும் தேவனின் பிள்ளைகள், (கலாத்தியர் 3:26.) மேலும், பிள்ளைகள் என்றால், தேவனுடைய சுதந்திரவாளிகள், கிறிஸ்துவுடன் உடன்பங்காளிகளாகும். (ரோமர் 8:17.)

தேவன் நமக்கு நித்திய ஜீவனைக் கொடுத்திருக்கிறார் இந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது என்பதின் பொருள் இதுவே. உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறது (1 யோவான் 5:10-13.)

அன்பானவர்களே, கிறிஸ்துவில் இருப்பவர்கள் மறுமையில் பாவங்களுக்காக வருத்தப்பட வேண்டியதில்லை, ஏனென்றால் அவர்களுடைய பாவங்கள் ஏற்கனவே இயேசுவில் நியாயந்தீர்க்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டு, ஒருபோதும் நினைவுகூரப்படாமல் இருக்கின்றன. (எபிரெயர் 8:12; 10:17-18.) கிறிஸ்துவில் இருப்பவர்கள் பாவத்திற்காக அல்ல, அவர்களுடைய கிரியைகளுக்கு ஏற்ப வெகுமதிகளுக்காக நியாயந்தீர்க்கப்படுவார்கள். நமக்கு வெகுமதி அளிப்பதற்காக அது எந்த வகையானது என்பதை வெளிப்படுத்த அக்கினி நம் செயல்களைச் சோதிக்கிறது. இது நம் ஆத்துமாக்களை பாவத்திலிருந்து சுத்திகரிப்பதற்காக அல்ல. ஒரு மனிதனின் கிரியைகள் சோதிக்கப்படும், அப்போது அவன் வெகுமதிகளை இழந்தாலும், அவன் இரட்சிக்கப்படுவான். (1 கொரிந்தியர் 3:8-15.) பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன், எனவே இயேசு மரித்து நமக்காக மரண தண்டனையை ஏற்றுக்கொண்டார். கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள், இந்த வாழ்க்கையில் அவருடைய துன்பங்களின் ஐக்கியத்தில் பங்கு பெறுவார்கள், சத்தியத்திற்காகவும், சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததற்காகவும், இயேசு நம் பாவங்களுக்குப் பரிகாரம் செய்ய அனுபவித்தப் பாடுகளை பகிர்ந்து கொள்வார்கள். நீதிக்காக அவர்கள் நிந்திக்கப்படுவார்கள், விமர்சிக்கப்படுவார்கள், கண்டனம் செய்யப்படுவார்கள், வெறுக்கப்படுவார்கள், பொய்யாகத் தூஷிக்கப்படுவார்கள், வார்த்தைக்காகவும், அவருடைய நாமத்திற்காகவும், சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததற்காகவும் துன்புறுத்தப்படுவார்கள், அதாவது, இயேசு நம்

பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் செய்யப்பட்டார், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார், தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒரே மத்தியஸ்தராகவும், தேவனை அடைய ஒரே வழியாகவும் தேவனின் வலது பாரிசத்தில் இருக்க பரமேறினார் என்று அறிவித்து, அவரை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்ட அனைவரையும் சேர்த்துகொள்ள அவர் மறுபடியும் வருகிறார். (1பேதுரு 2:20-23; 3:14-17; 4:13-17; பிலிப்பியர் 3:10; மத்தேயு 5:11; 1தீமோத்தேயு 2:5; யோவான் 14:1-6.)

சிலர் மரணம் வரை துன்புறுத்தப்படுவார்கள், (அப்போஸ்தலர் 7:59; 22:4.) ஆனால் கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது. (சங்கீதம் 116:15.) கிறிஸ்துவில் உள்ள அனைவரும் பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படுகிறார்கள், மேலும் அவர்கள் குற்றமற்றவர்கள், தூய்மையானவர்கள் மற்றும் கர்த்தருக்கு முன்பாக விலைமதிப்பற்றவர்கள் என்று தேவனால் அறிவிக்கப்படுகிறார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் அவர்களின் நிலைப்பாடு இதுவாக இருப்பதால், தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர், மேலும் கிறிஸ்துவில் உள்ளவர்கள் மீது குற்றமற்றவர்கள் என்ற தீர்ப்பை அவர் ஏற்கனவே அறிவித்துள்ளார். (ரோமர் 1:7; 8:33; 1 கொரிந்தியர் 1:2; 2 கொரிந்தியர்:1; எபேசியர் 1:1; பிலிப்பியர் 1:1; கொலோசெயர் 1:2.)

**தேவனுடைய கோபத்தின் ஏழு கலசங்களை ஊற்றுதல்:** (வெளிப்படுத்தல் 16.) இந்த யுகத்தை முடிவுக்குக் கொண்டுவரும் கடைசி ஏழு பயங்கரமான துன்பங்கள் இவை. இதில் எகிப்தில் நடந்ததைப்போன்ற சில வாதைகளும் இருக்கும், (யாத்திராகமம் 7-11.) ஆனால் மிருகத்தின் முத்திரையை உடையவர்கள் மீது குணப்படுத்த முடியாத புண்கள் வருவதால் இன்னும் தீவிரமடையும். கடல்களும் ஆறுகளும் இரத்தமாக மாறும், சூரியன் கடுமையான வெப்பத்தால் மனிதர்களை எரிக்கும், மனிதர்கள் தங்கள் தீய செயல்களிலிருந்து மனந்திரும்புவதற்குப் பதிலாக, அவருடைய நாமத்தை நிந்திப்பார்கள். அர்மகெதோன் போருக்கு வழி வகுக்க பெரிய நதி ஐப்பிராத்து வறண்டு போகும், ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆகாயத்தில் ஊற்றினான்; அப்பொழுது பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து: ஆயிற்று என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது. அது நாகரீகத்தை முழுமையாக வீழ்ச்சியடையச் செய்து இந்த யுகத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, புதிய யுகத்தைத் தொடங்க ஏழு அழிவுகளை அறிவித்தது.

இந்தக் கடைசிக் கலசம் ஊற்றப்படும்போது, பூமியில் என்ன நடக்கப்போகிறது என்பது பற்றிய வெளிப்பாடுகள்

இருக்கும். சத்தம் மற்றும் குழப்பத்தின் காட்சிகள், இடிமுழக்கங்கள் மற்றும் மின்னல்கள், மற்றும் முன்னெப்போதும் இல்லாத அளவிலான ஒரு பெரிய பூகம்பம், இது பெரிய நகரமான பாபிலோனை மூன்று பகுதிகளாகப் பிரித்து, சரிவை ஏற்படுத்தும், ஏனெனில் பெரிய நகரமாகிய பாபிலோன் தேவனுக்கு முன்பாக நினைவுகூரப்படும், தேவனின் கோபத்தின் பாத்திரத்தைக் குடிக்கும், அதே நேரத்தில் ஜாதிகளின் நகரங்கள் தரைமட்டமாக்கப்படும், மேலும் ஒவ்வொரு தீவு மற்றும் மலைகளும் மறைந்துவிடும், கல் மழை பூமியைத் தாக்கும்.

**ஒருங்கிணைந்த உலக மத அமைப்பு அல்லது மத பாபிலோனின் தீர்ப்பு**: (வெளிப்படுத்தல் 17.) உலகின் மதங்கள் ஒரு உலக மத ஒழுங்கின் கீழ் ஒன்றிணைக்க தங்களை நிலைநிறுத்திக் கொள்கின்றன. ஒருங்கிணைந்த மத அமைப்பு ஒரு பெரிய வேசி என்று விவரிக்கப்படுகிறது, அவள் … வேசிகளின் தாயான மகா பாபிலோனின் … பங்கைச் செய்வாள். ஏழு தலைகள் மற்றும் பத்து கொம்புகளுடன் ஒரு கருஞ்சிவப்பு நிற மிருகத்தின் மீது அமர்ந்திருக்கும் ஒரு பெண்ணாக அவள் சித்தரிக்கப்படுகிறாள், ஏழு தலைகள், ஏழு மலைகள் அல்லது மலைகளின் நகரத்தைக் குறிக்கின்றன, மேலும் பத்து கொம்புகள் பத்து பிராந்தியங்கள் அல்லது ராஜ்யங்களின் கூட்டமைப்பைக் குறிக்கின்றன. இந்தப் பத்துப் பிராந்தியங்களின் தலைவர்களான அந்திகிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசியும், ஒரு குறுகிய காலத்திற்கு ஐக்கிய மத அமைப்புடன் இணைந்து செயல்படுவார்கள், அந்தப் பிராந்தியங்களின் தலைவர்கள் தங்கள் அதிகாரம், மற்றும் இறையாண்மையை அந்திகிறிஸ்துவுக்குக் கொடுப்பார்கள், பின்னர் அந்திகிறிஸ்து அவர்களுக்கு எதிரானவனாக மாறி, தேவனின் வார்த்தைகளை நிறைவேற்றவும், அவருடைய இறையாண்மை நோக்கத்தை நிறைவேற்றவும் ஒருங்கிணைந்த மத அமைப்பை அழிப்பான். (வெளிப்படுத்தல் 17:9-17.)

வணிகத்தின் அல்லது வணிக பாபிலோனின் வீழ்ச்சி (வெளிப்படுத்தல் 18.) ஒரு தேவத்தூதன் வானத்திலிருந்து தனது மகிமையுடன் இறங்கி வருவார்
மகா பாபிலோன் விழுந்தது, விழுந்தது என்று கூறும் செய்தி (வெளிப்படுத்தல் 18:1-2.) மற்றும் அது பிசாசுகளின் வசிப்பிடமாக மாறியது … பரலோகத்திலிருந்து மற்றொரு குரல் அழிவுக்கு விதிக்கப்பட்ட பாபிலோனிய அமைப்புகளிலிருந்து மக்களை வெளியே அழைக்கிறது, இதனால் அவர்கள் அவளுடைய வாதைகள், பேரழிவுகள் மற்றும் அழிக்கப்படும் திட்டங்கள் மற்றும் பெரும் துயரம், துக்கம், மற்றும் அழிவை ஏற்படுத்தும் நிகழ்வுகளில் பங்கேற்க மாட்டார்கள். (வெளிப்படுத்தல் 18:4; எரேமியா

51:6-8; ஏசாயா 48:20; 21:9.)

ஒரு நாளில், உலக சந்தைகளைக் கட்டுப்படுத்திய வணிக நிறுவனங்கள் வீழ்ச்சியடையும், வணிகர்கள் தங்கள் ஆதாயம், இன்பம் மற்றும் ஆடம்பரத்தின் நம்பிக்கையை இழந்துவிட்டதால் துக்கப்படுவார்கள். செய்யவோ, விற்கவோ வாங்கவோ எதுவும் இருக்காது, அவர்களின் சரக்குகள் மற்றும் அவர்கள் விரும்பிய அனைத்து அழகான மற்றும் நல்ல பொருட்களும் இனி காணப்படாது. அவர்கள் வர்த்தகம் செய்த பொருட்கள், மனித கடத்தலில் அவர்கள் ஈடுபட்டது, மனிதர்களின் உடல்கள் மற்றும் ஆத்துமாக்களுடன் வர்த்தகம் செய்தவை மீண்டும் காணப்படாது. (வெளிப்படுத்தல் 18: 8-14.)

இந்தப் பொருட்களின் வணிகர்களும், கடல்சார் வணிகத்தில் ஈடுபட்டவர்களும், தங்கள் இழப்பைக் கண்டு அழுது புலம்புவார்கள். இசையின் சத்தம், பொழுதுபோக்கு உலகம், உற்பத்தி மற்றும் அரைக்கும் ஆலையின் சத்தம் இனி கேட்காது; ஒவ்வொரு ஒளியும் அணைந்துவிடும்; திருமண உறுதிமொழிகள் மீண்டும் ஒருபோதும் கேட்கப்படாது: ஏனென்றால், உங்கள் வணிகர்கள் பூமியின் பெரிய மனிதர்கள்; அவர்கள் சூனியத்தால் தேசங்களை ஏமாற்றினர், தீர்க்கதரிசிகள், பரிசுத்தவான்கள் மற்றும் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்ததற்காக கொல்லப்பட்ட அனைவரின் இரத்தத்திற்கும் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். (வெளிப்படுத்தல் 18:15-24; 17:6.)

அந்திகிறிஸ்து, தன்னை தேவனாகவும், பிராந்தியங்களின் ராஜாக்களுடன் உலகத்தின் ஆட்சியாளராகவும் அமைத்துக் கொள்வதில் வெற்றி பெற்றதால், கிறிஸ்து ஆட்சி பொறுப்பேற்க வரும் நாள் வரை ஆட்சி செய்வான். அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன் போர் செய்து, உலகத்தின் மீது தங்கள் ஆட்சியைத் தொடர முயற்சிப்பார்கள், ஆனால் நீதி உலகை ஆளும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவர்களை வெல்வார், அந்திகிறிஸ்துவும், முத்திரையைப் பெற்று, சிலையை வணங்கியவர்களும், கள்ளத்தீர்க்கதரிசியும் அக்கினிக்கடலில் தள்ளப்படுவார்கள். (வெளிப்படுத்தல் 17:12-14; 19:20.)

இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவுமாக, அவரோடு இருப்பவர்கள், அழைக்கப்பட்டவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், உண்மையுள்ளவர்கள் என ஆட்சி செய்யத் தொடங்குவதால், நீதியுடன் கூடிய ஆயிரம் ஆண்டுகள் சமாதானம் இருக்கும். இந்த நேரத்தில், பிசாசு பாதாளக் குழியில் கட்டப்படுவான், ஆயிரம் ஆண்டுகள் முடிந்ததும் விடுவிக்கப்படுவான். அவன் விடுதலையானதைத் தொடர்ந்து ஜாதிகள், பிசாசு மற்றும் கிறிஸ்து இல்லாதவர்கள் மீதான நியாயத்தீர்ப்பு இருக்கும்.

அவர்கள் அக்கினிக் கடலில் தள்ளப்படுவார்கள். (வெளிப்படுத்தல் 20:7-10, 14-15.) கிறிஸ்துவில் இருப்பவர்கள் புதிய பூமிய புதிய வானத்தின் கீழ் தேவனுடன் என்றென்றும் பரதீசுல் இருப்பார்கள். (வெளிப்படுத்தல் 21:1-4.)

அன்பானவர்களே, இந்த யுகத்தின் பேரழிவுகரமான முடிவு மற்றும் இயேசுவை நிராகரிப்பவர்களுக்கான இந்த நியாயத்தீர்ப்புகள் வரும்போது நீங்கள் பூமியில் இருக்க வேண்டியதில்லை. பிசாசு தேவனின் அருளிய தனது நிலையிலிருந்து விழுந்து, அந்தி கிறிஸ்து மற்றும் கள்ளத் தீர்க்கதரிசியுடன் அக்கினிக் கடலின் ஆழத்திற்குச் செல்ல நியமிக்கப்பட்டான், மேலும் அவர்களுடன் இருக்க உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. இப்போதும் கூட, அந்தி கிறிஸ்துவின் ஆவி உலகத்தை தேவனுக்கு எதிராக ஒழுங்கமைப்பதில் தீவிரமாக செயல்பட்டு, இயேசு கிறிஸ்துவை மனிதன் எதிர்க்கவும் நிராகரிக்கவும், அவர்களின் இரட்சிப்பைக் கொள்ளையடிக்கவும் செய்கிறது (1 யோவான் 2:18, 22; 4:3; எபிரெயர் 12:25.) அதே நேரத்தில், நற்செய்தியைப் பிரசங்கிப்பதன் மூலம் இரட்சிப்படைய மனிதர்களை இயேசு கிறிஸ்துவிடம் ஈர்க்கிறது. (யோவான் 12:32; 1தெசலோனிக்கேயர் 5:9.) இரட்சிப்பு என்பது பேரழிவிலிருந்து பாதுகாத்தல், பாவத்தின் வல்லமை மற்றும் தண்டனையிலிருந்து மீட்பின் மூலம் விடுதலை, அழியாத, தூய்மையான மற்றும் நிரந்தரமான, ஒதுக்கப்பட்ட மற்றும் பரலோகத்தில் பாதுகாக்கப்பட்ட ஒரு சுதந்தரத்திற்குக் கொண்டு செல்வது, எனவே இரட்சிப்பு என்பது வேறு எந்த பெயரில் அழைக்கப்பட்டாலும் மதத்தில் கிடையாது, ஆனால் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் மட்டுமே இருக்கிறது. (அப்போஸ்தலர் 4:12.)

இந்த வாழ்க்கையில் சத்தியம் இல்லாத ஐசுவரியவான்கள், தேவனுடைய வார்த்தை, அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைத்து, அழிவில் முடிவடையும் விஷயங்களிலோ அல்லது நிச்சயமற்ற செல்வங்களிலோ நம்பிக்கை வைக்காமல் இருக்க அறிவுறுத்துகிறது. ஏனெனில், செல்வங்களின் மிகுதி பொய்யான நம்பிக்கையையும் பாதுகாப்பின் தோற்றத்தையும் தரக்கூடும், அது ஆதாயம் என்று கருதினால், தெய்வபக்தியற்றுப்போகும். இந்த உலகில் ஒரே உறுதியான விஷயம் பரலோகத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும் தேவனுடைய வார்த்தையாகும். இது உங்களுக்கு நற்செய்தியின் மூலம் அறிவிக்கப்படும் வார்த்தையாக இருக்கிறது. (1 தீமோத்தேயு 6:3-10; யாக்கோபு 5:1-3; லூக்கா 12:21; சங்கீதம் 119: 89-91; பேதுரு:22-25.)

ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும், நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து

உணர்ந்திருக்கிறதைக்குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரேமியா 9:23-24; எசேக்கியேல் 7:19.)

என் நண்பரே, தேவன் நம் உலக வாழ்க்கைக்குத் தேவையான செல்வங்களை நம்மிடமிருந்து பறிக்கவில்லை, மாறாக, தம்முடைய வார்த்தையில் நிலைத்திருந்து, நமக்குச் சகலத்தையும் நிறைவாகக் கொடுக்கும் தேவனை விட்டு விலகி, செல்வந்தர்கள் தங்கள் செல்வங்களில் நம்பிக்கை வைப்பதை எளிதாக்கும் கண்ணியிலிருந்து தப்பிக்கச் சொல்கிறார். (வெளிப்படுத்தல் 3:17-18.) உங்கள் செல்வங்களின் மேல் நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக, உங்கள் செல்வங்களைப் பயன்படுத்தி அவர் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்று தேவன் கூறுகிறார். இழந்துபோன மனிதகுலத்தை நித்திய ஜீவனுக்கும் இயேசு கிறிஸ்துவினால் வரும் ஈவுக்கும் கொண்டு வருவதில் அவர் நோக்கத்தை நிறைவேற்ற அதைப் பயன்படுத்துவதன் மூலம், அனைத்து ஜாதிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன் மூலம், மனிதன் இயேசு கிறிஸ்துவை தங்கள் ஆத்தமாவின் இரட்சகராக ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவதன் மூலம், வரவிருக்கும் காலத்திற்கு ஒரு நல்ல அடித்தளத்தை வைப்பதன் மூலம் நம்முடைய செல்வத்தை நாம் பயன்படுத்த வேண்டும் (1 தீமோத்தேயு 6:17-19.)

மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? என்று இயேசு கூறுகிறார். (மத்தேயு 16:26; மாற்கு 8:36-37.)

உங்கள் தற்காலிக செழிப்பான நிலை, உங்கள் நித்திய நிலையைப் பற்றிய உங்கள் பார்வையை மறைக்க அனுமதிப்பீர்களா, மேலும் உங்கள் ஆத்துமாவின் இரட்சிப்பைக் கவனிக்காமல், உங்கள் ஆத்துமாவை தற்காலிக செல்வங்களின் மேல் சார்ந்துகொண்டு, மகிமையின் நம்பிக்கையான கிறிஸ்துவிலுள்ள தேவனின் உண்மையான பொக்கிஷங்கள் இல்லாமல் அவிசுவாசத்தில் இருக்க அனுமதிப்பீர்களா? (வெளிப்படுத்தல் 3:17-18; எபேசியர் 1:18.)

ஒரு மனிதனின் ஜீவன் அவன் வைத்திருக்கும் ஏராளமான பொருட்களில் இல்லை என்று இயேசு கூறினார், ஏனெனில் பூமியில் வைக்கப்பட்டுள்ள அனைத்து பொக்கிஷங்களும் அழிந்துபோகும், அதே நேரத்தில் பரலோகத்தில் வைக்கப்பட்டுள்ள அனைத்து பொக்கிஷங்களும் நித்தியமாக பாதுகாப்பாக இருக்கும். எனவே, நாம் இம்மைக்காக மட்டும் வாழக்கூடாது, நித்திய பொக்கிஷத்திற்கு நம் ஆத்துமாவை அலட்சியப்படுத்தாமல்

நித்திய வெளிச்சத்தில் நம் வாழ்க்கையை வாழ வேண்டும், நம்முடையதை வைத்துக்கொண்டு, அவருடையதை இழப்பதற்குப் பதிலாக, அவருடையதைக் கண்டுபிடிக்க நம் ஜீவனை இழக்க வேண்டும், அதாவது, நம் வாழ்க்கையின் மிகப்பெரிய பயன்பாடு, மனிதனை இயேசு கிறிஸ்துவிடம் கொண்டு வருவதுதான், இதுவே வாழ்க்கையின் உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும். (மத்தேயு 10:39.)

உங்கள் பரபரப்பான நிழ்ச்சி நிரலில் இருந்து சற்று நேரம் ஒதுக்குங்கள். சிறிது நேரம் பின்நோக்கிப் பாருங்கள். உங்கள் வாழ்க்கையை நீண்ட நேரம் கூர்ந்து கவனித்துப் பாருங்கள், நீங்கள் எங்கு செல்கிறீர்கள் என்றும், இந்த வாழ்க்கையை விட்டு வெளியேற வேண்டிய நேரம் வரும்போது நீங்கள் அங்கு இருக்க விரும்புகிறீர்களா என்றும் பாருங்கள்.

வறியவர்கள் என்பவர்கள் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் இல்லாதவர்கள் அல்ல, மாறாக அவரில்லாமல் இருப்பவர்கள்; செல்வந்தர்கள் என்பவர்கள் மிகுதியான பொருட்களைக் கொண்டவர்கள் அல்ல, மாறாக அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள், அவர்கள் தேவனிடம் செல்வந்தர்கள் என்று இயேசு கூறினார். (லூக்கா 12:21; வெளிப்படுத்தல் 3:17-22.) இயேசு கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே தேவனை அணுக முடியும், வேறு எந்த நாமத்தினாலும் அல்ல, பதவிகள் அல்லது பட்டங்கள் அல்லது நமது வங்கிக் கணக்குகளின் நிலையிலும் அல்ல என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? (எபிரெயர் 10:19-20; யோவான் 14:6.)

அன்பானவர்களே! வேதத்தின் வெளிச்சத்தில், தயவுசெய்து பின்வரும் கேள்விகளைக் கேட்க என்னை அனுமதியுங்கள். நீங்கள் தேவனிடம் செல்வந்தரா அல்லது வறியவரா? நீங்கள் பணமும் செல்வமும் உள்ள பணக்காரராக இருந்து தேவனிடம் ஆவிக்குரிய ரீதியில் வறியவராக இருக்கிறீர்களா? (லூக்கா 12:16-21; வெளிப்படுத்தல் 3:17-20; 1 தீமோத்தேயு 6:17-19.) நீங்கள் இப்போது மரிக்க நேரிட்டால், எங்கு செல்வீர்கள்? (லூக்கா 16:19-31.) பூமியில் மகா உபத்திரவத்தின் சுத்திகரிப்பு நியாயத்தீர்ப்புகள் வருவதற்கு முன்பு இயேசு தம்முடைய பரிசுத்தவான்களைக் கூட்டிச் சேர்க்க இப்போது வந்தால், நீங்கள் அவருடன் சென்று இந்த நியாயத்தீர்ப்புகளிலிருந்து தப்பித்துக்கொள்வீர்களா, அல்லது அவற்றை எதிர்கொள்ள இங்கே இருப்பீர்களா? அவற்றை எதிர்த்து நிற்க முடியுமா? (1தெசலோனிக்கேயர் 4:13-18; 1கொரிந்தியர் 15:51-57; மத்தேயு 24:21.)

இவை செல்லுபடியாகும் மற்றும் புத்திசாலித்தனமான கேள்விகள் என்பதை நீங்கள் என்னுடன் ஒப்புக் கொள்ள வேண்டும், மேலும் அவற்றுக்கு

உங்கள் அவசர கவனம் தேவை. நீங்கள் எங்கே இருப்பீர்கள்? தேவனுடைய சிங்காசனத்திற்கு முன் இயேசுவுடன் இருப்பீர்களா? (எபேசியர் 2:4-6; 2 கொரிந்தியர் 5:8.) அல்லது அக்கினிக் கடலுக்கு உங்கள் இறுதி இலக்கை நோக்கி காத்திருக்கும் நரகத்தில் இருப்பீர்களா? (லூக்கா 16:23.) அல்லது பூமியில் உபத்திரவ நியாயத்தீர்ப்புகளைக் கடந்து செல்வீர்களா? (மத்தேயு 24:21.) நீங்கள் எங்கே இருப்பீர்கள்? தங்கள் இழந்து துக்கித்து அழுது புலம்புபவர்களில் ஒருவராக நீங்கள் இருப்பீர்களா? (வெளிப்படுத்தல் 18:15.) அல்லது நீங்கள் இயேசுவுடன் இருப்பீர்களா? நீங்கள் நேர்மையாக பதிலளித்து உங்கள் எதிர்காலத்தையும் நித்தியத்தையும் இப்போது தீர்மானிக்க வேண்டும். தாமதிக்க நேரமில்லை. இது உங்கள் ஆத்துமாவுடன் விளையாட வேண்டிய நேரம் அல்ல. நேரம் அவசரம். உங்கள் நாட்கள் எண்ணப்பட்டுள்ளன. உங்களுக்கு எத்தனை நாட்கள் மீதமுள்ளன என்று உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்கு எவ்வளவு நேரம் மீதமுள்ளது, உங்களுக்குத் தெரியுமா? உங்கள் பிறப்புச் சான்றிதழில் உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டதால் நீங்கள் இந்த உலகத்திற்கு எப்போது வந்தீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும், ஆனால் நீங்கள் எப்போது புறப்படுவீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? இயேசு எப்போது வருவார் என்று தெரியுமா? தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்திலும், நம்மீது இருக்கும் காலங்களின் அடையாளங்களின் வெளிச்சத்திலும், எந்த நேரத்திலும் இருவரில் ஒருவர் எடுத்துகொள்ளப்படலாம், நீதி வாசமாயிருக்கும் இடத்தில் இயேசுவுடன் இருக்க நீங்கள் தயாரா? (மத்தேயு 24:42-44.)

உங்கள் எதிர்காலத்தையும் நித்திய முடிவையும் பிசாசு தீர்மானிக்க அனுமதிக்காதீர்கள், இயேசு உண்மையான சமாதானம் மற்றும் பாதுகாப்புள்ளவர். அவர் நமக்கு ஏராளமான மற்றும் நித்திய ஜீவனைக் கொடுக்க வந்திருக்கிறார், ஆனால் இந்த ஜீவனைப் பெற, நீங்கள் அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும், மேலும் ஆயிரம் ஆண்டு ஆட்சியில் அவருடன் ஆட்சி செய்வீர்கள், பின்னர் நீதி வாசமாயிருக்கும் புதிய பூமியில் அவருடன் செல்ல வேண்டும், மேலும் ஒரு பரிபூரண உலகில், பரிபூரண மக்களுடன் ஒரு பரிபூரண வாழ்க்கையை வாழ வேண்டும் என்ற அனைத்து மனிதனின் ஆசைகளும் எண்ணங்களும் நிறைவேறும், என் நண்பரே இங்குதான் நீங்கள் சேர்ந்திருக்கிறீர்கள். தேவனுடன் தொடங்கி ஏதேன் தோட்டத்தில் பரதீசுவில் தங்கள் இடத்தை இழந்த மனிதன், புதிய பூமியில் இயேசு கிறிஸ்து மூலம் தேவனுடன் பரதீசுவிற்கு திரும்புவான், இது உங்களுக்காக தேவன் ஆயத்தப்படுத்திய இடம். (ஆதியாகமம் 3:23-24; யோவான் 10:10; 14:1-4; வெளிப்படுத்தல் 20:6; 21:1-6; ஏசாயா 65:16-17.)

இவை புத்திசாலித்தனமான கேள்விகள் என்பதை

நீங்கள் என்னுடன் ஒப்புக் கொள்ள வேண்டும், மேலும் அவற்றுக்கு உங்கள் அவசர கவனம் தேவை. நீங்கள் எங்கே இருப்பீர்கள்? தேவனின் சிங்காசனத்திற்கு முன் இயேசுவுடன் இருப்பீர்களா? (எபேசியர் 2:4-6; 2 கொரிந்தியர் 5:8.) அல்லது நரகத்தில் இருப்பீர்களா? (லூக்கா 16:23.) அல்லது பூமியில் உபத்திரவ நியாயத்தீர்ப்புகளைக் கடந்து செல்வீர்களா? (மத்தேயு 24:21.) நீங்கள் எங்கே இருப்பீர்கள்? தங்கள் இழப்புகளுக்காகத் துக்கித்து அழுது புலம்புபவர்களில் ஒருவராக நீங்கள் இருப்பீர்களா? (வெளிப்படுத்தல் 18:15.) அல்லது நீங்கள் இயேசுவுடன் இருப்பீர்களா? நீங்கள் நேர்மையாக பதிலளித்து உங்கள் எதிர்காலத்தையும் நித்தியத்தையும் இப்போது தீர்மானிக்க வேண்டும். தாமதிக்க நேரமில்லை. இது உங்கள் ஆத்துமாவுடன் விளையாட வேண்டிய நேரம் அல்ல. உங்கள் நாட்கள் எண்ணப்பட்டுள்ளன. உங்களுக்கு எத்தனை நாட்கள் மீதமுள்ளன என்று உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்கு எவ்வளவு நேரம் மீதமுள்ளது, உங்களுக்குத் தெரியுமா? உங்கள் பிறப்புச் சான்றிதழில் உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டதால் நீங்கள் இந்த உலகத்திற்கு எப்போது வந்தீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும், ஆனால் நீங்கள் எப்போது புறப்படுவீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? இயேசு எப்போது வருவார் தெரியுமா? தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்திலும், நம்முன் இருக்கும் காலங்களின் அடையாளங்களின் வெளிச்சத்திலும், எந்த நேரத்திலும் இருவரில் ஒருவர் எடுத்துகொள்ளப்படலாம், நீதி வாசமாயிருக்கும் இடத்தில் இயேசுவுடன் இருக்க நீங்கள் ஆயத்தமா? (மத்தேயு 24:42-44.)

உங்கள் எதிர்காலத்தையும் நித்திய முடிவையும் பிசாசு தீர்மானிக்க அனுமதிக்காதீர்கள், இயேசு உண்மையான சமாதானம் மற்றும் பாதுகாப்புள்ள மனிதர். அவர் நமக்கு ஏராளமான மற்றும் நித்திய ஜீவனைக் கொடுக்க வந்திருக்கிறார், ஆனால் இந்த ஜீவனைப் பெற, நீங்கள் அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நீங்கள் நம்பிக்கையற்ற நிலையில் இருந்து பிசாசுடன் அக்கினிக் கடலில் முடிவதற்கு எந்த நல்ல காரணமோ அல்லது சாக்குப்போக்கோ இல்லை, நீங்கள் அங்கு இருக்க வேண்டியதில்லை... கடல்-{கிரேக்க-லிம்னே} என்பது கிட்டத்தட்ட குறிப்பிட்ட விஷயமாக இருப்பது, கடந்த காலத்தைப் போலவே எதிர்காலத்தில் தொடர்வது, கீழே தள்ளப்பட்டு மீண்டும் ஒருபோதும் எழுந்திருக்காமல் இருப்பது, சரியான முடிவிற்கு அருகில் இருப்பது மற்றும் ஒருபோதும் மூழ்க முடியாது. அக்கினி {கிரேக்க-pur-} என்பது துக்கம், கோபம், மன வலி மற்றும் சித்திரவதை ஆகியவற்றால் எரிக்கப்படுவது, ஏனெனில் ஒருவரின் நினைவு மற்றும் மனசாட்சி அவர்கள் எங்கு

இருந்திருக்கலாம், எங்கு இருக்கக் கூடாது என்பதை அறிந்து அவர்களை வேதனைப்படுத்த தொடர்ந்து வாழும். இவை அனைத்தும் சுயமாக ஏற்படுத்தப்படும், இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ள அவர்களுக்கு தேவன் கொடுத்த அனைத்து வாய்ப்புகளையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, இது உங்கள் கடைசியாக இருக்கக்கூடிய வாய்ப்புகளையும் நினைவில் கொள்வதாகும். இயேசுவை நிராகரிப்பது என்பது உங்கள் ஆத்துமாவை அக்கினிக் கடலில் தள்ளுவதாகும். (மாற்கு 16:15-16.) உங்களுக்கு அங்கு எந்த வேலையும் இல்லை. நீங்கள் அந்த இடத்திற்கு சொந்தமானவர்கள் அல்ல. அந்தக் கடல் பிசாசுக்காகத் ஆயத்தமாக உள்ளது, உங்களுக்காக அல்ல. பிசாசும் சாத்தானுமாகிய அந்தப் பழைய சர்ப்பம், திரும்பி வரமுடியாத அக்கினிக் கடலுக்குள் உங்களைக் கொண்டுபோக அனுமதிக்காதீர்கள். (வெளிப்படுத்தல் 20:10.)

தேவனிடம் ஒப்புரவாகுங்கள் என்று நான் உங்களைக் கெஞ்சுகிறேன். இது ஒரு தனிப்பட்ட முடிவு. இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனோடு ஒப்புரவாகுங்கள். தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான ஒரே மத்தியஸ்தர் அவரே. நமது மீட்பிற்கான விலைக்கிரயத்தை இயேசு கிறிஸ்து முழுமையாக செலுத்தினார். தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான இடைவெளி அவருடைய மரணத்தின் மூலம் நமது பாவக் கணக்கை நிர்ணயித்து, அவரை ஏற்றுக்கொள்ள விரும்பும் அனைவருக்கும் இரட்சிப்பைக் கிடைக்கச் செய்தது. உங்கள் இருதயத்தைத் திறந்து, இயேசுவை உங்கள் வாழ்க்கையில் அனுமதிக்கும்படி நான் உங்களைக் கெஞ்சுகிறேன், அவர் உங்களைத் தம்முடன் என்றென்றும் நிலைத்திருக்கும் மகிமைக்கு அழைத்துச் செல்வார். இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. (1 தீமோத்தேயு 2:6; 2 கொரிந்தியர் 5:17-21; வெளிப்படுத்தல் 21:5.)

இயேசு உங்கள் வாழ்க்கைக்கு வெளியே இருந்தால், இந்தக் கணத்திலேயே உங்களை இரட்சிக்க உள்ளே வர விரும்புகிறார், ஆனால் நீங்கள் மனமுவந்து அவருக்கு இருதயத்தைத் திறக்காவிட்டால் வரமாட்டார். (வெளிப்படுத்தல் 3:20.)

மனிதர்கள் வானிலை முறைகளையும், தட்பவெப்ப நிலைகளில் ஏற்படும் மாற்றங்களையும் அறிந்துகொள்ள முயற்சி செய்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள், அதனால் அவர்கள் அதற்கேற்ப ஆயத்தமாகி, ஏற்படும் விளைவுகளை அனுபவிக்காமல் இருக்க முடியும். அதேபோல், இயேசு உங்களிடம் கூறுகிறார், அவருடைய வார்த்தைக்கு அதிக கவனம் செலுத்துங்கள், இந்த யுகத்திற்கான உச்சக்கட்ட அடையாளங்களை அறிந்துகொள்ளுங்கள், மேலும் உங்கள் ஆத்துமாவின்

விவகாரங்களில் உங்களை ஞானமுள்ளவர்களாக மாற்றுவதற்காகவும், புதிய பூமியில் வாழ ஆயத்தமாகவும் இருக்க உங்களை ஆயத்தப்படுத்தவும், அவரை உங்கள் இரட்சகராக ஏற்று, புதிய வானத்தின் கீழ் வாழத் தயாராகவும் இருங்கள், அவரை மறுத்து நிராகரிப்பதன் மூலம் புதிய பூமியில் இல்லாததன் விளைவுகளை அனுபவிக்க வேண்டாம்.

இயேசு உங்களைத் தம்மிடம் வந்து நித்திய ஜீவனைப் பெற அழைக்கிறார். இவற்றை உங்களுக்குச் சாட்சியாகக் கூற தம்முடைய தூதனை அனுப்பியதாக இயேசு கூறினார். (வெளிப்படுத்தல் 22:16.) அவர் அல்பாவும் ஒமேகாவும், ஆதியும் அந்தமும், இருந்தவரும், வரப்போகிறவரும், சர்வவல்லமையுள்ளவரும், முதலும் கடைசியுமானவர். எல்லாவற்றையும் உண்டாக்கிய முதல் வார்த்தையைக் கொண்டிருந்தவருக்கு, எல்லாவற்றையும் அவற்றின் நியமிக்கப்பட்ட முடிவுக்குக் கொண்டுவரும் கடைசி வார்த்தையும் உள்ளது. (கொலோசெயர் 1:16-17; வெளிப்படுத்தல் 1:8-11, 17-19; 22:13; 21:4-5.)

பின்பு அவர் என்னிடம், "எழுது: இந்த வார்த்தைகள் உண்மையும் உண்மையுமானவை" என்றார். (வெளிப்படுத்தல் 21:5.) ... பரிசுத்த தீர்க்கதரிசிகளின் தேவனாகிய கர்த்தர் விரைவில் நடக்க வேண்டியவற்றைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கத் தம்முடைய தூதனை அனுப்பினார். (வெளிப்படுத்தல் 22:6-7.)

மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன் என்று இயேசு தம்மை வெளிப்படுத்தினார். (கொலோசெயர் 1:16-18; வெளிப்படுத்தல் 1:17-18.) இயேசு மரணம் மற்றும் மரித்தவர்களின் சாம்ராஜ்யத்தின் மீது முழுமையான அதிகாரத்தைக் கொண்டுள்ளார். அவர் காலத்தையும் நித்தியத்தையும் உள்ளடக்கியுள்ளார், மேலும் அவரை விசுவாசித்து தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் அனைத்து மனிதகுலத்திற்கும் தமது நித்திய ராஜ்யத்தைத் திறந்துள்ளார்.

நீங்கள் இயேசுவை உங்கள் இரட்சகராக இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், தயவுசெய்து இப்போதே ஏற்றுக்கொள்ளுங்கள், அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவருடைய ராஜ்யத்தில் பிறக்கவும், தேவனுடைய ராஜ்யத்தின் குடிமகனாக உங்கள் பெயரை பரலோகத்தில் அவருடைய ஜீவப் புத்தகத்தில் பதிவு செய்துகொள்ளுங்கள். (ரோமர் 10:9-10; யோவான் 1:12; 3:5-7; எபேசியர் 2:19; வெளிப்படுத்தல் 21:27.)

அறிக்கை ஜெபம்: அன்புள்ள தேவனே, இரட்சிப்பானது இயேசு கிறிஸ்துவினால் வரும் உமது ஈவு

என்றும் அது கிரியைகளினால்ல என்றும் எனக்கு வெளிப்படுத்தியதற்காக நான் உமக்கு நன்றி கூறுகிறேன். என்னை இரட்சிக்க மதச் செயல்பாடுகள் மற்றும் பிற செயல்களை நான் நம்பியிருக்கிறேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். இப்போது நான் என் வழிகளின் பிழையிலிருந்து திரும்பி இரட்சிப்புக்காக இயேசு கிறிஸ்துவிடம் திரும்புகிறேன்.

கர்த்தராகிய இயேசுவே, நீர் என் பாவங்களுக்காக மரித்தீர், மரித்தோரிலிருந்து எழுந்தீர் என்று என் இருதயத்தில் விசுவாசிக்கிறேன். நான் இப்போது உம்மை ஏற்றுக்கொண்டு, நீர் என் இரட்சகரும் என் ஆண்டவருமாயிருக்கிறீர் என்றும், மகிமையில் என்றென்றும் இருக்கிறவர் என்றும் என் வாயால் அறிக்கையிடுகிறேன். வரவிருக்கும் ஆக்கினையிலிருந்து என்னை மீட்டதற்கு நன்றி, உமது பரிசுத்த ஆவியால் என்னை நிரப்பி, உமக்கு சாட்சியாக இருக்க எனக்கு தைரியத்தைத் தந்தருளும். ஆமென்.

# அதிகாரம் 12

## பிறப்பு முதல் மரணம் வரை பிறகு

பிறப்பதற்கு ஒரு காலமும் மரிப்பதற்கு ஒரு காலமும் இருக்கிறது, எனவே மரணத்துடனான நமது சந்திப்பு வருவதற்கு முன்பு நாம் எங்கு செல்கிறோம் என்பதை அறிந்து கொள்வது அவசியம், ஏனென்றால் அந்த நேரத்தில் நமது இலக்கை மாற்றுவது சாத்தியமற்றது, மேலும் அது மட்டுமே மீண்டும் திட்டமிட முடியாத ஒரே சந்திப்பு. இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணியநாள். (பிரசங்கி 3:2; எபிரெயர் 9:27; லூக்கா 16:22-31; 2 கொரிந்தியர் 6:2.)

இந்த வேதவாக்கியங்கள் மனிதனுக்கு தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்துவதாகும், மேலும் நாம் யார், நாம் எவ்வாறு படைக்கப்பட்டோம், பூமியில் முதல் ஆணும் பெண்ணும் யார், அவர்கள் எங்கு வைக்கப்பட்டார்கள், அவர்களின் வாழ்க்கைக்கும் அவர்களின் சந்ததியினருக்கும் தேவனின் நோக்கம் என்ன, முதல் மனிதனையும் பெண்ணையும் எது மரணத்திற்கு ஆளாக்கியது, தேவன் தமது கிருபையால் அவர்களை மரணமற்ற அழிவற்ற சரீரத்தை விட்டு, மரணமுள்ள மனிதர்களாகத் தம்முடைய பிரசன்னத்திலிருந்து எவ்வாறு வெளியேற்ற வேண்டியிருந்தது, வாக்குறுதியளிக்கப்பட்ட இரட்சகர் மூலம் அழியாத மனிதர்களாக அழியாத உடலில் நுழைவதை சாத்தியமாக்கினார், அவர் பாவமின்றி கருத்தரிக்கப்படுவார், நம்முடைய பாவங்களுக்காக மரித்து தேவனுடன் நம்மை ஒப்புரவாக்குவார் என்பதை வெளிப்படுத்துகிறது (1 கொரிந்தியர் 15:45-57; ஆதியாகமம் 3:15; 1 பேதுரு 1:3-5.)

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் சிருஷ்டித்தார். தேவன் மனிதனை, ஆணும் பெண்ணுமாக தம்முடைய சாயலிலும், தம்முடைய ரூபத்தின்படியேயும் படைத்தார். பூமியின் மண்ணிலிருந்து மனிதனை உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியில் ஊதினார். மனிதன் ஜீவ ஆத்துமாவானான். முதல் மனிதனாகிய ஆதாமின் விலா எலும்பிலிருந்து, தேவன் பெண்ணை படைத்து, அவளை ஆதாமிடம் கொண்டு வந்தார். அதனால் அவன் பலுகிப் பெருகி, பூமியை மனிதர்களால் நிரப்பினான். அதனால்,

தேவனுடனான ஐக்கியத்தின் இன்பத்தையும், அவர்கள் தேவனுடைய ஏற்பாட்டை அனுபவிப்பதில் மகிழ்ச்சியையும் காண்டான். ஆதாமும் ஏவாளும் நிர்வாணமாக இருந்தும் வெட்கப்படவில்லை, மேலும் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்துடன் அவர்கள் படைக்கப்பட்டார்கள்.

தேவன் ஆதாமையும் ஏவாளையும் ஏதேன் தோட்டத்தில் அவர்களுடன் ஐக்கியம் கொள்வதற்காக வைத்தார், மேலும் பூமியையும் அதன் உயிரினங்களையும் அவர்கள் ஆளும்படி கட்டளையிட்டார், தோட்டத்தைப் பயிரிட்டு அதை ஆண்டுக்கொள்ளும் பொறுப்பையும் அவர்களிடம் ஒப்படைத்தார்.

பூமியிலிருந்து உணவுக்கு நல்ல மரங்களையெல்லாம் தேவன் வளரச் செய்தார், தோட்டத்தின் நடுவில் ஜீவ விருட்சமும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் இருந்தது. தேவன் ஆதாமுக்கு எல்லா மரங்களிலிருந்தும் சுதந்திரமாகச் சாப்பிடக் கட்டளையிட்டார், ஆனால் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்திலிருந்து அவன் சாப்பிடக்கூடாது: ஏனென்றால் அவன் அதைப் புசிக்கும் நாளில் அவன் நிச்சயமாகச் சாவான். அந்த கட்டளையானது நல்லது, ஏனென்றால் அது ஆதாமுக்கு மரத்தைப் பற்றிய தனது விருப்பத்தைத் தெரியப்படுத்தியது. அது ஆதாமுக்கு தனது ஆத்துமாவையும், தன் எதிர்கால சந்ததியினரையும், அவர்களின் நல்வாழ்வையும் தன் படைப்பாளரின் வார்த்தையில் ஒப்படைக்க வைத்தது. மனிதனைப் படைத்ததன் நோக்கத்தை நிறைவேற்ற, ஆதாம் தேவனுடைய வார்த்தையைக் கடைப்பிடிக்காமல் தன்னைப் படைத்தவர் மேல் அவிவாசம் கொண்டு, தேவனுடைய படைப்பான சர்ப்பத்தின் வார்த்தையை நம்பி, புசிக்கத் தேர்ந்தெடுத்து தனது ஆத்துமாவையும், தன் சந்ததியினரின் ஆத்துமாக்களையும் பாவத்திற்குள்ளாக்கினான்.

நன்மை தீமை அறியும் விருட்சத்தில் பங்கெடுப்பதால் ஏற்படும் தீய விளைவுகளைப் பற்றிய அறிவு ஆதாமுக்கும் ஏவாளுக்கும் வழங்கப்பட்டிருந்தாலும், சர்ப்பம் ஒரு படைக்கப்பட்ட மிருகம் என்றும், அது அவர்களின் படைப்பின் நோக்கத்துடன் எந்த தொடர்பும் இல்லாதது என்றும் அறிந்திருந்தாலும், தேவன் சர்ப்பத்தின் மீது அவர்களுக்குக் கொடுத்த ஆதிக்கத்தைச் செலுத்துவதற்குப் பதிலாக, சர்ப்பம் தங்கள் நோக்கம், அதைப் புசித்தால் தாங்கள் என்னவாக இருப்போம்

என்பதைப் பற்றிய உண்மையைச் சொல்கிறது என்றும், தேவன் சொன்னது போல் நிச்சயமாக மரிக்க மாட்டோம்,மாறாக நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல இருப்போம் என்றும் நம்பினர். அவர்கள் பாம்பின் தீமையான வார்த்தையை நம்பி, நல்லது என்ற தேவனின் வார்த்தையை எதிர்த்து, மரத்தின் கனியைப் புசித்தனர்.

அந்த நேரத்தில் அவர்கள் சர்ப்பத்தின் தந்திரத்தால் ஏமாற்றப்பட்டதை அறிந்தார்கள், தங்கள் நிர்வாணத்தைக் கண்டு வெட்கப்பட்டார்கள், தங்கள் சொந்த உறுதியால், அத்தி இலைகளை ஒன்றாக தைத்து, தேவன் மட்டுமே மறைக்கக்கூடிய தங்கள் நிர்வாணத்தை மறைக்க தங்களை மூடிக்கொண்டார்கள். தேவனின் குரலைக் கேட்டு, அவர்கள் பாவம் செய்து, அவருடைய சாயலையும், ரூபத்தையும் இழந்து, அவருடைய ஐக்கியத்தையும், சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் இழந்து, மரணத்தின் தண்டனையின் கீழ் தங்களை வைத்துக்கொண்டு, தோட்டத்திலிருந்தும் தேவனின் பிரசன்னத்திலிருந்தும் துரத்தப்பட்டு, தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டுப் பிறக்கும் தங்கள் எதிர்கால சந்ததியினருடன் தீமையின் விளைவுகளை அனுபவிக்க, தேவன் கூறினது போல் மரணத்தில் முடிவடையும் தங்கள் பாவ இயல்பைப் பெற்றார்கள். ஆதாமும் ஏவாளும் தோட்டத்திலிருந்து துரத்தப்படுவதற்கு முன்பு, தேவன் கிருபையாய் அத்தி இலைகளாலான ஆடைகளுக்குப் பதிலாக விலங்குகளின் தோலாலான ஆடைகளைத் தந்தார், அவர்களின் பாவத்தை மறைக்க குற்றமில்லாத இரத்தம் சிந்தப்பட்டது. (ஆதியாகமம் 1-3.) மத்தேயு 27:4; கொலோசெயர் 1:20-22; எபிரெயர் 9:13-17.)

மனிதன் தேவனுக்கு எதிராகப் பாவம் செய்தாலும், மனிதனை தன் குடும்ப ஒற்றுமையில் மகிழ்ச்சியுடன் படைத்ததற்கான தேவனுடைய நோக்கம் அப்படியே இருந்தது, மேலும் தேவன் கிருபையுடன் அவர்களுக்கு ஒரு பரிபூரண இரட்சகர் மூலம் ஒப்புரவாக்கி, அவர்களின் எதிர்கால சந்ததியினருடன் தமது பிரசன்னத்திற்குத் திரும்புவதற்கான வாக்குறுதியைக் கொடுத்தார், அவர் ஒரு கன்னிப் பெண்ணில் பரிசுத்த ஆவியால் கருத்தரிக்கப்படுவார், அவர் தமது குற்றமற்ற இரத்தத்தை பரிகார மரணத்தில் சிந்தவும், நமது பாவங்களை ஒரே தரம் நீக்கி, அவரது நீதியால் நம்மை தேவனுடைய பிரச்சனத்திற்குள் உடுத்தவும் செய்வார். (ஆதியாகமம் 3:15; ஏசாயா 7:14; கலாத்தியர் 4:4; லூக்கா 1:31; 2:10-11; மத்தேயு 1:20-22; ரோமர் 3:21-26.)

ஆதாமும் ஏவாளும் தேவனின் பிரசன்னத்திலிருந்தும் தோட்டத்திலிருந்தும் துரத்தப்பட்டபோது, தேவன் கேரூபீன்களையும் அவர்களின் பாவ உடலில் என்றென்றும் உயிருடன் வைத்திருக்கும் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிப்பதைத் தடுக்க ஒரு சுடரொளிப் பட்டயத்தையும் வைத்தார், மேலும் இது கிருபையின் நோக்கத்தை மறுத்தது.

இந்தக் காரணத்தினால்தான், மனிதன் தங்கள் பாவமுள்ள பூமிக்குரிய சரீரத்தை மரணத்தினால் மாற்றுவதற்காகவும், இரட்சகர் மூலம் தேவனுடைய பிரசன்னத்திற்காக மகிமைப்படுத்தப்பட்ட ஒரு சரீரத்தில் பிரவேசிப்பதை சாத்தியமாக்குவதற்காகவும், தேவன் அவர்களை ஜீவ விருட்சத்திலிருந்து விலக்கி வைக்க வேண்டியிருந்தது. இந்த சூழ்நிலையில் ஆதாமும் ஏவாளும் பிள்ளை இல்லாதவர்களாக இருந்தனர், எனவே அனைத்து மனிதகுலமும் தேவனிடமிருந்து பிரிந்து மரணத்துவாக பிறந்த அவர்களின் சந்ததியினர், பொல்லாத வெளிப்பாடுகளுடன் தங்கள் பாவ இயல்பைப் பெற்றுள்ளனர், மேலும் நம் பாவங்களுக்காக மரிக்கப் போகும் இரட்சகரின் வாக்குறுதியையும் பெற்றுள்ளனர். ஆனால் மனிதன் தேவனுடன் ஒப்புரவாகி, ஐக்கியம் கொள்ளவும், ஆரம்பத்தில் இருந்ததைப் போலவே எல்லாவற்றையும் மீட்டெடுக்கவும் இரட்சகரை ஏற்றுக்கொள்ள வேண்டும். (ஆதியாகமம் 3:22-24; எபிரெயர் 2:9; 2 கொரிந்தியர் 5:1-8; யோவான் 1:12-14; 3:16.)

பின்வரும் நடத்தை முறைகள் நமது மரபுவழி பாவ இயல்பின் சில வெளிப்பாடுகளாகும்: விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவெறி, விக்கிரகாராதனை, சூனியம், வெறுப்பு, மோதல், கருத்து வேறுபாடு, போட்டி, சச்சரவு, தேசத்துரோகம், மதங்களுக்கு எதிரான கருத்துக்கள், பொறாமைகள், கொலைகள், குடிவெறி, களியாட்டங்கள் மற்றும் போன்றவை: (கலாத்தியர் 5:19-21.)

இரட்சகரைப் பற்றிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான காலம் நிறைவேறினப்போது தேவன் ஒரு பெண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட தமது குமாரனை அனுப்பினார், அக்காலத்தில் கன்னியாக இருந்த மரியாளின் வழியாய், மனிதகுலத்தை மிகுதியான பாவங்களிலிருந்து மீட்டுக்கொள்ளும்படி அனுப்பினார். இரட்சகர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, அவர் தம்மை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் இரட்சிப்பைக் கிடைக்கச் செய்ய தம்மையே மீட்கும்பொருளாகக் கொடுத்தார். பாவம் அறியாத இயேசு,

நம் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார், அடக்கம் செய்யப்பட்டார், தேவன் அவரை மரித்தோரிலிருந்து முதற்பேறானவராகவும், உயிர்த்தெழுதலின் முதற்பலனாகவும் எழுப்பினார், பரலோகங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் வைத்தார், கிறிஸ்து முதல் பலனாக இருந்தார், பின்னர் அவர் வருகையில் கிறிஸ்துவற்குரியவர்கள் மரணத்திலிருந்து ஜீவனுக்குக் கடந்துபோவார்கள்; ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள். (ஆதியாகமம் 3:15; கலாத்தியர் 4:4; ஏசாயா 7:14; மத்தேயு 1:20-25; லூக்கா 1:26-31; கொலோசெயர் 1:18; யோவான் 5:24; 1கொரிந்தியர் 15:3-4, 20-23; எபேசியர் 1:20; 2:5-8; ரோமர் 5:17-19.)

அன்பானவர்களே, ஒட்டுமொத்த மனிதகுலமும் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, ஆதாமில் மரிக்கும் பாவ இயல்புடன் பிறந்திருப்பதால், இயேசு கிறிஸ்துவை நம் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல் நாம் மரித்தால், தேவனோடு ஒப்புரவாக இனி வாய்ப்பு இருக்காது.

பாவம் மனிதனை தேவனிடமிருந்து பிரித்ததால், பாவங்களுக்கு மன்னிப்பை பெறாமல் தேவனிடம் திரும்புவது சாத்தியமற்றது, ஆனால் நாம் கிறிஸ்துவிற்குள் மரித்தால், தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டு, அவருடைய சாயல், ரூபம், நோக்கம் மற்றும் ஐக்கியம் ஆரம்பத்தில் இருந்ததைப் போலவே மீட்டெடுக்கப்படும், எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். (1கொரிந்தியர் 15:45-57.)

ஆகையால், மனிதன் தேவனோடு ஐக்கியப்படுவதற்கும், படைத்ததன் நோக்கத்தை நிறைவேற்ற தேவனின் பிரசன்னத்திற்குப் பிரவேசிப்பதற்கும் இயேசுவால் மட்டுமே ஆயத்தமாகிறான். நாம் இயேசு கிறிஸ்துவை நம் இரட்சகராக ஏற்று, ஒரு புதிய சிருஷ்டியாக மாறினால் மட்டுமே இது நடக்கும். இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் (ஆதாமின் யுகத்திற்குரியவைகள்) ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. (யோவான் 1:12; 3:1-8; எபேசியர் 1:5-7; கொலோசெயர் 1:14; 2கொரிந்தியர் 5:17.)

பிரியமானவர்களே, இயேசு தங்கள் பாவங்களுக்கு விலைக்கிரையம் கொடுத்து அவரை தங்கள் இரட்சகராக விசுவாசிக்கும் அனைவரும் இயேசுவுடன் என்றென்றும் இருப்பார்கள், முதலில் பரலோகத்திலும், பின்னர் சுத்திகரிக்கப்பட்ட பூமியில் ஆயிரம் ஆண்டுகள், இயேசு ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் ஆட்சி செய்வார், பின்னர் புதிய வானத்தின் கீழ் புதிய பூமியில் என்றென்றும் இருப்பார்கள், அங்கு தேவன் தாமே வாசம் செய்வார். அதேசமயம், இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல் நிராகரித்தவர்கள் இந்த வாழ்க்கைக்குப் பிறகு நரகத்தில், பின்னர் பிசாசுடன் என்றென்றும் அக்கினிக்கடலில் வாழ்வார்கள். (வெளிப்படுத்தல் 7:14; 20:6; (வெளிப்படுத்தல் 21.) லூக்கா 16:19-31; வெளிப்படுத்தல் 20:14-15.)

புதிய பூமி என்பது ஒரு நிலையான வசிப்பிடமாகும், அங்கு கடந்த காலம் மறக்கப்பட்டு, அனைத்தும் நன்மையும், நீதியும் முழுமையானதாக இருக்கும். பஞ்சம் இருக்காது, தீமை இருக்காது, வியாதி இருக்காது, இனி மரணம் இருக்காது, துக்கம் இருக்காது, அழுகை இருக்காது, வேதனை இருக்காது, ஏனென்றால் முந்தினவைகள் ஒழிந்து போயின. இதோ, எல்லாம் புதிதாக்கப்பட்டன. (வெளிப்படுத்தல் 21:1-7; எபேசியர் 2:5-6; எபிரெயர் 11:16.)

அக்கினிக் கடல் என்பது கடந்த காலத்தை நினைவுகூரும் ஒரு நிலையான வசிப்பிடமாகும், அங்கு எல்லாம் தீயதாகவும், முழுமையற்றதாகவும், பழைய விஷயங்களின் கீழ் தொடர்கிறது, அங்குள்ளவர்களின் நினைவும் மனசாட்சியும் அவர்களை என்றென்றும் வேதனைப்படுத்தும் இடமாகும், இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்க, தேவன் அவர்களுக்குக் கொடுத்த அனைத்து வாய்ப்புகளையும் நினைவில் கொள்கிறது. (லூக்கா 16:22-31; வெளிப்படுத்தல் 20:10-15; மாற்கு 9:44-48;

மத்தேயு 6:24.)

நாம் எடுக்கும் முடிவின்படி, நாம் மரித்து பரலோகத்திலும், இயேசுவோடு புதிய பூமியிலும் அல்லது பிசாசுடன் நரகத்திலும், அக்கினிக் கடலிலும் முடிவடைவோம் என்பது அப்பட்டமான உண்மை. நாம் நரகத்திலும் அக்கினிக் கடலிலும் முடிவடைவது தேவனின் விருப்பம் அல்ல, அதனால்தான் பாவம் அறியாத இயேசுவை நமக்காக பாவமாக்கினார், அவர் இருக்கும் இடத்தில், நாமும் இருப்போம். (2 பேதுரு 3:9; 2 கொரிந்தியர் 5:19-21; யோவான் 14:1-6.)

முடிவாக, நீங்கள் மாறாத தேவனின் வார்த்தையிலிருந்து அறிவொளி பெற்றுள்ளீர்கள், மேலும் உங்கள் நித்திய முடிவைப் பற்றிய உடனடி நடவடிக்கையைத் தொடங்குவதற்காக பரலோகத்தில் என்றென்றும் குடியேறியுள்ளீர்கள். மரணத்துடனான உங்கள் சந்திப்பு எப்போது வரும் என்று உங்களுக்குத் தெரியாததால், இந்த விஷயத்தை நீங்கள் இப்போதே தீர்மானிக்க வேண்டும், ஏனென்றால் நாளை என்பது யாருக்கும் வாக்குறுதி அளிக்கப்படவில்லை. ஒருவேளை உங்கள் பரபரப்பான நிகழ்ச்சி நிரல் மற்றும் இந்த வாழ்க்கையின் கவலைகள் காரணமாக, உங்கள் தற்போதைய சரீரத்தையும் எல்லாவற்றையும் விட்டு வெளியேற வேண்டிய நேரம் வரும்போது நீங்கள் நித்தியத்தில் எங்கே இருப்பீர்கள் என்பதைப் பற்றி நீங்கள் இப்போது சிந்தியுங்கள். (யோவான் 17:8, 15; சங்கீதம் 119:89; எபிரெயர் 9:27-28; 2 கொரிந்தியர் 5:1-8.)

என் நண்பரே, முடிவெடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. இயேசுவோடு பரலோகத்திற்கும் புதிய பூமிக்கு செல்லும் வழியும், பிசாசோடு நரகத்திற்கும் அக்கினிக் கடலுக்கு செல்லும் வழியும் உங்கள் முன் வைக்கப்பட்டுள்ளது. உங்கள் ஆத்துமாவுடன் விளையாடாதீர்கள், பாரம்பரிய மதத்தில் உள்ள மனிதர்களின் கோட்பாடுகளையும், இயேசு கிறிஸ்துவிற்குள் உள்ள தேவனின் இரட்சிப்புக்கான வழிக்கு முரணான அவர்களின் இரட்சிப்பு வழியையும் பற்றிக்கொள்ள தேவனுடைய வார்த்தையை ஒதுக்கி வைக்கும் தவறான முடிவை எடுக்காதீர்கள். தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையில் இயேசு மட்டுமே மத்தியஸ்தர், தேவனை அடைய ஒரே அவரே வழி, ஏனெனில் அவர் மூலமாக மட்டுமே எந்த மனிதனும் பிதாவை அடைய முடியும்: ஏனென்றால், இயேசுவின் நாமத்தைத் தவிர, மனிதர்களிடையே நாம் இரட்சிக்கப்படுவதற்கு வானத்தின்

கீழ் வேறு எந்த நாமமும் கொடுக்கப்படவில்லை. மனிதகுலத்தை இரட்சிக்க ஆதாமுக்கு தேவன் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வந்த ஸ்திரீயின் வித்தாக இயேசு இருக்கிறார். பாம்பின் வார்த்தையின்படி செயல்பட்டபோது ஆதாம் மனிதனின் வீழ்ச்சியை ஏற்படுத்தியதை நினைவில் கொள்ளுங்கள். தேவனின் படைப்பான நீங்கள் அவரிடம் உங்கள் ஆத்துமாவை ஒப்படைக்குமாறு நான் உங்களிடம் கெஞ்சுகிறேன். தம்முடைய வார்த்தையை நம்பவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும் தேவன் பொய்யுரைக்க முடியாது, இதனால் அவர் புதிய பூமியில் தேவனுடன் என்றென்றும் வாழவும், ஆரம்பத்தில் இருந்ததைப் போலவே எல்லாம் மீட்டெடுக்கப்படவும் அவரால் முடியும். (மாற்கு 16:15-16; யோவான் 1:12-13; 3:16; 14:1-6; 1 தீமோத்தேயு 2:5-6; அப்போஸ்தலர் 4:12; வெளிப்படுத்தல் 21.) வெளிப்படுத்தல் 22:1-5.)

ஆதாமும் ஏவாளும் சர்ப்பத்தின் வார்த்தையான தீமையின்படி செயல்படத் தேர்ந்தெடுத்து, தங்கள் படைப்பாளரான தேவனின் வார்த்தையான நன்மைக்கு எதிராகச் சென்றபோது, அந்த முடிவின் மூலம், அவர்கள் அனைத்து மனிதகுலத்திற்கும் தீமையைத் தேர்ந்தெடுத்து, நம்மை பாவத்திலும் மரணத்திலும் அதாவது சரீர மற்றும் ஆவிக்குரிய மரணத்தில் கொண்டு வந்தனர். ஆனால் இப்போது, நமது எதிர்காலம் மற்றும் நித்திய விதி குறித்து நமது சொந்தத் தேர்வைச் செய்ய தேவன் நமக்கு சுதந்திரம் அளித்துள்ளார், எனவே நாம் ஆதாமைக் குறை கூற முடியாது. தேவன் நமக்குத் தமது ஆவியால் மறுபடியும் பிறக்கும் பாக்கியத்தை அளித்துள்ளார், அவருடைய பிள்ளைகளாக மாறுவதற்கு முன்நிபந்தனையாக, மாம்சம் மாம்சத்தைப் பிறப்பிப்பது போல, ஆவி ஆவியைப் பிறப்பிக்கிறது, எனவே தேவனால் பிறந்த பிள்ளைகள் அவருடைய ஆவியால் பிறக்கிறார்கள், பாவம் மற்றும் மரணம் மற்றும் மாம்சத்தின் செயல்களின் விளைவுகளிலிருந்து விடுபடவும், கிறிஸ்து இயேசுவில் ஜீவ ஆவியின் பிரமாணத்தின் கீழ் கொண்டு வரப்படவும், தேவனின் ராஜ்யத்தில் நுழையவும் நாம் மறுபடியும் பிறக்க வேண்டும். இயேசுவை ஏற்றுக்கொண்ட அனைவருக்கும், தம்முடைய பிள்ளைகளாக மாறுவதற்கான அதிகாரத்தை அல்லது சட்டப்பூர்வ உரிமையைத் தேவன் கொடுத்துள்ளார், மேலும் பிள்ளைகள் என்றால், அவர்கள் தேவனின் சுதந்திரவாளிகள் மற்றும் இயேசு கிறிஸ்துவுடன்உடன் சுதந்திரவாளிகளாக இருக்கிறோம்.

இதோ, கிறிஸ்துவிற்குள் பிதா நமக்கு அருளிய அன்பு எவ்வளவு பெரியது? (யோவான் 1:12-14; 3:1-8; ரோமர் 8:2,16-17; பிலிப்பியர் 4:3; 1 யோவான் 3:1-2.)

அன்பானவர்களே, நாம் ஆதாமிடமிருந்து நமது பாவ இயல்பைப் பெற்றுள்ளோம், தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டுள்ளோம், மேலும் நாம் ஒப்புரவாக வேண்டும் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். இயேசு சிலுவையில் மரித்தபோது நமது பாவங்களுக்கான தண்டனையைச் செலுத்தினார் என்பதை ஒப்புக் கொள்ளுங்கள், தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்பதை உங்கள் இருதயத்தில் விசுவாசியுகள், உங்கள் வாயால் அவரை அறிக்கையிடுங்கள், அப்போது நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள். ஏனென்றால், மனிதன் இருதயத்தினால் நீதிக்கென்று விசுவாசிக்கிறான், வாயினால் அறிக்கையிடுதல் இரட்சிப்புக்கென்று செய்யப்படுகிறது. (1 கொரிந்தியர் 15:1-4; ரோமர் 10:9-15.)

இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்ட உங்களுக்கு இவைகள் எழுதப்பட்டுள்ளன, இயேசுவில், நீங்கள் தேவனுடன் ஒப்புரவாகிவிட்டீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்பதை நீங்கள் அறிவீர்கள், ஏனென்றால் இந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது. இயேசு உங்களுடையவர், நீங்கள் அவருடையவர் என்பதை நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட உறுதியுடன் அறிவீர்கள். இயேசு இருக்கும் இடத்தில் நீங்கள் இருப்பீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். (1 யோவான் 5:10-13; 3:1-2; யோவான் 17:21,23; 14:1-6; வெளிப்படுத்தல் 21.)

என் நண்பரே, ஒருவரும் கெட்டுப்போகாமல் மனந்திரும்பவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நீங்கள் இதுவரை இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், இதைச் செய்வதற்கான கடைசி வாய்ப்பாக இது இருக்கலாம். பிறப்பதற்கு ஒரு காலம் உண்டு, மரிப்பதற்கு ஒரு காலம் உண்டு, அதாவது, மரணத்துடனான நமது சந்திப்பு தேவனால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது, அதைத் தள்ளிப்போட முடியாது, அந்த நேரம் எப்போது வரும் என்று நமக்குத் தெரியாததால்,

இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்வதற்கான நியமிக்கப்பட்ட நேரம் இது, தேவனின் புதிதாகப் பிறந்த பிள்ளையாக, அவருடைய ஆவியால் பிறந்து, உங்கள் பெயர் ஜீவப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும், இது தேவனின் வீட்டின் பிள்ளைகளின் பரலோகப் பதிவேடு. (பிரசங்கி 3:2; எபிரெயர் 9:26-28; யோவான் 1:12; வெளிப்படுத்தல் 20:15; 21:27; லூக்கா 10:20; எபேசியர் 2:19.)

இந்த புத்தகத்தைப் படிப்பதன் மூலம் மனிதனின் தொடக்கத்திலிருந்து நித்தியத்தில் நமது முடிவு வரை நாம் வந்துள்ளோம். இந்த சுருக்கமான பயணம் முடிவுக்கு வந்துள்ள நிலையில், வேதவசனங்களைப் பற்றிய உங்கள் புரிதலின் கண்கள் திறக்கப்பட்டுள்ளன, மேலும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஞானம் மற்றும் வெளிப்பாட்டின் ஆவி உங்களை அறிவூட்டியுள்ளது. கிறிஸ்துவின் சார்பாக நான் உங்களைக் கெஞ்சுகிறேன், தேவனுடன் ஒப்புரவாகுங்கள்.

என் சிருஷ்டிகரான அன்புள்ள தேவனே, என் மீதுள்ள உம் அன்பின் காரணமாக, என் பாவங்களுக்காக மரிக்க உம் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பியுள்ளீர். நான் கிறிஸ்துவுக்கு வெளியே மனிதர்களின் கோட்பாடுகளை நம்பி வாழ்ந்து கொண்டிருந்தேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். என் மீது பொறுமையாக இருந்ததற்கு நன்றி, நான் உம்மிடமிருந்து பிரிந்து வாழ விரும்பவில்லை, மனந்திரும்பி இயேசுவை என் இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன்.

கர்த்தராகிய இயேசுவே, என் மீதான உம் அன்பிற்கு நான் செவிக்கொடுக்கிறேன், இப்போது நான் உம்மை என் இரட்சகராகவும் என் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்கிறேன். பாவம் மற்றும் மரணத்தின் பிரமாணத்திலிருந்து என்னை விடுவித்து, உம்மில் ஜீவ ஆவியின் பிரமாணத்திற்குள் என்னைக் கொண்டு வந்ததற்கு நன்றி, கர்த்தராகிய இயேசுவே, நான் என்றென்றும் உம்முடன் இருக்க என் அழியாத சரீரத்தைத் தரித்துகொள்ள உம் வருகைக்காக காத்திருக்கிறேன். என்னை இரட்சித்து, என் பெயரை பரலோகத்திலுள்ள உம் ஜீவ புத்தகத்தில் எழுதி, என்னை தேவனுடைய வீட்டின் குடிமகனாக்கியதற்கு நன்றி. ஆமென்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

ஆமென்.

## பின் இணைப்பு

## மொழியாக்கம்:

விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான். (ஆதியாகமம் 5:24; எபிரெயர் 11:5.)

நியாயப்பிரமாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய மோசே, மரித்து அடக்கம்பண்ணப்பட்டான், தேவன் அவனை மரித்தோரிலிருந்து எழுப்பினார். (உபாகமம் 34:5-6.)

தீர்க்கதரிசிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய எலியா, மரணத்தைக் காணாமல், ஒரு சுழல்காற்றில் பரலோகத்திற்குச் சென்றான். (2 இராஜாக்கள் 2:11.)

மோசேயும் எலியாவும் நியாயப்பிரமாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் தங்கள் ஊழியத்தை நிறைவேற்றுவதன் மூலமும், இயேசுவை நிறைவேற்றுவதற்காகச் சுட்டிக்காட்டிய தீர்க்கதரிசிகளை நிறைவேற்றுவதன் மூலமும் இயேசுவை கனப்படுத்தினார்கள்.

மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளிலும் சங்கீதங்களிலும் அவரைப் பற்றி எழுதப்பட்ட அனைத்தும் நிறைவேற வேண்டும்,

அதாவது அவர் அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று இயேசு கூறினார். (லூக்கா 24:27,44.)

இயேசு பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானை ஒரு மலைக்கு ஜெபிக்க அழைத்துச் சென்றார், அவர்கள் முன் மறுரூபமானார். மோசேயும் எலியாவும் இயேசுவோடு பேசிக்கொண்டிருந்தது அவர்களுக்குத் தோன்றியது. அவர் மகிமையில் தோன்றினார், அவருடைய வஸ்திரம் வெண்மையாகவும் பிரகாசமாகவும் இருந்தது. இந்த மறுரூபத்திற்கு சாட்சிகளாக இருந்த பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான், தம் உயிர்த்தெழுதலுக்குப் பிறகுதான் இந்தத் தரிசனத்தைத் தெரியப்படுத்தும்படியும், இந்த யுகத்தின் முடிவுக்கு முன்பு, தம்முடைய நற்செய்தியை உலகம் முழுவதும் சாட்சியாக எடுத்துச் செல்ல தங்கள் ஊழியத்தைத் தொடங்கும்படியும் இயேசு அவர்களிடம் கூறினார். (மத்தேயு 17:1-9; 24:14; லூக்கா 9:28-31.)

கிறிஸ்துவில் மரித்தோரைக் குறிக்கும் விதமாக தேவன் எழுப்பிய மோசே முதலாவது எழுந்திருப்பார்: ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதானதூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.

பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்: மரணத்தைக் காணாமல் பரலோகத்திற்கு ஏறிப்போன ஏனோக்கும் எலியாவும் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். (1 தெசலோனிக்கேயர் 4:13-18; 5:9-11; 1 கொரிந்தியர் 15:51-57.)

இந்தப் பரவசமான நிகழ்வு, இன்னும் நிறைவேறாத மூன்று பண்டிகைகளின் ஒன்றான எக்காளப் பண்டிகையில் அறியப்படாத ஒரு ஆண்டில் நடைபெறும். மற்றவை, இஸ்ரவேலர் அனைவரும் இரட்சிக்கப்படும் பாவநிவாரண நாள், மற்றும் கிறிஸ்து தம்முடையவர்களுடன் ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவுமாக ஆட்சி செய்யும் ஆயிரமாண்டு யுகமான கூடாரப் பண்டிகை (ரோமர் 11:23-27; வெளிப்படுத்தல்

20:4-6.) பஸ்கா பண்டிகையிலிருந்து, புளிப்பில்லாத அப்பப் பண்டிகை, முதற்பலன்களின் பண்டிகை மற்றும் பெந்தெகொஸ்தே பண்டிகை ஏற்கனவே நிறைவேறிவிட்டன. யூத பொது புத்தாண்டின் தொடக்க நாளான ரோஷ் ஹஷானா என்று அழைக்கப்படும் எக்காளப் பண்டிகை, யூத புனித ஆண்டின் ஏழாவது மாதத்தின் முதல் நாளில் அமாவாசையில் தொடங்குகிறது, இது ஒரு புதிய தொடக்கத்தைக் குறிக்கிறது. மேகமூட்டமான வானிலை காரணமாக அமாவாசை தோன்றுவதைத் தடுக்கும் சூழ்நிலையும், உலகின் பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு நாட்களும் நேரங்களும் இருப்பதால், இரண்டு நாட்கள் கொண்டாடப்படும் ஒரே பண்டிகை எக்காளப் பண்டிகையாகும். (எண்ணாகமம் 29:1; லேவியராகமம் 23:23-24; யாத்திராகமம் 12:1-2; சங்கீதம் 81:3-4; எசேக்கியேல் 46:1; வெளிப்படுத்தல் 4:1; யோவான் 6:39-40.)

நமது விசுவாசத்தின் தொடக்கமும் முடிவும், ஆசிரியரும் முடிப்பவருமான இயேசு (வெளிப்படுத்தல் 1:8-18; எபிரெயர் 12:1-2) மணவாளன் தமது மணவாட்டியை எடுத்துகொள்ளத் திரும்பும் நேரம் குறித்து யூத திருமண பழக்கவழக்கங்களைப் பயன்படுத்தினார். மணவாட்டியின் அறையை ஆராய்வது தகப்பனின் தனிச்சிறப்பாகும், மேலும் மணவாளன் தனது திருமணத்தை முடிக்கத் தயாராக இருக்கும்போது, அவன் தனது மணவாட்டியை எடுத்துகொண்டு சொல்ல வேண்டிய நேரம் இதுவாகும். இந்தக் காரணங்களினால்தான் இயேசு, அந்த நாளையோ நாழிகையையோ தம்முடைய பிதா ஒருவருக்குத் தவிர வேறு யாருக்கும் தெரியாது, தேவதூதர்களுக்கும் தெரியாது என்றார். (யோவான் 14:1-6; எபேசியர் 5:25-32; வெளிப்படுத்தல் 19:7-9; மத்தேயு 24:36.)

நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரையடைந்தவர்களானாலும், நம்முடைய தேவனாகிய கிறிஸ்துவுடன் சிருஷ்டிப்பிலே பிழைத்திருக்கும்படி" அவர் நமக்காக மரித்தார். (தீத்து 2:13; 1தெசலோனிக்கேயர் 5:10; 2தீமோத்தேயு 2:11.)

# ஆக்கியோனை சந்தியுங்கள்

அட்டைப்படத்தில் காணப்படும் ஏறக்குறைய 100 ஆண்டுகள் பழமைவாய்ந்த வீட்டில் 1942 ஆம் ஆண்டு அஃப்சல் அலி பிறந்தார், இப்போது அந்த வீடு இடிக்கப்பட்டு, தற்போது அரிமா என்ற நம்பிக்கை மையத்தின் இருப்பிடமாக உள்ளது. அவர் ஒரு மதத்தில் வளர்ந்தார், ஆனால் தான் மரிக்கும் போது எங்கு செல்வார் என்று தெரியவில்லை. அப்சல் ஒரு முன்னாள் தொழிலதிபர், ஜனவரி 1985 ல் கூடுதல் பங்குகளை வாங்கிய பிறகு, திடீரென்று அவற்றை அவரும் அவருடைய மனைவியும் விற்க விரும்பவில்லை. அப்போதிருந்து, அவர்கள் இருவரும் தங்களைப் படைத்த உயிருள்ள மற்றும் உண்மையான கடவுளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற வலுவான வேட்கையைக் கொண்டிருந்தனர், அது அவர்களின் வாழ்க்கையில் கடவுளின் உயர்ந்த மற்றும் பரிசுத்தமான அழைப்பு என்பதை உணரவில்லை.

அஃப்சலும் அவரது குடும்பத்தினரும் மார்ச் 24, 1985 ஞாயிற்றுக்கிழமை சான் பெர்னாண்டோவில் உள்ள விசுவாச மையத்தில் ஒரு கூட்டத்திற்கு அழைக்கப்பட்டனர். அவர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர், அங்கு அவர்கள் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டனர், அடுத்த ஞாயிற்றுக்கிழமை ஞானஸ்நானம் பெற்றனர்.

விசுவாச மையத்தின் போதகரான அப்போஸ்தலனாகிய கார்லைல் சங்கர்சிங்கின் (Apostle Carlyle Chankersingh) வழிகாட்டுதலின் கீழ், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவரது எண்ணங்களையும் விருப்பங்களையும் திசைதிருப்பினார், இப்போது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன் தனது நித்திய முடிவை அறிந்து கொள்வதில் மிகுந்த ஆறுதலையும் உறுதியையும் பெற்றுள்ளார். அயோவாவின் டெஸ் மொயினஸில் (Des Moines, Iowa) உள்ள கிங்ஸ்வே வேதாகம கல்லூரி மற்றும் இறையியல் செமினரியின் துணை நிறுவனமான கரீபியன் மிஷன் வேதாகம கல்லூரியில் சேர அப்சலுக்கு அவரது போதகர் அறிவுறுத்தினார், அங்கு அவர் இளங்கலை கலைப் பட்டம் பெற்றார். அப்சலுக்கு

விசுவாச மையத்தில் பல ஊழியப் பதவிகள் வழங்கப்பட்டன, பட்டப்படிப்பு முடிந்ததும், அவர் கரீபியன் மிஷன் வேதாகம கல்லூரி பீடத்தில் சேர்ந்தார்.

மார்ச் 1992 ல், அவர் தனது போதகரால் அரிமாவுக்கு அனுப்பப்பட்டார், அங்கு அவர் ஞாயிற்றுக்கிழமை 22 ஆம் தேதி தனது போதகப் பணியைத் தொடங்கினார்.

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய அறிவின் மேன்மையின் மூலம் அவர் அனுபவிக்கும் மகிழ்ச்சியும் சமாதானமும் விவரிக்க முடியாதது, மேலும் தேவனின் மந்தையை போஷிப்பதிலும், மனிதன் இரட்சிக்கப்படுவதற்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பிரசங்கிப்பதிலும் இது பரவுகிறது.

அப்சல் தற்போது அரிமாவில் தனது மனைவி லிண்டா மற்றும் அவர்களது குடும்பத்தினருடன் வசிக்கிறார். அவர் பல சிறு புத்தகங்களை எழுதியிருக்கிறார். இது அவரது முதல் புத்தகம். தனது போதகர் ஊழியத்திற்கு கூடுதலாக, அப்சல் வானொலி, செய்தித்தாள்கள், பத்திரிகைகள், சிறு புத்தகங்கள், குறுந்தகடுகள் மற்றும் பலவற்றின் மூலம் பல நாடுகளுக்கு நற்செய்தியை எடுத்துச் செல்கிறார்.

அப்சல் அலி
25A புரோ. குயின் ஸ்ட்ரீட் அரிமா, டிரினிடாட். W.I

தொலைபேசி எண்கள். 1-868-664-3647
1-868-664-3653

**மின்னஞ்சல்**: afzalaliarima@yahoo.com

# பரலோகத்திலிருந்து வந்த செய்தி



இந்தப் புத்தகத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியங்கள், பரிசுத்த ஆவியின் கிரியையின் மூலம் ஆயிரக்கணக்கான மக்களை இரட்சிப்புக்காக இயேசு கிறிஸ்துவிடம் கொண்டு சேர்ப்பதாகும்.
ஒளி சுடர்களாக, கிறிஸ்துவின் நற்செய்தியை இழந்துபோனவர்களுக்கு அறிவிப்போமாக, அப்போது அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள், மேலும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மகிமையில் வரும்போது என்றென்றும் அவருடன் இருப்பதற்காகக் காத்திருக்கும் ஆயிரக்கணக்கான மக்களில் ஒருவராக இருப்போமாக.

அப்சல் அவர்கள் ஒவ்வொரு விசுவாசிக்கும் வேத சத்தியங்களைத் தெரிவிக்கவும், இந்த யுகத்தின் முடிவுக்கு முன்னர் அனைத்து ஜாதிகளுக்கும் சாட்சியாக உலகெங்கிலும் உள்ள அனைத்து மக்களுக்கும் ராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரசங்கிக்கவும் உறுதிபூண்டுள்ளார். இந்தக் காரணங்களுக்காக, இந்தப் புத்தகத்தை ஒரு நினைவூட்டலாக உங்களுக்கு நான் பரிந்துரைக்கிறேன்.

9 781642 993073